TNLA Debates

V. No. 1

1980

(C)

v21, 31 N80
N81.4.1j1
123095

வெளியீடு—13-10-1980] [Issued—13-10-1980

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

**பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT**

செவ்வாய்க்கிழமை 1980 ஜூலை 15 **Tuesday 15th July 1980**

தொகுதி IV—எண் 1—**Volume IV—No. 1.**

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
**Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009**

[விலை 3.15 காசுகள் **[Price 3.15 Paise**

123090

## உள்ளடக்கம்

15-7-80

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i—iv

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். .. .. v—vi

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல் ii—xv

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1—29

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

சென்னை நகரில் உணவு பங்கீடு அட்டைகள் வழங்கப்பெறுதல் .. .. .. 29—34

3. கவன ஈர்ப்புகள்

(அ) கிளியனூர் அரசு மருத்துவ மனைக் கட்டிடத்தின் மோசமான நிலை. .. 34—36

(ஆ) போரூர் ஒன்றியத்திலுள்ள சில பகுதிகளில் கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப் பெற்றுள்ளது .. 36—38

4. அறிவிப்பு

ஆளுநரின் இசைவு—தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980 38

5. அரசினர் சட்ட முன்வடிவு

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980 .. .. .. 38

6. தகவல் கோரல்

(அ) ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் 39—40

(ஆ) நடவடிக்கை குறிப்பில் விடுபாடு .. 40—41

7. வரவு செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் .. (ஆ) கோரிக்கை எண் 33 -வீட்டு வசதி .. | 41—13( |
| மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் | 109—129 |
| திரு சு. பாலன் | |
| திரு எம். சின்னசாமி | 42—46 |
| திரு கே. எம். தங்கமணி கவுண்டர் | 46—48 |
| திரு என். இராமசுப்பிரமணியம் | 48—53 |
| திரு ஜே. ஹேமச்சந்திரன் | 53—55 |
| திரு ஆர். சக்கரபாணி | 55—63 |
| திரு என். ஏ. பூங்காவனம் | 63—68 |
| திரு எம். குருசாமி என்கிற அண்ணாதாசன் | 68—72 |
| திரு கி. சட்டநாத கரையாளர் | 73—77 |
| திரு பூ. மு. நரசிம்மன் | 77—81 |
| திரு சோ. அழகர்சாமி | 82—83 |
| திரு பி. எம். தங்கவேல்ராஜு | 83—86 |
| திரு எம். எஸ். மாணிக்கம் | 86—88 |
| திரு ஜி. மூர்த்தி | 88—91 |
| திரு எஸ். ஜகத்ரட்சகன் | 91—93 |
| டாக்டர் கே. சௌரிராஜன் | 94—98 |
| திரு என். வி. என். சோமு | 98—100 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 100—109 |
| | 130—131 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு எம். ஜி இராமச்சந்திரன் (முதலமைச்சர்): பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர், சம்பந்தப்பட்டவை காவல், இலஞ்ச ஒழிப்பு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) : நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் ( மின்துறை அமைச்சர்) : மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்) : கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் ( வருவாய்த் துறை அமைச்சர்) : வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்) : செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில், நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்): தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) : வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்) : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்குதல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்): நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு எஸ். ராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்): தொழிலாளர், வீட்டு வசதி குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு கே. ராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்): [illegible], கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ஃபு.

14. மாண்புமிகு திரு எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்): அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்): பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு எஸ். எஸ். ராசேந்திரன் (கைத்தறி, கதர்த்துறை அமைச்சர்): கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்): அரிசன நலம், எழுது பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்): மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்

1499.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

Thiru PRABHUDAS PATWARI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN : (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service, District Revenue officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance): Finance, Planning, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps. Price Control and Ex-Servicement.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity) : Electricity, Iron and Steel control.

4. Hon. Thiru K.A KRISHNASAMY (Minister for Rural Industries): Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D SOMASUNDARAM (Minister for Revenue) : Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M VEERAPPAN (Minister for Information and Religious Endowments) : Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education) Education : including Technical Education and official language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law) Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration) : Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour) : Labour, Housing, Slum-Clearance Board, Statistics' Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning d Acommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation) : Agri-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) : Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries) : Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi) : Handlooms, Khadi Prohibition excluding grant of liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare) : Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for : Social Welfare) Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவல்கள்

### பேரவைத் தலைவர்

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

### பேரவைத் துணைத் தலைவர்

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

@1. திரு. இரா. முத்தையா
@2. திரு. கோ. விசுவநாதன்
@3. திரு. பெ. சு. திருவேங்கடம்
@4. திரு. உ. சுப்பிரமணியன்
@5. திரு. சி. வி. வேலப்பன்

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி பி.ஏ., பி.எல் .

### துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்
திரு. சே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்)

### சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மநாபன், நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி. ஏ., பி. எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அதிகாரி)

## தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்

## விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

---

* 21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

@26-6-80 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

@12-7-80 அன்று நியமனம் செய்யப் பெற்றார்.



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1 அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 3 அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 5 அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 6 அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ. வ.) |
| 7 அரங்கநாயகம், திரு செ. | கோவை (மேற்கு) |
| 8 அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 9 அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 10 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 11 அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 12 அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 13 அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 14 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 15 ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 16 ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 17 சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2. |
| 18 ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 19 இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 20 இராசகுமார், திரு. மே. அ. | மருங்காபுரி |
| 21 இராசமாணிக்கம், திரு. இரே. | குத்தாலம் |
| 22 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 23 இராசாம்பாள், திரு. தா. | தலைவாசல் (செ.வ) |
| 24 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 25 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 26 இராசு. திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. எஸ். என் | தூத்துக்குடி |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி |
| 32 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 33 இராமசுப்பிரமணியன், திரு. என். | ஸ்ரீவைகுண்டம் |
| 34 இராமலிங்கம் திரு. ஏ. | காட்டுமன்னார் (செ. வ.) |
| 35 இராமலிங்கம் டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 36 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 37 இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 40 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ. வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 42 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 43 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 44 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 45 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 46 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ. வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 48 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 49 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. | இனாத்துக்கடவு |
| 51 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 52 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 53 கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணா நகர் |
| 54 கருப்பசாமிப் பாண்டியன் திரு. வி. | பாளையங்கோட்டை |
| 55 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 56 கருப்பையா திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ) |
| 57 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ.வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம் |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ. வ.) |
| 83 கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 85 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ.வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 62 கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம் |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 69 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 70 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 71 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 73 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 75 குலசேகரன், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 76 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 79 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ. |
| 83 கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 84 கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 85 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 86 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 87 சட்டநாத கரையாளர் திரு. கி. | தென்காசி |





| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 88 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 சண்முகம், திரு. ச. சி. | ஆரணி |
| 90 சத்தியமூர்த்தி, திரு. வ. | [illegible] |
| 91 சந்திரசேகரன், திரு. எ. | [illegible] |
| 92 சபாபதி, திரு. வி. | [illegible] (செ.வ.) |
| 93 சமரசம், டாக்டர் கே. | [illegible] |
| 94 சாகுல் ஹமீது, திரு. எ. | கடையநல்லூர் |
| 95 சாமிக்கண்ணு, திரு. நா. | [illegible] |
| 96 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 சிதம்பரம், திரு. பி. ந. | காரைக்குடி |
| 98 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 சிவப்பிரகாசம், திரு. டி. | சேந்தமங்கலம் (செ. வ. |
| 101 சிவபெருமாள், திரு. மு. | [illegible] |
| 102 சிவராமன், திரு. எம். | சின்னசேலம் |
| 103 சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 சின்னதுரை, திரு. எ. | பெரணமல்லூர் |
| 105 சின்னராசு, திரு. க. இரா. | [illegible] |
| 106 சின்னராஜ், திரு. எம். | தொண்டாமுத்தூர் |
| 107 சுந்தரம், திரு. கே. ஆர். | [illegible] |
| 108 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 110 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 சுந்தரராஜ், திரு. ந. | திருமயம் |
| 112 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 117 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 88 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 89 சண்முகம், திரு. ஏ. தி. | ஆரணி |
| 90 சத்தியமூர்த்தி, திரு. வை. | [illegible] |
| 91 சந்திரசேகரன், திரு. ஏ. | [illegible] |
| 92 சபாபதி, திரு. வி. | அரூர் (செ.வ.) |
| 93 சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 94 சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 95 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 96 சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 97 சிதம்பரம், திரு. பி. த. | காரைக்குடி |
| 98 சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 99 சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 100 சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 சிவபெருமான், திரு. மு. | ஓமலூர் |
| 102 சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 103 சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 104 சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 105 சின்னராசு, திரு. சு. இரா. | கிருஷ்ணகிரி |
| 106 சின்னராஜ், திரு. எம். | தொண்டாமுத்தூர் |
| 107 சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 108 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 109 சுந்தரம், திரு. மு. | ஸ்ரீவைகுண்டம் |
| 110 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 111 சுந்தரராஜ், திரு. ந. | திருமயம் |
| 112 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 113 சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 114 சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |
| 115 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 116 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 117 சுப்பிரமணியன், திரு. ஜி.கே. | பவானிசாகர் |
| சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 119 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 122 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| | ஆற்காடு |
| 124 சேதுராமன், திரு. ஏ. எம். | திருப்போரூர் |
| 125 சொக்கலிங்கம், திரு. கெ. | |
| 126 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 தனுஷ்கோடித் தேவர் திரு. கே. | முதுகளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 145. துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146. துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147. துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148. துரைராஜ், திரு. பி. | சங்கரநாராயணர் கோவில் (செ.வ.) |
| 149. தேவராஜ், திரு. வி. வா. | வேலூர் |
| 150. நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152. நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153. நவநீத கிருஷ்ணன்பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155. நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156. நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158. நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159. பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161. பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162. பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163. பலராமன், திரு. இல. | போளூர் |
| 164. பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165. பழனிமுத்து, திரு. பி. | ஆத்தூர் |
| 166. பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 168. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169. பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170. பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 172. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 174. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 175. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 119 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 121 செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 122 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி |
| 124 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 125 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 126 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 127 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 128 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி—2 |
| 129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர் |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம் |
| 131 தங்கராசு, திரு ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 133 தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 134 தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 135 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 136 தனுஷ்கோடித் தேவர் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 138 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 139 திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 140 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 141 திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 142 திருமான், திரு. | ஏற்காடு (செ.வ.) |
| 143 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 144 [illegible], திரு. ப. | [illegible] |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 145. துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 146. துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 147. துரைராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 148. துரைராஜ், திரு. பி. | சங்கரநாராயணர் கோவில் (செ.வ.) |
| 149. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 150. நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 151. நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 152. நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 153. நவநீத கிருஷ்ணன்பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 154. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 155. நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 156. நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 157. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 158. நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 159. பக்கீர் முகம்மது, திரு. ஐ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 161. பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 162. பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163. பலராமன், திரு. இல. | போளூர் |
| 164. பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 165. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 166. பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 167. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 168. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 169. பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170. பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 172. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 173. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 174. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 175. வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 176. பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 177. பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 178. பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179. பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180. புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181. பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182. பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 183. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 184. பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185. பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186. பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 187. பொன்னுரங்கன், திரு. ப. | ராயபுரம் |
| 188. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189. மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190. மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191. மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193. முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாதபுரம் |
| 194. முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 195. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197. முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198. முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 199. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200. முனிரத்தினம், திரு. இரா. ச. | கும்மிடிபூண்டி |
| 201. முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 202. மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.) |
| 203. மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204. யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205. ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206. ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207. ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 208. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209. ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 210. ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. | முசிறி |
| 211. ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212. வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 213. வால்மீகி, திரு. வி. | திருப்பத்தூர் |
| 214. விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 215. வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216. விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை |
| 219. விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220. விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட் |
| 221. வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222. வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 223. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224. வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 225. வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 226. வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227. வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட் |
| 228. வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229. ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231. ஜெகதீசன் ஆனூர், திரு. ப. கோ. | செங்கல்பட்டு |
| 232. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233. ஹாஜாஷெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235. மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 176. பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 177. பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 178. பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179. பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 180. புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 181. பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 182. பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 183. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 184. பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 185. பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 186. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 187. பொன்னுரங்கன், திரு. ப. | ராயபுரம் |
| 188. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 189. மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 190. மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 191. மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 192. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193. முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாதபுரம் |
| 194. முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 195. முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 197. முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198. முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 199. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200. முனிரத்தினம், திரு. இரா. ச. | கும்மிடிபூண்டி |
| 201. முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 202. மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட் (செ.வ.) |
| 203. மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204. யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205. ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 206. ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 207. ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 208. ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209. ராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 210. ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. | முசிறி |
| 211. ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 212. வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 213. வால்மீகி திரு. வி. | திருப்பத்தூர் |
| 214. விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 215. வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216. விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 217. விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 218. விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 219. விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220. விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 221. வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 222. வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 223. வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224. வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 225. வெங்கடசேன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 226. வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 227. வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 228. வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 229. ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 230. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231. ஜெகதீசன் ஆனார், திரு. ப. கோ. | செங்கல்பட்டு |
| 232. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233. ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235. மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |



## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் — அமைச்சர்
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் — அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே — அமைச்சர்
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது — அமைச்சர்
5. வெங்கடசாமி திரு. க. —வழக்கறிஞர் (பொறுப்பு)

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் — அமைச்சர்
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் — அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே — அமைச்சர்
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது — அமைச்சர்
5. வெங்கடசாமி திரு. க. —வழக்கறிஞர் (பொறுப்பு)

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு''.

செய்யத் தொடங்கும் ஒரு செயலை முன்னதாகவே நன்றாக ஆராய்ந்து, பிறகு அதைச் செய்யத் தொடங்க வேண்டும். செய்யத் தொடங்கிய பிறகு அதன் முடிவை எண்ணிப் பார்க்கலாம் என்பது தவறு.

### (1) வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 2— திரு. என். பழனிவேல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : குறுகிய கால வினா உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை முடிந்தவுடன் அது எடுத்துக் கொள்ளப் பெறும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய கால வினாக்கள் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: இதுவரைக்கும் குறுகிய கால வினாதான் முதலில் எடுத்துக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரைக்கும் உடுக்குறியிட்ட வினாக்கள் வரவில்லை, விதிகளில். வினாப் பட்டியலில் கண்டுள்ள வாய்மொழி விடைகளுக்கான வினாக்கள் முடிந்தவுடன், குறுகிய கால வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்றிருக்கிறது. எனவே இன்று முதலில்—வினாப்பட்டியலில் இருக்கும் உடுக்குறியிட்ட வினாக்கள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நாங்கள் பழைய ஞாபகத்தில் சொன்னோம்.

## அரிசன குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு.

| | |
|---|---|
| *வினா எண். 2. திரு. என். பழனிவேல், திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. ரா. ஜெயராமன் | மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: |

கிராமங்களில் வசிக்கும் அரிசனங்களுக்கு 12 ரூபாயில் மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை நகராட்சி, பேரூராட்சிகள் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அரிசனங்களுக்கு விஸ்தரித்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, தற்பொழுது ரூ. 12-க்குக் கிராமப் பஞ்சாயத்துக்களில் வசிக்கும் அரிசனங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது. இதைப் போல், மேஜர் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் இருக்கக் கூடிய அரிசனங்கள் வசிக்கக்கூடிய குடிசைகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே கிராமப் பஞ்சாயத்துக்களிலே உள்ள ஏழை-எளியவர்கள் இல்லங்களுக்கு மட்டும்தான் மின்சாரம் தரப்படுகிறது. பேரூராட்சி மன்றங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் இவை தரப்படுமேயானால், அவை வேறு தவறான முறைகளில் பயன்படுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகையினால் இப்பொழுது தர இயலாது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது ரூ. 12-க்கான வசதிகள் குடிசைகளுக்கு மட்டும் என்றிருக்கிறது. அரசே அரிசனங்களுக்கு ஓடுபோட்ட வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் அந்த வீடுகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது அரிசனங்களுக்காக என்று மட்டும் கொண்டு வரப்பட்ட திட்டம் அல்ல. எல்லா ஏழைகளும் பலன் பெறும் வகையிலே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்த வசதியுமின்றி குடிசைகளிலே இருக்கின்றவர்களுக்கு இந்த ஒரு விளக்குத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. வீடு கட்டும் திட்டத்திலே வீடுகட்டி, அதன்மூலம் பலன் பெறுகின்ற அளவுக்கு உள்ள ஏழை



களுக்கு ஓரளவாவது அரசாங்கத்தின் மூலம் வீடு என்ற பலன் கிடைக்கிற காரணத்தாலே, அதை இப்பொழுது தருவதற்கில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசனக் காலனிகளிலே, சில அரிசனக் காலனிகளை அரிசனங்களுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள். அத்தகைய அரிசனக் காலனிகளுக்கு இந்த மின் திட்டத்தை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். அதாவது, குடிசைகளிலே இருக்கிற ஏழைகளுக்கு இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. அவர்கள் அரிசனங்களாக இருந்தாலும், ஜாதி இந்துக்களாக இருந்தாலும், ஏழைகளாகக் குடிசைகளிலே இருந்தாலே போதுமானது. அரிசனக் காலனிகள் என்று அரசாங்கம் கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் என்ற அந்த இலக்கணம் இதிலே வராது. ஆனால், அத்தகைய வீடு கூட இல்லாத அரிசனங்களுக்கு முதலிலே கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு மற்றவற்றைப் பார்க்கலாம்,

திரு. ஜெ. எஸ். இராசு: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெறும் இல்லங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அகல—நீளம் உள்ளதாக இருந்தால்தான் இந்த இணைப்பு தரப்படும் என்று விதி இருப்பதாக அறிகிறோம். அதை மாற்றி, சற்று பெரிய வீடாக இருந்தாலும் அவைகளுக்கும் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 200 சதுர அடிக்கு அதிகப்படாமலும், மண் சுவரும், கீற்றுக் கூரையும் கொண்ட வசிக்கும் இடத்திற்கு வழங்கப்படுகின்றது. ஏற்கெனவே 4½ லட்சம் மனுக்கள் மின்சார வாரியத்திற்கு வந்திருக்கின்றன. அதில் சுமார் 2 லட்சம் பேர்களுக்குத்தான் அளித்திருக்கிறோம். ஆகவே அதை மாற்றி அதிகப் படியான பரப்பளவு கொண்ட குடிசைகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் தற்போது இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று முன்னால் பதில் சொல்லுகிறபோது ஏழை எளிய அரிசன மக்களுக்குத்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஏழை எளிய, அரிசன மக்கள் கிராமங்களில் மட்டும் இல்லை. பேரூராட்சிகளிலும் நகராட்சிப் பகுதியிலும் இருக்

கிறார்கள். அவர்களுக்கு அந்த மின்சார வசதியைக் கொடுத்தால் தவறுகள் நடந்து விடும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் தவறுகள் எங்கு வேண்டுமானாலும் நடக்கலாம். எனவே இத் திட்டத்தை பேரூராட்சிப் பகுதிகளுக்கும், நகராட்சிப் பகுதி களுக்கும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் குடிசைகள் திடீர் திடீரென்று வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல் நகரங்களிலே இந்த மின்சாரத்தைப் பல்வேறு தொழில்களுக்கு பயன்படுத்தும் நிலை இருக்கிறது. அதைத் தொடர்ந்து கண் காணிக்க இயலாது. அதோடு மட்டுமல்ல, உண்மையிலேயே அதிக மான ஏழைகள் கிராமப் புறங்களிலேதான் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன, மெட்டீரியல் இல்லை என்று தாமதம் செய்கின்றார்கள். அப்படி அந்த மெட்டீரியல்களைக் கொடுத்து தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தாமதம் தவிர்க்கப்படும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் இந்தக் குறைந்த செலவில் மின் இணைப்புக் கொடுக்கும் திட்டத் திற்காக காடியல், மங்கோல், இடைக்கோடு போன்ற இடங்களில் இருந்து சுமார் 800 மனுக்கள் அனுப்பப்பட்டு அவைகள் தேங்கிக் கிடப்பதாக அறிகிறேன். அவர்களின் மீது ஏதேனும் புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படி வந்திருக்கக்கூடிய மனுக்களை துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து 641 ஏழை எளியவர்கள் இல்லங்களுக்கு இந்த வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே 4½ லட்சம் மனுக்கள் மின் வாரியம் பெற்றிருக்கிறது என்று சொன்னேன். அதில் இரண்டு லட்சம் இணைப்புக்கள்தான் கொடுத்திருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் அதனுடைய முழுப்பயன் அந்த ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இதில் பெரி





விஷயம் என்னவென்றால் பல்பின் தரம் தான். 60 வாட்ஸ் என்று சொல்லி 40 வாட்ஸ் போடுகிறார்கள். அவைகள் அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகின்றன. இந்த ஏழை எளிய மக்கள் உபயோகப்படுத்தும் விளக்குகள் அடிக்கடி பியூசாகிவிட்டால் அவர்களுக்கு உபயோக மாக இருக்காது. இதைப் பற்றி ஏதேனும் என்கொயரி செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா? ஏன் தரம் குறைகின்றது? மானுபாக்சரிங் கம்பெனி ஏமாற்றுகிறதா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சாதாரணமாக மின் இணைப்பு வசதி வேண்டுமானால் ஏற்கனவே உள்ள சட்டதிட்டத்தின்படி 150, 200 ரூபாய் கட்டணம் கட்டினால்தான் மின் இணைப்புக் கிடைக்கும். ஆனால் இப்போது 10 ரூபாய் கட்டினாலே நாமே ஒயரிங் செய்து 40 வாட்ஸ் பல்பு போட்டுத் தருகிறோம். அந்த பல்பு பியூஸ் ஆகிவிட்டால் அவர்களேதான் வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, அதைத் தொடர்ந்து மாற்றித் தருவது இயலாது.

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, குடிசை களுக்கு மின்வசதி தருகின்ற திட்டங்கள் ஆளுநரின் ஆட்சிக் காலத்திலே நிறுத்தி வைக்கப்பட்டது என்று பத்திரிகையிலே பார்த்தேன். அது இப்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா அல்லது தொடர்ந்து நடத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். குடிசைகளில் வாழ்கின்றவர்கள் இந்த மின் கட்டணத்தை இதுவரையில் ஒழுங்காகக் கட்டியிருக்கிறார்களா? ஏதேனும் நிலுவையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம இப்போது விரைவு படுத்தப்படுகிறது. எல்லாக் குடிசைகளுக்கும் இந்த 5 ஆண்டுகளில் மின்வசதி கொடுத்து முடித்துவிட வேண்டும் என்பது நம்முடைய தேர்தல் வாக்குறுதி யாகும். 'நம்முடைய லட்சியமும் கூட அதுதான், அது ஆளுநர் ஆட்சியிலே நிறுத்தினார்களா என்ற விபரம் என்னிடத்திலே தற்போது இல்லை. அவர்கள் ஒழுங்காகப் பணம் கட்டி வருகிறார்களா என்று என்னைக் கேட்டார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் ஏழைகள் எப்போதும் ஏமாற்றுவதில்லை. பணக்காரர்கள்தான் ஏமாற்றுகிறார்கள்.

[முற்பகல் 9.10]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில், இந்தத் திட்டத்தில் பேரூராட்சியை இப்போது எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். பேரூராட்சி [illegible]

உதாரணத்திற்குச் சொல்கிறேன்—புஞ்சைபுளியம்பட்டி, நாயக்கனூர் போன்ற பேரூராட்சிகளில் 22 முதல் 25 கிராமங்கள் வரை இருக்கின்றன. அம்மாதிரி கிராமங்களில் குடிசைகளில் வாழும் மக்களுக்கும் இந்தத் திட்டத்தை அமல் படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாதிரி கிராமங்கள் பேரூராட்சி என்ற பெயரில் இருந்து விடுபட வேண்டும்.

திரு. பொ. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனக் குடிசைகளுக்கு இந்த மின் இணைப்புக் கொடுப்பது என்பது நல்ல திட்டம். அந்தக் குடிசைகளில் நடுவில் ஒரு தடுப்பு இருக்கிறது. அப்படி தடுப்பு இருந்தால் தான் சமையல் செய்வதற்கும், படிப்பதற்கும் வசதியாக இருக்கும். கிராமப்புறங்களில் சாதாரணமாக இப்படித்தான் இருக்கும். மின் இணைப்பு தருகிறபோது அப்படி இடையில் தடுப்பு இல்லாமல் ஒரே ஹால் என்ற அமைப்பில் இருந்தால்தான் தரமுடியும் என்று சொல்லப்படுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா? இடையில் தடுப்புச் சுவர் இருந்தாலும் மின் இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த 200 சதுர அடி என்பது "பிளின்த் ஏரியா." ஆகவே, உள்ளே தடுப்புச் சுவர் இருக்கிறதா இல்லையா என்பது பிரச்னை இல்லை. தடுப்புச் சுவர் இருக்கிறது என்ற காரணத்தாலே மின் வசதி தரமாட்டோம் என்பதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை.

திரு. மு. ப. முனுசாமி: தலைவர் அவர்களே, பரப்பளவு 200 சதுர அடி என்று இருப்பதால் சில இடங்களில் கிராமப் புறங்களில் உள்ள ஏழை எளிய அரிசன மக்களுக்கு மின் வசதி கிடைப்பது இல்லை. அந்தப் பரப்பளவைக் குறைத்து அந்தக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசு முன் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினா.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கொடுத்தவர்களுக்கு இரண்டு துணை வினாக்கள் கேட்க அனுமதி அளிப்பது வழக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 5–6 கேள்விகள் இருக்கின்றன. அவற்றை முடித்துக் கொண்டு தொழிலாளர் நல மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்வதற்கு 11 மணி – ஆகி



விடும் என்று நினைக்கிறேன். எல்லாக் கட்சிகளிலும் உள்ளவர்கள் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்; எல்லா விவரங்களும் வந்துவிட்டன. உங்களுக்குக் குறைகள் இருந்தால் அறையில் வந்து சொல்லவும்.

திரு. ரா. உமாநாத்: இது முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது முக்கியமான விஷயம் இல்லை?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நடைமுறையைப் பொறுத்த வரையில், எந்தக் கட்சியாக இருந்தாலும் மூலக் கேள்வி கொடுத்தவருக்கு இரண்டு சப்ளிமெண்டரி கேட்பதற்கு உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கொடுத்தவர் தான் முதல் துணைக் கேள்வி கேட்டிருக்கிறார். மூலக்கேள்வி கேட்டவருக்கு இரண்டு துணை வினாக்கள் கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்கிற நடைமுறையை அடுத்த கேள்வியில் இருந்து பின்பற்றலாம்.

## காடம்பாறை நீரேற்று மின் திட்டப்பணியாளர்.

*வினா எண். 3 திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுக்கா காடம் பாறை நீரேற்று மின் திட்டப்பணிகளை காண்டிராக்ட் எடுத்துள்ள H.C.C. கம்பெனி நிர்வாகத்திற்கும் சுரங்கப்பாதை வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் இடையே தொழில் தகராறு ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், திட்டப்பணி பாதிக்காமலிருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மற்றும் (ஆ): ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் ஒப்பந்தக் கம்பெனிக்கும் இடையே எழுந்துள்ள தொழிற் தகராறு குறித்து தொழிலாளர் துணை ஆணையாளர் சம்பந்தப் பட்ட தொழிற் சங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் காடம்பாறை நீரேற்று மின் நிலையத் திட்டம் மிகவும் முக்கியமான திட்டம். அது தாமதப்படாமல் சீக்கிரமாக நிறைவேறும் பொருட்டு—

ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருந்தாலும், அந்த மெயின் கான்ட்ராக்டர்கள் தான் அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாளி என்று இருந்தாலும் அந்த தொழிலாளிகளுக்கு 8 மணி நேரம் வேலை என்பது உள்பட எந்த சட்டபூர்வமான உரிமையையும் அந்த முதலாளிகள் அனுமதிக்காமல் இருந்த காரணத்தால் தான் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது. மேலும் அதில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்க அரசு தீவிரமாக இதில் தலையிட்டு தொழிலாளிகளின் உரிமையைப் பாதுகாக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சட்டத்தையும் பார்க்கவேண்டும். அதே நேரத்தில், இந்தத் திட்டத்தையும் பார்க்க வேண்டும். இந்தத் திட்டம் 3 ஆண்டு காலத்தில் முடித்தாக வேண்டும் என்று நாமும் கடுமையான வேகத்தில் செயல்பட்டு வரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அங்கே இருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சில கோரிக்கைகளை ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுத்து, அதை வற்புறுத்தி போராட்டம் போன்றவைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். விரைவில் சுமுக நிலை ஏற்படுவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ள இந்தப் பதிலை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த ஒப்பந்தக்காரர்களின் கையில் சிக்கியுள்ள தொழிலாளர்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் தான் முதலாளி, அவர்கள் எப்படியாவது செய்து கொள்ளட்டும், அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்ற நிலை, அல்லது பேச்சு அரசுப் பக்கத்தில் இருந்து வரக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் தொழிலாளிக்கு முதலில் பாதுகாப்பு கொடுப்பதற்கு வேண்டிய துரித நடவடிக்கையை அரசு எடுத்து இருந்தால் இந் நேரம் அந்தப் பிரச்னை தீர்ந்து போய் இருக்கும். ஆகவே, இப்போதாவது அந்த லேபர் இலாகாவோடு, சம்பந்தப்பட்ட அமைச்சரோடு நமது அமைச்சர் கலந்து பேசி, அவர்களுக்கு இதிலே பிரதான பொறுப்பு உண்டு என்ற முறையில் அதைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. லேபர் கமிஷனர் அவர்கள் இம்மாதம் 17-ந் தேதி இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கிறார்கள், அதில் சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்புவோம்.



பவுண்டன் பேனா நிப்பிற்கு விற்பனை வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல்.

*வினா எண் 4: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் பவுண்டன் பேனா உற்பத்தியாளர்கள் தயார் செய்யும் பேனா நிப்பிற்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது முதல் நடைமுறைக்குவரும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) சாத்தூர் பவுண்டன் பேனா நிப் உற்பத்தியாளர்கள் தங்கள் விண்ணப்பத்தில் ஸ்டெயின் லெஸ் ஸ்டீலினால் தயார் செய்யப்படும் இரிடியம் பொருத்தப்படாத மற்றும் முலாம் பூசப்பெறாத (கையினால் தயாரிக்கப்பட்ட) பவுண்டன் பேனா நிப்புகளுக்கு ஒரு முனை விற்பனை வரியை நீக்கி பல முனை விற்பனை வரி விதிப்பதற்கு கொண்டு வரக் கோரியுள்ளனர். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இந்த பேனா நிப்புக்கு ஒருமுறை வரி தற்போது வசூல் செய்யப்படுகிறது. சாத்தூர் பவுண்டன் பேனா நிப் உற்பத்தியாளர்கள் பலமுனை வரி விதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். பலமுனை வரி விதித்தாலும் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வரிப்பளு ஏற்படுகிறது. ஆகவே, மொத்தமாக வரி விலக்கு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மொத்த வரி விலக்கு அளித்தால ஏறத்தாழ 96,000 ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, சாத்தூர் பவுண்டன் பேனா உற்பத்தியாளர்கள் இதுவரை விற்பனை வரியாக எவ்வளவு கட்டியுள்ளார்கள்? புதிதாக இம்மாதிரியான தொழிற்சாலைகளை நடத்த, தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிப்பு தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பதில் கைவசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த பவுண்டன் பேனா நிப்பு செய்யும் வேலையை சாத்தூரில் ஒரு குடிசைத் தொழிலாக, 5 பேர், 10 பேர் சேர்ந்து வீடுகளில் வைத்துச் செய்கிறார்கள். இது நம்முடைய மாநிலம் தவிர வெளி மாநிலங்களுக்கு, கல்கத்தா போன்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளி மாநிலத்தவர்களும் இதை வாங்குகிறார்கள். வரி போடுவதன் காரணமாக விலை கூடும். அதனால் தொழில் பாதிக்கும். இது ஒரு குடிசைத் தொழிலாக இருப்பதால்—95,000 ரூபாய்தான் வருமானம் என்று சொல்கிறார்கள்—முழுவதுமாக வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே அரசு ஆலோசிக்கும்.

## தமிழக அரசின் முத்திரைச் சின்னம்

* வினா எண் 5: திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுர வடிவமைப்பைக் கொண்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில்; இது குறித்து கோபுரத்தின் அருகே கல்வெட்டு ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்; (அ) தமிழக அரசு முத்திரைச் சின்னம் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தின் சாயலைக் கொண்டுள்ளதே தவிர, மேற்கொண்ட கோயில் கோபுர வடிவத்தை கொண்டு தமிழக அரசின் முத்திரைச் சின்னம் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) எனவே அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, ஆண்டாள் கோயில் கோபுரத்தை மாடலாகக் கொண்டதாக இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எந்த கோபுரத்தை மாடலாகக் கொண்டது? இதே சட்டமன்றத்தில் கேள்வி கேட்கும்போது மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் இந்த கோயிலை மாடலாகக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாறுபட்ட கருத்து வந்திருக்கிறது. இது பற்றி விளக்குவார்களா?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆண்டாள் கோயிலுள்ள வடபத்ர சயனர் கோபுரத்தின் சாயலை ஒத்துள்ளது என்றும், அதை அப்படியே மறு பதிப்பாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் பொதுத் துறையிலிருந்து தகவல் தந்திருக்கிறார்கள். அதற்கு மேலே இப்போது தகவல் இல்லை.

[முற்பகல் 9.20]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, நமது இந்திய அரசின் சின்னமாக விளங்குவது அசோக ஸ்தூபியாகும். அதை குழந்தைகள், இளைஞர்கள் அனைவரும் அறிவர். ஆனால், தமிழ்நாட்டின் முத்திரைச் சின்னம் எதுவென்று தெரியாமல் நாம் இருப்பதை எண்ணிப்பார்க்கின்றபோது மிகவும் பாவமான நிலையில் இருக்கின்றோம். ஆகவே, அதை ஆராய்ந்து அது எந்தக் கோயிலின் சின்னம் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அசோகனுடைய முத்திரைச் சின்னம் இந்திய அரசினுடைய சின்னம். இந்தியா முழுவதற்கும் ஒரே சின்னம்தான், அசோகனும் ஒருவன்தான். ஆனால், சிறப்புமிக்க கோவில்கள் நிறைந்த தமிழகத்தின் சிறப்பைக் காட்டுவதற்காகத்தான் கோபுரச் சின்னத்தைப் பொறித்திருக்கிறோம். அது ஆண்டாள் கோயில் கோபுர உருவமாகத்தான் இருக்கவேண்டும் என்பதல்ல. பொதுவாக கோபுரம் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, நம்முடைய அரசின் சின்னம் ஆண்டாள் கோயில் கோபுரச் சின்னம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு சொல்லவில்லை. பொதுவாக ஒரு கோபுரம் பொறிக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் சொன்னார்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, நான் என்னுடைய தவறைத் திருத்திக்கொள்கிறேன். ஆனால், எனக்கு எப்படி நினைவு என்றால் மதுரையிலே இருக்கின்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் சின்னத்தைத்தான் அரசாங்கம் தன்னுடைய முத்திரையாக ஆக்கியது என்பதுதான். அப்படித்தான் எனக்கு நினைவு. ஆகவே, அமைச்சரவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுடை— கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர்

திரு. நெடுமாறன் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இந்தச் சிக்கல் வரக்கூடாது என்பதற்காகத்தான் தமிழ்நாட்டிலுள்ள ஆலயக் கோபுரத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கின்றது என்ற வகையில் அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில ஆண்டவனை ஒப்புக்கொள்கிறவர்களும் இருக்கின்றார்கள், மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். ஆகவே பொதுவாக இருக்கின்ற அரசாங்கத்தின சின்னமாக பொது சின்னம் ஒன்று அமைகின்ற வகையில், இந்தக் கோயில் கோபுர சின்னத்தை மாற்றி வேறு புது சின்னம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கோபுரச் சின்னம் என்பதை ஆண்டவனுடைய சின்னம் என்று ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. உலகத்திலேயே மிகச் சிறந்த சிற்பிகள் தமிழகத்திலே உள்ளவர்கள் என்ற வகையிலேயும், கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கட்டிடக் கலையில் சிறந்தவர்களாகவும் அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு சின்னம் தான் கோபுரச் சின்னம். ஒருவேளை ஆண்டவன் மீது நம்பிக்கையில்லாதவர்கள் வேண்டுமானால் இப்படி எடுத்துக்கொள்ளலாம். ஆண்டவன் மீது நம்பிக்கை உள்ளவர்கள் தாம் வணங்குகின்ற ஆலயத்தின் கோபுரம் என்று எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோயில் சின்னத்தைப் பற்றிக் கொடுத்த விளக்கம் மிகச் சிறப்பானது. நம்முடைய தமிழகத்தின் சிற்பக் கலையையும், கட்டடக் கலையையும் எடுத்துக் காட்டுகின்ற வகையிலேதான் கோபுரத்தைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். ஆனால், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோபுரம்தான் பெரிய கோபுரம். அது மதுரையை விடப் பெரிய கோபுரம். மதுரையில் தமிழ் வளர்ந்திருக்கலாம். ஆனால், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோபுரம்தான் மிகப் பெரிய கோபுரம். ஆகவே, அதைத்தான் தமிழக அரசு முத்திரையிலே போட்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இது குறித்து அமைச்சரவர்கள் என்ன விளக்கம் தருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவரவர்களே, யார் யார் எந்தெந்தக் கோபுரம் என்று அவரவர்கள் மனதில் எண்ணிக்கொள்கிறார்களோ அப்படி எண்ணிக்கொள்ளலாம். பொதுவாக கோபுரச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் அதை



மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் கோபுரம் என்று எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் அதை திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தின் சின்னமாக எண்ணிக்கொள்ளலாம். திரு. நெடுமாறன் அவர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் கோபுரமாக எண்ணிக்கொள்ளலாம்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம்

*குறுகியகால வினா எண் 14 திரு. என். எஸ். வி. சித்தன்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்ட வீரர்களின் பென்ஷன் தொகையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) & (ஆ) மாநில ஓய்வூதியம் பெறாமல் மத்திய ஓய்வூதியம் மட்டுமே பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ. 75–ல் இருந்து ரூ. 100 ஆக கடந்த ஆண்டுதான், அதாவது 1–4–1979 முதல் இந்த அரசு உயர்த்தி உள்ளது. அதனை மேலும் உயர்த்திடும் செயற் குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காக பல ஆண்டுகள் சிறையில் இருந்து துன்பங்களை அனுபவித்தவர்கள் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள். அவர்களுடைய பிறந்த நாளாகிய இன்று, இந்தியாவின் விடுதலைக்காக சொத்து சுகத்தை இழந்து, தியாகம் செய்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்போது தரப்பட்டு வருகின்ற பென்ஷன் தொகையின் அளவை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? அதுமட்டுமல்லாமல், சுதந்திரப் போராட்ட வீரர்களின் குடும்பத்திலே ஒருவருக்காவது கட்டாயமாக வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குகிற திட்டம் அவ்வப்போது மாற்றப்பட்டு, உயர்த்தப்பட்டு வந்திருக்கிறது. இந்தத் தமிழக அரசைப் பொறுத்தவரையில் 1–10–66 முதல் மூன்று திட்டம் நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. [illegible] சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு [illegible] மாதகால

சென்றவர்களுக்கு மாதம் 50 ரூபாய் வழங்கப்படுவதாக சொல்லப் பட்டது. அந்த தியாகி மறைந்துவிட்டால் அவர் மனைவி, அல்லது அவருடைய 18 வயது நிறைந்த மகன், அல்லது 21 வயது நிறைந்த மணமாகாத மகள் ஆகியோர் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இருந்தது.

அதற்குப் பிறகு 1972 ஆம் ஆண்டு சுதந்திர வெள்ளி விழா கொண்டாடுகிறபோது தான் மத்திய அரசு இந்தச் சலுகையைக் கொண்டு வந்தது. தமிழக அரசு அதற்கு முன்னாலேயே 1966 லேயே இந்தத் திட்டத்தைக்கொண்டு வந்தது. அந்த வெள்ளி விழா ஆண்டில் 50 ரூபாய் ஓய்வு ஊதியத்தை 75 ரூபாயாக ஆக்கியது. மத்திய அரசு ஓய்வு ஊதியத்தை 200 ரூபாய் ஆக்குகிறபோது, 125 ரூபாய் மத்திய அரசின் ஊதியமாகவும் 75 ரூபாய் மாநில அரசின் ஊதியமாகவும் கொள்ளப்பட்டு 200 ரூபாய் மொத்தமாக அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

தமிழக அரசு சென்ற ஆண்டு 1-4-1979 தேதி முதல் 75 ரூபாய் ஓய்வு ஊதியத்தை 100 ஆக ஆக்கியிருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல், வேறு சில சலுகைகளும் தரப்பட்டன. 100 ரூபாய்க்கு கீழே மாத வருமானம் உள்ள தியாகிகளுக்குத்தான் அந்த ஓய்வு ஊதியம் வழங்கப்பெறும் என்று இருந்ததை, 2–12–1978 முதல் 125 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்களுக்கு என்று மாற்றி யமைக்கப்பெற்று, அவர் இறந்துவிட்டால் அந்த ஓய்வு ஊதியத்தை, அவர் மனைவி, மகன், மகள் யார் வேண்டு மானாலும் பெறலாம் என்று சலுகைகள் வழங்கப்பெற்றன.

அதற்குப் பிறகு 1–4–1980-லிருந்து, 3 மாத காலம் சிறையில் இருந்த விடுதலை வீரர்களுக்குத்தான் ஓயவு ஊதியம் என்று இருந்ததை, ஒரு மாத காலம் சிறையில் இருந்தாலே போதும் என்றும் அரசு மாற்றியமைத்தது. இப்படி அடிக்கடி மாறுதல்கள் செய்யப் பெற்றிருப்பதால், இப்போது மறுபடியும் தனியாக திருத்தியமைக்க முடியாத நிலையில் அரசு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்கள் பென்ஷன் பெறுவதற்கும் அதைத் தொடர்ந்து அனுபவிப்பதற்கும் ஒரு நிபந்தனை தடையாக இருப்பதாகத் தெரிகிறது. அதாவது, அந்த தியாகிகள்—வீரர்கள் ஏதாவது வன்முறையில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு பென்ஷன் கிடையாது என்ற நிபந்தனை இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவர்கள் தொழிலாளர் சங்கம் மற்றும் உள்ள அமைப்புகளுக்கும் உதவிசெய்ய தீவிரமாக ஈடுபட முடிவதில்லை. அதனால் அதை மாற்றி





அவர்கள் பென்ஷனை தொடர்ந்து பெறுவதற்கு அந்த நிபந்தனையை எடுத்துவிட்டு அவர்களுக்கு பென்ஷன் வழங்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அபபடி எந்த நிபந்தனையும் இருப்பதாக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளில் தகவல் இல்லை. இருக்கின்ற நிபந்தனைகள் எல்லாம் 1942—லிருந்து 1944-க்கு இடைப்பட்ட காலத்தில் அல்லது அதற்கு முன் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு குறைந்தபட்சம் ஒரு மாத காலமாவது சிறை சென்றிருக்க வேண்டும் அல்லது இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.

அடுத்து, மத்திய அரசின் பென்ஷன் அல்லாது மாத வருமானம் ரூ. 125—க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும். ஓய்வு ஊதியம் பெறவேண்டிய தியாகி இறந்துபட்டால், அவருடைய மனைவி, மகன், மகள் யார் வேண்டுமானாலும் பெறலாம் என்று இருக்கிறது.

அது தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்ற நிபந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருக்குமேயானால் அதுபற்றி அரசு நிச்சயமாக ஆராயும்.

திரு. மூ. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குமரி மாவட்டத்திலே சிங்கத் தமிழர்கள் பெற்றுவந்த இந்த ஓய்வு ஊதியத்தை அவசர கால நிலையில் அவசர அவசரமாக நிறுத்திவிட்டார்கள். அதை மீண்டும் அவசரமாக வழங்க வேண்டியதின் அவசியத்தை அரசு உணர்ந் திருக்கிறதா? அதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9—30]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்கள் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், பலாத்காரம் சம்பந்தமாக சில நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் தருவது சம்பந்தமாக. சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் நடைபெற்ற போராட்டங்களில் அந்த மாதிரி சம்பவங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி சிலபேர்களுக்கு பென்ஷன் கிடைக்காமலிருக்கிறது. ஆனால்,

மத்திய அரசின் பென்ஷனை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.
மாநில பென்ஷன் மட்டுமில்லை. எங்கள் கட்சியைச் சார்ந்த
திரு. மீனாட்சிநாதன் போன்றவர்களுக்கு மாநில அரசு
பென்ஷன் கிடைக்கவில்லை. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு
இந்தப் பென்ஷன் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பார்களா?
அதோடு கூட இந்த ரூ. 125 என்ற வருமான வரம்பு உயர்த்தப்
படவேண்டும். மத்திய அரசு பென்ஷன் கிடைக்க ரூ. 500
வருமானம் இருந்தாலும் கொடுக்கலாம் என்று கூறுகிறார்கள்.
எனவே 125 ரூபாய் வருமானத்திற்கு மேல் இருந்தால் அவர்
களுக்கு பென்ஷன் கிடையாது என்று சொல்லக்கூடிய விதியைத்
தளர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? சிலர்
முன்னாலே பென்ஷன் வாங்குவதற்கு மனு போடாமல் இருந்து
விட்டார்கள். அவர்களுக்கு வேறு வருமானம் வந்துகொண்டிருக்
கலாம். அல்லது சிலபேர்கள் வேண்டாம் என்று மனு போடாமல்
இருந்துவிட்டிருக்கலாம். எனவே, இப்போது தேவை என்று,
இந்தப் பென்ஷன் பெற எல்லாத் தகுதிகளையும் உடையவர்கள்
மனு செய்தால், காலவரையறை என்றில்லாமல் அவர்கள்
எப்போது வேண்டுமானாலும் மனு செய்யலாம் என்றளவிற்கு
விதியை அமைக்க அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஏதாவது காரணம் காட்டி
ஏற்கனவே கொடுத்து வந்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்தால்
அதை தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால்
தனியாக அரசு ஆராய்ந்து அதற்கான தனி முடிவை அரசு
ஏற்கக்கூடும். ஒரு மாத காலமாவது சிறை தண்டனை
அனுபவித்திருக்க வேண்டும். சிறைச்சாலை பதிவேட்டின்
சான்றிதழ்கள் அவர்களுக்கு கிடைக்கமுடியாத ஒரு சூழ்நிலை
ஏற்பட்டால் அவர்களோடு உடனிருந்த முதல் அமைச்சர்கள்
அல்லது அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள்
அல்லது சட்டப்பேரவை சட்ட மேலவை உறுப்பினர்கள்
முன்னால் பதவியிலிருந்தவர்கள் அல்லது இப்போது இருப்பவர்கள்
அவர்களுடன் இருந்ததாக 'கோப்ரிசனர் சர்ட்டிப்பிகேட்', ஒருமாத
காலம் சிறையில் இருந்தார்கள் என்று அவர்களிடமிருந்து சான்
றிதழ் பெற்றுத்தருவார்களேயானால் அவர்களுடைய விண்ணப்பங்
களையும் இந்த அரசு கவனிக்கும் என்று விதிமுறையில் சேர்க்கப்
பட்டிருக்கிறது. சிறைச்சாலைப் பதிவேட்டில் பதிவுசெய்யப்
படாத ஒரு சூழ்நிலை இருந்து தத்தளிக்கிற ஒரு நிலைமை
ஏற்பட்டாலும் அவர்களும் இப்படி விண்ணப்பிக்கலாம்
என்றிருக்கிறது. ரூ. 125 என்பதை உயர்த்தவேண்டும் என்று
கூறினார்கள். முன்பு ரூ. 100-க்குக் கீழ் வருமானம் உள்ளவர்
களுக்குத்தான் பென்ஷன் என்றிருந்தது. சென்ற ஆண்டு அது
ரூ. 125 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் அதை உயர்த்த
வேண்டிய நிலைமை இருக்கிறது என்றால் தனியாக ஆராய
வேண்டும்.



<u>திரு. இரா. முத்தையா:</u> சுதந்திரப் போராட்ட வீரர்களைப்
போல் இந்தி எதிர்ப்புப் போராட்ட தியாகிகளுக்கும் இதே
மாதிரி பென்ஷன் வழங்கப்பட்டு நிறுத்தப்பட்டது. இந்த அரசு
பொறுப்பேற்ற பிறகு திரும்ப இந்தி எதிர்ப்புப் போராட்ட
வீரர்களுக்கு பென்ஷன் வழங்கப்படும் என்று திட்டம் இருப்பதாக
அறிகிறேன். இது எப்போது நிறைவேற்றப்படும் என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி
கேட்டால் அந்த நிலைமைகளை ஆராய்ந்து அதற்கான விடை
தரப்படும்.

<u>திரு. பா. நெடுமாறன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
சுதந்திரப் போராட்ட வீரர்கள் எண்ணிக்கை என்பது ஒவ்வொரு
நாளும் அருகிக் கொண்டே போகிறது. அது ஒவ்வொரு
நாளும் வளர்ந்து கொண்டு போகிற எண்ணிக்கை அல்ல.
இன்னும் நிறைய சுதந்திரப் போராட்ட வீரர்கள் முறையாக
சான்றிதழ்கள் பெற முடியாமல், பென்ஷன் பெற முடியாத
நிலையில் இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திலும்
இருக்கக்கூடிய நான்கு அல்லது ஐந்து முதிர்ந்த சுதந்திர
போராட்ட வீரர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அவர்கள்
நேரடியாக விண்ணப்பங்கள் செய்திருப்பவர்களை அழைத்து
அவர்களுக்கு சிறையில் இருந்தார்களா இல்லையா என்பது
நிச்சயமாகத் தெரியாமல் இருக்க முடியாது— இவர்கள் எல்லாம்
சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று அவர்கள் முடிவு செய்து
இவர்களுக்கு பென்ஷன் கொடுக்கலாம் என்று சொன்னால்
அதை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் உடனடியாக அந்த
மனுக்களை பைசல் செய்ய முன்வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : நான் ஏற்கனவே
குறிப்பிட்டேன். சிறைச்சாலையிலிருந்து சான்றிதழ் பெற
முடியாதவர்கள் ஏற்கனவே முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள்,
நாடாளுமன்ற, சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள்
இவர்கள் எங்களோடு இருந்தார் என்று சொன்னால் தரலாம்.
என்றிருக்கிறது என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஒரு குழு அமைத்து அவர்கள்
ஆராய்ந்து அவர்களை இப்படிப்பட்ட தன்மையின் அடிப்படையில்
கொண்டுவர உதவி செய்வார்களானால் அது பொருத்தமா
யிருக்கும். ஆனால் அவர்கள் சொல்கிற கூற்றை வைத்துக்
கொண்டு தருவது என்பது என்றால்— ஒரு வரைமுறை இருக்க
வேண்டும். பென்ஷன் கிடைப்பதற்காக பல சிக்கல்கள் தவிர்க்கப்
பட்டு ஓரளவு சுமுகமான சூழ்நிலை வருவதற்கு பல்வேறு
முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன. இப்போதிருக்கிற
முறையை ஒத்துக்கொண்டு உதவி செய்கிற அளவிற்கு அதைச்
செய்தால் மிகவும் நன்றாயிருக்கும். ஆகவே ஒரு குழு கூறுகிறதை

வைத்துக்கொள்வது, [illegible] போய்விடும், [illegible] இருக்கவேண்டும். [illegible] இருந்தார் என்று [illegible] படும் [illegible] வெளிக்கப் [illegible].

திரு. எஸ். [illegible] சுதந்திரப் [illegible] சொத்தை [illegible] நாட்டிற்காகத் [illegible] இந்த நாட்டிலே [illegible] போன்ற [illegible] அவிநாசி [illegible] இப்போதுள்ள சட்டமன்ற [illegible] இருந்து உறுப்பினர்கள், [illegible] பாராளுமன்ற பெற்றவர்கள் அத்தாட்சி [illegible] தகுதி அமைச்சர் அவர்கள் [illegible] இப்போது அல்லது பாராளுமன்ற [illegible] தவறுகள் நடந்திருக்கின்றன. [illegible] பல அவர்கள் உண்மைக்கு [illegible] கிறார்கள். ஐ. என். ஏ. [illegible] இருந்தவர்கள். இன்னும் பழைய [illegible] படையிலே நாட்டிலே இருக்கிறார்கள். [illegible] வீரர்கள் இந்த உதவித் தொகை [illegible] மறுக்கிறது. [illegible] அரசு வீரர்கள் . . . . . . இந்த ஐ. என். ஏ.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] கேளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: [illegible] வீரர்களுக்கு, இந்த நேதாஜி ராணுவப் [illegible] சங்கடங்கள் இருக்கின்றன. அவர்கள் [illegible] பல அவர்களை இந்திய [illegible] பெறுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் [illegible] தெரியாது; பார்வார்ட் [illegible] இந்திய கொடுத்தால், அவர்களுக்கு [illegible] அத்தாட்சி [illegible] என்றால் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: [illegible] மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: இவர்களுக்கு இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தாட்சி கொடுப்பதிலே சங்கடங்கள் இருக்கக் கூடாது என்பதை எடுத்துக் காட்டியபோது, மானியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன [illegible] கேள்வி கேட்க வேண்டுமோ, அந்தக் கேள்வியைக் கேளுங்கள்.



திரு. எஸ். ஆண்டித்தேவர்: இந்த ஐ. என். ஏ. வீரர்களுக்கு கொடுக்கப்பட்ட மானியம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய விதிமுறைகள் இருக்கின்ற காரணத்தினால், ஐ. என். ஏ. வீரர்களுக்கு இன்னும் பலருக்கு மானியம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இவர்கள் இந்த சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து சான்று பெறமுடியாது. ஏனெனில் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்ன என்பதைக் கேளுங்கள். விளக்கம் சொல்லிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்?

திரு. எஸ் ஆண்டித்தேவர்: இத்தகைய ஐ. என். ஏ. சுதந்திர வீரர்களுக்கு பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் அத்தாட்சி இல்லாமல் மானியம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைச்சாலைக்குப் போயுள்ளவர்கள் இப்போதுள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் சான்றிதழைப் பெறவேண்டுமென்று அரசு சொல்லவில்லை. சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து, அமைச்சர்களாக இருந்து அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறையில் என்னுடன் ஒரு மாத காலம் இருந்தார் என்று சர்டிபிகேட் கொடுத்தால 'கோ—பிரிசனர்ஸ் சர்டிபிகேட்' கொடுத்தால், அப்படிப்பட்ட வகையிலே இந்த சர்டிபிகேட்டை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் இந்த விதிமுறை வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் சான்றிதழ் தரலாம் என்று வைக்கப்படவில்லை. ஆனால், இத்தகையவர்கள் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைக்குச் சென்றிருந்தால் அவர்கள் சான்றிதழ்கள் பெறுவதிலே அதிக கஷ்டம் இருக்காது. இந்திய ராணுவ வீரர்களுக்குள்ள ரெக்கார்டு கொஞ்சம் அதிகமாகவே இருக்கக்கூடும். இதிலேயும் சங்கடங்கள் இருக்கின்றன என்றால் அதைப்பற்றி தனியாகக் கொண்டு வருவார்களானால், ஆராய்ந்து இந்திய இராணுவ தேசிய வீரர்களுக்கு மானியம் கொடுப்பதற்கான வழி வகைகள் செய்வது பற்றி முடிவெடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய ராணுவ வீரர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு பகுதியினருக்கு மானியம் கொடுக்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது. மற்றொரு பகுதியினருக்குக் கொடுக்க முடியாத நிலையிலே அவர்கள் மறுக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே, இவர்களுக்கு நிர்ணயித்திருக்கின்ற தகுதி சம்பந்தமாக

இந்த அரசு பரிசீலனை செய்து, அவர்கள் அனைவருக்கும் மானியம் கொடுக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் நிறுத்தப்பட்டது என்பதற்கான காரணங்களை அவர்கள் விளக்குவார்களானால் மீண்டும் அவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது நியாயம் இருக்கின்றதா என்பதைப் பற்றி இந்த அரசு ஆராய்ந்து, முடிவெடுக்கும்.

திரு. பி. எஸ். திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, சிறைக்குச் சென்றவர்கள் அத்தாட்சி பெறுவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் சொன்னார்கள். அது தவிர, கிராமங்களிலே இருக்கின்ற சில பெரியவர்கள் சிறைச்சாலையிலே உடன் இருந்தவர்கள், அறிந்தவர்கள் சர்டிபிகேட் தந்தால், அதையும் இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போதுள்ள விதிமுறைகள் இந்த அளவோடு இருக்கின்றன. அதற்கு மேலே சிக்கல்கள் வந்து, அதைத் தவிர்க்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் மறுபடியும் எந்த அளவுக்கு தளர்த்துவது என்பதைப் பற்றி பின்னால் வேண்டுமானால் யோசிக்கலாம். சென்ற 1—4—80-லே இப்போதுள்ள இந்த அளவுக்கு வந்து, ஒரு மாதம் சிறையிலே இருந்திருந்தால் போதும் என்று வந்திருக்கிறது. இதிலே சிக்கல் ஏற்பட்டு, மறுபடியும் அவர்களுக்கு அத்தாட்சி கொடுப்பதிலே சிக்கல் ஏற்பட்டால், பின்னர் அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

(முற்பகல் 9-10)

[திரு. என். எஸ். வி. சித்தன் எழுந்தார்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூல வினாவைக் கொடுத்த உறுப்பினர் இரண்டு கேள்விகள் கேட்கலாம். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இரண்டாவது கேள்விக்கு அனுமதிக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்களைப் பார்த்தபோது உறுப்பினர் பேரவைத் தலைவரின் பக்கம் பார்க்கவில்லை. யோசனை செய்து கடைசிவரை காத்திருந்து இரண்டாவது கேள்வி கேட்பது என்பது முறையல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து விளக்கம் கேட்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் கருணை காட்ட வேண்டும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கருணை காட்டிய பிறகுதான் மற்ற உறுப்பினர் களுக்கு காட்டப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் மாத வருமாய் 125 ரூபாய்க்கு மேல் இருப்பவர்களுக்கு இந்த ஓய்வூதியம் மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். வரலாற்று சிறப்புமிக்க இந்தச் சேவையைக் கருத்தில் கொண்டு, சட்ட சபையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு எல்லாம் கொடுப்பது போல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கும் மாத வருமாய் எதுவாக இருந்தாலும் கூட, அவர்களுடைய சேவையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது, மரியாதை கொடுக்கிறது என்ற வகையில் ஓய்வூதியம் கொடுக்க அரசு இனியாவது முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது கிட்டத்தட்ட 7,000 பேர் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். நான் முதலிலேயே சொன்னேன்—100 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்த ஓய்வூதியம் கிடையாது என்பதை 125 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இருந்தாலும் இந்த வரம்பை உயர்த்த வேண்டிய கட்டம் வருமானால் பின்னால் யோசிக்கப்படும்.

குறிப்பிட்ட சிலருடைய நிலைமையை அறிந்து முக்கியத் துவத்தை அறிந்து நாட்டுக்குச் செய்த சேவைகளை அறிந்து பிரத்தியேகமாகச் சில சலுகைகள் தருகிற அளவுக்கு அரசு திருப்பூர் தியாகி குமரன் மனைவி ராமாயி அம்மாள் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, தியாகத்தை அடிப்படையாக வைத்து முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் அளிக்கப்பெற்றது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓய்வூதியத்தொகை ரூ. 75-யும் 3—12—79 முதல் 400 ரூபாயாக இவர்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக உயர்த்தித் தரப்பட்டிருக் கிறது. அதேபோல் திரு. கக்கன் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஓய்வூதியமாக அரசு வழங்கி வருகிறது. மேலும் அவருடைய ஆயுட்காலம் வரை வாடகையின்றி வீட்டுவசதியும் மருத்துவ வசதியும் அளிப்பதற்கான ஆணையையும் அந்த அரசு பிறப்பித்திருக்கிறது. 1—7—1978 முதல் காமராஜர் அவர் களுடைய சகோதரியாருக்கு 250 ரூபாய் பெற்று வந்ததை 500 ரூபாயாக உயர்த்தி தனிச் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. மறைந்த சுப்பிரமணிய சாஸ்திரி மருமகள் சீதாலட்சுமி அம்மை யாருக்கு அவருடைய சிரம நிலையைக் கருதி முதலமைச்சர் நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பெற்றது. இவ்வாறு தனியாகக் கவனிக்க வேண்டியவற்றைக் கவனித்து உதவி செய்யப் பட்டு வருகிறது. பொதுவாக கவனிக்கப்பட வேண்டியவற்றை ஆராய்ந்து எதிர்காலத்தில் திட்டமிட்டு முடிவு எடுக்கப்படும்.

இளம்பவயல் கிராம விவசாயிகள்.

*குறுகிய கால வினா எண். 15 திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, இளம்பவயல் கிராமத்தில் உழவடை செய்யும் விவசாயிகளை சரியானபடி பதிவு செய்யாததால் நிலச்சுவான்தார் உழுது கொண்டிருக்கும் விவசாயிகளை வெளியேற்றிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) உழவடை செய்யும் விவசாயிகள்வசம் நிலம் இல்லையாதலால் நிலச்சுவான்தார் அவர்களை வெளியேற்றும் கேள்வி எழவில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, இளம்பவயல் கிராமத்தில் உழவடை செய்யும் விவசாயிகள் பதிவு செய்யப்படாததன் காரணமாக வெளியேற்றப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. உழவடை செய்யும் விவசாயிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் இருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குப் பதிலாக போலீஸ் கூட நிலச்சுவான்தார்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கிறது. இந்த நிலைமையை நீடிக்கவிடாமல் அரசு தடுத்து நிறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிலம் இப்போது அவர்கள்வசம் இல்லையென்றுதான் அங்கே இருக்கிற வட்டாட்சித் தலைவர் தீர்ப்பு இருக்கிறது. யாரிடத்தில் நிலம் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் பாதுகாப்புக் கொடுப்பார்கள். நிலம் அவர்களிடத்தில் இருப்பதற்கான அத்தாட்சி இல்லை என்ற விவரம் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : அங்கிருந்து விவரமான தந்தி எனக்கு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதைப் போல் தஞ்சையில் வலிவலத்தார், பூண்டி வாண்டையார், கபிஸ்தலத்தார், நெடும்பலத்தார் போன்றவர்கள் விவசாயிகளை வெளியே அனுப்புவதைத் தடுத்து நிறுத்த முடியுமா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டப்படி குத்தகைப் பத்திரம் கையிலே இருக்கவேண்டும். ஆனால் பெரிய மிராசுதார்கள் குத்தகைப் பத்திரத்தை கொடுக்காமலே இருக்கக்கூடும். அப்படி குத்தகை பத்திரம் கொடுக்காமல் இருந்தால் நான்தான் குத்தகை செய்கிறேன் என்ற மனுவை குத்தகை செய்கிறவர் கொடுத்து விட்டால் ஸ்தலத்திற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அதாவது தாசில்தார் சென்று விசாரிப்பார்கள். பக்கத்து நிலக்காரர்கள் அவர் தான் குத்தகை செய்கிறார் என்று சொன்னால் அவர் அதற்குப் பிறகு அப்படித் தீர்ப்பளிப்பார். விசாரணையில் இன்னார் தான் என்று சொன்னால் வேறு வழியில்லாமல் இப்போது இருக்கிற நிலைமைதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நிலத்தை யார் சாகுபடி செய்கிறார்கள் என்று கிராம அதிகாரிகள் மெயின்டெயின் செய்கிற கணக்கிலே அடங்கலிலே எழுதுகிறபோது அதிலே உள்ள 6—வது காலத்திலே சாகுபடியாளர் பெயர் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பட்டாதாரர்களுடைய பெயரைப் பதிவு செய்கிறார்கள். யார் உண்மையிலேயே சாகுபடி செய்கிறார்களோ அவர்களுடைய பெயரையே 6-வது காலத்திலே பதிவுசெய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர் என்று யாரை தாசில்தார், கணக்குப் பிள்ளை, அல்லது மணியக்காரர் பதிவுசெய்தாலும், விசாரணைக்கு செல்கிறபோது யார் உண்மையிலேயே விவசாயம் செய்கிறார்கள் என்பதை பக்கத்து நிலத்துக்காரர்கள் சொல்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க சட்டத்திலே இடம் இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் பதிவுக் காலத்தை நீட்டிக்க அரசு முன்வருமா ? அடங்கல் இல்லை அல்லது ரசீது இல்லை என்ற காரணத்தினால் பதிவு செய்ய மறுக்கிறார்கள் என்பதால் அதைக் கேட்பதற்குப் பதிலாக பக்கத்திலே உள்ள நிலத்துக்காரர்கள் சொன்னால் அதை வைத்துக் கொண்டு பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முன்பே நான் பதில் சொல்லியிருக்கிறேன். யார் பதிவு செய்யவேண்டும் என்று கேட்கிறார்களோ அவருக்குக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே விசாரணையின்போது அவர் தான் குத்தகை செய்கிறார்என்று பக்கத்து நிலத்துக்காரர்கள் 4,5 பேர்கள் சொன்னால் அதை வைத்துக் கொண்டு அவர் பெயரைப் பதிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகா இளம்பவயல் கிராமத்தில் நடந்த சம்பவம் பற்றி நான் பெட்டிஷன் அமைச்சர் அவர்களிடம் நேரிலேயே கொடுத்து இருக்கிறேன். அந்த நிலச்சுவான்தார் வலுவுள்ள, செல்வாக்கு உள்ளவர் என்ற காரணத்தினாலே பல ஆண்டுக்காலமாக சாகுபடி செய்யக்கூடிய அந்த விவசாயிகளை பதிவு செய்யாமல் தடுத்து தன் பெயரிலேயே வைத்துக் கொண்டார்கள், ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே தனி கவனம் செலுத்தி பல ஆண்டுக்காலமாக அங்கே பயிர் செய்கிற விவசாயிகளை வெளியேற்றாமல் பாதுகாப்புக் கொடுக்கவும், அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பதிவேட்டிலே பதிகிற பிரச்சினை எழவில்லை. பதிந்தாலும் பதியாவிட்டாலும் அவர் தான் குத்தகை பயிர் செய்கிறார் என்று மற்றவர்கள் சொன்னாலே போதும்; ஆனால் இதிலே அங்கே உள்ளவர்கள் அவர்களுக்குச் சாதகமாக சொல்லவில்லை என்று தெரிகிறது, ஆகவே இப்படிப்பட்ட சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்றுவது சம்பந்தமாக புதுக்கோட்டை மாவட்டத்திலே நடக்கிற விஷயங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகவே குத்தகை நிலங்களிலிருந்து இலகுவாக வெளியேற்றுவதற்கு வேறு சாதனம் ஒன்றை கைப்பிடிக்கிறார்கள். நிலச்சுவான்தார்கள் அந்தச் சாதனம் என்னவென்றால் இரண்டு போகம் விளைகிற நிலங்களில், தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோது ஒரு போகம் மட்டும் சாகுபடி செய்கிற நேரத்திலே குத்தகை விவசாயிகள் 2 போகம் போடாமல் ஒரு போகம் போட்டு, ''இஞ்சூரியஸ்'' டு ''லேண்ட்'' என்ற முறையிலே செய்துவிட்டார்கள் என்றுசொல்லி வெளியேற்றி விடுகிறார்கள் அப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட வழக்குகள் வந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இந்த குத்தகை சாகுபடிபற்றி பதிவு செய்வது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. தாலுக்கா மட்டத்திலே சர்வ கட்சி கமிட்டி அமைத்து அது நேரடியாக விசாரணை செய்து பதிவுசெய்கின்ற முறையிலே ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா? அதிகாரிகளை மட்டுமே நம்பினால் இந்த அரசுக்கே ஆபத்து என்பதை அரசு உணருகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதிகாரிகளையே நம்பி இல்லாமல் மக்களை நம்பி வோட்டு வாங்கித்தான் நாங்கள் இங்கே வந்து இருக்கிறோம். அதிகாரிகள் வோட்டுப் போட்டார்களா என்று எண்ணிப் பார்க்காமல் இந்த அரசு குத்தகை விவசாயிகள் நன்மை அடைய என்ன என்ன செய்யவேண்டுமோ அதை எல்லாம் செய்துகொண்டு இருக்கிறது. அதிகாரிகளை நம்பாமல் அங்கே இருக்கிற சுற்றுப்புறத்திலே உள்ளவர்களை விசாரித்துத்தான் செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இருந்தும் பலயிடங்களில்

(முற்பகல் 9–50)

தவறுகள் வந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எப்படியாவது குத்தகைதாரர்களை வெளியே அனுப்பாமல் — நிலச்சொந்தக்காரர்கள் எடுக்கும் முயற்சிகளைத் தடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். மாமன்றத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், பொது வாழ்வில் ஈடுபட்டவர்களும் அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, கமிட்டி அமைக்கப்படுமா இல்லையா என்பதற்கான விளக்கம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி அடுத்தமுறை கேட்கும் கேள்வியில் கேட்கலாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, கலெக்டரால் ஆகாதது கணக்குப் பிள்ளையால் ஆகும் என்று சொல்வார்கள். அதற்குத் தகுந்தது மாதிரி கணக்குப்பிள்ளை குத்தகை பதிவு செய்யும்பொழுது ஒரு நேரத்தில் இவர்தான் சாகுபடி செய்கிறார் என்று சொல்லிவிட்டு' மற்றொரு நேரத்தில் இன்னொருவர் பெயரைச் சொல்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்ற, தவறு செய்யும் கணக்குப் பிள்ளைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கலெக்டரால் ஆகாதது பியூனால் ஆகும் என்பது, கலெக்டர் சில காரியத்தைச் செய்ய மாட்டார், எடுபிடி வேலைகளைக் கீழே உள்ளவர்கள் செய்வார்கள், அப்படியிருந்ததுதான் கலெக்டரால் ஆகாதது கணக்குப் பிள்ளையால் ஆகும் என்று இப்படிப் பழமொழியாக வந்திருக்கும் என்று கருதுகிறேன். கணக்குப்பிள்ளை மட்டும் அல்ல, எந்த அதிகாரி தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓட்டேரியின் குறுக்கே புதிய பாலம்.

*குறுகிய கால வினா எண். 16 திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஓட்டேரி பாலம் கட்டுவதற்காக அரசு அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?—

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஓட்டேரி நல்லா குக்ஸ் சாலையில் உள்ள பாலத்தை இடித்து போக்குவரத்துக்கு தகுதியுள்ளதாக, ரூ. 23.25 இலட்சம் செலவில் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான செலவை 1979–80-ல் ஒருங்கிணைந்த திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மீதமாகும் தொகையிலிருந்து சரி செய்யப்படும்.

(ஆ) இந்த வேலைக்கு மாநகராட்சி ஆணையாளரால் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஓட்டேரி நல்லா மீது ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் பாலம் நான்கு பஸ் பாதைகள் கொண்டதாக இருக்கிறது. அந்தப் பாலமானது பஸ்கள் செல்லவும் மக்கள் செல்லவும் பெரும் இடைஞ்சலாக இருப்பதால் அந்தப் பாலத்தைத் துரிதமாக எடுத்துக் கட்டி வேலை செய்ய துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு பாலத்திலிருந்து பக்கத்தில் சோடியம் வேஃபர் விளக்குகள் பொருத்தப்படுமா? அதேபோலவே காமராஜர் சாலையிலும்—இன்று காமராஜர் பிறந்த தினம்—அங்கேயும் சோடியம் வேஃபர் விளக்குகளைப் போட்டு அழகுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, அடையாறு பாலத்திற்குப் பக்கத்திலே சோடியம் வேஃபர் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல, சாலையின் சந்திப்புகளில் முக்கியமான சாலைகளில் 30 இலட்சம் ரூபாய் செலவில் விளக்குகளைப் போடுவதற்கு உண்டான ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்த இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் என்ன கேள்வி கேட்கப்படுகிறது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொண்டு கேள்வி கேட்கவேண்டும். உறுப்பினரவர்கள் காமராஜர் சாலை, அடையாறு பாலம் என்றெல்லாம் போய்விட்டால் அது கன்னியாகுமரி வரைக்கும்கூடப் போய்விடும். எனவே, சம்பந்தப்பட்ட கேள்விகளாக இருந்தால் துணைக்கேள்விகள் வரவேற்கப்படுகின்றன.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த அவையில் அமைச்சர்கள் தெரிவிக்க விரும்புகின்ற சில பிரச்சினைகளைத் திடீரென்று கேள்விகளாக உருவாக்கி, அமைச்சர்கள் தெரிவிக்கின்ற நிலைமை ஏற்படுவதாக இதற்குமுன்பே ஒருமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். அப்படி அமைச்சர்களின் வசதிக்காகக் கேள்விகள் எழுப்பப்பட்டால் சபாநாயகரவர்கள் முதலிலேயே அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள்—ஊராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல்.

*குறுகிய கால வினா எண். 17—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). தமிழ்நாட்டில் பல நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தங்களது ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் உள்ள நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படிப்பட்ட நிலைக்கு காரணமென்ன?

(இ) அதை சீர்திருத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—(அ) குடியாத்தம், பெரியகுளம் நகராட்சிகளிடமிருந்தும், நங்கவரம் பேரூராட்சியிலிருந்தும் இவ்வித நிதி பற்றாக் குறைபற்றி அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

(ஆ) மற்றும் (இ) 28–6–1980-ம் நாளிட்ட அரசு ஆணையில் குடியாத்தம் நகராட்சிக்கு வழிவகை முன் பணமாக ரூ. 1 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோல், பெரியகுளம் நகராட்சிக்கும், நங்கவரம் பேரூராட்சிக்கும் வழிவகை முன்பணம் கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, பல நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் சொத்து வரி பத்தாண்டுகளுக்கு மேலாக வசூலிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய நடைமுறைகளை அரசு கையாளுமா?

[1980 ஜூலை 15

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளிலெல்லாம் கடந்த
10 ஆண்டுகளாக சொத்து வரி, வீட்டு வரி போன்றவைகள்
வசூலிக்கப்படாமல் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றன.
அதன் காரணமாகவும், அந்த நகராட்சிகள், ஊராட்சிகளுடைய
நிதிநிலை சரியில்லாத காரணத்தாலும், பல வேலைகள் தேங்கிக்
கிடக்கின்றன. பல காரணங்களுக்காக, அந்தச் சொத்து வரி,
வீட்டு வரி போன்றவைகள் எல்லாம் தள்ளிப் போடப்பட்டு அதன்
மூலமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்
கின்றன. ஆனாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
பொறுப்புகளுக்கு வந்துவிட்டால், அந்தச் சொத்து வரி, வீட்டு
வரி போன்ற வகைகளை வசூலிக்கலாம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, சில
ஊராட்சிகளே ஏழை ஊராட்சிகளாக இருக்கின்றன. ஆதலால்,
ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்ற அளவில் வருமானம்
வருகிற மாதிரி ஊராட்சிகளைப் பிரிக்கும் எண்ணம் அரசுக்கு
உண்டா? இல்லையென்றால், ஊராட்சி, நகராட்சி ஊழியர்களை,
அரசு ஊழியர்களாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
ஊராட்சிகளையோ, நகராட்சிகளையோ பிரிக்கும் திட்டம் மத்திய
அரசினால் இப்பொழுது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. 'எலக்
ஷன் பான்' என்ற காரணத்திற்காக, வருகிற 30–6–1981 வரை
யிலே, தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அவைகளை
யெல்லாம் இப்பொழுது பிரிக்க முடியாத நிலைமையிருக்கிறது.
அதே நேரத்தில், எந்தெந்த நகராட்சிகள், எந்தெந்த ஊராட்சி
ஒன்றியங்களுக்கு நிதிநிலை சரியில்லாமலிருக்கிறதோ, அவைகளுக்
கெல்லாம் நகராட்சிகளுக்காக இருந்தால், ரூ. 7 இலட்சமும்
ஊராட்சி ஒன்றியமாக இருந்தால் ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப்
பட்டு, இன்று நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு இருக்
கிறது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்
பொழுது அரசால் மாற்றப்பட்ட சினிமாக் கொட்டகைகளின் வரி
விதிப்பின் மூலமாக, எத்தனை பேரூராட்சி மன்றங்களுக்கு,
ஊராட்சி ஒன்றியங்களுக்கு சினிமா கொட்டகைகள் வரி மூலமாக
வரவேண்டிய வருமானம் குறைந்திருக்கிறது? எத்தனை ஊராட்சி
கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்க இயலுமா?
செஞ்சி பேரூராட்சியும் அதிலே அடங்கியிருக்கிறது. ஆகவே,
அரசாங்கத்தின் சார்பில் விரிவான அறிக்கையைத் தாக்கல்
செய்யுமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, நங்கவரம்
பேரூராட்சியில் 6 மாதங்களுக்கும் அதிகமாக அங்கு வேலை
செய்யக்கூடிய சுகாதார சிப்பந்திகள் உட்பட அனைத்து ஊழியர்



1980 ஜூலை 15]

களுக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால், அந்த
ஊழியர்கள் வாழ்க்கையை நடத்தமுடியாமல் அவதியுற்றிருக்
கிறார்கள். உடனடியாக அவர்களுக்குச் சம்பளம் வழங்க
வேண்டுமென்ற கோரிக்கையையும் அமைச்சரிடத்திலே கொடுத்
திருக்கிறேன். பஞ்சாயத்து ஒன்றிய நிதியிலிருந்து அவர்களுக்கு
உடனடியாக சம்பளம் கொடுப்பதற்கான முறையிலே ஏற்பாடு
செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பி
யுள்ளார்கள். அந்தக் கடிதத்தின்படி விதிவிலக்கு அளித்து அதன்
மூலமாக, நங்கவரம் பேரூராட்சிக்கு நிதி கொடுப்பதுபற்றிய
செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது
என்பதைக் குறிக்கும்]

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### சென்னை நகரில் உணவு பங்கீடு அட்டைகள் வழங்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம்.
''சென்னை நகரத்து மக்களுக்கு ரேஷன் கார்டு வழங்குவதில் கால
தாமதம் ஏற்படுவதாலும், பழைய ரேஷன் கார்டுகளைப் புதுப்
பிப்பதில் அலட்சியம் காட்டுவதாலும் சென்னை நகர மக்களிடை
யே ஏற்பட்டுள்ள சிரமமான பதட்டமான நிலை குறித்து
விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க
வேண்டும்'' என்று கேட்டு திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு
தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது
என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் குறைந்த வருமானம் உடை
யவர்களுக்கு ரேஷன் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை கன்ட்
ரோல் விலையிலே வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்
பொழுது வெளி மார்க்கெட்டிலே அத்தியாவசியப் பண்டங்
களுடைய விலை எல்லாம் விஷம் போல் ஏறியிருக்கிறது. தேர்தல்
காலத்தில் கூட நம்முடைய முதலமைச்சரவர்கள், ஆட்சியில்
நகங்கள் இல்லாத காரணத்தால்தான் அத்தியாவசியப் பண்டங்

களின் விலைகள் எல்லாம் ஏறிவிட்டன. நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால், விலைவாசிகள் எல்லாம் இறங்கிவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனாலுங்கூட இன்றையதினம் வெளிமார்க்கெட்டிலே, சாதாரண ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அத்தியாவசியப் பண்டங்களை வாங்க முடியவில்லை. அந்த அளவுக்கு வெளி மார்க்கெட்டிலே விலை ஏறி இருக்கிறது. எனவே ரேஷன் கார்டுகள் மூலமாகத்தான் இன்றைக்கு நடுத்தர மக்களும் ஏழை, எளிய மக்களும் இந்த அத்தியாவசியப் பண்டங்களை வாங்குகின்ற நிலையில் இருக்கிறார்கள்.

ரேஷன் கார்டு வழங்குகின்ற முறை இன்றைக்கு மிகவும் வருத்தத்திற்குரியது. இன்றைக்கு ரேஷன் கார்டு கேட்டு, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மனு செய்தால், அந்த மனு உரிய காலத்திலே பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு கார்டுகள் வழங்கப்படுவதில்லை. அதை உங்கள் மூலம் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாக, சென்னை நகரத்திலே வாழக்கூடிய ஆயிரக்கணக்கானவர்கள் அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை அணுகி சான்றிதழ்கள் கேட்கிறார்கள். சான்றிதழிலே அவர்களுடைய மாத வருமானம், அந்தப் பகுதியிலே வாழ்கிற விவரம் எல்லாம் கேட்கப்படுகிறது. அந்தச் சான்றிதழ்களைச் சட்டமன்ற உறுப்பினர்களிடம் பெற்றுக் கொண்டு அவர்கள் தாசில்தாரிடம் கொடுக்கிறார்கள். தாசில்தார்கள் அதன் பேரிலே ரெவினியூ இன்ஸ்பெக்டரை முறையாக அனுப்பி, அந்த விவரங்கள் எல்லாம் உண்மையா என்று கேட்டறிந்து, ரேஷன் கார்டு வழங்குகிறார்களா என்று கேட்டால், அப்படி வழங்குவதில்லை. மாறாக, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் சான்றிதழ்களே கூட குப்பை தொட்டிகளுக்குப் போய் விடுகின்றன.

[முற்பகல் 10.00]

என்னிடத்திலே கூட இரண்டு மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுவிலே ரேஷன் கார்டு கேட்டு மனுச்செய்தவர்களில் என்னுடைய சேப்பாக்கம் தொகுதியிலே பெருமாள் செட்டியார், பாரதி போன்றவர்கள் உதாரணத்திற்காக சொல்லுகிறேன் ஆயிரக்கணக்கான பேர்கள் இன்றைக்கு ரேஷன் கார்டுகள் கேட்டு மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற தாசில்தார்கள் நாங்கள் கொடுக்கக்கூடிய அதாவது எம். எல். ஏ.க்கள் கொடுக்கக்கூடிய சான்றுகளைத் தூக்கி எறிந்து விடுகிறார்கள். தாசில்தார்கள் அந்த மனுக்களின் பின்னாலே எழுதித் தருகிறார்கள். அந்த மனு கூட என்னிடத்திலே இருக்கின்றது. உங்கள் அனுமதியோடு அதைப் படிக்கிறேன். ''மனுதாரர் தன்னுடைய சொந்தவூர் தாசில்தார்.. ''





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்களில் ஆயிரம் இருக்கும், அந்த எல்லாம் படித்தால் சரியாக இருக்காது. மனுதாரருக்கு ரேஷன் கார்டு கிடைக்கவில்லை, அதுதானே கருத்து.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி ஆணையாளர் அவர்கள் ரேஷன் கார்டு கேட்ட மனுவின் மீது எழுதியிருக்கின்ற குறிப்பை மட்டும் படித்து அது தவிர்க்கப் படவேண்டும் என்பதற்காக வாசிக்கிறேன். ஒரே ஒரு நிமிடத்தில் வாசித்து விடுகிறேன். ''மனுதாரர் தனது சொந்த ஊர் தாசில்தாரிடம் இருந்து அட்டை பெறவில்லை என்ற சான்றிதழைப் பெற்று மனு செய்ய வேண்டும்'' என்று அதில் எழுதப்பட்டுள்ளது. நான் குறிப்பிடக்கூடிய அந்த மனுதாரர் சேப்பாக்கம் தொகுதியிலே குடியேறி 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் பெயர் வாக்காளர் பட்டியலிலே இருக்கிறது. அவர் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் இங்கே வந்து 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. உள்ளூரிலே இருக்கக்கூடிய தாசில்தாருக்கும் கர்ணத்துக்கும் அவரைத் தெரியாது. ஒரு வேளை தெரிந்திருந்தாலும் அவர்கள் அங்கே போய் போக்குவரத்துச் செலவு செய்து வரக்கூடிய நிலைமையில் இல்லை. இதைப் போன்ற பல பிரச்சினைகள், சிரமங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது ரேஷன் கார்டுகள் கேட்கின்றவர்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது. இன்னொரு வேடிக்கையான விஷயம் என்னவென்று கேட்டால், அவர்களுடைய பெற்றோர்களிடம் இருந்து, ரேஷன் கார்டு இருந்தால் அதைக் கொண்டு வரவும் என்று கேட்கிறார்கள். அவருக்கோ 45 வயதுக்கு மேல் ஆகிறது. அவருடைய தாயார் இறந்துவிட்டார், தந்தையாரும் இறந்துவிட்டார். அவர் யாரிடத்திலே போய் கேட்பது. இப்படிப்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவேதான் சென்னை நகரத்திலே இருக்கிற நமது சட்டமன்ற உறுப்பினர்களான பொன்னுரங்கம், மற்றும் என்னுடைய வீட்டின் முன்னாலே தாய்மார்கள் முற்றுகை இட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொரு நாளும் ரேஷன் கார்டு வேண்டும் என்று சொல்லி, நாங்கள் சொல்வது எல்லாம் ஒரு பாஸ்போர்ட்டு வாங்குவதற்குக் கூட எம். எல். ஏக்களுடைய சர்ட்டிபிகேட் இருந்தால் அதிகாரிகள் பரிசீலனை செய்கிறார்கள். அப்படி இருக்கும்போது இதற்காக எம். எல். ஏ.க்கள் சர்ட்டிபிகேட் கொடுக்கிறபோது அதை அதிகாரிகள் பெற்று ஆர். ஐ.க்கு அனுப்பி விவரத்தை சேகரித்து உடனடியாக கார்டுகளைக் கொடுப்பதற்கான முயற்சிகளை செய்யவேண்டும். இன்றைக்குத் தான் ரேஷன் கார்டுகள் வழங்குவதற்கான கடைசி நாள் என்று சொல்லுகிறார்கள். எனவே அந்த நாளையும் அதிகப்படுத்தி, சென்னை நகர மக்கள் அத்தனை பேர்களுக்கும், ஏழை, எளிய நடுத்தர மக்களுக்கு அந்தக் கார்டுகளை வழங்கி உணவுப் பண்டங்கள் எளிதாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது பற்றி விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான் கான் அவர்கள் ரேஷன் கார்டுகள் வழங்குவதிலே தாமதம் ஏற்படுவதைப் பற்றிக் குறிப்பிட்டு அதைப் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலே, பொதுவிநியோக முறையைச் செயல்படுத்த சென்னை நகரம் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சென்னையை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகள் ஒரு தனி மண்டலமாக அமைக்கப்பட்டுள்ளது. அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை போன்ற இன்றியமையாப் பண்டங்கள் நுகர்வோருக்கு நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைகளின் பேரில் வழங்கப்படுகின்றன. சென்னை நகருக்குப் புதிதாக குடியேறியவர்களுக்கும், சென்னை நகரிலேயே ஏற்கனவே இருந்து, குடும்ப அட்டை பெறாதவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள், கோரிக்கைகளின் பேரில் வழங்கப்படுகின்றன. புதிய அட்டைகளுக்கு மனு செய்து கொண்ட நாளில் இருந்து பொதுவாக சுமார் 15 நாட்களுக்குள் தேவையான விசாரணைகள் செய்து புதியக் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஏப்ரல் மாதத்தில் 4,147 குடும்ப அட்டைகளும், மே மாதத்தில் 4,798 குடும்ப அட்டைகளும், ஜூன் மாதத்தில் 4 799 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் கடந்த மூன்று மாதங்களில் 13,744 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஜூன் மாத இறுதியில் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள், நிலுவையில் இருந்தவை 1,293 மட்டுமே ஆகும். புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உதவி ஆணையரும் நிலுவையில் உள்ள மனுக்களை ஆய்வு செய்கின்றார். சென்னை நகர துணை ஆணையரும் ஒவ்வொரு மண்டல அலுவலகத்திற்கும் சென்று இப்பணியின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு செய்கின்றார். மாதம் ஒரு முறை இப்பணியின் முன்னேற்றம் குறித்து உணவுத் துறை ஆணையரும் ஆய்வு செய்கின்றனர். புதிய குடும்ப அட்டைகள் பொதுவாக காலதாமதம் இல்லாமலேயே வழங்கப்படுகின்றன.

சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் 8.27 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகள் வழங்கப் படத்தேவையில்லை எனவும் பழைய அட்டைகளிலேயே அச்சிட்டத் தாள் ஒன்றை ஒட்டி புதுப்பித்தால் போதும் என்றும் அரசு முடிவு செய்தது. இதன்படி 1-7-80 முதல் இன்றியமையாப் பண்டங்களை வாங்குவதற்கு நியாய விலைக் கடைகளுக்கு குடும்ப அட்டைகளைக் கொண்டு வரும்போது அவை புதுப்பிக்கப்படுகின்றன. 8-7-80 முடிய ஏறக்குறைய 60 விழுக்காடு குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டன.



குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்படவேண்டியிருப்பதன் காரணமாக நியாய விலைக் கடைகள் முன்பு சற்று தேக்கம் காணப்படுகிறது. குடும்ப அட்டைகள் புதுப்பித்தலில் காலதாமதம் ஏற்படாமல் இருக்க கூடுதல் பணியாளர்கள் தேவையான அளவு அமர்த்தப்பட்டுள்ளனர். பொதுமக்களுக்கு வசதிக்குறைவு ஏற்படாமல் இருக்கும் வகையில் புதுப்பிக்கும் பணி சுமுகமாக நடைபெற்று வருகிறது. பொதுமக்களிடமிருந்து இதைப் பற்றி புகார்கள் எதுவும் அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை.

அது மட்டுமல்ல; அரிசி, கோதுமை மட்டுமே விநியோகிக்கப்பட்டு வந்தபோது, பலர் இக்குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தாமலேயே இருந்தனர். மண்ணெண்ணெய், லெவி சர்க்கரை ஆகியவைகளையும் இப்போது அந்த அட்டைகளின் பேரில் விநியோகிக்கப்படுவதால், அட்டைகளுக்கான கோரிக்கைகள் பலமாகியுள்ளன. சிலர் அட்டைகளை அடகு வைத்துவிட்டு புது அட்டைகள் கோருகின்றனர். சிலர் தவறான தகவல்களின் பேரில், ஒன்றுக்கு மேற்பட்ட அட்டைகள் கோருகின்றனர். ஆகவே, தெளிவான விசாரணை தேவையாகிறது. தவறு ஏற்படாமல் எச்சரிக்கையாக இருக்கவும் அதே சமயத்தில் தாமதத்தைத் தவிர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற சான்றிதழ்களை குப்பைத் தொட்டியில் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கும் இல்லை, அதிகாரிகளுக்கும் இல்லை. அவற்றை மதிக்கவேண்டும் என்ற நிலையில்தான் இருக்கிறோம். ஆகவே, சான்றிதழ்களோடு, மேலும் விசாரணையின் மூலம் மற்ற பல உண்மை நிலைகளை அறிய வேண்டும் என்பது நிபந்தனையின் அடிப்படையில் அவசியமாக இருப்பதால், அதைச் செய்ய வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் கால தாமதம் ஏற்பட்டால் அதை விரைவுபடுத்தி நடவடிக்கை எடுக்க அலுவலர்களும், மற்றவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

விசாரணை என்று வருகிறபோது நான் ஒரு இடத்தில் இரண்டு மூன்று கார்டுகள் வைத்திருப்பது கண்டுபிடிக்க முடிகிறது. ஒருவரே மூன்று-நான்கு கார்டுகள் வைத்து இருக்கிற நிலைமைகள் எல்லாம் கூட விசாரணையின்போது அறிய வருகிறது. அப்படிப்பட்ட நிலை முன்பும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. அவற்றையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நிலைமை காரணமாக இவற்றையெல்லாம் விசாரிக்கவேண்டும் என்கிற அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. இப்போது கூட 60% கார்டுகள் புதுப்பிக்கப்பட்டு இருக்கின்றன. மீதமுள்ள 40 விழுக்காடு கார்டுகளை விரைவில் புதுப்பிக்கப்பட அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிலே காலத்தாழ்வு ஏற்படாமல்

முடிப்பதற்கான முயற்சியிலே அரசு கவனம் செலுத்தி வருகிறது என்கிற காரணத்தால், இது குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதனை மறுக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : சேலம் மார்டிகள் பாதிக்கப்படுவதற்கு யார் பொறுப்பேற்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதத்தோடு முடிகிற நிலைமை இல்லையென்றால் அதை நீடிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### அ. கிளியனூர் அரசு மருத்துவமனைக் கட்டிடத்தின் மோசமான நிலை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, "மாயவரம் வட்டம் கிளியனூர் அரசு மருத்துவமனைக் கட்டிடம் இடிந்து பொது மக்கள் தலையில் விழும் நிலையில் உள்ளதால் பல இடங்களில் முட்டு வைத்து அந்தக் கட்டிடத்திலேயே தொடர்ந்து மருத்துவமனை நடந்து வருவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பணி மற்றும் குடும்ப நல இயக்குனர் அவர்கள் மாயவரம் வட்டம் கிளியனூரில் இருக்கும் அரசு மருந்தகத்திற்கு பழுது பார்ப்பதற்காக ரூ. 78,000 செலவிற்கு அங்கீகாரம் கோரி அரசுக்கு ஒரு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார். இந்தச் செயற்குறிப்பு பொதுப்பணித்துறை (காவேரி கோட்டம்) செயற் பொறியாளரால் மறு பரிசீலனை செய்யப்படவேண்டியிருக்கிறது. செயற் பொறியாளர் (காவேரி கோட்டம்) இந்த மதிப்பீடு, அரசு கட்டிடங்களை பராமரிப்பதற்



கென்று வரையறுக்கப்பட்டுள்ள விதி முறைகளுக்குள் அடங்குகிறதா என்று மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். இதற்கென்று திருத்திய மதிப்பீடு பெறப்பட்டதும் அதன் தகுதிக்கேற்ப அங்கீகாரம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகையால் இந்தச் செயற்குறிப்பு அரசாங்கத்தின் கூர்ந்த (ஆக்டிவ்) கவனத்தில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அந்த கிளியனூர் மருத்துவமனைக் கட்டிடம் இடிந்து பொதுமக்கள் தலையிலே விழக்கூடிய நிலையில் இரண்டாண்டு காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தின் பல பகுதி களில் இடிந்து விழாமலிருக்க சவுக்குக் கட்டைகள் வைத்து முட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச் சரவர்கள் கூட ஓராண்டு காலத்திற்கு முன்னால் வந்து அந்தக் கட்டிடத்தை பார்வையிட்டார்கள். கட்டிடம் இடிந்து தலை யிலே விழும் நிலையில் இருக்கிறது. உடனடியாக பழுது பார்க்கப் பட வேண்டுமென்று அப்போது தெரிவித்தார்கள். இப்படி இரண்டாண்டு காலமாக ஒரு மருத்துவமனைக் கட்டிடம் இடிந்து பொதுமக்கள் தலையிலே விழக்கூடிய நிலையில் இருக்கிறது என்று நான் அந்தப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அரசின் கவனத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற் கும், மாவட்ட மருத்துவ அதிகாரியின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். அவர்களும் உடனடியாக பழுதுபார்க்க ஏற் பாடு செய்யப்பட்டிருப்பதாக எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார் கள். அப்படி அவர்கள் எழுதிய கடிதம் எனக்கு வந்து ஓராண்டுக் காலம் ஆகியும் அந்தக் கட்டிடம் பழுது பார்க்கப்படாமல் இடிந்து பொதுமக்கள் தலையில் விழக்கூடிய நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. அதே கட்டிடத்தில்தான் மருத்துவமனை தொடர்ந்து நடந்து வருகிறது. இனிமேலும் காலதாமதம் ஏற் படாமல், அந்தக் கட்டிடத்தை உடனடியாகப் பழுதுபார்த்து பொதுமக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் பாது காப்பு தரப்படுமா என்பதை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர வர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது என்று என்னுடைய அறிக்கை யிலேயே சொல்லியிருக்கிறேன். இதை அந்த டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி, கிளியரன்ஸ் வாங்குவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற் படும். அது கூடாது என்பதற்காக,

to clear this proposal immediately as a special case without insisting on the usual norms prescribed for repairs of Government buildings.

என்று மிகத் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம், சாதாரணமாக 'நார்ம்ஸ்' இருக்கிறது; அவைகளைக் கவனிக்காமல் உடனடியாக பழுது பார்ப்பதற்கு எல்லா வகையான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று இந்த இலாகாவுக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசின் தீவிர கவனத்தில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இதை சீக்கிரம் பழுது பார்ப்பதற்கு கவனித்துக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். 29-11-79-ல் மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் இந்த வேலையைச் செய்வதற்காக 78,000 ரூபாய் அனுமதிக்குமாறு இந்தத் துறையின் இயக்குநருக்கு அனுமதி வழங்க அனுப்பியுள்ளதாக தகவல் தந்துள்ளார்கள். 29-11-79-ல் 78,000 ரூபாய் செலவிடுவதற்கு அனுமதிக்க வேண்டி அரசின் செயலாளருக்கு அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல மாதங்களாக அனுமதி வழங்காமல் இருப்பதற்கு, தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 78,000 ரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது உண்மைதான். இடையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 4 மாதங்கள் நம்முடைய ஆட்சி கிடையாது. இப்போது நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இதிலே மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம். அதனால்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல 'யூஷுவல் நார்ம்ஸ்' கவனிக்கப்படாமல் உடனடியாக பழுது பார்க்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சி பொறுப்பேற்றப் பிறகுதான் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த பதில் நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு மன நிறைவு தரும் என்று நான் கருதுகிறேன்.

3. (ஆ) போளூர் ஒன்றியத்திலுள்ள சில பகுதிகளில் 'கொள்ளை நோயால்' கால்நடைகள் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பலராமன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்புக்குரிய விவர அறிக்கையை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரவர்கள் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,



23-6-80 அன்று கேளூர் கால்நடை மருந்தகத்தில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர் துரிஞ்சிகுப்பம் கிராமத்திற்கு சென்றபொழுது, அங்குள்ள பொதுமக்கள் 2-6-1980 முதல் 23-6-1980 வரை 30 மாடுகள் இறந்தன என்று தெரிவித்தனர். அவர் தீவிரமாக அதைப்பற்றி விசாரித்தபோது 6 மாடுகள் மட்டுமே நோயினால் பாதிக்கப்பட்டன. அவ்வாறு நோய்வாய்ப்பட்ட மாடுகளில் ஒன்றிற்கு சிகிச்சை அளித்ததில் பலனில்லாமல் இறந்து விட்டது, அம்மாட்டை பிரேத பரிசோதனை செய்ததில் அம்மாடு சப்பை நோயினால் இறந்ததாக அறியப்பட்டது. அம்மாட்டின் பாதிக்கப்பட்ட பகுதிகள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு நோயை உறுதி செய்யும் பொருட்டு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது.

கேளூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் அப்பகுதியில் மேலும் சப்பை நோய் பரவாமல் தடுப்பதற்காக துரிஞ்சிகுப்பம் மற்றும் அதைச் சார்ந்த குக்கிராமங்களில் உள்ள 1,220 மாடுகளில் 827 மாடுகளுக்கு கீழ் குறிப்பிட்டவாறு தடுப்பு ஊசிகள் போட்டுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 24-6-80 & 25-6-80 | துரிஞ்சிகுப்பம் | 346 | தடுப்பூசி |
| 26-6-80 | துரிஞ்சிகுப்பம் (கொல்லை மேடு) சித்தேரி. | 281 | ,, |
| 27-6-80 | கம்மதந்தல் .. | 152 | ,, |
| 28-6-80 | விளாங்குப்பம் .. | 48 | ,, |
| | மொத்தம் | 827 | ,, |

2-7-80 அன்று கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் நோய் புலனாய்வுக் குழு) வேலூர் அவர்கள், போளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சந்தவாசல் மற்றும் துழுவ புஷ்பகிரி கிராமங்களுக்கு சென்று அங்குள்ள மணியக்காரர்களை, கால் நடை நோய் பரவியது குறித்து விசாரித்ததில் கடந்த ஓராண்டு காலமாக மேற்கூறிய பகுதிகளில் கால்நடை நோய் கண்டு எந்த கால்நடையும் இறக்கவில்லை என்பதை அறிந்தார். மேலும் கால்நடைகள் இறப்பு பதிவேட்டிலும் மேற்கூறிய பகுதிகளில் தொற்று நோய்களால் மாடுகள் இறப்புப் பற்றி குறிப்புகள் ஒன்றும் இல்லை என்பதையும் அறிந்தார். அவர் மேற்கூறிய பகுதிகளில் சென்றபொழுது எந்த கால்நடையும் நோய்வாய் பட்டிருக்கவில்லை என்றும் கூறியுள்ளார். அவர் கேளூர் கால் நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை தொடர்பு கொண்டு கால்நடை நோய் பற்றி எடுத்த தடுப்பு நடவடிக்கைகள்

குறித்து விவாதித்த பொழுது சந்தைவாசல் அருகில் உள்ள வெள்ளூர் கிராமத்தில் 2 மாடுகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக கேள்வியுற்று அங்கு சென்று பார்த்தபோது அவைகள் மூன்று நாள் நோய் காய்ச்சலால் (Ephemeral Fever) பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து தகுந்த சிகிச்சையை மேற்கொண்டனர்.

துரிஞ்சிக்குப்பம் பகுதியில் கால்நடை நோய் பரவி இருப்பதைப் பற்றிய தகவல் வடார்க்காடு மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் 2–7–80 அன்று தான் அரசுக்கு தகவல் கிடைக்கப் பெற்றதால் உடன் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள தகுந்த ஏற்பாடுகள் செய்தார். மேலும் திருவண்ணாமலை கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநரை துரிஞ்சிகுப்பத்திற்கு உடனடியாக சென்று தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளார்.

## 4. அறிவிப்பு.

### ஆளுநரின் இசைவு—தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980, அறிமுகப்படுத்தவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவுத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவு

### நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானப் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



## 6. தகவல் கோரல்.

### அ. ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள்.

திரு. பழமை நல்லதம்பி : பேரவைத் தலைவரவர்களே, விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியம் குறித்து நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது குறித்து. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்தெல்லாம் அறையிலே வந்து விவரத்தைக் கேட்டறிந்து கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக் கொள்வது என்று விதியிலே இருக்கின்றது. அதன்படி ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக் கொள்ள முடியும்.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அட்ஜார்ன்மென்ட் மோஷன் காலையிலே ஒரு மணி நேரத்திற்கு முன்பாகக் கொடுத்தாலே அதை ஏற்றுக் கொள்ளலாம். மிக முக்கியமான பிரச்சினையாக இது இருக்கிறது. அப்படி இருக்கும் போது நேற்றைக்கு கொடுக்கப்பட்டதை இன்னும் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்படலாம் என்பது விதிமுறை. ஆனால் இன்றைக்கு ஏற்கெனவே ஒன்று எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது. ஆகவே ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு நாளாகத்தான் எடுத்துக் கொள்ள முடியும். மேலும் அவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வருகின்றபோது அமைச்சரவர்கள் அதற்குப் போதிய விளக்கங்களை அளிக்கின்ற வகையில் அவர்களும் தகவல்களைப் பெற வேண்டி இருக்கின்றது. ஆகவே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாக எடுத்துக் கொள்வது என்பது பற்றியும் அவ்வப்போது எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பது பற்றியும் முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவர் அவர்கள். குறிப்பிட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் குறித்த விவரங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு—அவர்கள் அவையிலே விளக்கம் அளிக்கத்தக்க வகையிலே—வந்து சேர்ந்திருக்கின்றதா என்றும் பார்க்க வேண்டி இருக்கின்றது. இவற்றை எல்லாம் கண்டறிந்துதான் மாண்புமிகு பேரவைத் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டி இருக்கின்றது. இதனை நாளை எடுத்துக் கொள்ளலாமா என்ற பிரச்சினை வருகின்றபோது போதிய விளக்கங்கள் வந்து சேர்ந்திருக்கின்றதா என்பதைக் கண்டறிந்து முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று ரேஷனைப் பற்றிய விவாதம் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அரிசி கிடைப்பதில்லை என்ற பிரச்சினையால் அவசரமாக எடுத்துக் கொள்ளப் பெற்றது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும்' அல்லவா, அதனால் அதன் அவசியத்தை முன்னிட்டு எடுத்துக் கொள்ளப் பெற்றது. ஒவ்வொரு நாளாக ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்பெறும், அதனால் பொறுத்திருந்துதான் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே அதேமாதிரி ஒன்றுக்கு மேலும் அவைத்தலைவர் விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறதே. . . .

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுக்கு மேல் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், அப்படி விதியில் இடம் இருக்கிறது.

திரு. எஸ். வி. எஸ். சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, 90 லட்சம் பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டு இருக்கின்றன. 5 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாவது நீங்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வரப்போவது தொழிலாளர்கள் சம்பந்தமான மானியக் கோரிக்கை தான்; அதனால் தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீது பேசும் போது இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆ. நடவடிக்கை குறிப்பில் விடுபாடு

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ண அனுமதி கோருகிறேன். நேற்றைய தினம் எங்களுக்கு கொடுக்கப் பெற்றிருக்கும் நடவடிக்கைக் குறிப்பில், 54வது விதியின் கீழ் கொண்டு வரப்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பில் ''சென்னை கொருக்குப்பேட்டையில் 2-7-1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 300க்கும் மேற்பட்ட குடிசைகள் நாசமடைந்தது குறித்து' என்பதின் கீழ் தீர்மானம் கொடுக்கப்பட்டவர்களின் பெயர்களில் சில விடுபட்டிருக்கின்றன. அப்படிச் செய்வது முறையா என்று கேட்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள் விவாதிக்கலாம். இப்போது தேவையில்லை, அடுத்து, 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம். மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

7. வரவு-செலவுத் திட்டம் 1980-81 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும்—தொழிற்சாலைகளும்.

(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

கோரிக்கை எண் 29

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,39,40,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே வடஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் தொழிலாளர்களுக்கு தனியாக தொழிலாளர் நல ஈட்டுதவி மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய கோரி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெற்ற ரூ. 6,39,40,000 லிருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU N. S. V. CHITHAN : To discuss about the failure of the Government to abolish employment of children below the age of 14 in hotels, tailoring shops, etc., I move:

''That the allotment of Rs. 6,39,40,000 under Demand No. 29 Labour including Factories, be reduced by Rs. 100.''

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ''தொழிற்சாலைகளில் சட்டத்திற்கு புறம்பாக ஒப்பந்தத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப் படாமலிருப்பது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

128/157—6

"மானியக் கோரிக்கை எண்-29-தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெற்ற ரூ 6,39,40,000 லிருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. எம். ஆறுமுகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, "வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி நேரடியாக நீதிமன்றத்திற்கு செல்லுவதற்கான சட்டத்தை உருவாக்க வேண்டும் என்பது பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்-29-தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,39,40,000 லிருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கென்று உரிய தொழிற் சட்டம் கொண்டு வருவதில் தாமதம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்-29, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,39,40,000 லிருந்து ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண்-33

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"மானியக் கோரிக்கை எண்-33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,17,53,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு கு. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே' "குடிசைப்பகுதிகளில் போதுமான வசதிகள் செய்யப்படவில்லை என்பது பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண்-33 வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,17,53,000 லிருந்து ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி நகரில் ஒரு கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்தின் மூலம் வீடு கட்ட வேண்டியது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"மானியக் கோரிக்கை எண்—33—வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,17,53,000 லிருந்து ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை நகரம், டாடாபாத்தில் அறிஞர் அண்ணா ஹட்கோ காலனியில் வீடு வைத்திருப்போருக்கு வீடுகளுக்கு குடிநீர் அமைக்க சப் மெயின் குழாய்கள் போட்டுக் கொடுக்காமல் இருப்பது பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண்—33 வீட்டு வசதி என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,17,52,000 லிருந்து ரூபாய், 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே "மாவட்டத் தலைநகர்களில் இன்னும் அதிகமான வீட்டு வசதி ஏற்படுத்தாதது குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண்—33 வீட்டு வசதி என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,17,53,000 லிருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்,"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்புகளை* பேரவைமுன் வைத்திருக்கிறேன். அவற்றை நான் படித்ததாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இன்றைய தினம் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி என்ற மானியக் கோரிக்கைகள் மீது பேசுகிற ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை இந்தளவிற்கு உயர்த்திய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

*132, 255ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

என் தொகுதி முழுக்க முழுக்க வீட்டு வசதி வாரியம், குடிசை
மாற்று வாரியம் இவற்றிற்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன.
புது வாழ்மா நகர், வாழுமா நகர், கொள்ளாபுரி, கல்யாணபுரம்,
ஏ. கல்யாணபுரம், பி. கல்யாணபுரம், சி. கல்யாணபுரம், அம்பேத்
கார் நகர், வெங்கடேசபுரம் என்ற பகுதிகள் முதன்முதலாக
ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் வீட்டுவசதி வாரியம் என்ற பெயரால்
அங்கே குடிசைகள் அமைக்கப்பட்டன. அந்தப் பகுதிகள் எல்லாம
இன்று எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் அப்படி குடிசைப்
பகுதிகளாகவே இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே வாழ்கிற
மக்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லை. அவர்கள்
குடிநீர் வசதி இல்லாமல், கழிப்பிடங்கள் இல்லாமல் இன்று
தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இரவு நேரங்களை எதிர்
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், கழிவிடத்திற்குச் செல்
வதற்காக.

ஆரம்பத்தில் கட்டப்பட்ட அந்தக் குடிசைகள் பள்ளத்தில்
இருப்பதன் காரணமாக பெருமழை பெய்தால் அங்கே வெள்ளம்
ஏற்பட்டு, வீடுகளுக்குள் தண்ணீர் போய்விடுகிறது. ஆகவே
அந்த நிலையைப் போக்க வேண்டும் என்று கடந்த சட்டமன்றக்
கூட்டத்திலேயே நான் பேசுகிறபோது கேட்டுக் கொண்டிருக்
கிறேன். ஆனால் என்னுடைய வேண்டுகோளை நிறைவேற்றி
செய்யப்பட்டதாக இல்லை என்ற கருத்தைக் கொண்டு தான்
மீண்டும் இந்த மன்றத்தில் இதைப் பற்றிப் பேசக்கூடிய ஒரு
துர்பாக்கியகரமான நிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தப்
பகுதிகள் எல்லாம் உடனடியாக சீரமைக்கப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்–தலைமை]

அங்கு வாழ்கிற மக்களுக்கு துப்புரவு செய்து கொடுக்க நகர
சபை மறுக்கிறது. குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டு
மென்றால் நகரசபை அல்லது குடிநீர் வாரியம் மறுக்கிறார்கள்.
ஆகவே உடனடியாக அந்தப் பகுதிகளையெல்லாம் மாநகராட்சி
யோடு சேர்த்து துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள உரித
நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வெங்கடேசபுரம் என்ற பகுதியில் பல வீடுகள் கட்டப்பட்டி
ருக்கின்றன. அங்கு ஹரிசன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கி
றார்கள். அவற்றிற்கு அதிகமான வாடகை வாங்குகிறார்கள்.
இந்த வீடுகளை எல்லாம் உடனடியாக அந்த மக்களுக்குச்
சொந்தமாக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் நன்கு தெரியும், 1967-ம் ஆண்டு திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. மறைந்த
பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அந்த ஆட்சி ஆட்சிப்
பொறுப்பேற்றது. அந்த நேரத்தில் சமூக விரோதிகள் சென்னை





யில் எல்லாக் குடிசைகளுக்கும் தீ வைத்தார்கள். பெரம்பூர்
பகுதியில்தான் அதிகமான குடிசைகள் அந்த நிலைக்கு
ஆளாகின. அந்த நேரத்தில் எம்.எஸ். முத்து நகர், சாஸ்திரி
நகர், அம்பேத்கார் நகர், உதய சூரியன் நகர், ஓப் லாட்ஜ்
போன்ற பகுதிகளில் உள்ள குடிசைகள் தீக்கிரையாயின.
அப்போது அந்தப் பகுதி மக்கள் வடித்த கண்ணீரைத் துடைப்
பதற்காக பேரறிஞர் அண்ணா உடனடியாக நிவாரணம் அளிக்க
வேண்டும் முதல் உதவி என்றார்கள் அந்த முறையில், ஒரே
மாதத்தில் பல ஆயிரம் குடிசைகள் தீக்கு இரையாயினபோது,
அதற்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு,
அதிகாரிகளும், எங்களால் உருவாக்கப்பட்டு பல சலுகைகள்
பெற்று வெளியேற்றப்பட்ட அமைச்சர்களும் இருந்திருக்கிறார்கள்;
அவர்களை வைத்துக்கொண்டு மக்களுக்கு வேண்டிய நிவாரண
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஏனென்றால் நான்கு பக்கமும்

(முற்பகல் 10–30)

மண் சுவர் அமைத்து, ஓடுகள் வைத்து அமைத்து அவர்களுக்கு
உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற திட்டத்தை
ஏற்று, உடனடியாக பல ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்
பட்டன. இந்த வீடுகள் எல்லாம் இப்போது சென்னையில்
அடித்த மழை, வெள்ளம் காரணமாக அந்த வீடுகளின் சுவர்கள்
எல்லாம் அடிக்கப்பட்டு, நான்கு புறமும் வெயிலுக்கு சாட்சி
அளித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வீடுகளிலே உள்ள
பெண்கள் எல்லாம் அங்கே கோணிகளை கட்டிக்கொண்டும்,
துணிகளை கட்டிக்கொண்டும் தங்கள் குடும்பங்களை காப்பாற்றி
வருகிறார்கள். அந்தப் பகுதிகளிலே எல்லாம் எந்தவிதமான
முன்னேற்றமும் ஏற்படவில்லை. அங்கேயும் நம்முடைய மாநக
ராட்சி எந்தவிதமான பணிகளைச் செய்யவும் மறுக்கிறார்கள்.
ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன். கடந்த முறை கூட இப்படிப்பட்ட பகுதிகளுக்கு வந்து
பாருங்கள்; இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடிய மக்களுக்கு
நிவாரணம் அளியுங்கள் என்று கேட்ட நேரத்தில், வருவதாக
வாக்களித்தார்கள். ஆனால், பின்னால் என்னவோ மறுத்து
விட்டார்கள். எனவே, உடனடியாக அந்தப் பகுதிகளை
எல்லாம் மாற்றியமைக்க வேண்டும். அந்தப் பகுதிகளிலே
எல்லாம் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ அல்லது குடிசை
மாற்று வாரியத்தின் மூலமாகவோ அங்கே இருக்கின்ற மக்களுக்கு
உடனடியாக வீடுகள் கட்டித் தருவதற்கு பெருமதிப்பிற்குரிய
அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்கு
வாழ வழி வகை செய்யுங்கள் என்ற வேண்டுகோளை நம்முடைய
அமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன்; கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நம்முடைய சர்க்கார் கொடுக்கின்ற நிவாரணங்களைக் கொடுக்க மறுக்கிறார்கள். ஏன் என்று தெரியவில்லை. கடந்த ஆண்டு கூட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்கள் தங்களுக்கு நிவாரணம் அளிக்காத காரணத்தால் உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்போதுகூட நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு மனம் இரங்கவில்லை; கொடுக்கவில்லை. இனிமேலாவது அப்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நீங்கள் கொடுக்கின்ற மற்ற எல்லா நிவாரணங்களும் கொடுக்குமாறு நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பர்மா நகர் என்று ஒரு காலனி இருக்கிறது. சாஸ்திரி நகர் பக்தவத்சலம் நகர் என்ற பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு, இப்போது நம்முடைய தமிழக அரசு வீடுகள் கட்டிக் கொடுக்கிறது. ஒருபுறத்திலே பக்தவத்சலம் காலனியிலே இருக்கின்றவர்களுக்கு ஏறக்குறைய 700 சதுர அடியிலே வீடு கட்டியிருக்கிறார்கள். இன்னொரு புறம் சாஸ்திரி நகரிலே வாழ்கின்ற மக்களுக்கு 1500 சதுர அடியிலே வீடுகள் கட்டியிருக்கிறார்கள். ஆனால், சாஸ்திரி நகரிலே இருப்பவர்களுக்கு 700 சதுர அடியிலே தான் வீடுகள். ஏன் இந்த பாகுபாடு என்பது தெரியவில்லை. இரண்டு காலனிகளுக்கும் ஒரே மாதிரியாக 1500 சதுர அடிகள் கொண்ட வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, அவர்களுக்கு நாம் வீடுகள் கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது. அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஏராளமான மக்களுக்கு கழிப்பிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகள் மக்களுக்கு உபயோகப்படுகின்ற முறையிலே இல்லாமல், உபயோகப்படுத்தப்படாமல் முடிக் கிடக்கின்றன. அங்கே வாழ்கின்ற தாய்மார்களும், பெரியவர்களும் இரவு நேரங்களை எதிர்பார்த்துக்கொண்டு, பக்கத்திலே இருக்கின்ற மைதானத்திற்கு இரவு நேரத்திலே போகின்ற பரிதாப நிலைமை இருக்கின்றது. இதைப் போக்க வேண்டுமென்றால், உடனடியாக அந்தக் கழிப்பிடங்களுக்கு அருகிலே நாம் கிணறுகள் வெட்டிக் கொடுத்து அல்லது குழாய்கள் அமைத்துக் கொடுத்து, அந்த கக்கூசுகள் உபயோகப்படும்படியான அளவிலே செய்ய வேண்டும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, அந்தப் பகுதிகளிலே துப்புரவு செய்ய முடியாமல் குப்பைகள் ஆங்காங்கே மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, அந்தகைய இடங்களில் மாநகராட்சி துப்புரவு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



பெரியார் நகர், கக்கன்ஜி நகர், சத்தியவாணிமுத்து நகர். பாபு ஜகஜீவன்ராம் நகர், சாஸ்திரி நகர், மல்லிகைப்பூ நகர், தேபர் நகர் போன்ற ஏராளமான காலனிகள் இருக்கின்றன, அந்தப் பகுதிகளிலே எல்லாம் ஆண்டுதோறும் பெரு மழையின் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும் அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். அங்கேயெல்லாம், உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் நாம் மறுவாழ்வு அளிக்கவேண்டும்.

நல்ல வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். குடிதண்ணீர் வசதி செய்தாக வேண்டும். துப்புரவுப் பணிகளைச் செய்தாக வேண்டும். என்னுடைய பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை வருவார்களானால் நான் அவர்களுக்கு இவற்றையெல்லாம் சுற்றிக் காட்டி நான் சொல்லுகிற குறைபாடுகள் உண்மையானவைதான் என்று எடுத்துக் காட்ட முடியும். அப்படி அவர்கள் வருவார்களானால் அங்கிருக்கும் மக்களுக்கு அண்ணா தி.மு.க. அமைச்சர் அவர்கள்பால் பற்றும் பாசமும் ஏற்படும். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஒருமுறை எங்கள் பகுதிக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்மா நகர் தொழிலாளர்கள் வாழும் பகுதி. அந்தக் குடியிருப்புகள் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னால் கட்டப்பெற்றவை. அந்த வீடுகள் இடிந்து விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவற்றைப் பழுதுபார்க்கவே இல்லை, பழுது பார்க்கவேண்டுமென்று பலமுறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள்கள் விடுத்தும் அந்த வீடுகள் பழுதுபார்க்கப்படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த வீடுகளை எல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவற்றை உரிமையாக்கிக் கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதிகமான வாடகை வாங்கப்படுவதாக நெசவுத் தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கும் அங்கே குடிதண்ணீர் வசதி, பாதை வசதி இன்ன பிற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் கருணை காட்ட வேண்டுமென்று கூறி இத்தகைய நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னுடைய கருத்துக் களைக் கூறுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த கரூர் சட்ட

மன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற திருவள்ளுவர் திருக்குறளுக்கேற்ப கடந்த முப்பது ஆண்டு காலமாக உழைக்கும் வர்க்கத்தினுடைய உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தொழிலாளர் தலைவர் ஒருவரை தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் போட்டிருக்கும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொண்டு, தொழிலாளர் நலன், வீட்டு வசதி ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை, கோரிக்கைகளை இந்த அரசில் போராடிப் பெறத் தேவையில்லை. வாதிட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்ற அணுகு முறையில் அரசு இருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, சிறந்த தொழில் உறவுகளை வைத்து நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் சிறப்பான பரிசுகளை வைத்திருக்கும் திட்டத்தைப் பாராட்டி வரவேற்கிறேன்.

தவிர்க்க முடியாத நேரங்களில் ஏற்படுகிற போராட்டங்களில் சில நேரங்களில் வன்முறைகள் தெரியாமல் ஏற்பட்டுவிடுகின்றன. அந்த நேரத்தில் சட்டப்படி போலீசார் வழக்குத் தொடர்ந்தாலும் பிறகு தொழிலாளர் நலன் கருதி அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்கிற இந்த அரசின் அணுகுமுறையைப் பாராட்டி வரவேற்கிறேன்.

அதேபோன்று திரைப்படங்கள் மூலமும் பொருட்காட்சிகளின் மூலமும் தொழிலாளர் நலன், தொழிற் கல்வி ஆகியவற்றைப் பரப்பிக் கொண்டு வந்திருக்கும் அரசைப் பாராட்டி வரவேற்கிறேன்.

மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கு சென்ற தடவை பாதுகாப்புச் சட்டம் கொண்டு வர இந்த அரசு முன் வந்தது. ஆனால் இடையிலே ஜனநாயகத்திற்கு விரோதமாக இந்த அரசை கலைத்துவிட்டார்கள். மீண்டும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருமாறு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான கரூர் தொகுதியில் சிமெண்ட் ஆலை இருக்கிறது, சர்க்கரை ஆலை இருக்கிறது. இரண்டு நூற்பாலைகள் இருக்கின்றன. அங்கு ஆயிரக்கணக்கான





தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி சரியாக இல்லை. எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[[illegible]]

அடுத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறந்த ஒரு விளையாட்டு வீரர். அதே போல் தொழிலாளர்களின் குடும்பங்களிலே விளையாட்டு வீரர்கள் முன்னணியில் வருவதற்காக ஊக்கம் கொடுப்பதற்காக ஒரு வாரியத்தை ஏற்படுத்தி இருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அந்த 'உழைப்பாளர் உலகம்' என்ற பத்திரிகையை வரவேற்கிறேன். தொழில் சட்டங்களையும், கட்டுரைகளையும் நடத்தி அதன் மூலமாக தொழிலாளர்கள் தெரிந்து கொள்கிற அளவுக்குப் பயன்படுகின்ற முறையிலே வெளியிடுகிறார்கள். அதைப்போலவே தொழில் சட்டங்கள் தெரிந்த தொழிற் சங்கத் தலைவர்களை வைத்து வாரத்திற்கு இரண்டு முறைகள் தொழிலாளர்களுக்கு தொழில் கல்வி போதிக்க வேண்டும். அதற்காக அவர்களுக்கு தனியாக ஊதியம் அளிக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், என்னுடைய தொகுதியான கரூர் தொகுதியில் வீட்டு மனைகள் அதிகமான அளவுக்கு விலை ஏறியிருக்கிறது. அதனால் ஏழை தொழிலாளர்கள் நடுத்தர வர்க்கத்தினரும் சொந்தமாக வீட்டுமனைகள் வாங்கி வீடு கட்டிக்கொள்ளமுடியாத அவல நிலை இருக்கிறது. எனவே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அந்தப் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டிருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தொழிலாளர் நலம், வீட்டு வசதி ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று பாராட்டி நான் விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழைக்கின்ற வர்க்கத்திற்காக நெடுங்காலமாகப் பாடுபட்டு தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட உத்தமத் தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த நாளிலே தொழிலாளர் நல மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு தொழிலாளர் மத்தியிலே ஒரு அவல நிலைமை வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல திண்டிவனத்திலே ஆரோரூட் பிஸ்கட் பேக்டரியிலே ஸ்ட்ரைக்

நடந்துக்கொண்டிருக்கின்றது. 40 நாட்களாக வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்துவதாக என்று நாட்கள் கழிகின்றனவே தவிர எந்தவிதமான முடிவும் இன்னும் ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்ட மன்றக் கட்டட முகப்பிற்கு முன்பாக அமர்ந்து இருக்கின்ற 400 தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உண்ணா விரதம் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அந்த முடிவு ஏற்படவில்லை யென்றால் அவர்கள் தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொள்கிற முறையிலே இருப்பதாக ... தயாராக இருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குரோம்பேட்டை லெதர் கம்பெனியைப் பற்றி நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஏறக்குறைய 25 மாதங்களாக ஒரு விசித்திரமான ஒரு விசித்திரமான நிலைமை இருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், அதன் உரிமையாளரான நாகப்ப செட்டியார் அந்த ஆலைக்கு வருவதே இல்லை. அங்கே லாக் அவுட் என்பதும் இல்லை, ஸ்ட்ரைக் என்ற நிலைமையும் இல்லை. தொழிலாளர்கள் வேலைக்கு வருகிறார்கள், எங்கு பிடிக்கப் படுகிறது, முறையாக எல்லா வேலைகளும் நடக்கின்றன. ஆனால் ஊதியம் மட்டும் வழங்கப்படவில்லை. 25 மாதங்களாக அவர்கள் பட்டினியால் வாடி வறுமையால் அவர்களில் 5 பேர்கள் இந்த உலகத்தைவிட்டே பட்டுவிட்டு சென்று போயிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, உயர்நீதி மன்றத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு 5 மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டு அவர்களும் அதை வழங்க வேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். தீர்ப்பளித்த பிறகும் நிர்வாகத் தலைவருக்கு அனுப்பியும், ஒரு ஆண்டு காலமாகியும். இன்னும் அவர்களுக்கு அந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை.

இன்றைய தினம் இங்கே பேசிய உறுப்பினர்கள் மெத்த வருத்தப்பட்டுப் பேசினார்கள். இன்றைக்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய், 90 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தோல் பொருட்கள் இருக்கின்றன. வறுமையால் வாடுகிறார்களே. அந்தத் தொழிலாளர்கள், பட்டினியால் செத்து மடிந்துப் போகக் கூடிய நிலைமையிலே இருக்கிற அந்தத் தொழிலாளர்கள் அந்த நண்பர்கள் இன்றையதினம் ஏலம் விடப்போகிறேன் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற சூழ்நிலை வந்திருக்கிறது. அந்தக் குரோம்பேட்டை லெதர் ஃபேக்டரி உரிமையாளர் இருக்கிறாரே, திருவாளர் முதலாளி அவர்கள், அவர்களே இதை மாநில சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்துவிட்ட பிறகும், ஏன் மாநில சர்க்கார் உடனடியாக அதனுடைய பொறுப்பை, அதனுடைய நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை? ஏற்று ஏன் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய



முடியவில்லை? ஏன் அவர்களுக்கு ஊதியம் தர முடியவில்லை? அவர்களுக்கான உரிமைகளை வழங்க ஏன் முன்வரவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன். எனவே, உடனடியாக அரசாங்கம் அதற்கான திட்டத்தினை தீட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலே நடைபெறுகின்ற ஆட்சி தாய் மார்களுக்காக நடைபெறுகின்ற ஆட்சி. அதிலும் நம்முடைய தமிழக முதலமைச்சர் பொன்மனச் செம்மல், வாரி வழங்கும் வள்ளல் இருக்கிறாரே அவருடைய ஆட்சியில் தாய்மார்கள் கண்ணீர் வடிக்காத காலமே கிடையாது. இரண்டு நாட்களாக செய்தி வருகிறது. அதாவது, சென்னை மாநகரத்தில் அம்பத்தூரிலும், மயிலாப்பூரிலும் இருக்கின்ற ரெடிமேட் ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் ஏறக்குறைய இரண்டாயிரம் பெண் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படும் அவல நிலை இருப்பதாகச் செய்தி வருகிறது. அந்த பேக்டரிகள் மூடப்படும் சூழ்நிலைகள் தமிழகத்திலே வந்து இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதன் விளைவாக இந்த இரண்டாயிரம் பெண்கள்- தாய்மார்கள் எங்கே போவார்கள்? அவர்களின் வாழ்க்கைக்கு என்ன உத்தர வாதம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம் என்ன வென்றால், வெளிநாடுகளிலிருந்து ஆர்டர்கள் வரவில்லை, ஏற்றுமதிக்கான ஆர்டர் வரவில்லை. ஆகவே தொழிற்சாலை மூடப்படும் நிலைமை ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். இது உண்மையா என்றால் அல்ல. உண்மை யான காரணம் என்னவென்றால், அங்கிருக்கின்ற அருமைச் சகோதரிகள் ஒன்றாகச் சேர்ந்து, தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக ஒரு சங்கத்தை—ஒரு தொழிற்சங்கத்தைத் துவக்கி விட்டார்கள் என்ற அந்தக் காரணம் தானே தவிர வேறு காரணம் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்லாமல், அந்த பேக்டரி ஆண்டுதோறும் விலாசத்தை மாற்றி வேறு போர்டை மாட்டி, வேறு நிர்வாகத்திற்குப் போய்விட்டது என்று சொல்லி அந்தத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்திவிடும் மோசமான சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் இதே சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கின்றார்கள்: தமிழகத்திலே சோஷலிச ஆட்சி வந்துவிட்டது, நாளை உலகை ஆளுகின்ற கரங்கள், உழைக்கின்ற கரங்களின் ஆட்சி என்று தமிழக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் கடந்த முறை குறிப்பிட்டிருக்கிறார்கள். உழைக்கின்ற கரங்களின் ஆட்சியா, இது சோஷலிச ஆட்சியா இது என்று நாம் எண்ணிப்

பார்ப்போமேயானால், இந்த ஆட்சியிலே தொழிலாளர்கள் எவ்வளவு [illegible] ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குரோம்பேட்டை [illegible] மில்லில் உற்பத்தி குறைவு என்று சொல்லி [illegible] லே-ஆஃப் செய்து வெளியிலே அனுப்பியிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அண்ணா தி.மு.க. [illegible] ஆதரவோடு, விரல் விட்டு எண்ணக்கூடிய [illegible], அந்த நிர்வாகத்தையே [illegible] நிலைமையை, இல்லீகல் ஸ்டிரைக்கை உண்டாக்கும் நிலைமை [illegible] சுட்டிக் காட்ட விரும்புகிறேன். [illegible] ஒரு ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு [illegible] தகவல் தரப்பட்டிருக்கிறது. [illegible] என்று சர்க்காருக்கு ரிப்போர்ட் [illegible] என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. [illegible] இப்படிப்பட்ட நிலைமைகள் [illegible] 200 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்கள். [illegible] அதிலே தலையிட வேண்டுமென்று [illegible] நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல.....

திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்திரா காட்டன் மில்லிலே [illegible] பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் [illegible]. அங்கிருக்கின்ற பெருவாரியான தொழிலாளர்கள் [illegible] வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று உண்மையான செய்திகளை [illegible] தெரிவித்தால் நலமாக இருக்கும்; அதை [illegible] சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் எது எதுவும் [illegible] கொண்டிருக்கவில்லை. அரசாங்கத்திலே விவரங்கள் இருக்கின்றன; தொழிலாளர் ஆணையாளர் இருக்கிறார். உண்மையான கணக்கு சர்க்காருக்கு வந்திருக்கும். இன்றைக்கு அந்த பேக்டரியின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு, எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்று எனக்குப் பின்னால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் சொன்னால் நாங்கள் மெத்த சந்தோஷப் படுவோம்.

இன்றையதினம் காண்ட்ராக்ட் லேபர் முறையை அடியோடு ஒழித்தாக வேண்டும். அது கொத்தடிமை முறையாகும். இந்தியாவிலே உள்ள அறுபது கோடி மக்களின் இதய சிம்மாசனத்திலே கொலுவீற்றிருக்கின்ற அன்னை இந்திரா அவர்கள் ஆட்சிக்காலத்தில் இருபது அம்சத்திட்டம் கொண்டு வரப்பட்டது.





கொத்தடிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதும் அதில் ஒன்றாகும். ஆனால் தொழிலாளர்கள் இயக்கத்தால் காண்ட்ராக்ட் லேபர் முறையில் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் கொத்தடிமை களாக இருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அதை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 10.50]

அதோடு மட்டுமல்ல, இந்தக் கொத்தடிமை முறையை ஒழிப்பதற்காக சர்க்கார் துறையிலே ஒரு போர்டு, ஒரு சப்-கமிட்டி போடப்பட்டு, அதிலே முதலாளிகளுடைய சார்பாக திரு. ராசா ராம் என்று சொல்லக்கூடிய மரியாதைக்குரிய ஒரு அன்பரையும் அதே நேரத்திலே இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசைச் சேர்ந்த, பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிற மதிப்பிற்குரிய திரு. இராமமூர்த்தி அவர்களையும் போட்டிருக்கிறார்கள். அது, தமிழகம் முழுவதும் சுற்றிப் பார்த்து 3 மாத காலம் பயணம் வந்து, ஒரு அழகான ரிப்போர்ட்டை, ஒரு அறிக்கையை முதலாளி சார்பில், உழைக்கின்ற வர்க்கத்தின் சார்பில் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஏகமனதாக ஏற்றுக்கொள்கிற ஒரு அறிக்கையைச் சர்க்காருக்குத் தாக்கல் செய்திருக்கிறது. ஆனால், அந்த அறிக்கையில் செய்யப்பட்டிருக்கின்ற பரிந்துரை களைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டதா என்றால் இல்லை. ஆனால், அதற்கு மாறாக சேஷசாயி இன்டஸ்டிரியிலே இருக்கிறவர் களுடைய நலனை காக்க வேண்டும் என்பதற்காக, அரசுத் துறையிலே அதிகாரிகள் எல்லாம் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாத அளவிலே, அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராமமூர்த்திக்கும், அந்த முதலாளிகளின் சார்பாக இருந்த மரியாதைக்குரிய திரு. இராசாராமுக்கும் ப்ரஷர் கொடுத்தார்கள் நடைமுறையிலே, அந்த இரண்டு பேருமே அதை ஒத்துக் கொள்ளாததன் காரணமாக, அவர்களது உரிமைகளை பறிக்கின்ற வகையிலே நிலைமைகள் இருந்ததால், அதைத் தவறு என்று சுட்டிக் காட்டுகிற முறையிலே, அந்தக் கமிட்டியிலேயிருந்த எங்களுடைய பெரு மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினரான தோழர் கே.இராமமூர்த்தி அவர்கள் அந்தக் கமிட்டியிலேயிருந்து ராஜிநாமா செய்திருக்கிறார்கள், அதன்மேலே என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது? ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. அந்த சேஷசாயி இன்டஸ்ட்ரி மேலே தமிழக அரசுக்கு இவ்வளவு காதல் ஏன்? இவ்வளவு பாசம் ஏன்? இவ்வளவு பற்று ஏன்? என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் ஊதிய விடுப்பு என்பது 20 நாட்கள் வேலை செய்தால் ஒரு நாள் ஊதிய விடுப்பு என்ற நிலை இருக்கிறது. ஆனால், இன்றையதினம் 239 நாட்கள் வேலை செய்தாலும் அந்த காஷுவல் லீவ் வராத ஒரு சூழ்நிலை

இருக்கிறது. ஆகவே 20 நாட்கள் வேலை செய்கின்ற ஒரு நிலைமை வருகின்றபொழுது, ஒரு நாள் சி.எல். வருகின்ற வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டுமல்ல, அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால், ரூ. 10,000/- தருகிற நிலைமை இன்று நாட்டிலேயே தமிழகத்திலே இருக்கிறது. அந்த நிலைமையை, அந்தக் குடும்ப நலப் பாது காப்பு திட்டத்தைத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

ஒரு நிறுவனம் மூடுவதாக இருக்கிற நேரத்திலே அல்லது வேறு யாருக்காவது விற்பனை செய்து விட்டார்கள் என்ற நிலைமை வருகிறபோது, நஷ்டஈடு, சம்பளம் தருகிறார்களே தவிர, அங்கே இருக்கிற தொழிலாளர்களை அப்படியே வேலையில் வைத்துக் கொள்வதில்லை. ஆகவே, அந்த நிலைமையிலே அந்தத் தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பு தரும் வகையிலே சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நேரம் ஆகிவிட்ட சூழ்நிலையிலே முடிக்கின்றபொழுது ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றையதினம் என்னுடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரைப்பற்றி, இன்றையதினம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராகப் பதவியேற்றிருக்கக்கூடிய மதிப்பிற்குரிய ஒரு தலைவர் மிக அழகாக ஒரு கருத்தை இந்தச் சட்டமன்றத்திலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 'மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சிறந்த அறிவு ஜீவி; தொழிலாளர் துறையிலே மிகுந்த அனுபவம் பெற்றவர்; மிகுந்த நாணயமானவர், இன்டர்நேஷனல் லா என்பது பற்றி அதிக அளவிலே தெரிந்த தலைவர் தமிழகத்திலே அவரை விட்டால் வேறு யாரும் இல்லை. ஆகவே, அவரை ஐ.எல்.ஓ.வுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று தமிழக முதல்வருக்கு சிபாரிசு செய்த பரிந்துரையைப் பார்த்தேன். நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் தயவு செய்து ஐ.எல்.ஓ.வுக்குப் போக வேண்டாமென்றும் தமிழக அமைச்சரவையில் இருக்க வேண்டுமென்றும் சொல்லி விடை பெறுகிறேன்.

திரு. என். இராமசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 1980—81 ஆண்டு தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதலிலே என் நன்றியைச் சொல்வது என்னுடைய கடமையாகும். தொழிலாளர் உயர்வுதான் நாட்டின் பொருளாதார உயர்வு என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அதை முன்னிட்டுத்தான் பொருளாதார



மேதைகள், லேண்டு, லேபர், காப்பிடல் என்ற வரிசையில் மூல தனத்திற்கு முன்பாக லேபர் என்று குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட சொன்னார்கள். ஒரு நாட்டிலே தொழிற்சாலையிலே தோழமை உணர்வும், நீதியும், நிம்மதியும் நிலவி இருந்தால்தான் இந்த நாட்டிலே மக்கள் சிறப்பாக வாழ முடியும் என்று சொன்னார். அத்தகைய முறையிலே தொழிலாளர் நலனிலே மிகுந்த அக்கறை காட்டி வரும் இந்த அரசு பாராட்டுக் குரியது. அதற்கு இரண்டு அடிப்படைகள்தான் காரணம் என்று நான் நினைக்கிறேன். முதலாவது அண்ணா அவர்கள் சொன்ன "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்" என்றார்கள். அத்தகைய முறையில்தான் இந்த அரசு அண்ணாவின் அரசாக, அண்ணாவின் குறிக்கோள்களை அண்ணாவின் கனவுகளை நனவாக்குகின்ற வகையில் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறைக் காட்டி வருகிறது என்று கருதுகிறேன். இரண்டாவ தாக, இன்றைக்கு தமிழகத்தின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய இளமைக் காலத்திலே மிகுந்த பாதிப்புக்கு ஆளானவர். அதுவும் "கொடிது கொடிது வறுமை கொடிது" என்று பாடிய அவ்வை மூதாட்டியாரின் பாட்டிற்கு இணங்க, தமிழகத்திலே தன்னுடைய இளமைக் காலத்திலே தன்னுடைய வாழ்க்கையிலே வறுமை நிலையை ஏற்று பார்த்த அந்தக் காரணத்தினாலேதான், அவர்கள் தொழிலாளர்களுடைய கஷ்டத்தை எந்த அளவுக்குப் புரிந்தவர்கள் என்பதால்தான் அவர்கள் நலனிலே மிகுந்த அக்கறைக் காட்டுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த அரசு தொழிலாளர்களிடையே ஏற்படுகின்ற தகராறை மிகச் சுமுகமான முறையிலே தீர்த்து வைத்திருக்கிறது. உதாரணமாக சிம்சன் தொழிற்சாலை, என்பீல்டு இந்தியா, டி.வி.எஸ். குரூப் போன்ற கம்பெனிகளின் தகராறுகளை இந்த அரசு எத்தகைய முறையில் தீர்த்து வைத்தது என்பதை இந்த மன்றம் அறியும். தொழிற்சங்கங்களின் உணர்வுகளை மதித்து, தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்களை எந்த அளவுக்கு மதிப்போடு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் மிக நேர்மையான முறையோடு செயல்படுகிறது.

அடுத்து வேலை நிறுத்தங்களில் ஈடுபட உரிமையை அளிப்பதும், தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தை வழங்குகின்ற முறையும், குறைந்த அளவு ஊதியத்தை திருத்தி அமைக்கின்ற முறையில் இந்த அரசு நடந்து வருவதை நாம் அறிவோம்.

அடுத்து அன்ஆர்கனைஸ்டு லேபர், அதாவது தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களை முறைப்படுத்தி, அவர்களுக்கு மிகவும் அதிகமான சலுகைகள் அளித்து அவர்கள் நலனில் மிகுந்த அக்கறை காட்டுகிறது என்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

[திரு என். இராமசுப்பிரமணியன்] [1980 ஜூலை 15

தொழிலாளர் சட்ட ஆலோசனைப் பிரிவுகளை மாவட்டம் தோறும் ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய பகுதியான என்னுடைய தொகுதியான ஸ்ரீவைகுண்டத்தில் இத்தகைய பிரிவு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்களுக்கு விடுமுறை, ஓய்வு இல்லம் போன்றவைகளை மாவட்டம் தோறும் அமைத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கென வரும் உழைப்பாளர் உலகம் என்ற பத்திரிகையை தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்கள் எல்லாருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முடிவாக என்னுடைய தொகுதியான ஸ்ரீவைகுண்டத்தில் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி, வேலை யில்லாத தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டு, நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த அரசு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தொழில் அமைதியை காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்த அவையில் குறிப்பிட்டுள்ளது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்த அரசுக்கு எங்களுடைய கோரிக்கையை வைக்கிறோம். அதே கட்சியின் சார்பில், எங்களுடைய கம்யூனிஸ்ட் படையில் ஒரு சில யோசனைகளை அறையத்தின் என்று எண்ணுகிறேன். இன்று தொழில் தகராறு இருக்கின்ற நேரத்தில், அந்தந்த தொழில் தகராறுகளை காலாகாலத்தில் தலையிட்டு முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக அந்த நீண்ட வைப்பதன் காரணமாக பிரச்சினைகளும், கன்பூஷன்களும் ஏற்படுகின்றன. பல கொடுக்காமல் உடனடியாக இலாகா தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடிய தொழில் சட்டங்கள் தொழிலாளர்கள் பல வருடங்களாகப் போராடி பெற்றிருக்கக்கூடிய சட்டங்கள் பல விஷயங்களுக்காக அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டிய சட்டங்கள் அது என்ற முறையிலே பார்த்து, இன்று இலாகா தலையிடக்கூடிய நேரத்திலே தொழிலாளர்களுக்கு சாதகமாக சட்டங்களைப் பார்க்கவேண்டும், விளக்கவேண்டும். இன்டர்பிரட் பண்ண வேண்டும். அல்லாமல் இன்று இலாகா செய்வதுபோல் நடு நிலைமையாளர்கள் என்ற முறையிலே அல்லாமல் நடுவர் தீர்ப்பு என்ற முறையிலே அவர்கள் செயலாற்றுவது என்பது சரியில்லை என்று முக்கியமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.



1980 ஜூலை 15

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

[முற்பகல் 11–00]

அதைப்போன்று தொழில் தகராறுகள் ஏற்படுகின்ற நேரத்தில் காலாகாலத்தில் அதிலே தலையிட்டு தீர்வு காணாததன் காரணமாக பல போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் காரணமாக பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. குறிப்பாக, போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசிடத்தில் கொடுத்தபோது அதனைச் சரியாகக் கவனிக்காத காரணத்தால், போராட்டங்கள் நடைபெற்றன. அரசு காலாகாலத்தில் செயல்பட்டு இருந்தால் அதைத் தவிர்த்து இருக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று அரசு ரப்பர் தோட்டத்தில் கூலி, போனஸ் போன்ற கோரிக்கைகளுக்காக ஒரு போராட்டம் நடந்த நேரத்தில், தனியார் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தைக் கூட அரசு ஏற்றுக்கொள்ள முன்வராததால் ஏறத்தாழ 33 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. சென்ற வேலை நிறுத்தங்களில் மட்டும் இந்த நிலைமை இல்லை. தற்போது நடந்து கொண்டு இருக்கும் ஒரு சில பிரச்சனைகளிலும் அரசு இம்மாதிரி கவனம் செலுத்தாமல் இருக்கிறது என்பதை கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

காவேரி ஸ்ட்ரக்சரல்ஸ், திருச்சியில் 12/3 செட்டில்மென்ட் ஏற்பட்ட பிறகு, அந்த ஒப்பந்தத்திலேயே விக்டிமைசேஷன் செய்யமாட்டேன் என்று ஷரத்து இருந்தும் கூட அந்த முதலாளி அனைத்துத் தொழிலாளியையும் வேலைக்கு எடுத்துக்கொண்டு, திரும்பவும் 200 தொழிலாளிகளை வேலையில் இருந்து ரிட்ரெஞ்ச் செய்து இருக்கிறார்கள். ஒரு மாத காலமாகியும் இன்னும் அதிலே தலையிடாத நிலை இருக்கிறது. இதிலே இருக்கும் வேடிக்கை என்னவென்றால், ரிட்ரெஞ்மென்ட் செய்யக்கூடாது என்று அவர்கள் போட்டுள்ள ஒப்பந்தத்தையே மீறியிருக்கிறார்கள். விதிமுறைகள் மீறப்பட்டு இருக்கின்றன. சீனியர் தொழிலாளிகள் தொழிற்சங்க வேலைகளில் ஈடுபட்டவர்கள் ரிட்ரெஞ் செய்யப்பட்டனர். அதேநேரத்தில் தொழிற்சங்கத்தில் ஈடுபாடில்லாத ஜூனியர்கள் வேலையில் இருக்கிறார்கள். இது தொழில் தகராறு சட்டத்திற்கு எதிரானது. வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் போனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அரசு காலாகாலத்தில் தலையிடவில்லை என்று சொன்னால் அது பலவிதமான மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் முனிசிபாலிடியில் இருக்கக்கூடிய தொழிலாளர் பிரச்னைக்குத் தீர்வு காண காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறிப்பாக, எலெக்டிரிசிடி பிரிவில் இருக்கும் ஊழியர்களுக்கு மின்சார வாரியம் அளிக்கும் சம்பளம்,

சலுகைகள் [illegible] கேட்கிறார்கள் [illegible] என்று மின்சாரத் [illegible] நடவடிக்கை [illegible] பட்ட சலுகைகள் [illegible] போன்று [illegible] போன்ற [illegible] நடவடிக்கை [illegible] பொதுத்துறை [illegible] இப்படிப்பட்ட [illegible] பொதுத்துறை [illegible], ஏற்படுகின்ற [illegible] கொள்கிறேன். [illegible] என்றும் கேட்டுக்கொள்கிறேன் [illegible] வேண்டும்

இந்தப் பிரச்சினைகளை [illegible] இருக்கின்றன என்பதைக் கூற [illegible] ஏற்படக்கூடிய நேரத்தில் [illegible] தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. [illegible] 30(சி) படி தொழிலாளர்கள் நடத்தக்கூடிய போராட்டங்கள், [illegible] ஆகியவை நடைபெறும் [illegible] உரிமையை பாதிக்கிறது. [illegible] தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்படுகிறது [illegible] தொழில் தகராறு [illegible] செய்கிறார்கள் [illegible] வேண்டும் என்றால், [illegible] படும் தடை [illegible] பல போராட்டங்கள் [illegible] கிரிமினல் [illegible] படுகின்றனர். ஆகவே [illegible] பாதிக்காத வகையிலும், [illegible] காக்கப்படும் [illegible] என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] வேண்டும்

அதைப்போன்று இப்படிப்பட்ட நடவடிக்கைகள் [illegible] காரணமாக முதலாளிகள் [illegible] செய்து, தொழிலாளர்களைப் பணிய வைக்கும் [illegible] ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு புதிய தொழிலாளர்களைக் கொண்டுவந்து வேலைக்கு வைக்கும் நிலை இருக்கிறது. பழையத் தொழிலாளர்கள் சட்டப்பூர்வமாக வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்ற முறையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சாதாரணமாக சட்டப்பூர்வமாக அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் இருக்கும்போது புதுத் தொழிலாளர்களை புகுத்த இலாகா அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதைப்போன்று தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் 'காரண்டி ஆஃப் ஜாப்' என்பதும் 'செக்யூரிட்டி ஆஃப் ஜாப்' என்பதும் முக்கியமான பிரச்னை. அதே நேரத்தில் என்ன பார்க்கிறோம் என்றால் 'அன் ஆர்கனைஸ்ட்' இன்டஸ்டிரீஸி'-ல் எந்தவிதமான பாதுகாப்பும் தொழிலாளர்களுக்கு இல்லை. ஒரு சில நாட்களுக்கு முன்னால் இந்த அவையிலே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் சொன்னார். அக்ரிகல்ச்சர் ஒர்க்கர்களுக்கு வேறு சரியாக [illegible] கிடைக்கவில்லை என்றால் அவர்கள் ஸ்தாபன ரீதியாக [illegible] என்று சொன்னார்கள். இன்றைக்கு ஸ்தாபன ரீதியாக திரண்டு இருக்கிற தொழிலாளர்களுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். அவர்கள் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு, ஸ்தாபனங்களை விட்டு [illegible]கிறார்கள். அந்த நேரத்தில் எல்லாம் இலாகாவினர் அவர்களுக்கு சாதகமாக இருக்கிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக ஒன்றும் செய்வது கிடையாது. ஆகவே, இந்த குறைந்த அளவில் ஒரு பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும்; குறைந்தபட்ச கூலி சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட குறைந்த அளவு பாதுகாப்புச் சட்டம் கூட இல்லாத காரணத்தால் பல ஸ்தாபனங்கள் அடிக்கடி மூடப்படுவதும், தொழிலாளர்களை நீக்கிவிடுவதுமாக இருக்கிறது. இன்றைக்கு பாலு கார்மென்ட்ஸ் நிறுவனம், ஆவடி கார்மென்ட்ஸ் நிறுவனம் மூடப்பட்டு, பல ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள்.

கான்ட்ராக்ட் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட 'கான்ட்ராக்ட்' 'லேபர் அட்வைசரி போர்ட்' இன்னும் திருத்தியமைக்கப்படவில்லை. ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு இது சம்பந்தமாக கொடுத்த ரிப்போர்ட்டை, [illegible] தொழில்களில் கான்ட்ராக்ட் முறை [illegible] கூடாது என்று சொல்லியிருந்தும் இலாகாவினர் அமல் செய்யவில்லை. [illegible] சரியாக அமல் செய்யாததால் இன்றைக்கு பல பெரிய தொழில்களில் கூட கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் [illegible] நிலைமை உருவாகியிருக்கிறது. மின்சார வாரியம் அரசு போக்குவரத்து போன்ற அரசு நிறுவனங்களில் கூட நிறைய வேலைகளை இன்றைக்கு கான்ட்ராக்ட் முறையில் செய்கிறார்கள். அதனால் கான்ட்ராக்ட் லேபர் முறையை ஒழித்துக் கட்டவும், தொழில் தகராறு சட்டத்தில் கான்ட்ராக்ட் லேபர்கள் வொர்க்மென் என்று டிஃபைன் பண்ண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இந்த எல்லாம் போராட்டங்கள் காலாகாலத்தில் தீர்த்து வைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சித்தரம் கம்பெனி நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் கம்பெனி,

ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா ஆயில் தேவகிரித் தோட்டம் நிறுவனம் அதைப்போன்று பல என்ஜினீயரிங் தொழிற்சாலைகள் எல்லாம் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. மெட்ராஸ் குரோம் லெதர் பாக்டரி மூடப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மென்ட் வைத்திருக்கிற இன்டஸ்டிரியல் ரெகுலேஷன் ஆக்டில் மாற்றம் செய்து, ஸ்டேட் கவர்ன்மென்ட் பொறுப்பிலே அதை எடுத்து, ஸ்டேட் கவர்ன்மென்ட் அதை நடத்தக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும்.

அதைப்போன்று ஸ்ரீராம் வையர் கம்பெனியில் இன்று 700 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸில் 400 தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பாது காப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கிற மிகப் பெரிய செல்வாக்கு இந்த நாட்டில் இருக்கிற உழைக்கும் மக்கள் கொடுத்திருக்கிற செல்வாக்கு என்ற முறையில், அவர்களுடைய ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்வாதிகார ஆட்சி இந்த நாட்டிலிருந்து போக ஒத்துழைத்தவர்கள் இந்த உழைக்கும் மக்கள்தான்.

இன்றைக்கு பல முதலாளிகள் தொழிலாளர்களை பழி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். டி.வி.எஸ். முதலாளி எப்படி நடந்துகொண்டார் என்பது இந்த அவையிலே பல உறுப்பினர்கள் குறிப்பிட்ட விஷயம். எனவே கடந்த கால அனுபவங்களை கருத்திற்கொண்டு தொழில் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கு அரசு சம்பந்தப்பட்ட முதலாளிகளையும் தொழிற்சங்க பிரதி நிதிகளையும் அழைத்து, பேசி, சுமுகமான முடிவை ஏற்படுத்தி, வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைப் போல் 'டி.ஐ. சைக்கிள்ஸ்' நிறுவனத்தில் இருக்கிற பிரச்சினையையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

அடுத்து சட்டங்களை அமல் படுத்தக்கூடிய நேரத்தில் தகுந்த முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாகத் தொழிலாளர்கள் குறித்த சட்டங் கள் கொண்டுவரப்படுகின்றபோது அவற்றை நிறைவேற்றுகின்ற வகைகளில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பீடி தொழிலாளர்கள் சட்டம் சரிவர அமல்படுத்தப்படவில்லை அதாவது, லே ஆஃப்



காலங்களில் ஃபால் பேக்வேஜஸ் கொடுக்கப்படவேண்டும். ஆகவே, அது குறித்து மஹாராஷ்டிரா மாநிலத்திலே இருப்பது போன்ற நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிராவிடன்ட் ஃபண்ட் சரியாகக் கொடுக்கக்கூடிய முறையில் ஏற்படுத்தவேண்டும். அதேபோன்று தொழிலாளி களில் விரும்பாதவர்களுக்கு ரெஃபரன்ஸிலே கொடுக்கப்படுகிறது. ஆகவே விரும்புகிறவர்களுக்குத்தான் அது கொடுக்கப்பட வேண்டும், விரும்பாத தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியதில்லை.

அடுத்து 2 ஏ செக்ஷன் தொழில் தகராறு சட்டத்திலே கொண்டு வந்த பிறகு தொழிலாளர்களுக்கு அவர்கள் நேரடியாக நீதிமன்றம் செல்வதற்குரிய உரிமையைக் கொடுக்கவேண்டும். ஷாப் ஆக்ட் மாதிரி, கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மென்ட் மாதிரி நேரடியாக தொழில் கோர்ட்டுக்குப் போவதற்கு அப்பீல் புரவிஷன் தொழிலாளிகளுக்கு ஏற்படுத்த வேண்டும். இதிலே ஸ்கிரீனிங் கமிட்டி என்ற ஒன்றை வைத்துக் கொண்டு தொழி லாளிகள் கோர்ட்டுக்குப் போவதைத் தடுக்கக்கூடிய நிலை இருக் கின்றது. கோர்ட்டுக்குப் போவது என்பது அவரவர்களுடைய பிரச்சினை. கோர்ட்டுக்குப் போய்விட்டாலே அவர்களுக்கு வேலை கிடைத்துவிடும் என்பதல்ல. அவர்களைக் கோர்ட்டுக்குச் செல்லவிடாமல் தடுப்பது இன்டஸ்ட்ரியல் ஜூரிஸ்புருடன்ஸுக்கு எதிரானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து கேரளாவிலேயும், தமிழ்நாட்டிலேயும் ஹைகோர்ட்டிலே இரண்டு தீர்ப்புகள் வந்திருக்கின்றன. அதாவது தொழிலாளர்கள் பிரச் சினைகளில் முடிவெடுக்கும்போது இரண்டு முக்கியமான விஷயங்களை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக் கின்ற பனிஷ்மென்ட் ப்ரப்போர்ஷனேட் டு தி சார்ஜ் ஆக இருக் கின்றதா என்றும் என்கொயரி நியாயமான முறையிலே நடத்தப் பட்டதா என்றும் பார்க்க வேண்டும். இவ்வாறு தீர்ப்பு வழங்கி யதற்குப் பிறகு இவைகள் இருக்கிறதா என்று ரிப்போர்ட் அனுப்ப லேபர் கமிஷனர் அலுவலகத்திலிருந்து லேபர் ஆபீஸருக்கு ஒரு ஆணை அனுப்பப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, அப்படி ஆணைகள் எதுவும் அனுப்பப்பட வில்லை. கோர்ட்டினுடைய விளக்கங்களைத்தான் எழுதியனுப்பி யிருக்கிறார்கள். ஆகவே அவ்வாறு ஆணைகள் எதுவும் அனுப்பப் படுவதில்லை என்பதை தொழிற்சங்கங்களை நன்கு அறிந்த உறுப்பினர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆணை அனுப்பப்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஆலோசனை என்ற முறையிலே ஒருவேளை சர்குலர் அனுப்பப்பட்டதா என்று அமைச்சரவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்கள் பிரச்சினையில் ஒப்பந்தங்களை ஏற்படுத்தும்போது அவற்றை முழுக்க முழுக்க தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்ற ஒரு பிரச்சினை வருகின்றது. ஆகவே, பார்கைனிங் ஏஜெண்ட் நிர்ணயிக்க பேலட் முறை இருக்க வேண்டும். அந்த முறையின்படி பார்கைனிங் ஏஜெண்ட் யார் என்பதை முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆகவே தொழிலாளர்களுக்கு பேலட் உரிமை கொடுக்கவேண்டும் என்றும் தொழிற்சங்க அங்கீகாரத்திற்கும் பேலட் முறையில் அங்கீகரிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தும் அதற்கான நடவடிக்கைகளை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை, என்ற நிலை மாற்றப்பட வேண்டும்.

அதேபோன்று சில தொழில் சட்டங்களில் சில முக்கியமான திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன். தொழிற் சங்கங்களை அமைப்பதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. அப்படி அமைப்பதற்கு மனு கொடுக்கக் கூடிய நேரத்திலே, அந்த மனு கொடுத்த தொழிலாளர்களை பழி வாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தத் தொழிற் சங்கங்களை உருவாக்காமல் இருக்க முயற்சி எடுக்கிறார்கள், அல்லது அந்தத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்கிறார்கள். அதனால் டிரேட் யூனியன் ஆக்டில் அவர்களுக்கு புரொடெக்ஷன் கொடுக்க, அந்த சங்கத்தை உருவாக்க விண்ணப்பிப்பவர், சங்க எக்சிகியூட்டிவ் மெம்பர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு புரொடெக்டிவ் வொர்க்கர்ஸ் என்று சொல்லக் கூடிய அளவில் பாதுகாப்பு கொடுத்து சட்டத்திருத்தம் செய்ய வேண்டும்.

அடுத்து, இன்னொரு விஷயம் என்னவென்றால் முதலாளிகள் நடத்தும் விசாரணைகள் போன்ற பிரச்சனைகளில் முதலாளி களுக்குத்தான் வக்கீல்களை வைத்து வாதாடுகிற உரிமை இருக் கிறது. வேலை இழந்த தொழிலாளிக்கு அந்த உரிமை இல்லை. சென்ட்ரல் கவர்ன்மென்டில் இருக்கிற மாடல் ஸ்டேண்டிங் ஆர்டர்ஸில் தொழிலாளர்களுக்கும் வக்கீல்களாக தொழிற்சங்க நிர்வாகிகளை கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே மாநில ஸ்டேண்டிங் ஆர்டர்ஸிலும் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, சட்டங்களை அமுல் படுத்தக் கூடிய ஆபிஸர்ஸ் அதை சரியாக அமுல்படுத்துவது இல்லை. மோட்டார் டிரான்ஸ் போர்ட் வொர்க்கர்ஸ் ஆக்ட் என்று ஒன்று இருக்கிறது. இந்தச் சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதே இல்லை. இந்த வொர்க் கர்ஸைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. குறிப்பிட்ட வேலை நேரம் கிடையாது. ரெஸ்ட் ஷெட் என்பதே கிடையாது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு எந்தவிதமான வசதிகளும் கிடையாது. அவர்களுக்கு கான்டீன் வசதி இல்லை. ரெஸ்ட் ஷெட் கிடையாது. கக்கூஸ் வசதி கிடையாது. அப்படி மிக மோசமான நிலையில் பப்ளிக் அண்டர்டேக்கிங் நிறுவனத்தில் இருப்பது மிக வருத்தத்தைக் கொடுக்கிறது. அதையெல்லாம் மாற்ற அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தோட்டத் தொழிலாளர் நலச்சட்டம், சரியாக அமுல்படுத்தப் படவில்லை. தமிழக அரசின் கீழ் இருக்கிற அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லை. மருத்துவ வசதி சரியாக இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை. இவைகள் எல்லாம் வேண்டும் என்று ஏதாவது ஒரு தொழிலாளி கேட்டால் கூட அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களை வேலை நீக்கம் செய்கிற ஒரு நிலைமை இருக்கிறது அங்கே. அது தவிர்க்கப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார்த் தோட்டங்களும் அப்படித்தான்.

அதேமாதிரி என்னுடைய மாவட்டத்திலே முந்திரி ஆலைகள் நிறைய உண்டு. அந்த முந்திரி ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 50,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்கு என்று திட்டம் ஏதோ கொடுக்கப் பெற்றிருப்பதாக இங்கே இருக்கிற பாலிஸி நோட்டிலே அவர்களை பாதுகாப்பதற்கு என்று நடவடிக்கைகள் எடுக்கப் பெற்டிருப்பதாக பக்கம் 27 லே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பேக்டரி ஆக்ட்களை அமுல் செய்கின்ற அதிகாரிகள் அவைகளை அமுல் படுத்துவதே இல்லை. இதை சொல்லும்போது மிக வருத்தத்துடன் சொல்லவேண்டி யிருக்கிறது. இங்கே அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. லேபர் கமிஷனர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆலைகளைப் பொருத்தவரையில் எதுவும் அமுலுக்கு கொண்டு வரப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த சூழ்நிலையை மாற்றி அவர்களுக்கு போதுமான அளவுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், சட்டங்கள் அங்கே அமுல் செய்யப்பெற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு இன்னும் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப் படவில்லை. அவைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அன்—ஆர்கனைஸ்டு செக்டாரில், ஹோட்டல் ஊரம் சென்டரிலில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும், கார்மெண்ட்ஸ் சென்டரில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும், மற்றும் கேஷீவல் வொர்க்ஸ் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பெற வேண்டும். அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியும் என்று சொல்லி அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கடைசியாக ஒரே விஷயம் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி சம்பந்தமாக இருக்கக்கூடிய நிலைமை பற்றியது நகர்ப்புறத்திலே வீடுகள் கட்டுவதற்கு லைசன்ஸ் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கிராமப் பஞ்சாயத்திலே இருக்கக் கூடிய நிலங்களில் வீடு கட்ட லைசன்ஸ் வாங்க வேண்டியது இல்லை. கிராமப் புறத்திலே வீடுகள் கட்டுகிறபோது முனிசி பாலிட்டிக்கு பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்களிலே வீடுகள் கட்டி, அதை ஆர்ஜிதம் செய்கிறபோது, அந்த வீடுகளுக்கு லைசென்ஸ் வாங்கப் பெறவில்லை என்று சொல்லி வீட்டுக்கு காம்பென்சேஷன் கொடுக்கவில்லை, நிலத்திற்கு மட்டும்தான் காம்பென்சேஷன் தந்திருக்கிறார்கள். லைசன்ஸ் வாங்கவேண்டும் என்ற சட்டம் கிராமப்புறத்தில் இல்லை. ஆகவே அந்த வீடு களுக்கு தகுந்த காம்பென்சேஷன் கொடுக்கப்பட வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

[முற்பகல் 11.20]

திரு. ஆர். சக்கரபாணி : வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும், வீட்டுவசதி ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழகத்து தானைத் தலைமகன் நம் இதய தெய்வம் அண்ணா அவர்களின் இதயக் கனியாம் புரட்சித்தலைவர் அவர்களால் விரல் காட்டப்பட்ட என்னை இந்த மன்றத்திற்கு பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தைப் பெற்று அனுப்பியுள்ள எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து நான் எனது சிறிய உரையைத் துவக்குகிறேன்.

வீட்டுவசதி வாரியம் என்ற குறிப்பிலே நான் பேசுவதற்கு முன் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுக்கு மற்ற மாநிலங்களில் குடியிருப்பு மனைகள் வழங்கி தனியாக அவர்களுக்கு காலனிகள் அமைத்துக் கொள்ள அங்கே வசதிகள்



செய்யப்பட்டிருப்பதைப் போல் நம் மாநிலத்திலும் பத்திரிகையாளர்களுக்கு இது போன்ற வீட்டுவசதி அமைத்துக்கொடுக்கவும், அவர்கள் இருக்கிற இடத்தைச்சொந்தமாக்கிக்கொள்ள இந்த அரசு முன்வர வேண்டும் என்ற என் கோரிக்கையை முன்வைத்து அதற்குப் பின்னர் என் தொகுதி பற்றி கூற விரும்புகிறேன்.

என்தொகுதியைச் சேர்ந்த நாகப்பாளையம் கிராமத்தில் உள்ள புதுமனை என்ற இடத்தில் வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படுகிற வீடுகள் இன்னும் முடித்துத் தரப்படாமல் இருக்கிற நிலையை மாற்றி விரைவில் அங்கு வீடுகள் கட்டி அதில் குடி வர இருக்கிற தொழிலாளர்களுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் அங்கு குடிவருவதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலன் என்பது பற்றிப் பேசும் போது, நான் ஒரு தொழிலாளி என்பதை அங்கு முன்வைத்து தொழிலாளியாக இருந்த என்னை இன்று இந்த மன்றத்திற்கு அனுப்பியமைக்காக என் தொகுதி மக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலன் என்று குறிப்பிடும்போது தொழிலாளர் களுக்கு முதலாவதாகத் தேவைப்படுவது தொழிற்சங்கம். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் கோரிக்கைகளை வைத்து தங்கள் வாழ்க்கை வசதியை உயர்த்தி கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் தொழிற்சங்கங்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் தொழிற்சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. அதைப்பற்றி இந்த அறிக்கையில் முதல் பத்தியிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை நிலைநிறுத்த தங்கள் கோரிக்கைகளை முன்வைக்கும்போது கதவடைப்பு செய்கிற நிர்வாகத்தை முறியடிக்கிற வகையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கான உரிமை பற்றி குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் தொழிலகத்திற்குச் செல்ல முதலில் தேவைப்படுவது வீட்டுவசதி. தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்க எந்த தொழிலகமும் முன்வருவது இல்லை. ஆகவே தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சங்க அமைப்பு பற்றி நாம் எல்லோரும் அறிவோம். கடந்த காலத்தில், தானைத் தலைவர் என்று கூறிக் கொள்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் தொழிலாளர்கள் தங்களுக்கு ஒரு தொழிற்சங்கம் ஆரம்பித்தால் அந்தத் தொழிற்சங்கத்தை முறியடிப்பதற்காக அங்கிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரை

கள் செய்து என்னென்ன காரியங்கள் நடைபெற்றன என்பதை தமிழக மக்கள் அறிவார்கள். திரு.வி.பி. சிந்தன் அவர்கள் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தை தமிழக மக்கள் அறிவார்கள். ஆனால் சென்ற இரண்டரை ஆண்டுக்காலமாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் அப்படிப்பட்ட நிலை ஏதும் இல்லை என்பதை நாடு அறியும், நாட்டு மக்கள் அறிவார்கள். அதற்காக நான் ஒரு தொழிலாளி என்ற காரணத்தினால் அன்றிருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு முன்பு இருந்த மாதிரியான குறுக்கீடுகள் இல்லை என்பதைக் கூற தொழிலாளி வர்க்கம் என்னை இங்கே அனுப்பியிருக்கிறது என்று கூடச் சொல்வேன். இன்று தொழிலாளர்கள் அனைவரும் அத்தகைய குறுக்கீடுகள் இல்லை என்ற மன நிம்மதியோடு இருக்கிறார்கள்.

சுகாதாரத்தைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்கிற இடங்களில் அவர்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கு மதிய உணவு என்பது மிகவும் அவசியம். இன்றைய தினம் பெரிய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் உணவு வசதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நடைமுறையில் இருந்து வந்த அந்த உணவு வசதியை இன்றைக்கு சில கம்பெனிகளில் பறித்திருக்கிறார்கள்.

40 பைசா மதிய உணவுக்காக தொழிலாளர்கள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு சப்சிடியாக அவர்கள் சில காசுகளை கொடுத்தாக வேண்டும். சப்சிடீஸ் கொடுப்பது அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு விலைவாசி உயருகின்ற காரணத்தினாலே அவர்கள் மதிய உணவிலே தயிர் போன்றவற்றை குறைத்து விடுகிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலே கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நிர்வாகமாக இருந்தால், மதிய உணவிற்காக சப்சிடி கொடுக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு குறைவான தொழிலாளர்களை உடைய சிறிய நிர்வாகமாய் இருந்தால், அதாவது 20 அல்லது 30 அல்லது 50 தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களாக இருந்தால், அங்கே உணவு வகைக்கான கான்டீன் வசதி செய்வது கிடையாது. தவிர, குறிப்பாக சொல்லவேண்டுமானால், சிறு தொழிற்சாலைகளிலே சம்பளம் குறைவாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இதையும் மனதிலே வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் வாங்குகின்ற சம்பளம் குறைவு அவர்களுக்கு மதிய உணவு கிடையாது. எத்தகைய கான்டீன் வசதியும் கிடையாது. ஆகவே, இந்தத் தொழிலாளர்கள்



வெளியே சென்று, அதிகமான பணத்தைக் கொடுத்து சாப்பிட வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு நிச்சயமாக இத்தகைய சிறு கம்பெனிகளும் கான்டீன் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு இந்த வசதி செய்து கொடுப்பது முக்கியம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தொழிலாளர்கள் தங்களுடைய போராட்டத்தை முன்வைத்து, அதற்குப் பின்னால் 2 ஏ செக்ஷன்படி பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. அப்படிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றபோது அது தோல்வியும் ஆகலாம், வெற்றியும் பெறலாம். அதற்குப் பிறகு ரெபரென்ஸ் என்று ஒன்றிருக்கிறது. அந்த ரெபரென்ஸ் கொடுக்கும்போது இந்த அரசு நிச்சயமாக எந்தவிதமான கருத்து வேற்றுமையும் இல்லாமல் கொடுக்கின்றது என்பதால் இந்த நேரத்தில் இந்த அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குப் பின்னர் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றபோது, போராட்டம் வருகின்றது. இந்தப் போராட்டம் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே எப்படி ஏற்படுகின்றது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒருசிறு பிரச்னை ஏற்பட்டாலும்கூட, அதாவது ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டால், 2 பைசா அதிகமாக கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தால், இந்த இரண்டு பைசா கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக முதலாளி தொழிற்சங்கச் செயலாளரை வேலை நீக்கம் செய்கிறார். அதற்குப் பின்னால் தொழிலாளர்கள் வேகத்தின் காரணமாக வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அந்த வேலை நிறுத்தம் முறியடிக்கின்றபோது, அவர்கள் போராட்டத்திலே ஈடுபடுகிறார்கள். இதை உன்னிப்பாக கவனிக்கவேண்டும். இப்படி அவர்கள் போராட்டத்திலே ஈடுபடும்போது, நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுகின்றது. தொழிலாளர்கள் தங்களுடைய தேவையைக் கேட்கின்றபோது, அவர்களை அழைத்து பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு அவர்கள் 2 பைசா கேட்கிறார்கள் என்பதற்காக, அவர்களை வேலை நிறுத்தத்திலேயும், போராட்டத்திலேயும் ஈடுபடும்படி செய்து, அதன் காரணமாக நாட்டிற்கும் நட்டம், உற்பத்தியும் குறைகின்றது, இதைத்தான் முதலாளிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முதலாளிகள் ஏன் இம் மாதிரியெல்லாம் செய்கின்றார்கள் என்பதைப் பார்க்கின்றபோது அவர்களுடைய நோக்கம் எல்லாம் அங்கே இருக்கக்கூடிய தொழிற்சங்க வாதிகளை அடக்கவேண்டும் என்பதுதான். எனக்கு முன்னாலே பேசியவர்கள் கூட சொன்னார்கள், அவர்களுடைய அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே அவர்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டு, இந்த தொழிலாளர்கள் பிரச்னையிலே இன்றைக்கு எந்தவிதமான போராட்டங்கள் ஏற்

பட்டாலும், அதற்கு இந்த அரசு இன்றைய தினம் ஓரளவு பாது காப்பாக இருக்கிறது என்பதை நான் அறிவேன். அதற்காக அமைச்சர் அவர்களையும், இந்த மாமன்ற அவையையும், அதைச் சார்ந்த அண்ணா தி.மு.கழகத்தையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக தொழிலாளர்கள் நலனைப்பற்றி குறிப்பிடவேண்டு மானால், நாட்டுப்புறங்களிலே விவசாய பெருங்குடி மக்கள் அன்றாட கூலி வேலை செய்து அவர்கள் தினந்தோறும் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாாகள், அப்படி விவசாயத்திலே கூலி வேலை செய்யக்கூடியவர்களுக்கு 4,5 மாதங்கள்தான் வேலை இருக்கும், இதற்குப் பின்னர் அவர்கள் தொழில் இல்லாத காரணத்தினால், வேறு தொழில்கள் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று உந்தப்படுகிறார்கள். அதை இந்த அரசு கண் ணோட்டத்தில் கொண்டு, இம்மாதிரியான தொழிலாளர்களுக்கு நல்வகையிலே திட்டத்தைக் கொண்டு வர இருக்கின்ற இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதோடு மட்டுமல்லாமல், உப்பளம் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே அத்திப்பட்டு கிராமத் திற்கு பக்கத்தில் உப்பளம் இருக்கிறது. இந்தத் தொழிலிலே தொழிலாளர்களுக்கு 6 மாத காலத்திற்குத்தான் வேலை இருக் கிறது. உப்பு உற்பத்தி, மழைக் காலத்திலே செய்ய இயலாது.

[முற்பகல் 11-30]

அதை வெயில் காலத்தில்தான் செய்ய இயலும். அந்த ஆறு மாத காலத்திற்கு உப்பளத் தொழிலாளர்கள் உப்பு உற் பத்தி செய்யும்போது வேலை செய்கிறார்கள், அதற்குப் பின்னால் அவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் வேலை செய்கிற காலத்தில் அவர்கள் செய்கிற வேலை வருத்தப்படக்கூடியதாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர்கள் எட்டு மரக்கால் என்று சொல்லப் படுகிற 64 படி கொள்ளுகின்ற மூட்டையை முதுகில் எடுத்து படகுகளில் ஏற்றுகிற வேலையைச் செய்கிறார்கள். இதனால் அந்த மக்களின் உடல்நலம் பாதிக்கும் நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் செய்கின்ற வேலைக்கு பாதுகாப்பும் இல்லை. அவர் களுக்கு இ.எஸ்.ஐ. வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வேலை இல்லாத ஆறு மாதங்களில் சிறு தொழில்கள் மூலம் ஏதாவது தொழில் செய்ய அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று தாழ்மையுடன் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வருகிறது. ஒரு தொழிலாளிக்கு வேலை கிடைத்து அவன் தொழிலகத்திற்குச் சென்று வேலை செய்வானானால், சில முதலாளிகள் அவர்களுக்கு அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் என்று வைத்து அதைச் சரியாக குறிக்காமல் சம்பளத்தை மட்டும்



கொடுத்து விடுகிறார்கள். ஏனென்றால் 240 நாட்கள் ஒரு தொழிலாளி வேலை செய்திருந்தால் தொடர்ச்சியாக, அந்தத் தொழிலாளியை நிரந்தரப்படுத்த வேண்டும். அதன் காரணமாக அவர்கள் அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் முறையாக பதிவு செய்வ தில்லை. 240 நாட்கள் ஆன பிறகும் நிச்சயமாக அவர்களை நிரந்தரப்படுத்துவது கிடையாது. சில தொழிலகங்கள் நிரந்தரப் படுத்தியிருக்கலாம். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் பல நிறு வனங்களில் செய்வதில்லை. அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் தாக்கீது அனுப்பியிருந்தும் நிரந்தரப்படுத்த முன்வரவில்லை. அவர்கள் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று அடிப்படைச் சட்டத்தில் இருந்தாலும் அதை மீறும் அளவுக்கு நடந்து கொள்ளுகிறார்கள் என்பதை நன்றாக அறிவோம். அதற்கு தேவையான மாற்றுச்சட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று தாழ்மையான வேண்டுகோளை உங்கள் முன்னால் வைத்து விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>*திரு. என். ஏ. பூங்காவனம்</u>: பேரன்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த காட்பாடி தொகுதி வாக்களித்த பெருமக்களுக்கு பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980-81ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலத்துறை சம்பந்த மான விளக்கக் குறிப்பில் முதல் பக்கத்திலேயே அமைச்சர் அவர்கள் வெகு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ''தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முயற்சியில் நிருவாகத் தினரும், தொழிற்சங்கங்களும் நல்கிய ஒத்துழைப்புக்கு அரசு தம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது'' என்று சொல்லியிருக்கிறார்கள். நானும் அதனை வரவேற்று அது சம்பந்தமாக சில கருத்துக்களை சொல்லப் பிரியப்படுகிறேன்.

தொழிற் தகராறு ஏற்படுகிறபோது வேலை நிறுத்தம் என்று சொன்னால் வேலை நிறுத்தம் தொடங்கி முடிகிற காலம் ஆறு மாத காலத்திற்குள்ளே இருக்கவேண்டும். தொழிலாளியை வெளியேற்றிவிட்டால் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னால் ஆறு மாதத்திற்குள் இருக்கவேண்டும்.

ஸ்க்ரீனிங் கமிட்டி பற்றி முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் தொழிற் துறையைப் பொறுத்தவரை அரசுத்துறை, தனியார் துறை என்ற இரண்டு துறைகள் இருக்கின்றன. தனியார் துறை விஷயங்கள் அனைத்தும் நேராக அரசாங்க சட்ட இலாகாவுக்கு வந்து கோர்ட்டுக்குச் செல்லுகிறது: அரசுத்துறைகள் சம்பந்தப் பட்ட வரையில் ஸ்கிரீனிங் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டிக்கு வருகிறது. அதிலே யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால் உள்ளபடியே வருத்தப்படக் கூடிய விஷயமாக இருக்கிறது.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை]

அரசுத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளைத்தான் அந்தக் கமிட்டியிலே போடுகிறார்கள். யார் நடவடிக்கை எடுத்தார்களோ அதே அதிகாரிகள் தான் அந்தக் கமிட்டியிலே இருக்கிறார்கள் என்றால் எப்படி நீதி கிடைக்கும்? நான் கேட்கிறேன், ஒரு கொலையாளி நீதிபதியாக அமர்ந்தால் எப்படி நீதி கிடைக்கும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதை கடுமையாக எதிர்த்தார்கள். அப்படி எதிர்த்தவரே இன்றைக்கு அமைச்சர் பொறுப்பிலே இருக்கிறார். ஆகவே நாளையே அந்த கமிட்டி இல்லை என்ற அறிவிப்பை செய்வார்களானால் எல்லோரும் வரவேற்பார்கள் என்பது மட்டுமல்ல, பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழில் தகராறுகளிலே போலீசார் தலையிடுகிற சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வேண்டியதனைத்தும் செய்வோம் என்று அறிவித்து இருந்தும் கூட போலீஸார் தலையிடுவதும் வேலைநிறுத்தங்களை உடைப்பதும் சாதாரணமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், டி.ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத்தில் வேலை நிறுத்தம் நடந்தபோது முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைத் தந்தார்கள். எல்லா வழக்குகளும் வாபஸ் வாங்கப்படும் என்ற வாக்குறுதியைத் தந்தார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள், ஆனால் இன்றைக்குக்கூட வாபஸ் பெறப்படவில்லை, ஆகவே அவைகளையெல்லாம் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, புதிதாக சங்கங்கள் எங்கே உருவாகின்றனவோ எங்கே அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்களோ அங்கேயெல்லாம் முதலாளிகள் கருங்காலிகளை வைத்து, வேண்டியவர்களை வைத்து அதை உடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் இருக்கிறது, அந்த ஓட்டலுக்குச் சொந்தக்காரர் மைசூர்க்காரர். மைசூர் மகாராஜா நடத்துகிற அந்த ஓட்டல் தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யு.சி.யில் சேர்ந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அந்த ஓட்டலை குளோஸ் பண்ணிவிட்டார்கள். மூடியபிறகு இப்போது அந்த ஓட்டலின் முன்னால் கோஷம் போட முடியவில்லை. கோரிக்கைகளைச் சொல்ல முடியவில்லை, போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னாலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொன்னாலும் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. போலீஸ் தலையிடுகிற காரணத்தினால் ஓட்டல் சொந்தக்



காரர்கள் மூடிவிடுகிற நிலைமை இருக்கிறது. அவர்களுக்குச் சாதகமாக போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதன் விளைவாக இந்த அரசாங்கத்திற்குத் தான் கெட்டபெயர் ஏற்படுகிறது. அதைப்போலவே உருளைக்கிழங்கு பண்ணை இருக்கிறது. அங்கேயும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்மையிலேயே 29,30 தேதிகளில் வட ஆற்காடு மாவட்டத்திலே மோட்டார் தொழிலாளர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். போராட்டம் நடைபெற்றபொழுது போலீஸார் கடுமையாகத் தலையிட்டு அதிலே ஈடுபட்ட தொழிலாளர்களைக் கைது செய்தார்கள். அதைப்பற்றி அரசினிடத்திலே சொல்லி, இந்த மாதம் 7 ஆம் தேதி விசாரணை என்று சொன்னார்கள், நடந்ததாகத் தெரியவில்லை, அவர்கள் வேலூரிலே நடக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் புதிதாகப் போராட்டம் நடத்தவில்லை, புதிய கோரிக்கைகளை வைக்கவில்லை, ஏற்கனவே பேசி முதலாளியோடு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது, ஒப்புக்கொண்ட அந்த ஒப்பந்தத்தை அமல் நடத்தவேண்டுமென்ற முறையிலே மீண்டும் போராட்டம் நடைபெறுகிறது. அதிலேயும் போலீஸார் தலையிட்டு 44 தொழிலாளர்களை உள்ளே வைத்திருக்கிறார்கள். இதையும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, பொதுவாக இப்போது கமிட்டிகள் அமைக்கப்படுகின்றன. பல்வேறு தரப்பினரும் அந்தக் கமிட்டியிலே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்ற முறையிலே ஒரு கமிட்டியைப் போட்டார்கள். சில முறைகள் கூடியிருக்கிறது அது. அதிலே என்ன செய்திருக்கிறார்கள், என்ன என்ன கருத்துக்களை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

[முற்பகல் 11-40]

அரசுத் துறையிலே உள்ள நம்முடைய கார்ப்பரேஷன்கள் மூலம் பஸ்கள் மற்றும் சில நிறுவனங்களை நடத்தி வருகிறோம். அவர்கள் சம்பந்தமாக ஏற்கனவே ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அது 30-8-80-லே முடிவடையும். எனவே, அரசு முன்கூட்டியே அவர்களை அழைத்துப் பேசித் தீர்வு காணவேண்டும். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், முன்பு அரசுத் துறைத் தொழிலாளர்கள் போராடினார்கள்—போக்குவரத்துத் துறையில், நம்முடைய மாநிலம் சம்பந்தப்பட்டவரையில் சொல்கிறேன். அது சம்பந்தமாக ஏற்கனவே ஏற்பட்ட உடன்பாடு 30-8-80-இல் முடி

வடைகிறது. முன்னால் தகராறுகள் வந்து வேலை நிறுத்தம்
வந்து கைது செய்யப்பட்டு எங்கள் ஊர் சிறைக்குக் கொண்டு
வந்தார்கள. அது 30-8-80-இல் முடிவடைகிறது. எனவே,
முன்கூட்டியே அழைத்துப்பேசி நல்ல முடிவை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அறிவிக்கும்பொழுது
முன்புபோல் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். முன்பு
எப்படி அறிவிக்கப்பட்டது என்றால், சம்பந்தப்பட்ட
சங்கத்தோடு கலந்து பேசி அறிவிப்பதற்குப் பதிலாக, சங்கத்
திற்கும் முடிவுக்கும் சம்பந்தமில்லாமல், அறிவிப்புக்கும் தொழி
லாளர்களுக்கும் சம்பந்தம் இல்லாத நிலை இருந்தது. இப்
பொழுது அந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இரு சாராரையும் கூட்டிப்பேசி நல்ல
நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோன்று போனஸ் நிலைமையிலும் நல்ல முடிவு
எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் மாநிலம் முழுவதும்
இருக்கிறார்கள். அவர்களுக்குச் சில சலுகைகள் தந்து அதற்காக
ஜீ. ஓ. போட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த நகராட்சியிலும்,
எந்த ஊராட்சி ஒன்றியத்திலும், அல்லது பேரூராட்சி மன்றத்
திலும் அல்லது சிறிய பஞ்சாயத்திலும் அந்த ஜி. ஓ. அமல்
படுத்தப்படவில்லை. சட்டத்திலே சலுகைகள் இருக்கின்றனவே
தவிர, அதன் பலன் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்ப
தில்லை, அது கிடைப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கை
களையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் பல நெருக்கடிகளிலே இருக்
கிறார்கள். அதைப் போக்குவதற்கும் ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி எனக்குப் பின்னால்
பேசப்போகின்றவர்கள் கூறுவார்கள் என்று கருதுகிறேன்.

மின்சாரத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால்,
ஆங்காங்கே லைட் எரியவில்லை என்ற பெரிய பிராப்ளம்
இருந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி எல்லா நண்பர்களும்
சொல்கிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் என்ன
வென்றால், என்னுடைய வேலூரில் ஒரு சம்பவத்தைச் சொல்
கிறேன். இதைச் சொல்வதால் தனியார் துறையை நான்
விரும்புபவன் என்பது பொருள் அல்ல. பொதுத்துறைதான்
வேண்டும். வேலூரில் தனியார் துறையில் இருந்த பொழுது ஒரு
தெருவில் லைட் எரியவில்லை என்று வீட்டிலேயிருந்துகொண்டு
போன் செய்தால் போதும், மறுநாளே லைட் எரியும். ஆனால்
அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு ஒழுங்காக இயங்கவில்லை.



இதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பு அல்ல. உடனடியாக அப்படித் திருப்புவது சரியல்ல. தனியார் துறையில் அப்படி வேலை செய்தால் அதற்குத் தனியாக ஊதியம் கொடுக்கிறார்கள். நம்முடைய பொதுத் துறை, அதையெல்லாம் குறைத்து, அந்தத் தொழிலாளர்களைப் பற்றிக் கேள்விமுறை இல்லாத நிலைமை ஏற்பட்டது. தொழிலாளர்களைப் பற்றிச் சிந்திக்காத நிலை எடுக்கப்பட்டு விட்டது. அதனால் லைட் எரியவில்லை. எனவே, அந்த ஊழியர்களைக் கவனிக்க வேண்டும், அதன்மூலம் பொதுமக்களுக்கு லைட் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா காட்டன் மில்ஸ் இருக்கிறது. அதிலே முழுமையாக ஸ்ட்ரைக்-வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அதிலே தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருந்து, ஒன்றுபட்ட உணர்வோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சிலர், முதலாளியின் நலனில் அக்கறை கொண்டவர்கள் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு உதவி செய்ய முயற்சிக்கிறார்கள். இதை அரசு உணர்ந்து தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் சில கருத்துகளைச் சொல்லி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதி வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள காட்பாடி தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே கே. வி. குப்பம் என்ற பகுதி இருக்கிறது. அதைப் பார்த்தால் இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்தது உண்மையா என்ற ஐயப்பாடு தோன்றும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், அந்தக் கிராமத்தில் பாதை வசதி கிடையாது, குடிநீர் வசதி கிடையாது, வைத்திய வசதி கிடையாது, லைட் வசதி கிடையாது, இபபடிப்பட்ட நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.பெ.சு.திருவேங்கடம்):— மாண்புமிகு உறுப்பினரவர்கள் சம்பந்தப்பட்ட மானியத்திலே மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் ; அங்கே விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. மாமன்றத்திலுள்ள உறுப்பினர்களும், அமைச்சரவர்களும், குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பார்க்க வேண்டும். அப்பொழுது அது நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தொகுதிதானா என்ற நிலை ஏற்படும். எனவே, அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

வடைகிறது. முன்னால் தகராறுகள் வந்து வேலை நிறுத்தம் வந்து கைது செய்யப்பட்டு எங்கள் ஊர் சிறைக்குக் கொண்டு வந்தார்கள. அது 30-8-80—இல் முடிவடைகிறது. எனவே, முன்கூட்டியே அழைத்துப்பேசி நல்ல முடிவை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அறிவிக்கும்பொழுது முன்புபோல் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எப்படி அறிவ்க்கப்பட்டது என்றால், முன்பு சங்கத்தோடு கலந்து பேசி அறிவிப்பதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட திற்கும் முடிவுக்கும் சம்பந்தமில்லாமல், அறிவிப்புக்கும் சங்கத் லாளர்களுக்கும் சம்பந்தம் இல்லாத நிலை இருந்தது. தொழி பொழுது அந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரு சாராரையும் கூட்டிப்பேசி நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று போனஸ் நிலைமையிலும் நல்ல முடிவு எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள் மாநிலம் முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சில சலுகைகள் தந்து அதற்காக ஜீ. ஓ. போட்டிருக்கிறார்கள். ஆனால் எந்த நகராட்சியிலும், எந்த ஊராட்சி ஒன்றியத்திலும், அல்லது பேரூராட்சி மன்றத் திலும் அல்லது சிறிய பஞ்சாயத்திலும் அந்த ஜீ. ஓ. அமல் படுத்தப்படவில்லை. சட்டத்திலே சலுகைகள் இருக்கின்றனவே தவிர, அதன் பலன் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்ப தில்லை, அது கிடைப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கை களையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் பல நெருக்கடிகளிலே இருக் கிறார்கள். அதைப் போக்குவதற்கும் ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி எனக்குப் பின்னால் பேசப்போகின்றவர்கள் கூறுவார்கள் என்று கருதுகிறேன்.

மின்சாரத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், ஆங்காங்கே லைட் எரியவில்லை என்ற பெரிய பிராப்ளம் இருந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி எல்லா நண்பர்களும் சொல்கிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் என்ன வென்றால், என்னுடைய வேலூரில் ஒரு சம்பவத்தைச் சொல் கிறேன். இதைச் சொல்வதால் தனியார் துறையை நான் விரும்புபவன் என்பது பொருள் அல்ல. பொதுத்துறைதான் வேண்டும். வேலூரில் தனியார் துறையில் இருந்த பொழுது ஒரு தெருவில் லைட் எரியவில்லை என்று வீட்டிலேயிருந்து ஒரு போன் செய்தால் போதும், மறுநாளே லைட் எரியும். ஆனால் அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு ஒழுங்காக இயங்கவில்லை.



இதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பு அல்ல. உடனடியாக அப்படித் திருப்புவது சரியல்ல. தனியார் துறையில் அப்படி வேலை செய்தால் அதற்குத் தனியாக ஊதியம் கொடுக்கிறார்கள். நம்முடைய பொதுத் துறை, அதையெல்லாம் குறைத்து, அந்தத் தொழிலாளர்களைப் பற்றிக் கேள்விமுறை இல்லாத நிலைமை ஏற்பட்டது. தொழிலாளர்களைப் பற்றிச் சிந்திக்காத நிலை எடுக்கப்பட்டு விட்டது. அதனால் லைட் எரியவில்லை. எனவே, அந்த ஊழியர்களைக் கவனிக்க வேண்டும், அதன்மூலம் பொதுமக்களுக்கு லைட் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா காட்டன் மில்ஸ் இருக்கிறது. அதிலே முழுமையாக ஸ்ட்ரைக்-வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. அதிலே தொழி லாளர்கள் ஒற்றுமையாக இருந்து, ஒன்றுபட்ட உணர்வோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே சிலர், முதலாளியின் நலனில் அக்கறை கொண்டவர்கள் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கு உதவி செய்ய முயற்சிக்கிறார்கள். இதை அரசு உணர்ந்து தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் சில கருத்துகளைச் சொல்லி முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதி வடார்க்காடு மாவட்டத்திலே உள்ள காட்பாடி தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே கே. வி. குப்பம் என்ற பகுதி இருக்கிறது. அதைப் பார்த்தால் இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்தது உண்மையா என்ற ஐயப்பாடு தோன்றும். உதாரணத்திற்குச் சொல்கிறேன், அந்தக் கிராமத்தில் பாதை வசதி கிடையாது, குடிநீர் வசதி கிடையாது, வைத்திய வசதி கிடையாது, லைட் வசதி கிடையாது, இபபடிப்பட்ட நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.பெ.சு.திருவேங்கடம்):— மாண்புமிகு உறுப்பினரவர்கள் சம்பந்தப்பட்ட மானியத்திலே மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: அங்கே விவசாயத் தொழி லாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. மாமன்றத்திலுள்ள உறுப் பினர்களும், அமைச்சரவர்களும், குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பார்க்க வேண்டும். அப்பொழுது அது நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தொகுதிதானா என்ற நிலை ஏற்படும். எனவே, அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கை களையும் எடுக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன் : மாண்புமிகு மாமன்றத்தின் தற்காலிகத் தலைவரவர்களே, இன்றைய தொழிலாளர் மானியக் கோரிக்கையின் பேரிலும், குடிசை மாற்று வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் பேரிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தலைவருக்கு நன்றிகலந்த வணக்கத்தை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே தொழிலாளர்கள் நலம் பற்றிய மானியக் கோரிக்கையின் பேரில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற விவாதத்திலே மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எல்லாம், இங்கே புரட்சித் தலைவருடைய அரசு, தொழிலாளர் வர்க்கத்திற்குப் பெரிய துரோகத்தைச் செய்திருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், அது தரக் குறைவான ஒரு அரசியலை நடத்திக் கொண்டிருக்கிற அரசு என்று குறிப்பிட்டார்கள். அந்த மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மாமியார் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி என்ற கிராமப் பழமொழி போல் நீங்கள் இந்த மாமன்றத்திலே பேசுகிறீர்களே தவிர, நியாயப் பூர்வமான உண்மைகளை ஏற்றுக்கொள்வதற்கு முன்வரவில்லை என்ற அருமையான கருத்தை இங்கே உங்கள் மத்தியிலே வைக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய காங்கிரஸ் கட்சித் தோழர்கள் எல்லாம், அந்த இயக்கத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் புரட்சித் தலைவருடைய அரசு கடந்த 2½ ஆண்டுக் காலத்திலே தொழிலாளர்களுக்குப் பெரிய துரோகமான நடவடிக்கையைச் செய்தது என்று கோடிட்டுக் காண்பித்தார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன், இரண்டரை ஆண்டுக் காலத்திலே புரட்சித் தலைவருடைய அரசு பொறுப் பேற்ற பிறகு, தொழிலாளர் நலத் துறைக்கு அமைச்சராக அருமை அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்த 3 ஆண்டுக் காலத்திலே இடைக்காலத்திலே இருந்த 4 மாதங்கள் போக, மற்ற காலங்களிலே, தமிழ் நாட்டிலே தொழிலாளர்கள் அரசு அலுவலகத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள், இந்த நாட்டிலே எவ்வளவு பெரிய கோரிக்கையை முன் வைத் தார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் நிச்சயமாக மறந்துவிட முடியாது. அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முதற் கட்டமாக ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், இந்த நாட்டிலே மிகப் பெரிய போராட்டம் எதிர்க் கட்சியினரால் தூண்டிவிடப்பட்டதை இந்த நாட்டு மக்கள் மறந்துவிட மாட்டார்கள், இங்கேயிருக்கிற மாமன்றத்து உறுப்பினர்களும் நிச்சயமாக மறந்துவிட மாட்டார் கள். ஆனால், ஆரம்ப கட்டத்திலே இந்த அரசை எப்படியாவது



உடைக்க வேண்டுமென்று கருதி, 7½ ஆண்டுக் காலம் ஆட்சி நடத்தியவர்கள் தாங்கள் என்ன செய்திருக்கிறோம், இந்தத் தொழிலாளர் வர்க்கத்திற்கு, இந்த அரசு ஊழியர்களுக்கு என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் ஆரம்பித்த புரட்சித் தலைவருடைய அரசை, ஆரம்பத்திலே உடைக்கத் திட்டம் தீட்டி, போராட்டம், நடத்தியதை நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே, புரட்சித் தலைவருடைய தலைமையிலே நடந்து கொண்டிருக்கிற இந்த ஆட்சியின் போது, இந்த நாட்டிலேயிருக்கிற அரசு ஊழியர்கள் முதல், அத்துணை தொழிலாளர் வர்க்கமும் நடத்திய போராட்டங்களைக் குறிப்பிட வேண்டுமானால் எனக்குக் கொடுத்திருக்கின்ற நேரம் போதாது. அரசு அலுவலகத்திலே பணியாற்றுகின்ற அரசு ஊழியர்கள் முதல், தனிப்பட்ட நிறுவனங் களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வரை, அத்துணை பேரும் இந்த நாட்டிலே ஆரம்பிக்காத போராட்டமே கிடை யாது. அந்தப் போராட்டங்களை எல்லாம் உரிமையோடு நடத்துவதற்கு இப்பொழுது அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிற தென்றால் 1960-வது ஆண்டுக்குப் பின்னாலே, 1976-வது ஆண்டுக்கு முன்னாலே, இந்த நாட்டிலே அந்தத் தொழிலாளி வர்க்கத்தினுடைய உரிமைகள் எந்த அளவு அடக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டுஇருக்கின்றன என்பதை அந்தக் காலகட்டங் களிலே நடந்த போராட்டங்கள் நிச்சயமாக வரிசைப்படுத்திச் சொல்கின்றன. ஆரம்பித்த உடனே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்க்கின்ற வகையி லேயும், மாற்றுக் கட்சிக்காரர்கள் பிரச்னைகளைச் சொல்கின்ற வகையிலேயும் நடத்தப்பட்ட போராட்டங்கள் 250-க்கும் மேலே என்று கணக்குகள் இருக்கின்றன.

[முற்பகல் 11-50]

அத்தனை போராட்டங்களையும் புரட்சித் தலைவர் அவர்கள் மனமாற ஏற்று நியாயபூர்வமான கோரிக்கையை, நியாயபூர்வ மான தொழிலாளர் வர்க்கத்தினுடைய கோரிக்கையை, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல தொழிலாளர்கள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு, விவசாயத் தொழிலாளர்கள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொன்னார்களே அவை கள் அத்தனையும் இந்த நேரத்திலே ஏற்றுக்கொண்ட பெருமை உண்மையாகவே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற புரட்சித் தலைவர் அவர்களேயே சாரும். அப்படி ஏற்றுக்கொண்ட அடிப்படையிலேதான் எத்தனையோ போராட்டங்களை, எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கோரிக்கையை வைத்த நேரத்திலே, அவர்களை அணைத்து, அரவணைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்தக் காலகட்டத்திலே எந்த அளவுக்கு இந்த அரசு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நிறைவு செய்து இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு மரியாதைக்குரிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் தங்கமணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தமிழ்நாட்டிலே அடிமைகளாக இருக்கிறார்கள். காண்ட்ராக்ட் என்ற பெயராலே தொழிலாளர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள். அதை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படவேண்டும் என்ற அந்தக் கொள்கையை நிச்சயமாக எங்கள் அரசு ஏற்றுக்கொள்ளும், மறுக்காது. ஆனால் அந்த காண்ட்ராக்ட் என்ற முறை எங்கே உருவாகி இருக்கிறது. அது யாருடைய முழு வடிவிலே இருக்கிறது, எங்கே நீக்கப்பட்டால், எந்த இடத்திலே நீக்கப்பட்டால், தமிழ்நாட்டிலே அமுல்படுத்த முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது, இந்த காண்ட்ராக்ட் என்பது மத்திய அரசிலே இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற உங்களுடைய ஆட்சி நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதை ஒழித்து, அதிலே இருந்து விதிவிலக்கு அளித்து சட்டத்தை உருவாக்கினால் நிச்சயமாக அந்த காண்ட்ராக்ட் முறையை ஒழிப்பதற்கு எல்லா மாநில அரசுகளும் முன்வரும். அதை மறந்துவிட்டு தமிழ் நாட்டிலே மட்டும் காண்ட்ராக்ட் இருக்கிறது, அதனால் தொழி லாளர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள் என்று கோடிட்டுக் காண்பது தனக்கு என்றிருக்கிற பெருமையை தன்னுடைய கட்சிக்கு என்றிருக்கிற பெருமையை நிச்சயமாக தேடித்தர முடியாது. காண்ட்ராக்ட் என்ற முறை இந்தியா லெவலிலே ஒழிக்கப்பட்டால் ஒழிய, அதை ஒழிக்க முடியாது என்ற அளவு விதிகள் சட்டத்திலே இருக்கின்றன.

தொழிலாளர்களை காண்ட்ராக்ட் முறையில் இருந்து நீக்க வேண்டும் என்று சொல்வோமேயானால், அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுப்போமேயானால் அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள். அவர்கள் கோர்ட்டுக்குப் போனால் தொழிலாளர் கள் சார்பிலே போகின்றவர்கள் தோல்வி அடையும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நான் அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், உங்களுடைய கட்சி மத்தியிலே ஆளுகின்றது. அங்கே உள்ள உங்கள் கட்சி உறுப்பி னர்களைக் கொண்டு பாராளுமன்றத்திலே காண்ட்ராக்ட் முறையை ஒழிக்கின்ற சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் மிகப் பெரிய தொழிற் சாலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்தத் தொகுதியிலே எவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதை நான் என்னுடைய முதல் கன்னிப் பேச்சின்போது கூறியிருக்கிறேன். அங்கே பாய்லர் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, சிறு தொழிற் கூடங்கள் 200, சிட்கோ, இதுபோன்ற பல நிறு



வனங்கள் அங்கே அமையப் பெற்ற தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே 2½ ஆண்டு ஆட்சி நடத்திய புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் தொழிலாளர்கள் கோரிக்கையை மாண்புமிகு மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும். அனைத்திந்திய அண்ணா தி. மு. க. தோழர்களும் பிரசுரித்து, முன்வைத்து, பேசியது என்பதை நிச்சயமாக மறந்துவிடக் கூடாது. 7½ ஆண்டுக் காலத்தில், உங்கள் காலத்திலே அதாவது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சியாக இருக்கிற தி. மு. க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலேதான் அந்தச் சிறு தொழிற் கூடங்கள் எல்லாம் நிறுவப்பட்டன. யாருக்கு நிறுவப்பட்டது? இன்றைக்கு தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசுவதை வரவேற்கிறேன். ஆனால் அங்கே இருக்கின்ற அத்தனை சிறு தொழில் நிறுவனங் களும், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கி அதை வைத்துள்ளனர். உங்கள் இயக்கத்தினர்தான் அதில் அதிகம் இடம் பெற்று இருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தருவதற்கு மட்டும் உங்கள் ஆட்சி காலத்தில் அக்கறை காட்டி யிருக்கிறீர்கள். ஆனால் அந்த நிறுவனத்தில் பணியாற்றும் அந்தத் தொழிலாளிக்கு உங்களுடைய 7½ ஆண்டுக்கால ஆட்சியில் அக்கறை காட்டியிருக்கிறீர்களா? அப்படி அக்கறை காட்டினீர்கள் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் காட்ட முடியுமா? தொழிலாளர் களுக்கு நீங்கள் செய்து இருக்கக்கூடிய துரோகத்தை நான் நேரடியாகப் பார்த்து இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் ஆட்சியை நடத்தியிருக்கிறீர்கள்.

புரட்சித் தலைவரின் இந்த ½ ஆண்டு காலத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் முயற்சியால் ஈ. எஸ். ஐ. திட்டம் அமல்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட புரட்சித் தலைவர் ஆட்சியைத்தான் நீங்கள் இன்றைக்குக் குறை கூறிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு என்னென்ன வசதிகளை நிறைவேற்ற முடியுமோ அவற்றை நிறைவேற்றித் தந்து இருக்கிறது. எந்த அளவிற்கு பிரச்னைகளைப் பேசித் தீர்க்க முடியுமோ அந்த அளவிற்கு அதைத் தீர்வு கண்டு இருக்கிறது. இன்னமும் பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் காவிரி ஸ்ட்ரக்சுரல்ஸ் என்ற நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தில் தொழிலாளியாக இருக்கும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கடந்த 6,7 மாதங்களாக வெளியே நின்றுகொண்டு தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி அவர்களை அழைத்து இருக்கிறது. அதற்கு ஒரு முடிவு விரைவில் காணப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே அந்தப் பிரச்னை குறித்து பேசுவதற் கான நடவடிக்கை எடுக்கப்பட்டபோதுதான் ஆட்சி கலைக்கப்

பட்டது. பிறகு 4 மாத காலம் இங்கே ஆட்சியை நடத்தியவர்கள் மரியாதைக்குரிய இந்திராகாந்தி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். 4 மாத காலத்தில் நிச்சயமாக அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் இந்த 4 மாத இடைக்காலத்தில் அந்த முதலாளிகள் தொழிலாளர்களை ஒவ்வொருவராக ரிட்ரெஞ்ச் செய்துகொண்டு இருந்தார்கள். அதற்குப் பின்னால் இந்த ஆட்சி வந்த பிறகு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அவர்களைப் பேச அழைத்து அதற்கு ஒரு நல்ல தீர்வு காண இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் இந்த அரசு சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன், தொழிலாளர்கள் உரிமை எந்த நேரத்திலும் பாதுகாக்கப்படும், தொழிலாளர்கள் வாழ்க்கைவளம் பெறவும் வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும். எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள், அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த விதமான வசதியும் செய்து தரப்படவில்லை. புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர்களுக்கு ஒரு நல்ல காலம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டு, (மணியடிக்கப்பட்டது) தொழிலாளர் வர்க்கம் இந்த $2\frac{1}{2}$ ஆண்டு கால புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் நல்லமுறையில் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள்—$7\frac{1}{2}$ ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முடிவுறாத பல நன்மைகள் இந்த ஆட்சிக்காலத்தில் செய்து இருக்கிறார்கள் என்பதற்காகப் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி, தொழிலாளர்கள் நலத்துக்காகப் பாடுபடும் ஒரு ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவர் என்று கூறி இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்

[நண்பகல் 12-00]

*திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு அவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது நான் தொழிற் துறையிலே ஒதுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கமாக இருக்கும் ஒரு பகுதியினரைப் பற்றி 'அன் ஆர்கனைஸ்ட் செக்டாரை'ச் சேர்ந்த தொழிலாளர்கள் பிரச்சனைகளைப் பற்றி இந்த அவைமுன் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் முதலில் சொல்ல அவாவுறுகிறேன்.

இந்தத் தரத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நிரந்தரமான முதலாளியும் கிடையாது; அவர்களுக்கு நிரந்தரமான தொழில் செய்யக்கூடிய இடமும் கிடையாது. இதிலே பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.



பேஸ்மென்ட் வெட்டுபவர்கள், சுவர் எழுப்புபவர்கள், நிலை, ஜன்னல் அமைக்கக்கூடிய கார்பென்டர்கள், பெயின்டர்கள், கம்பி கட்டுபவர்கள், காங்கிரீட் செய்பவர்கள் இப்படி பல்வேறு பிரிவுகளாக இருக்கிறார்கள். இது ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையிலே 'ஸ்பெஷலைஸ்ட் ஜாப்' என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தொழில்களிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் பல்வேறு தொழில்களைச் செய்கின்றவர்கள், சிறந்த கட்டிடங்களை எழுப்பும் தொழிலாளர்கள் நிரந்தரமான தரித்திரர்களாக நிச்சயமற்ற வாழ்க்கையிலே இருக்கிறார்கள் என்பது நமது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு தெரியும். அவர்கள் இதே தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு காலத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் என்பதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சனையை என்னிலும் அதிகமாக உணர்ந்த அமைச்சரவர்கள் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று இந்த அவையிலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழிலாளர்களுக்கு இன்று மிகமிக முக்கியமான பிரச்சனையாக இருப்பது அவர்களுக்கு ஆபத்து காலத்திலே உதவுவது. ஒரு தொழிலாளி மூன்று அடுக்கு சாரத்திலே நின்று வேலை செய்யும்போது தவறி விழுந்து, கை, கால் ஊனமுற்றால் அவனுக்கு எந்தவிதமான நிவாரணமும் இன்றைக்கு இல்லை. உயிரிழந்தால் அவனுடைய குடும்பத்திற்கு நிவாரணம் கிடையாது. 50,000 ரூபாய் செலவிலே ஒருவர் வீடு கட்டுகிறார் என்றால், அப்படி வீடு கட்டுகிறவர் இன்றைக்கு நிவாரணம் கொடுக்கக் கூடிய சக்தியில் இல்லை. தொழிலாளர்களுக்காக மட்டும் நான் பசவில்லை; இங்கு வீடு கட்டக்கூடிய சிறிய, நடுத்தர வகுப்பினருக்காகவும் பேசுகிறேன். பல சம்பவங்கள் சென்னையிலும் இதர நகரங்களிலும் நடந்திருப்பதைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு தொழிலாளி இதைப் போன்று ஊனமுற்றால், கட்டிடத்திலிருந்து கீழே விழுந்து விட்டால் உடனடியாக அவனை டாக்சியிலே ஏற்றிக்கொண்டு, அருகாமையில் இருக்கிற மருத்துவமனையில் சேர்த்து விடுகிறார்கள். அப்படிச் சேர்ப்பவர்கள் கள்ளத்தனமாக அவனுடைய உறவினர் என்றோ, அண்ணன் என்றோ தம்பி என்றோ, சித்தப்பன் என்றோ சொல்லிவிட்டு தான் யார் என்று சரியான பெயரைச் சொல்லாமல் வந்துவிடுகிறார்கள். தன்னுடைய பெயரை அல்லது முகவரியை பதிவு செய்யாமலேயே அந்த உடலை அல்லது ஊனமுற்றவரை அங்கே விட்டு விட்டு வந்து விடுகிறார்கள். எந்த இடத்தில் இந்த விபத்து ஏற்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியக்கூடாது என்ற காரணத்தால் இப்படி விட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள்.

மீதரிந்தால், இன்றைக்கு இருக்கிற சட்டத்தின்படி அவர்கள்
து வழக்குத் தொடருவார்கள். தொழிலாளி வழக்குத்
ாதொடரும்போது சக்தியற்ற நிலையில் இருக்கிற வீடு கட்டுபவர்
தஅலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.
இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால் அவர்களுடைய
'ரிஸ்குக்கு' காவல் செய்கின்ற முறையிலே ஒரு சட்டம் நிச்சய
மாகத் தேவைப்படுகிறது. அந்தச் சட்டம் வந்தால்தான் அவர்
களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும். இதை எப்படி அமுல்
படுத்துவது என்பதிலே பல பிரச்சனைகள் வரக்கூடும். கழிந்த
சில ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய சர்க்கார் அவர்களுக்கு
ஒரு சட்டம் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால் அந்தச்
சட்டம் பரிசீலனையில் நின்றுவிட்டது என்பதை வருத்தத்தோடு
குறிப்பிட விரும்புகிறேன். அதிலே 20 தொழிலாளர்கள் ஒரு
கான்ட்ராக்டரிடம் வேலை செய்யக்கூடியதாக இருந்தால்
அவர்கள் இ. எஸ், ஐ. திட்டத்திலோ அல்லது ரிஸ்க் இன்சூரன்ஸ்
திட்டத்திலோ வரவேண்டுமென்று திட்டத்தை பரிசீலனை
செய்தார்கள். அந்த அடிப்படையை வைத்து அவர்களுக்கு
பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையிலே ஒருசில வழிமுறைகளை
இந்தச் சபை முன்னால் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு கட்டிடம் கட்டுவதற்கு முன்பு அதற்கு வரைபடம்
(பிளான்) தயார் செய்து, அதை அங்கீகாரம் செய்ய கார்ப்பரேஷன்
அல்லது நகரசபை அல்லது பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கப்
பட வேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுத்த எஸ்டிமேட்
அடிப்படையிலே அவர் ஒரு தொகை அங்கே கட்டினால் அதை
இந்த பாதுகாப்பு நிதிக்காக தொழிலாளர் சார்பாகவோ
அல்லது கட்டிடம் கட்டுபவர் சார்பாக பெற்று, அதற்கு ஈக்குவல்
ப்ரொப்போர்ஷனாக ஒரு தொகை இ. எஸ், ஐ.க்காக அரசாங்கம்
கொடுத்து அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு
நிதியை ஏற்படுத்தலாம். அல்லது தொழிலாளர்கள் நேரடியாக
லேபர் டிபார்ட்மென்ட் மூலம் ரெஜிஸ்டர் செய்து அந்த ரெஜிஸ்
டர் செய்த தொழிலாளர்கள் மட்டும் தான் கட்டிடம் கட்டும்
தொழிலைச் செய்யும் வாய்ப்பை எற்படுத்தும் நிபந்தனையைக்
கொண்டுவந்து, அந்தத் தொழிலாளர்கள் இ. எஸ். ஐ.
பங்குத் தொகை கட்டினால் அந்த அடிப்படையில்
தொழிலாளர்கள் பங்கையும் ஏற்று, சர்க்கார் பங்கையும்
ஏற்று, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி வரைபட
அடிப்படையிலே வீடு கட்டுபவர்கள் செலுத்தக்கூடிய பங்கையும்
பெற்று அதன் மூலமாக அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்
கலாம். இப்படி இந்த இரண்டு மூன்று முறைகளைப் பயன்படுத்தி
இவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று மிகவும்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





குவைத், அபார்பீன் முதலிய மத்திய கிழக்கு பகுதிகளிலும்
நம் மாநில தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். இந்தியாவில்
உள்ள பிற மாநிலங்களில் அலகாபாத், ஆமதாபாத், கான்பூர்
போன்ற நகரங்களில் குறிப்பாகப் புதுடெல்லியில் தமிழர்கள்
பலர் இத்துறையில் பணியாற்றுகிறார்கள். அங்கு இருக்கக்கூடிய
தொழிலாளிகள் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கின்றார்கள்.
முன்னோடியாக தமிழகத்திலேயாவது தொழிலாளிகளுக்கு தகுந்த
பாதுகாப்பும் உதவியும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதேபோன்று வெளி நாடுகளுக்குக் கட்டிட
தொழிலாளிகளை அனுப்புகின்றபோதும் நம் பங்கு தொழி
லாளர்களை தமிழகத்திலிருந்து அனுப்பக்கூடிய நிலை இருக்க
வேண்டும். இது வீடு கட்டக்கூடிய தொழிலாளர்கள் அவர்கள்
தங்குவதற்கு வீடின்றி நடுத்தெருவிலே, இன்றும், நாளையும்,
என்றென்றும் இருப்பதற்கு இடம இல்லாமல் அலைந்துகொண்டு
இருக்கிறார்கள். ஹவுசிங் போர்டையும் தன்னுடைய
பொறுப்பிலே ஏற்றிருக்கின்ற அமைச்சரவர்கள் இந்தக் கட்டிடத்
தொழிலாளிகளுக்கென்று 5 சதவீதம் வீடுகளாவது இவர்களுக்கு
ஒதுக்கி தரவேண்டும். அவ்வாறு இவர்களுக்கு இடம் ஒதுக்கி
வாழ்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று மிகப் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இவ்வாறு இருக்கின்ற கட்டிடத் தொழிலாளிகளைப்
பொறுத்தவரையில் அவர்கள் பல கேட்டகரியாக இருக்கிறார்
கள். அவர்களுக்கெல்லாம் கூலியை நிர்ணயம் செய்யவேண்டும்
அவர்களுக்கு காம்பென்ஸேஷன் கொடுக்கின்ற வகையில் சட்டம்
கொண்டு வரவேண்டும். சாப் சட்டம் பீடித் தொழிலாளர்,
சட்டம் போன்று இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கும் சட்டம்
கொண்டுவர வேண்டும். ஏனென்றால் இவர்களுக்கெல்லாம்
சரியான கூலி கிடைப்பதில்லை.

அடுத்து அன்ஆர்கனைஸ்டு செக்டார் என்ற வகையிலே
லோடிங் அன்ட் அன்லோடிங் பண்ணக்கூடிய கூலித் தொழிலாளர்
கள் இருக்கிறார்கள். இவர்கள் பல்வேறு துறைகளிலே வேலை
செய்றார்கள். எல்லைப் பகுதியான கன்னியாகுமரியில்
கூலியக்காவிகளை பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில்
செங்கோட்டை பகுதியிலும், கம்பம் பகுதியிலும், கோவைப்
பகுதியிலும் இந்த லோடிங், அன்லோடிங் கூலிகள் அதிகம்
இருக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு நிரந்தரம்
கிடையாது. இவர்களை யார் யார் வேலைக்கு வைத்திருக்
கிறார்களோ அவர்கள் இவர்களை சாப் சட்டத்தின் கீழ் நிரந்தர
மாகப் பதிவு செய்வது கிடையாது. இவர்கள் சில ஏஜன்டின்
கீழ் இருக்கிறார்கள் இவர்களுக்கு ஃபார்வார்டிங் சைலன்ஸ்
கொடுக்கும் முறை விசித்திரமாக இருக்கின்றது. யாரோ
எங்கோ இருப்பவர்களுக்கு ஃபார்வர்டிங் சைலன்ஸ் கொடுக்
கிறார்கள். இவர்கள் முதலீடு செய்வதும் கிடையாது. கேரளா

வுக்கு வைக்கோல் சென்று கொண்டிருக்கிறது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான வைக்கோல் ஏற்றும் தொழிலாளிகள் களத்து மேட்டிற்குச் சென்று வைக்கோலைப் பிரியாகப் பிரித்து நல்ல முறையிலே லோட் செய்யக்கூடிய தொழிலாளிகளாக இருக்கிறார்கள். இவர்கள் போய் ஃபார்வார்டிங் ஏஜெண்ட்டிடம் உத்தரவு வாங்க வேண்டி இருக்கின்றது. இந்த நிலையைப் போக்கி தொழிலாளர்களைப் பதிவு செய்து கூட்டுறவுத் துறையின் மூலம் ஃபார்வார்டிங் லைசன்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்த முறையில் வேறு பகுதிகளுக்கு அதாவது கேரளா போன்ற மாநிலங்களுக்கு வைக்கோல் ஏற்றும் பொறுப்பை இவர்களுக்கு கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் இது தொழிலாளிக்குப் பயன்படுவதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அது மட்டுமல்லாமல், லோடிங், அன்-லோடிங் செய்யும் வேலையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும். கேரளாவிலிருந்து சரக்குகள் வந்தால் அவைகளைத் தமிழ் நாட்டுக்கு நேரடியாகக் கொண்டுவரமுடியாது. அதனால் அந்த கேரள–தமிழ்நாடு பார்டரிலே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்தச் சரக்குகளை ஒரு லாரியிலிருந்து இன்னொரு லாரிக்கு மாற்றுகிறார்கள். குறிப்பாக செங்கோட்டை பகுதியில் அப்படிப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையில் அந்த வேலைகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் ஃபார்வார்டிங் ஏஜென்சி லைசன்சு பெற்றவர்கள் கமிஷன் பெறுகிறார்கள். ஆனால் அந்த ஃபார்வார்டிங் ஏஜென்சி லைசன்சை அங்கே லோகலில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கே கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அந்தத் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பெறும். வேறு எங்கே இருப்பவர்களுக்கு ஏஜென்சி லைசன்ஸ் கொடுப்பதற்கு பதில் அங்கே இருக்கக் கூடிய வேலை செய்யும் தொழிலாளர்களுக்கே கொடுத்தால் நலமாக இருக்கும். இவர்களின் நலனைப் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மிகட் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தொழிற்சங்கத் தலைவராக இருந்திருக்கிறார். அவருக்கு நிலைமைகள் புரியும். அதனால் குறிப்பாக பீடித் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் போல் சட்டம் இயற்றி இவர்கள் இழிநிலையைப் போக்க உதவி செய்யவேண்டும் என்று கேட்டு உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.





திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை இந்த அளவிற்கு உயர்த்திய புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பள்ளிப்பட்டு தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் முதலில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தொழிலாளர் நல மானியத்தின் மீதும், வீட்டு வசதி மானியத்தின் மீதும் என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

நான் இந்த மானியத்தை முதலிலே வரவேற்கிறேன். 1980–81 ஆம் நிதிநிலை அறிக்கையில் கிராம வீட்டு வசதி திட்டத்திற்காக ரூபாய் 200 லட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன், காரணம் தமிழகத்திலே அதிகமாக உள்ள கிராமப்புறங்களில், வசிக்க வீடுகள் இல்லாத கிராம மக்கள் அவல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே கிராமப் புறங்களிலே அதிகமான வீடுகள் அமைத்துத் தரவேண்டும் என்கிற கருத்தினை ஏற்று இந்த அரசு அதை நிறைவேற்ற இருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்,

பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களின் தனிப்பட்ட உரிமைகள் பேணி பாதுகாக்கப் பெற வேண்டும் என்று சொன்ன மொழிக்கேற்ப புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இத்தகைய நடவடிக்கை எடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இதை மக்கள் புரிந்திருக்கிறார்கள். ஏழை பாட்டாளி வர்க்கத்தினர் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமத்திலே இருக்கிற பகுதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலைமையில் இருக்கின்றன. ஆகவே அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வசிக்க வீடுகள் இல்லாமல் மிகவும் அவல நிலையில் இருக்கிறார்கள் என்கிற கருத்தை இந்த அரசு புரிந்துகொண்டு அவர்களுக்கு வீட்டு வசதிகளை அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ளவும் பண வசதி இல்லாமல் இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு பண வசதி செய்து தர வேண்டும். அதற்கு கடன் உதவி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒவ்வொரு வீட்டுக்கும் 3,000 ரூபாய் கடன் உதவி என்று இருந்ததை உயர்த்தி 3,750 ஆக ஆக்கியிருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன்.

கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள் பண வசதி இல்லாமல் இருக்கிறார்கள். முன்னேற்றம் அடையாத சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு கொடுக்கி

கடன் உதவிப் பணம் போதாது என்று உணர்ந்து கடன் உதவியை உயர்த்தியிருப்பதை நான் என் தொகுதி மக்கள் சார்பாக பாராட்டுகிறேன். ஏனென்றால் என்னுடைய பள்ளிப் பட்டு தொகுதியிலே பல கிராமங்கள் இருக்கின்றன. மிகவும் தாழ்த்தப்பட்ட சூழ்நிலையில் அங்கே மக்கள் வசிக்கிறார்கள்: பெரும்பாலும் அரிசன மக்களே அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு உபயோகப்படும் இந்தத் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன். மேலும் இந்த பள்ளிப் பட்டு தொகுதியில் ஒரு கிராம கூட்டுறவு சங்கம் நிறுவ வேண்டும் என்கிற கோரிக்கையை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட அரிசனங்களுக்கு வீடுகட்ட உதவிப்பணம் கடனாக கொடுக்கிற நேரத்தில் அதில் ஆயிரம் ரூபாயை மானியமாக வழங்க இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். நகர்ப்புறங்களிலே இருக்கிற அரசு ஊழியர்களுக்குக் கூட இந்த அரசு வீட்டு வசதிகளைத் தந்திருப்பதை நான் மனதார பாராட்டுகிறேன்.

என் தொகுதியில் பல கிராமங்களில் சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. ஏழை அரிசன மக்கள் வாழ்கிற பகுதிகளில் எல்லாம் வீட்டு வசதி சங்கம் மூலம் பல குடில்கள், வீடுகள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். அந்த வீடுகள் இருக்கிற இடங்களில் அரசாங்கமே முழுமானியம் ஒதுக்கி அங்கே சாலை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிப்பட்டு தொகுதியில் பள்ளிபட்டு எஸ். அக்கிரகாரம், கீச்சகம், நொச்சிலை போன்ற பகுதிகள் வரண்ட பகுதிகளாக இருக்கின்றன. பள்ளிப்பட்டு தொகுதியை வரண்ட பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கிராமங்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக கொண்டு வாழ்க அண்ணாவின் புகழ் என்று கூறி விடைபெறு கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது, தொழிலாளர்கள் சம்பந்தமாக பல உறுப் பினர்கள் பேசிவிட்டார்கள், நான் வீட்டு வசதி சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

நமது தமிழக அரசிலிருந்து கிராமப்புறங்களில் ஒரு லட்சத்திற்கு அதிகமான வீடுகள் கட்டும் திட்டம் தீட்டப்பட் டிருக்கிறது. கடந்த காலத்தில் கிராமப்புற பகுதிகளில் 29,041 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரும்பகுதி





அரிசனங்களுக்காகப் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுக்காக இருபத்தியோராயிரத்துச் சொச்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட் டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பது மட்டுமல்ல. அப்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதன் மூலம் கிராமங்களில் பல பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. வீடுகள் கட்ட தேவைப்படுகிற சுண்ணாம்பு, செங்கல் தயாரிக்கக்கூடிய தொழிலாளர்கள். கிராமப்பகுதிகளில் உள்ள கொல்லர், தச்சர் போன்றவர் களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதற்காக காப்பீட்டுக் கழகம் மூலமாகவும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும் கடன் பெற்று இந்தப் பணி செய்யப்படுகிறது. இதை அவர்களிடமிருந்து இருபது ஆண்டுத் தவணையில் மலிவான தவணைகளின் திரும்பப் பெற்றுவிடுகிறார்கள். இந்தப் பணியை கிராமங்களில் அதிகமாகத் தொடங்கவேண்டும். சொத்து மதிப்பீடு காட்டாமல் இடம் சொந்தமாக இருந்தால் போதும், ஒன்றரை சென்ட் நிலம் அரசாங்கத்தின்மூலம் பட்டாவாக பெற்றிருந்தாலும் சரி அல்லது பூர்வீகமாக உள்ள பூமியாக இருந்தாலும் சரி வீடு கட்ட இப்போது அனுமதிக்கப்படுகிறது. இது இரண்டு ஆண்டுகளில் நல்ல பலனைத் தந்திருக்கிறது என்பதை அனுபவத்தில் சொல்கிறேன். இன்று நகரங்களில் ரூ. 300, ரூ. 400 வருமானம் வருகிறவர்கள் கடைகள், வேறு தொழில்கள் நடத்தக் கூடியவர்கள் சொந்த வீடு வைத்திருக்கிறார்கள். அதுவும் நல்ல பலனை அளித்து வருகிறது. ஆகவே அதிலும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்' காப்பீட்டுக் கழகம் இவற்றின்மூலம் பணம் பெற்று வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை நிறைவேற்றவேண்டும்.

இன்று நகரங்களில் வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அதில் பத்திரிகை நிருபர்களுக்கு என்று கொஞ்சம் தான், அதாவது ரொம்ப குறைந்த எண்ணிக்கை தான் அவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். பத்திரிகை நிருபர்கள் அத்தனை பேர்களுக்கும் வீடுகள் கிடைக்கவேண்டும். இப்போது அவர்கள் வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்த அப்படி வாடகை கொடுப்பதற்கு பதிலாக அவர்களுக்கு அந்த வீடுகள் சொந்தமாக்கப்பட வேண்டும். பணத்தில் ஒரு பகுதியை முன்னால் பெற்று மீதியை பல தவணைகளில் செலுத்துவது என்று செய்து வேறு பல பிரிவினருக்கும் உள்ள சலுகைகள் நிருபர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். வீடு அவர்களுக்குச் சொந்தமாகும் முறையில் அப்படி ஒரு திட்டத்தை வகுத்து வீடு கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வீடு கட்டக்கூடியவர்களுக்கு ரூ. 3,000 வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் ரூ. 5,000 கடன் என்றிருந்தது. அது ரூ. 2,500 என்று குறைக்கப்பட்டு நாங்கள் எல்லாம் முதல் அமைச்சர் அவர்களையும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஜூலை 15

அவர்களையும் சந்தித்ததற்கு பின்னால் அது ரூ. 3,000 என்று உயர்த்தப்பட்டது. அரிசனங்கள் என்றால் ரூ. 1,000 மானியம் கொடுக்கப்படுகிறது. மீதிப்பேர்களுக்கு ரூ. 3,000 கடன் வழங்கப் படுகிறது. கிராமங்களில் வீடு கட்டுவது சிரமம் என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அரிசனங்களுக்கு வீடு கட்ட ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ரூ. 600 என்பதை ரூ. 1,000 என்று உயர்த்தியிருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்பதோடு, இந்த ரூ. 3,000 என்றிருப்பதை ரூ. 5,000 என்று முன்பிருந்ததுபோல் மாற்றியமைக்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு, எந்தவிதமான நிலமும் இல்லாமல் இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அரிஜனங்கள் அல்லாதவர்களாக இருந்தாலும் மானியம் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை—வட்டியில்லாமல் பணம் கடன் கொடுத்து இருபது ஆண்டுகளில் அதைத் திருப்பிச் செலுத்தக்கூடியமுறையில் விதிகள் திருத்தப்படவேண்டும். இது முக்கியமான விஷயம்.

வரக்கூடிய காலத்தில் கிராமப்புறங்களில் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டிருக்கிறோம். இப்போது தாலுகா சங்கங்கள் டிவிஷன் அளவில் பல இருக்கின்றன. கிராமப்பகுதி களில் கட்டப்படக்கூடிய வீடுகள் வேகத்தில் கட்டி முடிக்கப்பட வேண்டும். இன்றைக்குப் பல இடங்களிலே வீடுகள் கட்டக்கூடிய இடத்தில் 10 வீடுகள் சேர்ந்திருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அது உசிதமல்ல. அந்த விதிகள் திருத்தப்பட வேண்டும்.

[பிற்பகல் 12-20]

முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநில கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தை டீ-சென்ட்ரலைஸ் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்த அலுவலகத்தைத் திருச்சிக்கு மாற்றவேண்டும் என்ற யோசனை இந்த அரசுக்கு இருப்பதாக அறிகிறேன். நான் ஏற்கனவே இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களிடம் கூறியிருக் கிறேன். இங்கேதான் அதோடு இணைந்த மாநில சங்கம், அதே மாதிரி நம்முடைய வீட்டு வசதி வாரியம், அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால், அதோடு தொடர்புடைய சங்கங்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களாக இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும், பதிவாளர் அவர்களைச் சம்பந்தப்பட்ட உதவியை நாடுகின்ற



1980 ஜூலை 15] [திரு. சோ. அழகர்சாமி]

பேரத்திலும் திருச்சிக்குப் போவது என்றால் கஷ்டம். இந்த ஒரு அலுவலகத்தை மாற்றுவதன் காரணமாக, மிகப் பெரிய நன்மை ஏற்படாது. அதற்குப் பதில் சில சிக்கல்கள்தான் ஏற்படும். எனவே, இந்த அலுவலகத்தைத் திருச்சிக்கு மாற்றாமல், சென்னையிலே இருக்கும்படி செய்யவேண்டும். கடன் கொடுப்பதை ரூ. 3,000 லிருந்து ரூ. 5.000 ஆக உயர்த்த வேண்டும். விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் ஆக்கவேண்டும். திருச்சிக்கு மாற்றுகின்ற ஆலோசனையைக் கைவிட்டு, சென்னையிலேயே இருப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கூட்டுறவு சங்கங்களிலே தலைவர்களாக இருக்கிறார்கள். இங்கே இருப்பதால் நாங்கள் எல்லாம் எளிதாகத் தொடர்புகொள்ள முடிகிறது. வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது. எனவே, இந்த ஆலோசனையை ஏற்று, கிராமப்பகுதிகளுக்கு வீடுகள் கட்டுகின்ற முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு மாமன்ற துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், வீட்டு வசதி பற்றி பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியையும், வணக்கத்தை யும் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களை வளப் படுத்த என்னென்ன சட்டங்கள் கொண்டு வந்து, எந்தெந்த வகையிலே அவர்கள் நலனை, வருவாயை சிறக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உரையை நான் ஆரம்பிப்பதற்கு முன் எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப் பினர் அண்ணாதாசன் அவர்கள் பேசும்போது, புரட்சித்தலைவர் ஆட்சியிலே இந்தத் தொழிலாளர்கள் குடும்பங்கள் பூத்துக் குலுங் குவதாகவும், எங்களுடைய ஆட்சியிலே தொழிலாளர்கள் நலன் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் கூறினார்கள். இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் இன்று குரோம்பேட்டையிலே 25 மாதங்களாக அங்கே ஸ்டிரைக் நடந்துகொண்டு வருகிறது. இந்திரா காட்டன் மில்லிலே ஸ்டிரைக், புதுக்கோட்டை காவேரி மில்லிலே ஸ்டிரைக், நாகர்கோயிலிலே நெசவாளர்கள் ஸ்டிரைக் நடத்திக் கொண்டு வருகிறார்கள். மேலும், பைலட் பேனா கம்பெனியிலும் ஏறத்தாழ 25 மாதங்களாக ஸ்டிரைக் நடந்து கொண்டு வருகிறது. இது அரசாங்கத்திற்கு நல்லமுறையிலே தெரியும் என்று நான் உங்களுக்கு கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அவர்கள் கொடுத்துள்ள இந்தத் தொழிலாளர் நலன் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே, 21 ஆம் பக்கத்திலே இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்நிறுவனம் சுமார் 17 மாத காலமாக செயல்படவில்லை. இந்த நிறுவனத்தின் பொறுப்பை அரசு ஏற்கக் கோரியும் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கோரியும் ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்தன. தொழிற்சாலை மூடப்பட்டதின் விளைவாக வேலை யிழந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என

முதலமைச்சர் சட்டமன்றத்தில் உறுதியளித்தார். அதன்
அடிப்படையில், வேலை இழந்த தொழிலாளர்களுக்கு நிவாரணம்
அளிக்கின்ற வகையிலே 200 ரூபாய் சென்ற பொங்கலில் அளிக்
கப்பட்டிருக்கிறது. அப்படி சென்ற பொங்கலிலே 200 ரூபாய்
கொடுக்கப்பட்டு, இந்தத் தொழிலாளர்கள் குடும்பங்கள் கடந்த
25 மாதங்களாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதாசன்
அவர்களுக்கு கூறிக்கொள்கிறேன். மேலும், இந்த பைலட் பேனா
கம்பெனியில் 218 தொழிலாளர்கள் கடந்த 25 மாதங்களாக
தங்கள் வேலையை இழந்து பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையை
இந்த அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றது
என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும், இந்த அரசுக்கு ஒவ்வொரு பேட்டையில் லேபர்
அலுவலகங்கள் இருக்கின்றன. அவர்கள் வேலை ஒவ்வொரு
மாதமும் தொழிலாளர்கள் நிலைமை என்ன? ஸ்டிரைக் ஏற்பட
வாய்ப்பிருக்கிறதா? தொழிலாளர்களும் முதலாளிகளும் சமரச
மாக இருக்கிறார்களா என்பதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து,
ஒவ்வொரு மாதமும் அந்த பீரியாடிகல் ரிப்போர்ட்டை சப்மிட்
செய்தால். வருமுன் காப்போன் என்ற அளவிலே அதற்கான
ஏற்பாடுகளை இந்த அரசு செய்தால், தொழிலாளர்–முதலாளி
தகராறு எல்லாம் நிச்சயமாக இல்லாமல், தீர்வுகாண முடியும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்கள்
எந்தவித நன்மையும் பெற முடியாமல் இருந்துகொண்டிருக்
கிறார்கள்.

ஒரு தொழிற்சாலையில் 20, 25 பேர்கள் வேலை செய்தால்தான்
பாக்டரி ஆக்டின் கீழ் வருகிறது. சில தொழிற்சாலைகளில் 250
பேருக்கு மேல் வேலை பார்த்தாலும் 17, 18 பேர்கள்தான் வேலை
செய்வதாக பதிவேட்டில் கணக்கு வைத்து தொழிலாளர்களுக்குக்
கிடைக்க வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் இருந்து
வருகிறார்கள். அரசு எந்தெந்தத் தொழிற்சாலைகளில் எத்தனை
பேர் வேலை செய்கிறார்கள் என்று கண்காணித்து அவர்களுக்கு
அந்த நன்மை கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். தொழிற்சாலைகளில் லாக் அவுட் ஆகி ஒரு
வருஷத்திற்கு மேல் செல்லுவதற்கான வழிவகைகள் இருத்தல்
கூடாது. அப்படி நிலை ஏற்படுமானால் அந்தத் தொழிற்
சாலைகளை அரசே ஏற்று நடத்த முன்வரவேண்டும். அந்த
வகையிலே சட்டம் கொண்டு வரவேண்டும். தொழிலாளர்கள்
எல்லாம் விவசாயிகளைப்போல் ஆங்காங்கு கடன்பட்டிருக்
கிறார்கள். விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் கொடுத்தது
போல் தொழிலாளர்கள் பட்ட கடனை ரத்து செய்ய சட்டம்
கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட
தொகை மிகக் குறைவாக இருக்கிறது. என்னுடைய தொகுதி
யான கிருஷ்ணராயபுரத்தில் மூவாயிரம் வீடுகள் கட்டத் திட்ட
மிடப்பட்டு இருநூறு வீடுகளே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்
கின்றன. அதிகப் பணம் ஒதுக்கி ஏழை எளிய தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு
அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியூர்களிலிருந்து 200 மைல்
300 மைல் வந்து சென்னையில் தங்க வேண்டியிருக்கிறது.
ஆந்திராவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக்
கொடுத்திருப்பதுபோல தமிழகத்திலும் சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்
கொள்கிறேன்.

ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு, ஹவுசிங் போர்டு ஆகியவற்றின்
தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் ஆளும் கட்சியைச்
சேர்ந்தவர்களையே நியமிக்கிறார்கள். அந்த போர்டுகள் ஆளும்
கட்சிக்கு மட்டும் சொந்தமானவை அல்ல. அதிலே மற்றவர்
களும் பங்கேற்கும் வகையில் ஆவன செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான
வீட்டு வசதி, தொழிலாளர் நலன் மானியக் கோரிக்கைகளின் மீது
பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தொழிலாளர்
களுடைய நலன்களைப் பேணிக் காக்கின்ற ஆட்சியாக இருக்கும்
காரணத்தால், தொழிலாளர் நலச் சட்டங்களைச் சரியான
முறையில் அமல் நடத்தி, தொழிலாளர் நலன்களைப் பாது
காக்கும் நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தொழில்
அமைதியைப் பாதுகாத்து, தொழில் உற்பத்தியையும் அதிகப்
படுத்த முயற்சிகளை எடுத்து வருகிற அதே வேளையில்
தொழிலாளர்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற
வகையில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகள் மறுக்கப்படுகிற
போது வேலை நிறுத்தம் செய்கிற உரிமையும் உண்டு என்று
ஏற்றுக்கொண்டிருக்கிற அரசு புரட்சித் தலைவர் அரசு.
இதற்கு முன்னால் ஆண்ட ஆட்சிக் காலத்தில் வேலை
நிறுத்தங்கள் நடைபெறுகிற நேரத்தில், வேலை நிறுத்த
உரிமைகளைத் தடுத்து நிறுத்தி, இரண்டுபடுத்தி தடை செய்து
வந்தார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இந்த ஆட்சிக்
காலத்தில்தான் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய
உரிமை தந்து அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும்
அரசாக இந்த அரசு இருந்துகொண்டிருக்கிறது, அந்த
வகையில் அரசுக்கும் தொழிலாளர் நல அமைச்சருக்கும்
பாராட்டுக்களைத் தெரிவி[illegible]கொள்கிறேன்.

தொழிலமைதியைப் பாதுகாக்கும் அரசு, தொழிலாளர் நலன்களுக்காகப் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி அதன் மூலம் தொழிலாளர்கள் பல்வேறு நன்மைகளைப் பெறவேண்டு மென்று வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறது. அந்த வகையில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தமாக இருந்தாலும், சர்க்கரை ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தமாக இருந்தாலும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகமான ஊதியத் தையும், வசதிகளையும் பெற்றுத் தரும் வகையில் வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. அதற்காக இந்த அரசையும் தொழிலாளர் நல அமைச்சரையும் பாராட்டுகிறேன். மேலும் தொழிலாளர் கள் வேலை நிறுத்தத்தின்போது கஷ்டப்படுகிற நேரத்தில் அந்தத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கி தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியால் சாவதைத் தடுத்திருக்கிறார்கள். அதற்காகவும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30]

தொழிலாளர் நலச் சட்டங்களைப் பற்றிக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே எங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற விவரக் குறிப்புப் புத்தகத்திலே ஒரு தவறு இருந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலத்திலேயும் தமிழிலேயும் புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தமிழிலே கொடுக்கப்பட்ட புத்தகத் திலே பக்கம் 28 இல் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு என்று போடப்பட்டிருக்கிறது. அதிலே இக்குழுவில் தொழி லதிபர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆறு பேரும், அரசு அதிகாரிகள் ஐவரும், சட்ட மன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் உறுப்பினர்களாக உள்ளனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆங்கிலத் திலே கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்திலே பக்கம் 18 இல் வேறு விதமாக இருக்கிறது. அதனை தக்கமுறையிலே மாற்றி யமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் இருக்கிறபோது அந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் 2 லட்சத்து 11 ஆயிரம் என்று கொடுக்கப்பட் டிருக்கிறது. ஆனால் பணியாற்றுகின்ற உறுப்பினர்கள் என்று கொடுக்கப்பட்டுள்ளதில் 2 லட்சத்து 8 ஆயிரம் பேர்கள் என்று தான் இருக்கிறது. நிறுவனங்களின் எண்ணிக்கையினைவிட அந்த நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அங்கே வேலை பார்க்கிறவர்களை நிரந்தரம் செய்யாமல் முதலாளிகள் சுரண்டி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான். ஆகவே அந்த நிலைமையை மாற்றி, தொழிலாளர்களை நிரந்தரமாக்கி



அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெற்றுத்தர அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டல் தொழிலாளர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்னார். அவாகள் போராடுகிற நேரத்திலே வேலை யிலிருந்து நீக்கப்படுகிறார்கள். சென்னை நகரத்திலே பெரிய ஓட்டல்களிலே உள்ள தொழிலாளர்களுக்குக்கூட நல்ல ஊதியம் கொடுக்கப்படாமல், அவர்களுக்கு வேலைப்பாதுகாப்பு இல்லாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நல்ல ஊதியமும் வேலை பாதுகாப்பும் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 20 பேர்களுக்கு மேல் வேலை பார்க்கிறவர் களுக்குத்தான் போனஸ் வழங்கப்படும் என்ற நிலைமையை மாற்றி 10 பேர்கள் இருந்தாலும் போனஸ் வழங்குவதை விரிவாக்கியதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுதல், தொழிலாளர் நலச் சட்டங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற் காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். தொழிலாளர்கள் ஓய்வெடுக்க ஓய்வில்லங்களைக் கட்டிக் கொடுக்கின்ற நிலைமையும் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கவும், தொழிலாளர்களுக்கும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்று வதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்.

நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு அளிக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே உப்பளத் தொழி லாளர்கள் 7 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைக்குப் பாதுகாப்பு இல்லை. உத்திரவாதம் இல்லை, குறைந்த கூலி கொடுக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கப்படவேண்டுமென்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டார். உப்பளத்திலே மூட்டையைத் தூக்குகிறபோது தொழிலாளர்கள் ஆபத்தைச் சந்திக்கிறார்கள். உப்பளத்திலே லாரிகளிலே கன மான மூட்டைகளை ஏற்றுகிறபோது மூட்டைகள் விழுந்து பலர்

மாண்டுவிடுகிறார்கள். இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேதாரண்யத்தில் 6 பேர்களுக்கு மேலே 3 ஆண்டுகளிலே மரணம் அடைந்து இருக்கிறார்கள். இதைக் கவனித்து அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு இ. எஸ். ஐ. ஸ்கீமை விரிவுபடுத்தவேண்டும், அவர்களுக்குத் தொழிலாளர் நலத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். வேதாரண்யத்திலே அரசு ஊழியர்கள் வீட்டு வசதி பெறுகின்ற முறையிலே வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக கொள்கிறேன். கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தை வேதாரண்யத்திலே தகட்டூரிலே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் நலமும் வீட்டு வசதியும் பற்றிப் பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தமைக்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுடைய திறமையின் காரணமாக இந்தப் பிரிவு சிறப்பான முறையில் செயல்படுகிறது என்பதைத் தமிழகம் இன்றைக்கு உணர்ந்திருக்கிறது. நான் இரண்டு மூன்று பிரிவுகளை மாத்திரம் இங்கே சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று ஆசைப்படுகிறேன்.

குறைந்தபட்ச அளவு ஊதியம் என்ற திட்டத்தின்கீழ் விவசாயப் பெருங்குடி மக்களைத்தான் இது மிகவும் கவர வேண்டுமென்ற ஒரு கருத்தினை அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வர நான் ஆசைப்படுகிறேன். கூலி விவசாயிகள் குறைந்தபட்சம் எவ்வளவு கூலி பெற வேண்டுமென்று நிர்ணயிக்கிறோமோ அந்தக் குறைந்தபட்சக் கூலியைத் தராத முதலாளிகளின் மீது, நிலச்சுவான்தார்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவிடவேண்டும். இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் கூலி விவசாயிகள்தான், எதிர்க்க முடியாத காரணத்தால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். எதிர்த்தால் வேலை கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிடுவார்கள். அவர்கள் போராட முடியாததற்குக் காரணம் போலீசை வைத்து உதைப்பார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சங்கடங்களில் கூலி விவசாயிகள் இருப்பதால் எதிர்த்துப் பேசும் துணிவு அவர்களுக்கு வரவில்லை. விவசாயிகளிலேயே கொத்தடிமை விவசாயிகளாக இந்தக் கூலி விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறையில், நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்சக் கூலியைக் கொடுக்கும் அளவிற்கு—அந்த



நிலச்சுவான்தார்கள் தருவதற்கு அல்லது தர மறுப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, மூன்றே மூன்று தொழில் பிரிவுகளைப்பற்றி மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். முதலாவது, நகர சுத்தித் தொழிலாளர்கள். இரண்டாவது, பீடித் தொழிலாளர்கள். றாவது, தோல் பதனிடும் தொழிலாளர்கள். அரசாங்கத்திலிருந்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டாலும்கூட, இந்த மூன்று பிரிவுத் தொழிலாளர்கள் மட்டும்தான் இன்னும் முன்னேறாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக நகர சுத்தித் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இன்றைக்கும் மிகவும் கீழ்த்தரமாகவே இருக்கிறது. ஒரு வேளை குறிப்பிட்ட சமுதாயத்தினர் மட்டும் அதைச் செய்வதால் அதை அரசாங்கம் கவனிக்கவில்லையோ அல்லது மற்றவர்களைப்போல் உயர்த்துவதற்கு முன்வரவில்லையோ என்று சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது, நகர சுத்தித் தொழிலாளர்கள் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். நாள்தோறும் அவர்கள் மலத்தை அள்ளுகிறார்கள். அவர்கள் மட்டும் ஒரு வாரம் வேலைநிறுத்தம் செய்வார்களேயானால் தமிழகம் முழுவதும் அந்த வாசனை வீசும். இருந்தாலும் அவர்கள் அந்த வேலையைச் செய்துகொண்டு வருகிறார்கள். அவர்களின் வேலையைச் சுலபமாகச் செய்ய கைத் தோல் போட வேண்டும்; வண்டிகளை இழுத்துச் செல்லும்போது அந்த வண்டிகள் விரைவில் செயல்படும் அளவில் வண்டிகளைக் கொடுக்க வேண்டும். அது மட்டுல்ல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தபிறகுதான் அவர்களுக்குக் கை கழுவதற்குச் சோப்பும், தலைக்குத் தேய்த்துக் கொள்வதற்குச் சீயக்காயும் கொடுத்து அவர்களின் அடிப்படைத் தேவைகளைக் கவனித்தது என்பதைச் சொல்லி அதற்காக இந்த நேரத்தில் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அவர்களுக்கு அதிக சலுகைகளைத் தரும் வகையில், அவர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டும். எங்கள் பகுதியில் உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களைப் பார்த்தால், ஒரே தெருவிலே 500 குடும்பங்கள் இருக்கும். அதிலும் அதன் உள்ளே இருக்கும் குடும்பங்களையும் சேர்த்தால் இன்னும் அதிகமாக இருக்கும். அவர்கள் இரவில் எப்படிப் படுத்துக்கொள்வார்கள் என்று தெரியாது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும். அப்படிக் கட்டிக் கொடுப்பதையும் முனிசிபாலிடிக்குப் பக்கத்தில் கட்டிக்கொடுத்தால் நல்லது. இதனால் சமுதாயப் பிரச்சினைகள் ஏதாவது ஏற்பட்டாலும் அதைச் சமாளிப்பதற்கு அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே அந்த மக்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதேபோன்று, தோல் பதனிடும் தொழிலாளர்களைப்பற்றிப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், நான் ஏழையாக இருந்தாலும் என்னுடைய தொகுதி பணக்காரத் தொகுதி. தமிழகத்திலேயே என்னுடைய தொகுதியைப்போல் பணக்காரத் தொகுதி வேறு இருக்காது. காரணம் என்ன வென்றால், பல கோடி ரூபாய்களை ஈட்டித் தருகின்ற என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில் தோல் பதனிடும் தொழிலில் நிறைய பேர் இருக்கிறார்கள். காஸ்ட்லி கான்ஸ்டிடியூயன்ஸி என்னுடைய தொகுதி. ஆனால் அங்கே இருக்கின்ற மக்கள் மிகவும ஏழைகள். தோல் பதனிடுகின்ற வேலையைச் செய்கின்றபொழுது அந்தத் தோலை நனைத்து எடுக்கும்பொழுது அங்கே யாராவது ஒருவர் சென்றால் நிச்சயமாக அவர் வாந்தி எடுத்துவிடுகின்ற அளவிற்கு வயிற்றைப் பிடுங்கியெடுக்கும். காலையிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் மிகவும் திறமையோடு அந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இ. எஸ். ஐ. கிடையாது, பி. எஃப். கிடையாது. அவர்களை நிரந்தரமாக்குவது கிடையாது. ஏழாண்டுகள் ஒருவர் வேலை செய்திருந்தாலும் அவர் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியில் டானரித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் மிகப் பெரிய பாதகத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்களைப் பற்றிச் சொல்லியாக வேண்டுமென்பதால்தான் நான் இன்னும் சிறிது நேரம் அனுமதி கோருகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டும். தொழிலாளர்களை ரெகுலரைஸ் செய்யாத முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏழாண்டுக் காலம் வேலை செய்தவர்கள்கூட பர்மனென்ட் ஆக்கப்படவில்லை! வேலைக்குத் தகுந்த கூலி தருவது கிடையாது.

[பிற்பகல் 12-40]

உள்ளே ஒரு சங்கத்தை வைத்துக் கொள்கிறார்கள். அந்தச் சங்கத்திற்கு அவர்களே சந்தா பிடித்துக் கொள்கிறார்கள். அவர்கள் மே தினம் வேறு கொண்டாடுகிறார்கள். அப்படிப் பட்ட நிலைமைகள் அந்தச் சங்கத்திற்குள்ளாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க வேண்டும்.

அதே நேரத்தில், அவர்களுக்குத் தனியாக வீடுகட்டித் தரவேண்டும். டானரி தொழிலாளர்களுக்குத் தனியாக வீடு கட்டித் தரவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



*திரு. எஸ். ஜகத்ரட்சகன்: இம் மாமன்றத்தின் துணைத்
தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டின் தொழிலாளர் நல
நிதி ஒதுக்கக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினை அளித்த
மைக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
கொடுத்துச் சிவந்த கரங்களை உடைய குணசீலர் புரட்சித்
தலைவர் ஆட்சியில், தொழிலாளர்களுக்கு எக்குறையுமில்லாமல்
அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மையாக்குவதற்கும்
சிறப்பாக்குவதற்கும் திட்டங்களை வகுத்து, அவர்கள் வாழ்வில்
வளம்பெற ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று
சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களின் நெறிப்படி தொழி
லாளர்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதைத் தம் இலட்சிய
மாகக் கொண்டுள்ள புரட்சித் தலைவர் அவர்கள் பல திட்டங்
களையெல்லாம் இங்கே அறிக்கை வடிவமாகத் தந்திருக்கிறார்கள்.
தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு, கவனிப்பாரற்றுக் கிடந்த
கல் உடைக்கும் தொழிலாளிக்கும், சுமை தூக்கும் தொழி
லாளிக்கும் சாதகமான நல்ல திட்டங்களைத் தந்தமைக்கு நான்
மகிழ்ச்சி அடைகிறேன். பணிக் காலத்திலே மரணம்
அடைந்த தொழிலாளர்களின் நிராதரவான குடும்பங்
களுக்குக் கைகொடுத்து உதவும் வகையிலே அவர்களின்
வாரிசுகளுக்கு உடனடியாக வேலை வழங்குவதுடன் நிறைவை
ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களது வாரிசுகளுக்கு, தகுதிக்கு
ஏற்ப வேலைகளை அளிப்பதற்காக இந்த அரசை எவரும்
பாராட்டாமல் இருக்கவே முடியாது. அந்த வகையிலே,
அரசு நிறுவனங்களிலே மின் வாரியம், போக்குவரத்துத் துறை
ஆகியவற்றிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு வாரித்
தந்து அவர்களுடைய வாழ்க்கையைச் சிறப்பாக்குவதற்காகப்
புரட்சித் தலைவர் பல திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள்.
குறிப்பாகச் சொல்வோமேயானால், மலைத் தோட்டத் தொழி
லாளர்களுக்கு வீட்டு வசதி, தொழிற்சாலைகளிலே பணியாற்றும்
டணியாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள், தொழிலாளர் வீட்டு
வசதித் திட்டம், தமிழ் நாடு தொழிலாளர் நல வாரியத்தை
அமைத்து தொழிலாளர் நல நிலையங்கள், விடுமுறை ஓய்வு
இல்லம், குறைந்த வாடகையில், படிப்பதற்குச் செய்தித்தாள்கள்
குழந்தைகள் காப்பு நிலையங்கள், தொழிற்சங்கத் தலைவர்களும்
தொழிலாளர் பிரதிநிதிகளும் தங்குவதற்கு ஏறத்
தாழ ரூ. 7·33 இலட்சத்திலே ஒரு வீடு; பார்வைக்
கோளாறுள்ள தொழிலாளர்களுக்குக் கண்ணாடி போன்ற பற்பல
திட்டங்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
இந்த மாமன்றத்திலே அறிக்கையின் மூலமாக அளித்திருக்
கிறார்கள். 1967-ல் இம் மாமன்றத்திலே நிதியமைச்சராக
இருந்தவரும் டெல்லியிலே நிதி அமைச்சராக இருந்த
வரும் சொல்லியிருக்கிறார், தொழில்களிலே வளமும்
வாழ்வும் பெருகவில்லை, தொழிற்சாலைகள் அமைக்கப்பட
வில்லையென்று. அவருக்கு ஒரு கணக்கைச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். 1967-க்குப் பிறகு, சொல்வோமேயானால்,
4-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு, தொழிற்சாலைகள்

அமைப்பதற்கே இங்கே விடுமுறை விட்டு விட்டிருந்தார்கள். அந்த வகையிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே, அமைக்கப்பட்ட திட்டங்கள் 1958-க்கு முன்பாக அமைக்கப் பட்ட திட்டங்கள். ஆனால், அதற்குப் பிறகு மற்ற மாநிலங் களிலே இப்பொழுது திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று சொன்னால், அந்தத் திட்டங்கள் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே கொடுத்த திட்டங்களைக் காலங்கடந்து அவர்கள் நிறைவேற்றுகிறார்கள் என்று பொருள்படுமே தவிர, தமிழகம் என்றென்றும் எதிலேயும் முன்னணியிலேதான் நின்றுகொண் டிருக்கிறது.

தமிழகத்தின் பொற்காலம் புரட்சித் தலைவருடைய ஆட்சி தான் என்பதை எடுத்துச்சொல்வதற்கொப்ப, இங்கே கொடுப் பார் இல்லை; காரணம், இங்கே வாங்குவதற்கு ஆள் இல்லை என்று. கம்பர் சொல்வது போல இங்கே தொழிலாளர் பிரச்னை களைச் சொல்லும்பொழுது, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்கிற வகையிலே, போராட்டத்தை எந்தெந்த வகையிலே தவிர்க்க முடியும், எந்தெந்த வகையிலே எல்லாம் போராட்டங்களைத் தவிர்த்து, அவர்களுடைய வாழ்வை, வளத்தை உயர்த்துவது என்பதையே தன்னுடைய இலட்சியமாகக் கொண்டு, பல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி வருகிறார் கள்.

வேலை நிறுத்தம் என்று சொல்கிறபொழுது, இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம், தமிழகத்திலே மட்டுமே வேலை நிறுத்தங்கள் கடுமையாக நடைபெற்றிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு கணக்கைச் சொல்வதானால், அகில இந்திய அளவிலே கூட, அனைத்து மாநிலங்களிலே நடைபெறுகிற போராட்டங்களிலே, தமிழகத்தை ஒப்பிடுகிறபொழுது, தமிழகம் எப்பொழுதுமே பின் தங்கியிருக்கிறது போராட்டங்கள் என்ற வகையிலே. போராட்டம் எங்கு நடைபெற்றாலும், தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக இருந்தாலும் சரி, தனியார் துறையி லென்றாலும் சரி, இங்கே ஒரு கணக்கை நான் சொல்ல விரும்பு கிறேன். நெய்வேலி தொழிற்சாலையிலே நடைபெற்ற போராட்டத்திற்குக் காரணம் யார்? தமிழக அரசா? அந்த நிறுவனத்தை நடத்துவது மத்திய அரசு. ஆனாலும், அங்கே தொழிலாளி பாதிக்கப்படுகிறான் என்கிறபொழுது, சிவந்த கரங்களையுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பி அந்தப் போராட்டத்தை நிறுத்துவதற்கு, அந்தப் போராட்டத்தைச் சமன் செய்வதற்காக, அங்கே எங்களது இயக்கத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் அனுப்பி, [illegible] போராட்டத்தை நிறுத்தி வைத்தார்கள்.





தொழிற்சங்கம் என்று சொல்லுகிறபோதுகூட, ஒரு தொழிற் சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற புரட்சித் திட்டத்தை வகுத்தார்கள். நாங்கள் தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் சைக்கிள் செயினைப் பயன்படுத்த மாட்டோம். ஆனால் பேரறிஞர் அண்ணா வழியிலே எங்கள் திட்டங்களை எந்தத் தொழிற்சாலையிலும் அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் விரும்பினாலொழிய, எங்கள் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எவரையும் கட்டாயப்படுத்தி அல்லது அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தித் தொழிற்சங்கத் தலைவராக வந்தது கிடையாது. சிறு தொழிற்சாலைகளில் 5 பேர்கள், 10 பேர்கள், 50 பேர்கள் வேலை செய்கின்ற பகுதிகளிலும் அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்தத் தோழர்கள் வளருவதற்காகத் திட்டம் தீட்டி அவர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள்.

இங்கே நண்பர்கள் பேசும்போது, வேலைமுடிந்த பிறகு அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுகிறார்கள் என்று சொன் னார்கள். அந்த நிலையை மாற்றி சிறு பணியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் திட்டம் வகுத்திருக்கிறோம்.

அடுத்து நக்சல்பாரிகளைப் பற்றி இங்கே பேசினார்கள். நான் ஒரே ஒரு கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். நக்சல்பாரிகளின் மாபெரும் தலைவர் என்று சொல்லுகிறவர் அந்த ஆட்சியிலே அடைக்கப்பட்டு, அவருடைய தந்தை இறந்தபோதுகூட, தந்தையின் பிணத்தைப்பார்த்து, வாயார. மனதார அழக்கூட வாய்ப்பு தராமல் வெளியே விடாமல் இருந்தவர்கள், புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான் நாங்கள் அவரைச் சுதந்திரமாகத் திரிவ தற்கு அனுமதித்து வெளியே விட்டோம். அப்படிச் சொல்லு கிறபோது நான் நக்சல்பாரிக்கு வக்காலத்து வாங்குகிறேன் என்று யாரும் கருதிக் கொள்ளவேண்டாம். நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்வதெல்லாம் தனி மனிதக் கொலை, கொள்ளை எதுவாக இருந்தாலும் கூட, ஒரு இயக்கம் என்கிற பேரிலே, ஒரு தனி மனிதன் பேரிலே நடைபெற்றாலும் இந்த அரசு கண்டிப்பாகக் கண்டிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன். இங்கே காங்கிரஸ் கட்சி நண்பர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். தமிழகம் சீர்குலைந்து விட்டது, தொழிலாளர் பிரச்சினை சீர்குலைந்துவிட்டது. என்று. இங்கே அமைதி நிலவவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தங்கள் அனுமதி யோடு வேறு மாநிலத்தைப் பற்றி சொல்லலாம் என்று எண்ணு கிறேன்—பரிதாபாத் என்ற ஊரிலே நம் சென்னை அம்பத் தூரிலே இருப்பதைப் போன்று ஒரு தொழிற் பேட்டை இருக்கிறது. அந்தத் தொழிற் பேட்டை இருக்கிற அந்தப் பகுதியிலே 18 பேர்களை, தொழிலாளர்களைக் கத்தியால் குத்தி யிருக்கிறார்கள். 20, 30 பேர்கள் துப்பாக்கியால் சுட்டு இருக் கிறார்கள். அங்கே சட்டம் குலைந்திருக்கிறதா? அமைதிப்

பூங்காவாக ஆட்சி நடைபெறுகின்ற இந்தத் தமிழகம்—இங்கே இப்படிப்பட்ட சூழ்நிலையிலா இருக்கிறது என்பதை எல்லாம் நண்பர்கள் நன்றாகச் சிந்தித்து பார்க்கவேண்டும் என்று சொல்லி இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய வேண்டு கோளாக விவசாயத் தோழர்களின் நலனில் அக்கறை கொண்டு தமிழக அரசு 1972-ஆம் ஆண்டு கடைசியில் திரு. க. திரவியம் ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. பாலசுப்பிரமணியம் மற்றும் சிலர் அடங்கிய குழுவை அமைத்து அதன் பரிந்துரையின் பேரிலே, கீழ்தஞ்சை நீங்கலாகத் தமிழகம் முழுவதும் விவசாயத் தோழர்களுக்கு நாள் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ஊதியமாக ஆண்களுக்கு 7 ரூபாயும், பெண் களுக்கு 5 ரூபாயும் பரிந்துரை செய்து அவர்களின் நலனைப் பாதுகாத்த அரசினைப் பாராட்டுவது நமது கடமை.

அரசு கடன் வசதி செய்யும்போது 3 வேறுவிதமான கட்டங் களில் கட்டவேண்டும் என்று வற்புறுத்தி. அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மானியம் ஆயிரம் ரூபாய் என்பது வரவேற்கத்தக்கதென்றாலும் அந்தத் தொகையை முன்கூட்டியே கழித்துக் கொண்டு கொடுப்பது தவிர்க்கப்படவேண்டும் என்றும், டாக்சியிலே டிரைவராகப் பணியாற்றுகின்றவர்கள், அவர்கள் இறந்தபிறகு அவர்கள் குடும்ப நலனுக்காக இந்த அரசு உதவி புரியவேண்டும் என்பதையும் என் வேண்டுகோளாக முன்வைக்க விரும்புகிறேன். ஆலைப் பகுதிகளில் வேலைச் செய்கிறவர்களுக்குச் சீருடை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதோடு தமிழகத்திலே ஓர் அமைதிப் பூங்காவை ஏற்படுத்தி, தொழிலாளர்கள் ஒற்றுமையை வலுப்படுத்தி அவர்கள் மே தின விழா என்று சொல்லுகிறபோது முதல் தேதி மட்டுமே தொழிலாளர்களை நினைப்பது என்ற நிலையில்லாமல் 365 நாட்களும் தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு நலம் செய்யத் தகுதியுள்ள ஒப்பற்ற தலைவர் அவர்களைக் கொண்டு நடை பெறும் இந்த அமைதிப் பூங்கா அரசின் போக்கைப் போற்றி விட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 12-50]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, பரிதாபாத்தில் 17 பேர் குத்திக் கொலை செய்யப்பட்டார்கள், 24 பேர் துப்பாக்கியால் சுடப் பட்டு இறந்தார்கள் என்று சொன்னார்கள். அது எப்போது நடந்தது, எந்த ஆட்சியில் நடந்தது என்பதைத் தெளிவாகச் சொல்வார்களா?





திரு. எஸ். ஜகத்ரட்சகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சி கடந்த 10 நாட்களுக்கு முன்பு டெல்லியில் நடந்ததாகப் பத்திரிகையில் படித்தேன். தொடர்ந்து அந்த அடக்குமுறைகள் இன்றும் நடந்துகொண்டு இருப்பதாகப் பத்திரிகை வாயிலாகப் படித்தேன்.

திரு. நா. சுந்தரராஜ்: இது முக்கியமான பிரச்சினை. இந்த அடக்குமுறை தொழிற்சங்கத்தில் நடந்ததா, வேறு சந்தர்ப்பங்களில் நடந்ததா? ஏனெனில், சட்டம் ஒழுங்குப் பிரச்னை வேறு. தொழிலாளிக்கு விரோதமாக அந்த அரசாங்கம் நடந்து கொண்டு இருக்கிறது என்பது வேறு. இங்கே பேசிய உறுப்பினர் மத்திய அரசாங்கம் இப்படி ஏதோ தொழிலாளர் களுக்கு விரோதமாகச் செயல்படுகிறது என்கிற வகையில் சொன்னார்கள். ஆகவே, அதை அவர்கள் தெளிவுபடுத்துவார் களா?

திரு. எஸ். ஜகத்ரட்சகன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி இருக்கிறார்கள். நான் சொன்னது டெல்லியில் நடை பெற்ற தொழிலாளர்களுக்கு இடையே ஏற்பட்ட ஒரு தகராறில் இதுவரையில் 17 பேர் குத்திக் கொலை செய்யப்பட்டு இருக் கிறார்கள், பலர் துப்பாக்கியால் சுடப்பட்டு இருக்கிறார்கள்? அங்கே நடைபெறுகிற அரசு எந்த அரசு என்பது என் வினா?

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கை மீது நடக்கின்ற விவாதத்தில் கலந்து கொண்டு ஒருசில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

நான் தினம் தினம் காலையல் எழுந்து வெளியில் வந்தால் நம் கண் முன் வருவது மளிகைக் கடைகளில் பொட்டலம் கட்டும் பையன் 14–15 வயது பையன். அதைப்போல் கார் ரிப்பேர் செய்யும் இடத்திற்குச் சென்றாலும், அங்கே சிறிய பையன்கள் 10 வயதுப் பையன்கள் வேலை செய்வதைப் பார்க்கிறோம். சட்டத்தின் மூலமாக குழந்தைகள் வேலை செய்யக்கூடாது என்று நிலைமைகள் இருந்தாலும், இப்படி அதிகமான அளவிற்கு இளைஞர்கள் தொழிலாளி வர்க்கமாக மாறியிருப்பதால், அவர் களுக்கு நல்வழி செய்வதற்கும், அவர்கள் வாழ்வுக்கு உத்தர வாதம் அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான விண்ணப்பம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய வரவு–செலவு திட்டத்தின் கீழும், ஆளுநர் உரையின் மீதும் 'அன்–ஆர்கனைசுடு செக்டார்' தொழிலாளர்களுக்கு ஏதோ செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக கட்டிடம் கட்டும் தொழிலாளி, கை வண்டி இழுப்போர், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுவோர் இவர்களுக்கு எல்லாம் ஏதாவது செய்யவேண்டும்என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தின் 134 பிரிவின் அடிப்படை, வொர்க்கர்ஸ் பார்ட்டிசிபேஷன் இன் மேனேஜ்மென்ட்—அதாவது தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்கவேண்டும் என்பதாகும். இது ஒரு அடிப்படை அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு மாநில அரசும் அதைச் செய்யவேண்டும் என்று அரசியல் நிர்ணயச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டு இருக்கிறது. என்றாலும், எந்தத் துறையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் எந்த அளவிற்குப் பங்கு கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாபெரும் ஆலைகளில் இல்லாவிட்டாலும், அரசு நிறுவனமான பி. டி. சி. மற்றும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்று இப்படிப்பட்ட நிறுவனங்களில் எல்லாம் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கு எந்த அளவிற்கு நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப் பற்றிச் சொல்கிறபோது, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு, குறிப்பாக, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை நான் பார்த்து இருக்கிறேன். ஊருக்குப் பக்கத்தில் இல்லாமல், கிராமப்புறங்களில் இருந்து தள்ளி இருப்பதால், பல இடங்களில் அவர்கள் சென்று வசிக்க முடியவில்லை. அந்த மாதிரி இடங்களை நான் காட்ட முடியும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறபோது கிராமப்புற எல்லைக்குள்ளேயே கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் அவர்கள் சமுதாயத்தில் பாகுபாடு இல்லாமல் வாழமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், குடிசை மாற்று வாரிய வீடுகளை ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால் அந்த இடத்தில் குடிசைகளில் வாழ்பவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பெரிய பெரிய படித்தவர்கள்—ஸ்கூட்டர்—போன்று



வைத்து இருப்பவர்கள் அங்கே இருக்கிறார்கள். 12 ரூபாய் வாடகைக்கு அதை எடுத்துக் கொண்டு, 60–70 ரூபாய்க்கு அவர்கள், படித்தவர்களுக்கு வாடகைக்கு விட்டு விடும் நிலைமை இருக்கிறது. இது குடிசை மாற்று வாரியத் தலைவர் அவருக்கும் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு அதிகமான பேர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 6,35,40,000 ரூபாய்க்கு மானியக்கோரிக்கையை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் எழுப்பியருக்கிறார்கள். இந்தத் தொகையை செலவழிப்பதற்கேற்ப மாநிலத்தில் இருக்கிற தொழிலாளர்கள் நிம்மதியாக இருக்கிறார்களா என்பதை அன்புகூர்ந்து அமைச்சரவர்க… …துப் பார்க்க வேண்டுமென்று முதற்கண் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தது
அவன் காணத் தகுந்ததும் வறுமையோ
பூணத் தகுந்ததும் பொறுமையோ''

என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் அவர்கள் வேதனையோடு கூறியிருக்கிறார்கள். இந்த நிலையைத் தவிர இன்றைக்குத் தொழிலாளி வேறு எதையும் காணவில்லை.

1,23090

மூன்றாண்டுக் காலமாக எந்தப் பிரச்சனையும் தீர்க்கப்படவில்லை. தொழிலாளர்கள் துயர் தீர்க்கப்படவில்லை; அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. தொழிலாளர்கள் எந்த உரிமையையும் கேட்கலாம். அந்த உரிமைகளைக் கேட்பதற்கு ஸ்டிரைக் என்பதும் அஜிட்டேஷன் என்பதும் 'ட்ரேடு யூனியனுக்கு' இருக்கிற உரிமை. அந்த உரிமையை ஒடுக்குவதையும் அடக்குவதையும் இந்த அரசு ஒரு கொள்கையாக வைத்திருக்கிறது. இதை அடிப்படையாக வைத்துதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த அரசு வந்தாலும் அந்த அரசுக்குப் பொருந்தும் வகையில் .'உழவனின் உள்ளத்தில் புயல் இருக்குமானால் வயலிலே வளம் காண முடியாது'' என்ற தத்துவத்தைச் சொல்லிச் சென்றார்கள். அவர்களுடைய உருவத்தைக் கொடியிலே போட்டிருக்கிறீர்கள் ஆனால் அவருடைய தத்துவத்தைக் காற்றிலே பறக்கவிட்டு விட்டீர்கள். அதனால் இன்று தொழிலாளர்களைக் கண்ணீரும் கம்பலையுமாக வைத்திருக்கிறீர்கள்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே பொங்கி வழிகிறது பொற்காலம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்த 3 ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சி எப்படி இருந்தது என்பதைப் படம் பிடித்துக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலத்தில் பொதுவுடைமைத் தலைவர் ஒருவர் பேசியதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ''எங்களிடம் இறுமாப்பு கிடையாது, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று நாங்கள் பேச மாட்டோம். இறங்கினால் பின் வாங்க மாட்டோம். இன்று ஒன்றைப் பேசிவிட்டு நாளை அப்படிப் பேசவில்லை என்று சொல்லமாட்டோம்: சொன்னதைச் செய்வோம். செய்வதைத்தான் சொல்வோம். அச்சுறுத்துவதற்காகச் சொல்லுகின்ற பழக்கம் எங்களுக்கு கிடையாது'' என்று சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார். ''வெள்ளைக்காரன் காலத்திலிருந்து சிறையில் எலும்பு உடைக்கப்பட்ட அனுபவத்திலிருந்து சொல்லவேண்டுமென்றால் இன்று எம். ஜி. ஆர். ஆட்சியிலே தெருவிலே போகின்றவர்களையும் அடிக்கும் அனுபவத்தைப் பார்த்தது கிடையாது. எம். ஜி. ஆர். யாரோடு பேசுகிறோம் என்பதைத் தயவு செய்து புரிந்துகொண்டு பேசவேண்டும். இன்று கோட்டையிலே இருக்கலாம். போலீஸ் பாதுகாப்பு என்று இருக்கலாம். சில அதிகாரிகள் அறியாத்தனத்தின் காரணமாகவோ அல்லது உங்களின் தயவுக்கு வேண்டியோ காலைத் தொட்டு கும்பிட்டுக்கொண்டு உத்தரவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கலாம். இந்தப் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டு இருப்பது எம். ஜி. ஆர். காதுகளில் கேட்கும் என்ற நம்பிக்கையில் அல்ல. 4 கோடி மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் எம். ஜி. ஆரை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகிறோம். இரண்டு ஆண்டுக்கால எம். ஜி. ஆர். ஆட்சியில் நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். டெல்லியிலே நடக்காத அட்டூழியங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் நடக்கின்றன.

''தமிழ்நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும். ஜனநாயக உரிமைகளுக்கு இங்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் தாங்கள் சுதந்திரமாக இயங்க முடியவில்லை'' என்று சென்ற ஜூலை மாதம் அந்தப் பொதுவுடைமைத் தலைவர் குற்றஞ்சாட்டிப் பேசினார். எனக்கு முன்னாலே சில உறுப்பினர்கள் பேசினார்களே, பொங்கி வழிகிறது பொற்காலம் என்று, அவர்களுக்கு அந்தப் பொதுவுடைமைத் தலைவரின் பேச்சையே பதிலாகத் தருகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு எதை எடுத்தாலும் அந்த அப்பாவி பாட்டாளி மக்கள் மீண்டும் இவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டார்களே என்று வேதனைப்படுகிறார்களே தவிர, கண்ணீர் விடுகிறார்களே தவிர வேறு எதையும் சொல்லவில்லை. இந்த 3 ஆண்டு காலத்தில் செய்தது என்ன? கோடிக்கணக்கான



கொடுக்கிறீர்கள்.
ரூபாய் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறீர்கள்.
ஆனால் 3 ஆண்டுக் காலத்தில் ஏதாவது ஒரு நன்மை செய்திருக்
கிறீர்களா? திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது
அரசு பேருந்து பணியாளர்களுக்கு கலெக்ஷன் போனஸ் என்ற
ஒரு திட்டத்தை அமுல்படுத்தி அவர்களுக்கு நன்மைகளைச் செய்
தோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

அடுத்து இன்றைக்கு போனஸ் பிரச்சினை பற்றிப் பேசப்படு
கின்றது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற குறைந்த
பட்ச போனஸை, 4 சதவீதமாக இருந்ததை 8.33 சதவீதமாக
ஆக்கவேண்டும் என்று இந்தியாவிலேயே முதல் குரல் கொடுத்தது
எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான், என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது தொழிலாளர் நல அமைச்
சராக இருந்தவர் என்னுடைய தந்தையார் என்பதை நான்
பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்று
கூட தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை கூடியது. அதிலே
10 சதவீதம் மினிமம் போனஸ் வழங்கப்படவேண்டும் என்ற ஒரு
தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்றோம். அதே நேரத்தில்
20 சதவீதம் போனஸ் கொடுக்கவேண்டும் என்று அரசு
அனுமதித்தால் அதைத் தடுக்கின்ற அளவிலே மத்திய அரசு
சட்டம் கொண்டு வந்தால் கூட அதைத் தவிர்க்க வேண்டும்.
தீர்மானத்தையும் நேற்றைக்குத் தொழிற் சங்கப் பேரவை கூடிய
போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்
சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
குறைந்தபட்சம் 8 சதவீதம் என்று இருக்கக்கூடிய போனஸை 10
சதவீதமாக மாற்றி அதன் பிறகு லாபம் அதிகம் வந்தால் 20
சதவீதம் போனஸ் என்ற அளவிலே கொடுக்கப்படுமானால் அதிலே
எந்தவிதமான உச்சவரம்பும் வைக்கக் கூடாது என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். அப்படி மத்திய அரசு உச்சவரம்பு வைத்தால்
மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதற்கு இவர்கள் முன்வர
வேண்டும் என்று என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படு
கிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு
தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்கவேண்டும் என்ற கொள்
கையை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். இது
குறித்து ஈரோட்டு சேஷசாயி ஆலைப் போராட்டத்தை உங்கள்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே 12 (3)
ஒப்பந்தம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்துப்
போராட்டம் நடைபெற்றது. பிறகு அந்தப் போராட்டம்
வாபஸானது. அதன்பிறகு 18 (1)-ன்படி 26-12-1979 அன்று
கையெழுத்து இட்டிருக்கிறார்கள். ஆனால் அப்போது திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தொழிற்சங்கம் கையெழுத்திட வில்லை. ஆகவே அதைச் சார்ந்த 8 பேர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் காலம் தாழ்த்தி சமீபத்திலேதான் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். இங்கே ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்ட் என்று வைத்திருக்கிறோம். அதைப்பற்றி பிரமாதமாகப் பேசிக் கொள்கிறார்கள். அதிலே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது அவ்வாறு அவர்கள் வேலைநிறுத்தத் தில் ஈடுபட்ட காரணத்திற்காக அவர்களைப் பழிவாங்குகின்ற வகையில் அவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படக்கூடாது என்று லேபர் அட்வைசரி போர்டிலே முடிவு செய்யப் பட்டது. ஆனால் அந்த ஆலை நிர்வாகத்தினர் கிட்டத்தட்ட 159 தொழிலாளர்களை, அந்த ஹை லெவல் கமிட்டி முடி வினையும் மீறி, பழிவாங்குகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதாவது அவர்களுடைய புரொபேஷன் பீரியட் காலத்தை மேலும் நீட்டித்து அதோடு திருப்தி அடையாமல் 13 பேர்களை பழிவாங்கக்கூடிய வகையிலே நட வடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். 18 (1) செட்டில்மென்ட்டில் சிலர் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். மற்ற கட்சிக்காரர் களை, கிட்டத்தட்ட 159 பேர்களைப் பழிவாங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய கதி என்ன? ஆகவே இதை நம்முடைய தொழி லாளர் நல அமைச்சரவர்களிடத்திலே சொல்லாமல் வேறு யாரிடத்திலே சொல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து என். ஜி. ஓ. சங்கம் இருக்கின்றது. அங்கே ஒரே ஒரு சங்கம்தான் இருந்தது. ஆனால் அங்கே ஒரு போட்டி தொழிற்சங்கத்தை உருவாக்கினார்கள். ஒழுங்காக ஒரு சங்கம் இருக்கின்றபோதே போட்டிச் சங்கங்களை இப்படி ஏற்படுத்து கிறார்கள். இப்படிச் செய்தால் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலை எவ்வாறு ஏற்படும் என்று கேட்கவிரும்புகிறேன். தஞ்சாவூரிலே அண்ணா சர்க்கரை ஆலையிலே ஒரு போட்டி சங்கத்தை உருவாக்கி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் கூட சென்று அதிலே பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலை காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கின்றது என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

அடுத்து இன்றைக்கு இன்னொரு சம்பவம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கிண்டியிலே அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகம் இருக்கின்றது. அதனுடைய பதிவு எண் 1015- ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் சங்கம் அங்கே இருக்கின்றது. அந்தச் சங்கத்தின் தலைவராக திரு. இரா. கணேசன், பி. இ. ஹானர்ஸ்,எம். எஸ். சி. என்ற ஒருவர் அந்தச் சங்கத்தினுடைய தலைவராக இருந்துகொண்டிருக்கிறார்.



200 பேர்கள் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக் கிறார்கள். திடீரென்று 16—6—1980 அன்று, நீங்கள் தேதியைத் தயவுசெய்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், சென்ற ஜுன் மாதம் 16 ஆம் தேதி அன்றைக்குக் திடீரென்று அந்தச் சங்கத்திலே ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்றிவைக்கப்பெற்றது. உடனே அந்தச் சங்கத்தின் தலைவராக இருக்கக்கூடிய திரு. இரா. கணேசன் என்பவர் 'இங்கே அண்ணா திராவிட முன் னேற்றக் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பெற்றிருக்கிறது. நாமெல் லாம் கட்சிசார்பற்ற முறையிலே இந்தத் தொழிற்சங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்படி கட்சிக் கொடி ஏற்றி வைக்கப் பெற்றால் அரசியல் சார்புடையதாக சங்கம் ஆகிவிடுகிறது. ஆகவே அந்த மாதிரி சங்கத்திற்கு நான் தலைவ ராக இருக்க விரும்பவில்லை'' என்று சொல்லி தன்னுடைய ராஜி நாமா கடிதத்தை சங்கச் செயலாளர் திரு. வி. ஆர். சௌந்திர ராஜன் அவர்களிடம் கொடுத்தார்.

உடனே சங்க உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை அகற்றி விடுகிறோம் என்று சொல்லி, திரு. இரா. கணேசன் அவர் களே தொடர்ந்து இந்தச் சங்கத்திற்குத் தலைவராக இருக்க வேண்டும் என்று கேட்டு, அவரையே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுத்து அந்தக் கொடியை அகற்றி விட்டார்கள்.

ஆனால் என்ன நடந்தது? ஏதோ ஒருகாரணம் காட்டி 23—6—1980 அன்று திரு. இரா. கணேசன் பி. இ. ஹானர்ஸ், எம். எஸ்.சி. அவர்களை சஸ்பெண்ட் செய்தார்கள். சஸ்பெண்ட் செய்த பிறகு அவருக்குகொடுக்க வேண்டிய பாதி சம்பளத்தைக் கூட கொடுக்காமல் 25 சதவீத கால்வாசி சம்பத்தை பி. இ. ஹானர்ஸ் எம். எஸ். சி. படித்த ஆசிரியர் ஒருவருக்கு அங்கே கொடுக்கிறார்கள்.

அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்ட பிறகு 30 பேர்கள் கொண்ட வேறு ஒரு போட்டிச் சங்கத்தை உருவாக்கி நாளைய தினம் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் அதை ஜாம் ஜாமென்று திறந்து வைக்கப் போகிறார். அதற்கான அழைப்பு இங்கே வந்திருக்கிறது. என்றால், ''ஒரு தொழில், ஒரு சங்கம்'' என்ற அண்ணாவின் லட்சியத்தைத் தூக்கி காற்றிலே பறக்க விட்டது யார் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். இதை இந்த அரசாங்கம் அனுமதித்துக் கொண்டிருந்தால் நாட்டிலே எப்படி தொழில் அமைதி நிலவும். நாட்டிலே எப்படி ஜனநாயகம் வளரும், நாட்டிலே எப்படி தொழிலாளர்கள் நிம்மதி யாக இருக்க முடியும், டிரேட் யூனியனின் ரைட்டை எப்படி அவர்கள் எக்சர்சைஸ் பண்ண முடியும் என்று கேட்க விரும்பு கிறேன்.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு தொழிலாளர்கள் பிரச்னை எந்தப் பிரச்னையாக இருந்தாலும், இந்த அரசாங்கம் விரைவாகத் தீர்த்து வைத்தது என்பது வரலாற்றிலேயே, மிக விரைவாக முடிவு எடுத்தது என்பது எந்தக் கட்டத்திலேயோ, இந்த மூன்றாண்டுக் காலத்திலே கிடையாது. உங்களுக்குத் தெரியும், எதையும் அதிகமாக நான் கவனப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

சிம்சன் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு நாள் நீட்டித்தது. 3 மாதங்களுக்கு மேலாக இங்கே போராட்டங்கள் நடைபெற்றன. பிறகு ஆயிரம் ரூபாயோ, 1500 ரூபாயோ கிடைத்ததாகச் சொன்னார்கள். நோ வொர்க் நோ பே என்ற முறையிலே வேலை நிறுத்தம் செய்த காலத்திலே சம்பளம் வரவில்லை என்று சொன்னால், பின்னால் 1500 ரூபாய் பெற்றால் என்ன; பெறாவிட்டால் தான் என்ன? வந்தது போய் விட்டது என்று சொல்லக்கூடிய அளவிலே தான் அங்கேயும் இருந்தது.

இன்று காலையில் கூட நமது மாண்புமிகு உறுப்பினர் பம்மல் நல்லதம்பி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை கோரினார். குரோம் லெதர் கம்பெனியில் 25 மாதங்களாக போராட்டம் நடைபெறுகிறது. ஏறத்தாழ 2 ஆண்டு காலமாக அங்கே போராட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே பொற்காலம் பொங்கி வழிகிறது என்று சொன்னார்களே, அந்த இரண்டாண்டு காலத்தில் தான் இந்த போராட்டம் நடைபெற்றிருக்கிறது. 5 பேர்கள் செத்திருக்கிறார்கள். இனியும் பலபேர் சாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கே போராடிக் கொண்டிருக் கிறார்கள். சம்பளம் இல்லை, கூலி இல்லை, எந்த வசதிகளும் இல்லை. கிட்டத்தட்ட 90 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தோல் பொருட்கள் அங்கே ஏலம் விடப்பெற்றன.

அதைப் பற்றித்தான் விவாதிக்க வேண்டுமென்று பம்மல் நல்லதம்பி அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். எலும்பும் தோலுமான இந்தத் தொழிலாளர்கள் 8 முறைகள் இந்த கோட்டைக்கு ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். அவர்களை ஏறெடுத்துப் பார்ப்பதற்கு ஆள் இல்லை. தொழிலாளர்களின் கண்ணீரை துடைப்பதற்காக அவதாரம் எடுத்தவன் என்று பேசிக் கொள்ளும் நீங்கள், இதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பாடும்போது ரொம்ப சுலபமாக பாடி விடுகிறார்கள். ஒரு தொழிலாளி, நீ ஒரு தொழிலாளி என்று ஆனால் 8 முறைகளுக்கு மேலாக அந்தத் தொழிலாளர்கள் இங்கே, கண்ணீரும் கம்பலையுமாக, எலும்பும் தோலுமாக இங்கே வந்த பிறகும் வந்த தொழிலாளர்களை ஏறெடுத்துப் பார்க்க நாதியில்லை. அவர்களில் 5 பேர்கள் செத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை பேர் சாக இருக்கிறார்களோ, 90 லட்சம்



பெறுமான தோல் பொருட்களை அங்கே பணிபுரிகிற தொழிலாளர்களே ஏலம் விடக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது என்றால், தொழிலாளி நிம்மதி அடைவது எங்கே? அவர்களுக்காக 6 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பெறுவது எதற்காக ? அதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள் ?

அதேபோல மணலியிலே இரண்டு கம்பெனிகள் இருக்கின்றன. இந்தியன் ஆர்கானிக் கம்பெனி, ஸ்ரீராம் ஃபைபர்ஸ் என்கிற இரண்டு கம்பெனிகள் இருக்கின்றன. ஏறத்தாழ 3 மாத காலமாக போராட்டம் நடந்துக் கொண்டிருக்கிறது. அதில் இந்தியன் ஆர்கனைக் கம்பெனிக்கு 4 கோடி ரூபாய் லாபமும், ஸ்ரீ ராம் ஃபேபரிக்ஸ் கம்பெனிக்கு 6 கோடி ரூபாய் லாபமும் ஈட்டப்பட்டிருக்கின்றன.

[பிற்பகல் 1-10]

தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்து தருவதில்லை. இதனால் ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மாநில அரசுக்கு ரூ. 24 இலட்சம் வருமான இழப்பு ஏற்படுகிறது. மத்திய அரசுக்கு ரூ. 195 லட்சம் வருமான இழப்பு ஏற்படுகிறது. உற்பத்தி முடக்கம் நாள் ஒன்றுக்கு ரூ. 12½ லட்சம் ஏற்படுகிறது. இந்த அரசு கண்ணை மூடிக்கொண்டு அனந்தசயனத்தில் ஈடுபட்டிருக்கிறது என்றால் இதற்கு யார் பொறுப்பு ? உற்பத்தியைப் பெருக்குவோம் உற்பத்தியைப் பெருக்குவோம் என்று பேசிக்கொண்டே இருக்கிறோம். ஒரு நாளைக்கு இந்த அரசாங்கத்தின் கேளாக்காதுகளைக் கொண்டிருப்பதால், இந்த அரசு கண்மூடிக் கொண்டிருக்கிற காரணத்தினால், இந்த அரசு மந்தமாக இருக்கிற காரணத்தினா நாள் ஒன்றுக்கு ரூ. 12½ லட்சம் அளவிற்கு உற்பத்தி முடக்கும் ஏற்படுகிறது என்றால் ஏன் அதில் தலையிடவில்லை ? 93 நாட்கள் அங்கே வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண் டிருப்பதை அரசு ஏன் கவனிக்கவில்லை என்று இங்கே அன்போடு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு அரசியல் அறிஞன் சரியாகச் சொன்னான். இந்த அ.இ.அ.தி.மு.க. அரசை மனதில் வைத்துக்கொண்டுதான் சொன்னானோ என்னவோ எனக்குத் தெரியாது. அவன் சொன்னான், அந்த அறிஞன் சொன்னான்,

It is a sign for both Labour and Management to recognise each other as essential factors in the same enterprise andto settle their affairs among themselves without reccourse to Government.

உங்களுக்குள் ஏற்படுகிற பிரச்னைகளை முதலாளிகளும் தொழிலாளர்களும் நீங்களே ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு நீங்களே தீர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திவிடம் போகாதீர்கள். எந்தக் காரியமும் ஆகாது என்று அந்த அரசியல் அறிஞன் அ.இ.அ.தி.மு.க. வை மனதில் வைத்துக் கொண்டுதான் சொன்னானோ என்னவோ எனக்குத் தெரியாது. அது உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு பிரச்னை, நவமணி தினசரிப் பத்திரிக்கை வந்து கொண்டிருந்தது. 1976-ல் அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. ஆனால் இன்றுவரை அந்தத் தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய எந்தப் பணமும், அது க்ராட்டிவிட்டியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்தப் பணமாக இருந்தாலும் சரி இன்று வரை அவர்கள் கைக்குப் போய் சேரவில்லை.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் என்ஜினியரிங் கார்ப்பரேஷன்ஸ் இருக்கின்றன. பாடி பில்டிங் செய்யக்கூடிய வசதி அங்கே இருக்கிறது. பாடி பில்டிங் செய்யக்கூடிய அந்தத் தொழிலை அவர்களே வைத்துச் செய்யாமல் அங்கிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு அந்த வேலைவாய்ப்பினைக் கொடுக்காமல். அவர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளை அளிக்காமல், இவைகளை எல்லாம் டி.வி.எஸ்., எல்.ஜி.பி. போன்ற தனிப்பட்ட கம்பெனிகளுக்கு அளிக்கக்கூடிய காரணத்தினால் அந்த எஞ்ஜினியரிங் கார்ப்பரேஷன்ஸ் அந்த வேலையைச் செய்யாமல், அங்குள்ள தொழிலாளர்கள், அவர்களுக்கு வீணாக சம்பளம் கொடுக்கிறார்கள். தேவையற்று சம்பளத்தைக் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகிறார்கள். வேலைவாய்ப்பு கொடுக்க வாய்ப்பிருக்கும்போது ஏன் அவர்களுக்கு அதைக் கொடுக்கக்கூடாது? நான் இதை திருப்பித் திருப்பிச் சொல்கிற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தப் பிரச்னையாக இருந்தாலும் விரைவில் தலையிட்டு அதைச் சரியாகத் தீர்க்கிறீர்களோ அல்லது தவறாகத் தீர்க்கிறீர்களோ அதை கிடப்பில் போடாமல் மூன்று மாதம், நான்கு மாதம் என்று காலம் தாழ்த்தாமல் நிர்வாகத்தினரையும் தொழிலாளர்களையும் உட்கார வைத்து பேசுகிறபோது ஆயிரம் ரூபாய் லாபம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் தொழிலாளர்கள் இழந்த சம்பளம் ஆயிரம் ரூபாய். ஆகவே எந்தவிதமான லாபமும் அவர்களுக்கு இல்லை. எனவே எந்தப் பிரச்னையாக இருந்தாலும் அதை உடனடியாகச் செய்யவேண்டும்.

இங்கிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுகிறேன். ஒரு மிக முக்கியமான பிரச்னையாக இதை நான் கருதுகிறேன். நானும் ஒரு பத்திரிக்கையாளன் என்ற முறையில் சொல்கிறேன், அதில் சம்பந்தப்பட்ட முறையிற



சொல்கிறேன். பத்திரிகையாளர்களுக்கு ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் அரசாங்கம் பத்திரிகையாளர்களுக்கு வீடுகளை சொந்தமாக ஆக்கியிருக்கிறது. இங்கேயிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டுவசதி வாரியத்தில் அமைச்சராகவும், தொழிலாளர் நலத் துறை அமைச்சராகவும் இருப்பதால் இரண்டு பொறுப்புக்களையும் அவர்களே வைத்திருக்கிறார்கள் என்பதால் அவர்களிடம் ஒரு வேண்டுகோள். அந்த மாநிலங்களில் இருக்கக்கூடிய முறையில் அல்லது வேறு நிபந்தனைகளைப் போட்டாவது பத்திரிக்கையாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தால் — நம்முடைய தமிழக பத்திரிகையாளர்கள் ஏற்கனவே சில பத்திரிகைகள் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றும் அவர்கள் உரத்த குரலில் வாழ்த்துவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரான்சு நாட்டு அறிஞன் வால்டேர் சொன்னார்.

'Pen is mightier than sword'

வாளின் கூர்மையைவிட, பேனா முனை வலிமை வாய்ந்தது என்று அவர் கூறியிருக்கிறார். ஆகவே, இந்த அளவோடு நான் கூறிக் கொண்டு, வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி ஒரு கருத்தைக் கூற ஆசைப்படுகிறேன்.

வீட்டு வசதி வாரியத்திலே நம்முடைய கடன் வசதிகளுக்கு சரியான தொகை ஒதுக்கப்படவில்லை என்ற ஒரு அதிருப்தி நீண்ட நாட்களாக இருந்துகொண்டு வருகிறது. அதற்குக் காரணம், இதற்கு முன்னாலே இருந்த வீட்டு வசதி அமைச்சராக இருந்தவர், அடிக்கடி பம்பாய் சென்று, திரு. பூரி அவர்களைச் சந்தித்துப் பேசி, அதற்கான கடன் தொகையைப் பெற்று, இங்கே இருப்பவர்களுக்கு அதைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது தொகை குறைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அதிலே விண்ணப்பம் போடுகின்றவர்களுக்கும் அதிகமான சங்கடம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வியாசர்பாடியில், சிவகாமி அம்மாள் காலனி என்று ஒன்றிருக்கிறது. அங்கே வீடுகள் அடிக்கடி தீப்பற்றிக் கொள்கின்றது. மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அங்கே தீப்பற்றிக் கொள்ளாத, எரியாத வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரைக்கும் இதுவரை ஒன்றும் செய்யவில்லை. நான் ஏற்கனவே பட்ஜெட்டிலே பேசும்போதும் சொல்லியிருக்கிறேன். இந்த வீட்டு வசதி வாரியத்தில் இருக்கக்கூடிய வீடுகளுக்கு எந்தவிதமான வசதிகளையும் அவர்கள் செய்து தரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவார்களானால், மாண்புமிகு பாலன் அவர்களுடைய தொகுதியும் என்னுடைய தொகுதியும் பக்கத்திலே பக்கத்திலே இருப்பதால், நாங்கள் இரண்டு

பேர்களும் அவர்களுக்கு சுற்றிக் காட்டத் தயாராக இருக்கிறோம்; கடமைப்பட்டிருக்கிறோம். அந்தப் பகுதிகளுக்கு வந்தால், சாயங்காலம் செல்வது போலவும், இரவிலே இருட்டிலே போவது போலவும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னதுபோல் 'இருட்டறையிலே உள்ளதடா உலகம்' என்பதைப் போலவும், சாக்கடை வெள்ளத்திலே மிதந்து போகக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அங்கே எந்த வசதியும் செய்து தரப்படவில்லை. எல்லா வசதிகளையும் அங்கே செய்து தரவேண்டுமென்று சொன்னால், அப்படி செய்துகொடுத்தால் எங்கே தங்கள் பெயர் போய்விடுமோ என்ற காரணத்தால் அப்படிச் செய்கிறார்களோ தெரியவில்லை. எனவே, அங்கே எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல் பீடித் தொழிலாளர்கள் பிரச்னையிலே அவர்களுக்கும் வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும். அதிலேயும் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் ஓட்டல் தொழிலாளர்களுக்கு இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமித்து, அவர்களுடைய நிலைமையை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று நாம் எவ்வளவு தான் சொன்னாலும், இந்தக் காதிலே வாங்கி அந்தக் காதிலே விடுகின்ற நிலைமை இல்லாமல், இந்தத் தொழிலாளர்களுடைய பிரச்னைகளை எல்லாம் இந்த அரசு தீர்த்து வைக்கவேண்டும். பேரவைத் தலைவர் அவர்களும் முன்பு தொழிலாளர் நல அமைச்சராக இருந்தவர்கள்; எனவே, அவர்களையும், இப்போதுள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களையும் இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த விவாதத்தில் 17 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு, அரிய கருத்துக்களை வழங்கினார்கள். அநேகமாக பெரும்பான்மையானவர்கள் இந்த அரசை பாராட்டித்தான் பேசினார்கள். என் அருமைச் சகோதரர் மாண்புமிகு திரு. என.வி.என். சோமு அவர்கள் பேசும்போது கூட, உள்ளத்திலே பாராட்ட வேண்டிய மனப்பான்மையை வைத்துக்கொண்டுதான், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற காரணத்தினால் ஒன்றிரண்டு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, அவர்கள்கூட கடுமையான குற்றச்சாட்டு ஒன்றையும் இந்த அரசின் மீது சொல்லிவிடவில்லை என்பதை நான் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறேன்.



(பிற்பகல் 1.20)

விவாதம் மிகுந்த உயர்வான நிலையிலே நடந்தது என்பதைக் காண நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். திரு. அழகர்சாமி அவர்கள் கிராம கூட்டுறவு வீட்டு வசதி பற்றிச் சொல்லிப் பாராட்டினார்கள். நான் இங்கே அதைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். அகில இந்திய அண்ணா தி.மு.க. என்ன சாதித்து விட்டது என்று கேட்பவர்களுக்கு—
"One lakh houses" scheme for the rural poor.
என்று சொல்ல விரும்புகிறேன்.

கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் ஐந்தாண்டுகளில் கட்டித் தருவது என்பது திட்டம். 1978–79-ல் கட்டப்பட்டவை 7,430; இதிலே 3,303 அரிசனங்களுக்கு. 1979-80-ல் கட்டப்பட்டவை 29,041; அதிலே 2',481 வீடுகள் அரிசனங்களுக்கு, இப்போது கட்டிக் கொண்டிருப்பது 16,767; அதில் 12,705 வீடுகள் அரிசன மக்களுக்கு. எவ்வளவு பெரிய சாதனை என்று பார்க்கவேண்டும். ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது திட்டம் – நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்; அதை நான்காண்டு காலத்திலேயே முடித்து விடலாம் என்று இந்த அரசு நம்புகிறது. அதை மிக வெகுவாகப் பாராட்டிய அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றிப் பேசியிருந்தால் நீங்களே பாராட்டியிருப்பீர்கள்.

குடிசை மாற்று வாரியத்தில் இந்த அரசு செய்திருக்கக்கூடிய பெரிய சாதனையை நான் சொல்லியாக வேண்டும்.

1975-76—ல் 1,654 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; 1976-77-ல் 2,554; 1977–78-ல் 1,048; 1978–79-ல் 3,368; 1979–80-ல் 4,088. இப்போது கட்டப்பட்டுக்கொண்டிருப்பது 'அன்பினிஷ்டு 4,571' இனி கட்ட இருப்பது வருகிற ஆண்டில் 3,940.

இதிலே முக்கியமான கருத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே கட்டியபோது அதன் விலை 5,500 ரூபாய்; பிறகு 8,000 ரூபாயாக இருந்தது; தற்போது 12,500 ரூபாய் வருகிறது. 12,600 ரூபாய் ஆனாலும் கூட 1978–79-ல் 3,368; 1979–80 ல் 4,088 வீடுகள் கட்டியிருக்கிறோம். இப்போது 4,571 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 3,940 வீடுகள் கட்டப்படும் என்பதையும் கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியுறுவார்கள். அகில இந்திய அண்ணா தி.மு.க.வின் சாதனை சிறப்பாக இருக்கிறது என்று வெளியே சொல்ல முடியாதவர்கள் உள்ளூற எண்ணுவார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1980 ஜூலை 15

குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், கிராம வீடு கட்டும் சொசைட்டி ஆகிய இந்த மூன்று அமைப்புகளின் மூலம் இதுவரை வீடு கட்டியிருப்பது 1979–80-ல் 53 கோடி ரூபாயில் நாற்பதாயிரம் வீடுகள்—An all time high record—அகில இந்திய அண்ணா தி.மு.க. என்ன செய்தது என்று கேட்கிறவர்களுக்கு நான் சொல்லியாக வேண்டும்.

வீட்டு வசதி பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லாத காரணத்தால் நானும் அதற்குமேல் செல்ல விரும்பவில்லை.

தொழிலாளர் நலன் பற்றி நிரம்பப் பேசினார்கள். நண்பர் சோமு அவர்கள் சொன்னார்கள். நான் ரொம்ப மதிக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர் குழந்தைப் பருவத்திலிருந்து நிரம்பப் பழகியவர்— சிம்சனைக் கொண்டு வந்து மூதலிலே விட்டார்கள். சர்க்காரியா கமிஷன் திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற்சங்க இயக்கத்திலே (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன்—Let me finish. I will allow as much time as you require.

சர்க்காரியா கமிஷன் வரை சென்று திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்க துரோகக் கொள்கை கண்டிக்கப்பட்டு புத்தகமாக வெளிவந்திருக்கிறது.

அந்த நேரத்தில் எவ்வளவு பேர் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள், எவ்வளவு பெரிய போராட்டம் அந்த சிம்ப்சனில் நடந்தது என்பதை மறந்து விடக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு எவ்வளவு கடுமையாகப் பேசினாலும் நான் எவ்வளவு பொறுமையாக உட்கார்ந்திருந்தேன். யாராவது இன்டரப்ட் பண்ணினார்களா ?

THIRU. A. RAHMANKHAN : As I am a Member of this House, I have a right to ask for clarifi:ation.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோமு விளக்கம் கொடுக்க எழுந்திருக்கிறார், அவர் கொடுக்கட்டும். திரு. ரகுமான்கான் அமர வேண்டும்.

திரு என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சிம்சன் பிரச்சினை ஆபத்தான பிரச்சினை நானே தொடங்கினேன் என்று 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற சிம்சன் பிரச்சினையின் காரணத்தினால் 3 மாதம் அதை மூடி வைத்துக் கொடுப்பதாக சொன்ன 125 ரூபாயைக் கூட நிர்வாகம் கொடுக்காமல் [illegible] ஆண்டு கொண்டிருந்தபோதுதான், அதாவது [illegible] திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்



1980 ஜூலை 15] [திரு. என். வி. என். சோமு]

போதுதான் 3 மாதம் அந்தத் தொழிலாளர்கள் வறுமையில் போராடி Wheel & Rims மூடப்பட்டு 140 தொழிலாளர்கள் வெளியே தள்ளப்பட்டு அந்தப் பிரச்சினைகளை நான் எடுத்துக் காட்டினேன். அமைச்சர், அவராகவே சர்க்காரியா கமிஷன் பற்றி சொல்லி வம்புக்கு இழுத்தார்....

மாண்புமிகு திரு. எஸ் : இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் சொல்லி விடுகிறேன்.

திரு. என். வி. என். சோமு : நான் இன்னும் முடிக்கவில்லை. முடித்த பிறகு அமைச்சர் பேசட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேண்டுமானால் கடைசியிலே சொல்லலாம், நான் பேசியதற்குப் பின்னாலே அவர்கள் பேசட்டும். டிரென்ட் இருக்காது. நான் பேசியதற்குப் பிறகு அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : I am on my legs. நான் நின்று கொண்டு இருக்கும்போது உறுப்பினர்கள் பேசுவது சபைக் குறிப்பிலே ஏறாது. திரு. என். வி. என். சோமு விவாதத்திலே கலந்து கொண்டவர்.

[பிற்பகல் 1.30]

அவர் கிளாரிஃபிகேஷன் சொல்ல வேண்டுமென்றால் சொல்லட்டும். திரு. என்.வி.என். சோமு அவர்கள்.

திரு. என். வி. என். சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, 1979 ஆம் ஆண்டு நடந்த சிம்சன் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டேனே தவிர, மாண்புமிகு அமைச்சரவர்கள் சர்க்காரியா கமிஷனைப் பற்றிச் சொல்லி, அதனால்தான் கெட்ட பெயர் வந்ததாகச் சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சராக இருக்கக் கூடிய நாவலர் பேரிலேயே அவ்வளவு பெரிய மாலை-நெக்லஸ் ஊழலை இங்கே இப்பொழுது முதலமைச்சராக இருக்கக்கூடியவர்கள் அப்பொழுது பெட்டிஷனராக இருந்து குற்றஞ்சாட்டினார்கள். அவரை அவை முன்னவராக, நிதியமைச்சராக வைத்துக் கொண்டு.... (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார். தவிர, விளக்கங்கள் கேட்கவோ, பதில் சொல்லவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்கள் என்னைப்பற்றிச் சொல்லியதன் காரணமாக நான் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அதைப்பற்றி விரிவாகவே, வாய்ப்பு ஏற்படுகின்ற பொழுது இந்த அவையிலே

எடுத்து வைக்க இருக்கிறேன். என் மீது மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் புகார் கொடுத்தார்கள். அவர் புகார் கொடுப்பதற்கு முன்னாலேயே நான் வழக்கு மன்றத்திலே வழக்குத் தொடுத்தேன். அந்த வழக்கிலே நான் நிரபராதி என்று வெற்றிப் பெற்றேன். சர்க்காரியா கமிஷனிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் கொடுத்த 54 புகார்களிலே சர்க்காரியா கமிஷன் விசாரிக்கக் கொடுத்த 28-லே இந்த வைர மாலை லஞ்சமாகக் கொடுக்கப்பட்ட புகார் இல்லவே இல்லை; அது சர்க்காரியாவிலே வரவே இல்லை; எடுக்கவே இல்லை என்பதைச் சொல்கிறேன். அந்த விவகாரத்தைப்பற்றி முழுவதும் தெரிய வேண்டுமானால்....

திரு. அ. ரகுமான்கான் : பாடநூல் நிறுவனம் பற்றி.... (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இடைமறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறுக்கிடுவது நல்லது அல்ல. எந்த உறுப்பினரையும் உட்கார வைக்கின்ற உரிமை தங்களைச் சார்ந்ததே தவிர, உறுப்பினர்கள் யாரும் யாரையும் உட்கார வைக்க வேண்டியது இல்லை. அது இந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, அந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, உட்கார வைக்கின்ற உரிமை தலைவராக இருக்கின்ற தங்களைத்தான் சார்ந்தது, பேச வைக்கின்ற உரிமையும் தங்களைத்தான் சார்ந்தது. விளக்கங்கள் கேட்கவும். பதில் சொல்லவும் அத்தனை பேருக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, அவரவர்கள் தனியாகத் தலைவருடைய அனுமதியைப் பெற்று எடுத்துச் சொல்லலாம்.

சர்க்காரியா கமிஷன் என்பதாலே இந்த அளவோடு இப்பொழுது நிறுத்துகிறேன். மற்ற விவகாரங்கள், அவர் சொல்கிற சர்க்காரியா பற்றி உறுப்பினரவர்கள் சொல்லலாம். என்னைப்பற்றி இழுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றபொழுது முழுக் கதையையும் வேண்டுமானாலும் எடுத்துச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். இப்பொழுது அதைப்பற்றி இல்லை என்பதை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, சிம்சன் பிரச்னையில் தொழிற்சங்க ஊடுருவல், தகாத காரியங்கள் நடந்தன என்ற புகார் வந்து, அதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தகாத போக்கைப் பற்றி சர்க்காரியா கமிஷனில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி.என். சோமு அவர்கள் இப்பொழுது 1979-இலே நடந்த வேலை நிறுத்தத்தைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்பற்றி அவர்கள் முழுமையாகத் தெரிந்து கொள்வது நல்லது. ஒப்பந்தம் நடந்தது; அந்த வேலை நிறுத்தத்தை எப்படி முடித்தோம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எப்படி முடித்தோம் என்று சொன்னால் உறுப்பினரவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். அப்பொழுது எங்களிடத்திலே ஒரு சட்டம் இருந்தது. கவர்ன்மென்ட் கொடுக்கக் கூடிய டைரக்ஷன் — யாராக இருந்தாலும் கேட்க வேண்டுமென்று இருந்தது. பின்னால் அது பல தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின் வாங்கப்பட்டது. அதைக் காண்பித்து, நீங்கள் இந்தக் குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கவில்லை என்றால் இதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று,

I will give you direction on behalf of the Government மிரட்டி, 75 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் போட்டு, இதிலே ஒரு ஷரத்து எழுதப்பட்டது.

கோபதாபத்தையெல்லாம் விட்டு, யார், எந்தக்கட்சி என்பதையும் மறந்து விட்டு, ஆர அமர யோசித்து, யார் நன்றாக நடந்திருக்கிறார்கள் என்பதை முடிவு செய்ய வேண்டும். இதிலே ஒரு ஒப்பந்தம், அரியர்ஸ் என்ன தர வேண்டுமென்பதைத் தொழிலாளர் நல அமைச்சர் நிர்ணயிப்பார் என்று போட்டிருக்கிறார்கள். உடனே இரு சாராரையும் அழைத்துக் கேட்டேன். 50, 40 ரூபாய்க்குமேல் கொடுக்க முடியாது அரியர்ஸ் என்பது முதலாளிகளின் வாதம். நாங்கள் 1-7-1979 லிருந்து ரூ. 75 மாதம் வாங்கியிருக்கும் போது, அதற்கு முந்தைய காலமாகிய 1-7-1978-லிருந்து, 1979 ஆகிய ஓராண்டுக் காலத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 75 அரியர்ஸ் கொடுப்பதுதான் நியாயம் என்பது அவருடைய வாதம். ஊதிய உயர்வு ரூ. 75 என்றால், ஓராண்டு கால அரியர்ஸ் ரூ. 75 ஆக இருக்க வேண்டும்—இது திரு. குருமூர்த்தி அந்தச் சங்கத்தின் சார்பாக எடுத்து வைத்த வாதம். முதலாளிகள் வாதம் முடியாது, அதைத் தர முடியாது.

We will go into liquidation. Closure—பண்ண வேண்டிய நிலை வந்து விடும் என்று சொன்னார்கள். மகிழ்ச்சியோடு சொல்கிறேன், புரட்சித் தலைவர் சார்பாக நான் கொடுத்த தீர்ப்பு, ரூ. 75 தான்

அரியர்ஸ் தர வேண்டும். (பலத்த ஒலி) மூடுவேன் என்று சொன்னதெல்லாம் எனக்குத் தெரியும். அந்த மிரட்டல்களை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன், பல இடங்களிலே. ரூ. 75 தரவேண்டுமென்று தீர்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து, சிம்சன் கம்பெனியினர், இன்றையதினம் ஹைகோர்ட்டில் கேஸ் போட்டிருக்கிறார்கள். முதலாளிகளுடைய போக்கை, நான் மிக வருத்தத்துடன் சொல்கிறேன், அந்தப் போக்கை இந்த அரசு இனிமேல் அனுமதிக்காது, தாங்கிக் கொண் டிருக்காது.

15 ஆம் தேதி நான் கையெழுத்து போட்டிருக்கிறேன், 17 ஆம் தேதி அரசு கலைக்கப்பட்டிருக்கிறது. 20 ஆம் தேதி உத்திரவு போயிருக்கிறது. உத்திரவு போகும்போது, கையெழுத்து போட்டவர் இன்றையதினம் அமைச்சராக இல்லை என்று சொல்லி, வழக்கைப் போட்டு விட்டால், அந்த ஒரு ஃபைலிலே தானா கையெழுத்து போட்டேன். 15 ஆம் தேதி எத்தனை ஃபைல்களில் கையெழுத்து போட்டிருப்பேன். அத்தனையும் டாழாய் போய் விட்டதா? அது இருக்கட்டும்.

நடுவர் என்று சொல்லி, ஒரு அமைச்சர் கொடுக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்வேன் என்று சொல்கிறது ஒரு நிறுவனம். அதைத் தொழிற்சங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நீங்கள் குறைவாகக் கொடுக்க வேண்டுமென்று பொரிசுக்கு வருகிறீர்கள். தொழிற் சங்கம் எங்களுக்கு ரூ. 75 ஊதிய உயர்வு என்றால், அரியர்ஸ் ரூ. 75 தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறது. It is a natural corollery. ஆகவே, ரூ. 75 தான். அரியர்ஸ் ரூ. 900 ஒவ்வொரு தொழிலாளிக்கும் கிடைக்க வேண்டுமென்று கையெழுத்துப் போட்டவன்தான் இந்த இராகவானந்தம், புரட்சித் தலைவரின் ஆட்சியின் சார்பாக. அதை எதிர்த்து (குறுக்கீடு) I am not yielding அதை எதிர்த்து, இன்றையதினம் ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். (குறுக்கீடு) Speaker Sir, I am not yielding.

Thiru N. V. N. SOMU : Sir, my approach is different . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியிலே, You have got a chance to say something வரிக்கு வரி விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதைத் தாங்க முடியவில்லையென்றால், அதற்குப் பிறகு எப்படி அரசியலிலே இருப்பது? (குறுக்கீடு) I am not yielding.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்பொழுது, சேஷசாயி பேப்பர் போர்ட்——அந்த ஆலை முதலாளியின்மீது காதலா என்று கேட்டார். நண்பரே இந்தப் புரட்சித்



தலைவருடைய அரசு, வாரி, வாரி வழங்கிய வள்ளலுடைய கட்சி ஆளுகிறதே தவிர, யாரிடத்திலும் வாங்கிய கட்சியைச் சேர்ந்தது அல்ல. அள்ளி, அள்ளிக் கொடுத்தார். அதுவும் எப்படி? Self employed. தானே வேலை செய்து, தானே உழைத்து, தானே பணம் ஈட்டி, தானே அள்ளி, அள்ளிக் கொடுத்தவர், அவர்தான் தமிழக முதல்வர் என்பதை மறந்து விடாதீர்கள். (பலத்த கர ஒலி). அந்தக் கட்சியிலே இருக்கிற நாங்கள் (திரு. என். வி. என். சோமு நின்றார்) I am not going to yield unless and until I finish my speech. அப்பேர்ப்பட்டவர் நடத்துகின்ற அரசு எந்த முதலாளிகளுடைய தயவிலேயும் இல்லை——இந்த ஆட்சி இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சிம்சனில் அப்படி ஒரு தீர்ப்பு கொடுத்திருக் கிறோம். அது இன்றையதினம் வழக்கு மன்றத்தில் இருக்கிறது. ஒருக்கால் மீண்டும் நாம் ஆட்சிக்கு வரமாட்டோம் என்று பலர் நினைத்து ஏமாந்ததைப் போல், அந்த முதலாளியும் ஏமாந்து விட்டார், அதுதான் வேடிக்கை. கேஸ் போடுகிறபொழுது நம்முடைய ஆட்சியில்லை. ஆட்சி வந்தவுடனே 'ரிங்' பண்ணினேன். அந்த முதலாளியினுடைய 'பெர்சனல் மானேஜரை'க் கேட்டேன். என்னங்க, கேஸை இன்னும் நடத்தப் போகிறீர்களா, என்று. 'இல்லை சார், மிஸ்டர் குருமூர்த்தி, ஃபாரீன் போயிருக்கிறார். அவர் வந்தவுடனே, வித்ட்ரா பண்ணுகிறோம்' என்றார். ஆக, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தொழிலாளர் பிரச்னையை எப்படி அணுகுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

இங்கே சொன்னார்கள்——என்.வி.என். சோமு அவர்கள் சொல்லும்போது கூட இரண்டு மூன்று இடங்களிலே அதிக நாள் வேலை நிறுத்தங்கள் இருக்கக்கூடியதை ஒழுங்காக எடுத்துச் சொல்லி, நன்றாக வாதாடினார்கள். ஆனால், அதிலே என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் தலையிடவே இல்லை என்றார். அங்கே தான் சொல்கிறேன், நானே அழைத்துப் பேசியிருக்கிறேன்; பலமுறை பேசி இருக்கிறேன். ஒப்பந்தம் வரவில்லை. வருவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்திருக் கிறோம். ஆனாலும், மிகக் கடுமையாக இருக்கிறோம். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இனி தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகையை வாங்கித் தருவதில் எவ்வளவு ஒரு கடுமையான போக்கை, எவ்வளவு ஒரு உறுதியான போக்கை, கையாளப் போகிறது என்பதை இனிதான் முதலாளிகள் பார்க்கப் போகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

'பாலு கார்மென்ட்ஸ்' ——அந்தப் பெண்கள் வந்தார்கள். பார்த்த புரட்சித் தலைவர் கண்ணீர் விட்டார்கள். பாலு கார்மென்ட்ஸ் மட்டுமல்ல, அம்பத்தூரில், அப்படி எங்கெங்கே

இந்தத் தொழில் நடக்கிறதோ, ஆடை நெசுக்கும் தொழில்--- அங்கே பெண்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள்---அவர்களை யெல்லாம் வேலையை விட்டு நீக்கி விடுகிறார்கள்; ஆர்டர் இல்லையென்று சொல்லி, நீக்கி விடுகிறார்கள். சங்கம் அமைத்தாலே வேலையை விட்டு நீக்கிவிடுகிறார்கள், நானே அழைத்துப் பேசினேன், இரண்டு மூன்று தடவை பேசினேன். நடத்தித்தான் ஆகவேண்டுமென்று சொன்னேன். இல்லை, எங்களுக்குள் தகராறு, ஆர்டர் இல்லை, அப்படி இல்லை, இல்லை, என்று சொல்லி, தட்டிக் கழித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். நாங்களும் சும்மா இருப்பதாக இல்லை, நான் சொல்லி வைக்கிறேன்.

[பிற்பகல் 1·40]

அதற்கென ஒரு சட்டமே அவர்களைப் பாதுகாப்பதற்குக் கொண்டு வரவேண்டும் என்று புரட்சித் தலைவர் சொல்லி, அதை இந்த அரசு ஆலோசனை செய்து கொண்டு இருக்கிறது. அந்தத் தொழிலை நடத்துவது பற்றி அரசே கோஆபரேடிவ் சொசைட்டியின் மூலம், கூட்டுறவுத் துறை மூலம் நடத்தும். அப்படித்தான் நாங்கள் இருக்கிறோமே தவிர யாருக்காகவும் பயந்து இந்த ஆட்சியை நடத்தவில்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சி வந்தபிறகு— நாங்கள், அதை எல்லாம் புள்ளிவிவரத்தை எல்லாம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்---பல நிறுவனங்களில் குறைந்தபட்ச ஊதியத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். பல தொழிற் சாலைகளில் குறைந்தபட்ச ஊதியத்தை மீண்டும் ரிவைஸ் செய்து இருக்கிறோம். அதற்குப் புள்ளிவிவரங்களை எல்லாம் வைத்திருக் கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் படிக்கவில்லை. அவைகளை எல்லாம் ஷெட்யூலிலே சேர்த்து இருக்கிறோம்.

அது மட்டுமல்ல. கான்ட்ராக்ட் லேபர். Certain Contract Labour Regulation and Abolition Act ரெகுலேட் செய்வது என்று அரசு பார்த்தது. 2½ ஆண்டு காலம் ஆயிற்று. இனிமேல் இந்த அரசு அபாலிஷன் ஸ்டேஜுக்குப் போகவேண்டும் என்று தீவிர மாக ஆலோசித்துக் கொண்டு வருகிறது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன். அதற்கு ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறது. அட்வைசரி போர்டு நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் யார் யார் வரவேண்டும் என்று விரும்பினார்களோ அவர்கள் எல்லாம் வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய ஆலோசனையும் பரிந்துரைகள் எல்லாம் இந்த அரசுக்குப் பயன்படும். Engineering Cement Paper and Textiles நிறுவனங்கள் பற்றி அந்த போர்டு அதை விசாரித்து இருக்கிறது. டெக்ஸ்டைலைப் பொறுத்த வரையில் அதனுடைய ரிப்போர்ட் கவர்ன்மெண்டுக்கு வந்திருக் கிறது. சப் கமிட்டி ரிப்போர்ட்டு அட்வைசரி போர்டுக்குப் போய் அட்வைசரி போர்டிலிருந்து கவர்ன்மெண்டுக்கு வரவேண்டும். பிறகுதான் கவர்ன்மென்ட் பரிசீலிக்கவேண்டும்.



சேஷசாயி பேப்பர் போர்டைப் பற்றிப் பேசினார்கள். அதைப் பற்றி ஒரு தவறான கருத்து இருக்கிறது. அருமைச் சகோதரர் ராமமூர்த்தி அவர்கள் ராஜினாமா செய்துவிட்டார்கள். அரசு அதன் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது சரியல்ல. சப் கமிட்டியினுடைய ரிப்போர்ட் அட்வைசரி கமிட்டிக்குப் போய் அட்வைசரி கமிட்டியில் இருந்து அரசுக்கு வரவேண்டும். அட்வைசரி கமிட்டியில் இருந்து அரசுக்கு இன்னும் வரவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் தவறான கருத்து பரப்பப்படக்கூடாது. அவருக்குப் பதிலாக வேறு ஒருவரைக் கேட்டிருக்கிறோம். மேலும் 4 பேர்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இருந்ததை 6 பேர்களாக மாற்றி இன்னும் 2 பேர்களை—தொழிற்சங்கத் தலைவர்களை—சேர்த்து நடத்துவதாக இருக்கிறோம்.

அடுத்து சில பேக்டரிகளிலே ஆயிரம் பேர்கள் வேலை செய்தால் அதில் 500 பேர்கள் காஷுவல் லேபரர்கள். 250 பேர்கள் கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் We are not going to tolerate this any further. அதைப்பார்த்துக் கொண்டு இருப்பதற்கு நான் இனிமேல் தயாராக இல்லை. ஸ்டேஜ் பை ஸ்டேஜ் ஆகத் தான் ஒரு காரியத்தை செய்யவேண்டும். ஒரு காரியத்தை செய்யவேண்டும் என்று சொன்னால் அதற்கு காலம் வரணும், நிதானமாக வரணும். சட்டத்தை திருத்துவதற்குக் கமிட்டி அமைத்தீர்களே என்ன செய்தது என்று கேட்டார்கள். 5,6 சட்ட திருத்தத்தை கொண்டு வருவதற்கு வேண்டிய பரிந்துரை களை வழங்கி இருக்கிறது. அது என்னென்ன என்பதை இங்கே எழுதிவைத்திருக்கிறேன். அவைகளை எல்லாம் கொண்டு வரப் போகிறோம். என்ன அநியாயம், ஒரு பாக்டரியிலே கேஷுவல் லேபரர் என்று சொல்லுகிறார். எவ்வளவு வருஷம் 7 வருஷம். 7 வருஷம் கேஷுவல் லேபரர். அவன் கல்யாணம் பண்ணி, குழந்தையைப் பெற்று, அந்தக் குழந்தை கூட கின்டர் கார்டன் பள்ளியிலே படித்துக் கொண்டு இருக்கிறது. ஆனால், அவர் கேஷுவல் லேபர். அதற்கு அடுத்து என்ன நடக்கிறது என்றால் அவனை வேலையை விட்டு நிறுத்திவிடுகிறார்கள். காரணம் அவர்கள் சொல்லுகிறார்கள் நீ கேஷுவல் லேபர் You have no lien on any job போ, வீட்டுக்குப்போ என்று சொல்லுகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னார். 2 ஆண்டுகள் பணி புரிந்தால் அவரைப் பர்மனன்ட் பண்ண வேண்டும், என்று சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னேன். ஆனால், தொழிலாளர் நல அமைச்சர் தன்னுடைய பதவியை பர்மனன்ட் செய்து கொண்டுவிட்டார், அவர் தொழிலாளர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். என்னுடைய மந்திரி பதவியை பர்மனன்ட் செய்தவர் புரட்சித் தலைவர்,

அவர்களுக்கு இன்றைக்கு சொல்வேன், அந்தச் சட்டம் வருகிறது. இரண்டு ஆண்டுகள் வேலை செய்தால் பர்மனென்ட் செய்யவேண்டும் என்ற சட்டம் புரட்சித் தலைவர் கையெழுத்திட்டு அந்த பில் ரெடியாக இருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு அனுப்புகிறோம், அதனுடைய கன்கரன்ஸ் வந்த உடனே இங்கே சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திரம் வந்த 32 ஆண்டுகளுக்குப் பின்னாலும் கேஷுவல் லேபர் முறை அதிகமாக உள்ளது. ஆனால் இப்பொழுது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் : After two years he must be mace permanent.

சஸ்பென்ஷன் செய்து விடுவார்கள். காலணா தரமாட்டார்கள். No subsistance Allowance. எங்கள் ஸ்டான்டிங் ஆர்டரில் அந்தச் சட்டம் இல்லை. மாடல் ஸ்டான்டிங் ஆர்டரில் இருக்கிறது. அந்த மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் இருப்பதை நாங்கள் இன்கார்பரேட் செய்வது இல்லை, பட்டினி, பசி, 3 வருஷம், 4 வருஷம். What can he do? இனிமேல் அது முடியாது. The Tamil Nadu Industrial Establishment Subsistance Allowance Act, 1980 is about to come. முதல் 90 நாள்—50 சதவிகிதம்—பாதி சம்பளம். அதற்கு மேலே போனால், 75 சதவிகிதம் சம்பளம். 180 நாள்—அதாவது 6 மாதம் போனால்—புல் பே—முழுச் சம்பளம் சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் என்று தரவேண்டும். அந்தச் சட்டத்தைத் தயாரித்து புரட்சித் தலைவரிடத்தில் கையெழுத்து வாங்கியாகி விட்டது. மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப் போகிறோம். இது சாதாரண வேலையா? வேலையை விட்டு எடுத்து விடுவாய், சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் தரமாட்டாய், நீ பாட்டுக்கு இருப்பாய், இவன் பட்டினி இருப்பான். இது good friend, hereafter nothing doing. You have to shell out full pay. 180 நாள் ஆகிவிட்டது என்று சொன்னால் அவனுக்கு முழுச் சம்பளம் கொடுக்க வேண்டும். அவன் முழுச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு நீ கூப்பிட்டால், கூப்பிடு, கூப்பிடாவிட்டால் போ என்று இருப்பான். முதலாளிக்கே அவனைக் கூப்பிடவேண்டும் என்ற எண்ணம் வந்து விடும். முழுச்சம்பளம் கொடுக்கிறான் இல்லையா.

(திரு. என். வி. என். சோமு எழுந்தார்.)

தயவு செய்து உட்காருங்கள். நான் பேசி முடித்து விட்ட பிறகு பேசலாம். என் வயதுக்கு மதிப்புக் கொடுத்து கொஞ்ச நேரம் பேசாமல் இருங்கள். கடைசியில் பேசலாம். ஆக இப்படி பல



சட்டங்கள். Unorganised labour பற்றிச் சொன்னார்கள். Yes, sir, we are bringing a legislation to safeguard the unorganised labour also. அதற்கும் சட்டம் தயாராக இருக்கிறது.

ரெபரன்ஸ். இங்கே தோழர்கள் சொன்னார்கள். இந்த ரெபரன்ஸ் இருக்கிறதே, அது ரொம்பத் தலைவலி. பல நண்பர்கள் கோபித்துக் கொள்வார்கள். என்ன அண்ணே, இதற்கு ரெபரன்ஸ் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறீர்கள் என்று. ஏன் ரெபரன்ஸ் முடியாது. 33(சி) (2)-ல் இருப்பதைப் போல் ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்கினால், அவனே நேரடியாக லேபர் கோர்ட்டுக்கு போகும் உரிமையை வழங்கும் முறையில் சட்டம் தயாரித்துக்கொண்டு இருக்கிறோம். அது முடிந்த பிறகு, அதையும் சி.எம். கையெழுத்து வாங்கி சென்ட்ரல் கவர்ன்மென்ட்டுக்கு அனுப்பப்போகிறோம். போதுமா, இன்னும் சொல்லட்டுமா.

இன்றைக்கு கன்சிலியேஷனுக்குக் கூப்பிட்டால் யார் வருகிறார்கள். மானேஜ்மெண்ட் வருவதில்லை சிவில் ப்ரோசீஜர் கோட், 1908—வழக்கறிஞர்களுக்குத் தெரியும்—அந்தச் சட்டத்தைப்போல் கேட்டரிங் ஆக்டில் கொண்டு வந்த மாதிரி, கன்சிலியேஷன் ஆபீசருக்கும் ஆவணங்களைக் கொண்டு வருவதற்கும், சாட்சிகளை விசாரிப்பதற்கும் முதலாளிகளைக் கொண்டு வருவதற்கும் பவர்ஸ் கொடுக்கக்கூடிய சட்டம் புரட்சித் தலைவர் ஆட்சியில் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சொல்கிறேன். 'ஸ்டில் மோர்' வெல்பேர் ஆபீசர்கள் என்று இருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரியும், அந்த வெல்பேர் ஆபீசர்கள் தொழிலாளர்களுக்கு எந்த வெல்பேரும் செய்வது இல்லை. He is for the welfare of the Management. இந்த வெல்பேர் ஆபீசர்தான் தொழிலாளிக்கு ஏற்படக்கூடிய சங்கடங்கள், கஷ்டங்கள் ஆகியவற்றை மேனேஜ்மென்டிற்கு எடுத்துச் சொல்லவேண்டும். ஆனால் தொழிலாளிக்கு சார்ஜ் ஷீட் போடுவதற்கே இவர் தான் மேனேஜ்மென்டிடம் சொல்லிக் கொடுப்பார். ஏனெனில் முதலாளிகளிடத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறார். He is on the pay rolls of the mangement. அதனால் நாங்கள் என்ன செய்ய இருக்கிறோம் என்றால் வெல்பேர் ஆபீசர் என்பவர்கள் அரசாங்க ஊழியர்களாக இருக்க வேண்டும். சம்பளம் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம். எங்களுக்கு ரெமிட் செய்து விடுங்கள். நாங்கள் அவர்களுக்குக் கொடுத்து விடுவோம். அப்படி இருந்தால்,

[திரு. எஸ். இராகவானந்தம்] [1980 ஜூலை 15

முதலாளிகள் தயவு அவருக்குத் தேவையில்லை. போனஸ் கொடுக்கவில்லை, மற்ற மற்றவைகள் கொடுக்கவில்லை என்று சொன்னால் உடனே அவர் நடவடிக்கை எடுப்பார், இல்லை அரசாங்கத்திற்குச் சொல்வார். ஏனென்றால் He is not under any obligation அப்படிப்பட்ட ஒரு சட்டத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். நாங்கள் அதை மறுபடியும் வலியுறுத்தி திருப்பி அனுப்பியிருக்கிறோம். அதை நான் 19-20-ம் தேதி டெல்லியில் நடைபெற இருக்கும் தொழிலாளர் நல அமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்கிறபோது வலியுறுத்த இருக்கிறேன். எப்படியும் அவர்களை கன்வின்ஸ் செய்து மீண்டும் வலியுறுத்துவதாக இருக்கிறேன்.

திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். ''வொர்க்கர்ஸ் பார்ட்டிசிபேஷன் இன் இண்டஸ்டிரீஸ்'', அதைப் பற்றியும் கூட நாங்கள் டெல்லியில் பேசுவதாக உள்ளோம்.

வொர்க் லோட் பற்றிச் சொன்னார்கள். திரு. ஹேமச் சந்திரன் அவர்கள் D.C.L. ஐப் பார்க்கவேண்டும் என்று சொன்னால், பாவம், மதுரைக்கு வருகிறார். அதனாலே, திருநெல்வேலியில் ஒரு டி.சி.எல். Alright, have a D.C.L. at Tirunelveli. மேட்டூர் டாமில் இருக்கிறவர் டி.சி.எல்.—ஐப் பார்க்க வேண்டும் என்று சொன்னால் அவர் எங்கே செல்கிறார் கோயம்புத்தூர். ஆகவே, One more D.C.L. at Salem, மேட்டூர் டாமில் இருக்கிறவர் இனி கோயம்புத்தூர் போகவேண்டாம், சேலத்தில் இருக்கிற டி.சி.எல்.-ஐ பார்த்துக்கொள்ளலாம். ஆகவே, சேலம், திருநெல்வேலி ஆகிய இரண்டு இடங்களில் இருக்கிற டி.சி.எல். இனிமேல் அங்கே இருக்கிற பிளான்டேஷன் ஏரியா தொழிலாளர் நலனையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த அதிகாரமும் அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது.

என்னுடைய கவலை எல்லாம், முதலாளிகளின் போக்கு சரியாக இல்லை. ஒரு அரசு கூப்பிடுகிறது என்று சொன்னால் வருவது இல்லை. லேபர் ஆபீசர் மட்டத்தில் பேசுகிறார்கள். அசிஸ்டென்ட் கமிஷனர் மட்டத்தில் பேசுகிறார்கள். டி.சி.எல். மட்டத்தில் பேசுகிறார்கள். ஜாயின்ட் கமிஷனர் மட்டத்தில் பேசுகிறார்கள். கமிஷனர் மட்டத்தில் பேசுகிறார்கள். அப்படிப் பேசிவிட்டு, மினிஸ்டர் மட்டத்திற்கு வருகிறார்கள். மினிஸ்டர் கூப்பிட்டு இப்படிச் செய் என்று சொன்னால் அதைக் கேட்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். I think it cannot be tolerated அதை இனிமேல் தாங்க முடியாது.



1980 ஜூலை 15] [திரு. எஸ். இராகவானந்தம்]

[பிற்பகல் 1-50]

ஏனென்றால் அரசு சொல்கிறது என்றால் $4\frac{1}{2}$ கோடி மக்கள் சார்பாகச் சொல்கிறது; இது நல்லது என்று சீர்தூக்கிப் பார்த்து இப்படிச் செய்யுங்கள் என்று சொல்கிறது. தொழிலாளர் டிஸ்மிஸ் என்றால் டிஸ்மிஸ் வேண்டாம், 20 நாள் சஸ்பென்ட் செய்துவிட்டு வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அதற்கு என்ன சொல்கிறேன் என்றால், இதைப் பற்றிப் புரட்சித் தலைவரைச் சந்தித்து பேசி, அவர்களுடைய அனுமதியைப் பெற்றுவிட்டு ஒரு திட்டம் வகுக்கலாம் என்றிருக்கிறேன்; யாராவது ஒரு முதலாளி எந்த ஒரு ஸ்டேட்டிலாவது புதிதாக்க தொழிற்சாலை தொடங்க அனுமதி கேட்டால், அந்த முதலாளி ஏற்கனவே ஒரு ஸ்டேட்டில் இருக்கிற தொழிற்சாலையை மூடியவராக இருக்கக்கூடாது; ஒரு ஸ்டேட்டில் மூடிவிட்டு, இன்னொரு ஸ்டேட்டில் தொழில் தொடங்கக்கூடாது.

A legislation should be brought on that issue. என்ற நிலை வந்தாக வேண்டும். ஏன் இங்கே மூடுகிறார்கள் ? இங்கே மூடுவதாக பிளான் செய்யும்போதே கர்நாடகத்தில் அல்லது வேறு ஒரு மாநிலத்தில் ஒரு யூனிட் ஆரம்பித்துக்கொள்கிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று தெரிந்தவுடன் இதை மூடிவிட்டு வேறு மாநிலத்தில் தொடங்க திட்டமிடுகிறார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் வேண்டுமென்றே செய்வதில்லை. வேலை நிறுத்தம் செய்துவிட்டு ரூபாய்க்கு 4 அணா வட்டி வீதத்தில் கடன் வாங்கி குடும்பம் நடத்தும் கஷ்டத்தை நாம் பார்க்கிறோம். பட்டினி கிடந்து கஷ்டப் படுகிறார்கள். ஆகையால் அவர்களாகச் செய்வதில்லை; அவர்கள்மேல் திணிக்கப்படுகிறது. அதை யாரும் மறந்துவிடக் கூடாது. போராட்டம் நடத்தப்போகிறார்கள் என்று தெரிந்த வுடனே வேறு மாநிலத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக் கிறது, நாள் ஆக, நாள் ஆக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கிறோம் என்று சொன்னவுடனே 'க்ளோஸ்' பண்ணிட்டேன்; அதற்கு ஆர்டர் கிடைக்கவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இதை மூடிவிட்டு வேறு மாநிலத்திற்குப் போய்விடுகிறார்கள். ஆகையால் இன்னும் இரண்டு நாளில் புரட்சித் தலைவர்களை கலந்து பேசிவிட்டு டெல்லியிலே இதைப் பேசப்போகிறேன். எந்த ஒரு ஸ்டேட்டிலாவது தொழிற் சாலையை மூடினால் அவர்கள் இன்னொரு மாநிலத்திலே தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடாது என்பது 'ஆல் இந்தியா லெவலில்' வந்தாக வேண்டும். அதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டும். கொஞ்சம் கடுமையாகத்தான் இருக்கும். கடுமை யாக இருந்தால்தான் நடக்கும்.

இரண்டாவது முறை மந்திரியாக வந்தபிறகு முதலாளிகளிடம் பேசி, பேசி, பேசி I am sorry, I am completely exhausted. இது சரியாக வராது. இந்தப் போக்கை நாம் அனுமதித்துக் கொண்டிருந்தால் தொழிலாளர்களுக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது. இங்கே ஒரு அமைச்சர் கூப்பிட்டுச் சொன்னால் செய்ய வில்லை என்றால் என்ன அர்த்தம்? Umanath's famous phrase கொஞ்சம் 'ஆர்ம் டிவிஸ்டிங்' என்று சொல்வார். இது தேவை போல் தெரிகிறது. அவர்களுக்கு செய்ய முடியாது. ஒரு தொழிற்சாலையை மூடிவிடுகிறார்கள். வேறு தொழிற்சாலை இல்லையா? அரசு அதில் ஒன்றும் செய்யமுடியாதா? அதிலே நாம் ஏதாவது செய்ய ஆரம்பித்தால் என்ன ஆகும்? செய்ய ஆரம்பிக்கவில்லை. ஆனால் இப்படியே இருந்துவிடும் என்று நீங்கள் எண்ணிவிடக்கூடாது.

பாலு கார்மென்ட்ஸ் கதையை நீங்கள் பாருங்கள். 3 மாதம், 4 மாதம் மூடிக்கிடக்கிறது என்று சொன்னால், அவருக்குத் தெரியும். ஏற்கனவே ஒரு சட்டம் இருந்தது. 300 போர்களுக்கு மேல் இருந்தால் அரசைக் கேட்டுக்கொண்டுதான் மூடவேண்டும் என்று சட்டம் இருந்தது. ஆனால் அந்தச் சட்டம் 'ஸ்ட்ரக் டவுன்' ஆகிவிட்டது சுப்ரீம் கோர்ட்டில். அதனால் அவர்கள் இஷ்டப்பட்டால் மூடிவிடுகிறார்கள், இஷ்டப்பட்டால் லாக் அவுட் செய்கிறார்கள், இஷ்டப்பட்டால் திறக்கிறார்கள். அதைக் கேட்டால் 'சாரி' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். அதை இந்த அரசு அனுமதிக்கப்போவதில்லை என்பதை நான் இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றப்படி இ.எஸ்.ஐ. பற்றிச் சொல்லியாக வேண்டும். 1-5-79-லிருந்து தமிழ்நாடு முழுமையுமாக 44 ஏரியாக்களில் இ.எஸ்.ஐ. திட்டத்தை 'ஃபேமிலிக்கு எக்ஸ்டன்ட்' பண்ணியிருக் கிறோம். நீங்கள் கண்டித்துப் பேசுங்கள்; நல்லதுதான். ஆனால் நல்லது செய்திருக்கிறோமே, அதைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்லக்கூடாதா? இது சாமானிய வேலையா? தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கே இந்த ஸ்கீம் இருக்கிறதோ அங் கெல்லாம் Full benefit to the insured person as well as to his family. 115 ரூபாய் 'மாக்சிமம்'. இந்த 115 ரூபாய் வரையில் செலவு பண்ணிவிடுகிறோம். 1/8, 7/8 என்று மாநில அரசும், மத்திய அரசும் கொடுக்கிறது. அதற்குமேல் செலவாகிவிட்டால் ஒவ்வொருவருக்கும் நாம் முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண் டும். அப்படி இருந்தும் கூட 44 எக்ஸ்டன்டட் ஏரியாக்களிலும் அவர்களுடைய குடும்பத்திற்கும் பெட், மருந்து, ஸ்பெஷல் மருந்து இன்னும் உள்ள எல்லா வசதிகளையும் இந்த அரசு செய்து கொடுக்கும். காட்டரிங் ஷாப்—இவைகளுக்கும் ஏற்கனவே நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்; உங்களுக்குத் தெரியும். அப்படி இருந்தும் நம்முடைய தோழர்கள் என்னுடைய தொகுதிக்கு இ.எஸ்.ஐ. திட்டம் வேண்டும் என்று கேட்கிறார்கள்.



நியாயமான கேள்வி. எங்களுடைய எல்லையில் இருக்கிறது; இவ்வளவு தூரம் வருது அண்ணே! அடுத்த ஃபாக்டரிக்கு இல்லை என்கிறார்கள். நியாயமான கோரிக்கைதான். இந்த ஆண்டு இந்த அரசு அந்த எல்லைகளுக்கும் இ.எஸ்.ஐ. ஸ்கீமை எக்ஸ்டன்ட் பண்ணுவதில் செலவைப்பற்றி பொருட்படுத்தாமல், தாராளமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. திட்டம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். மேலும் நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இதிலே எல்லாம் தாராளமாக இருப்பதாக நாங்கள் இருக்கிறோம்.

என்னுடைய பேச்சை முடிப்பதற்கு முன்னால் தமிழகத் திலுள்ள முதலாளிகளுக்கு இந்த அரசின் சார்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு நியாயமாக நடந்து கொள்ள விரும்புகிறது. தொழிலாளி வர்கத்தினருக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை அவர்கள் பெற்றே தீர வேண்டும். குரோம் லெதர் ஃபேக்ட்ரி மாதிரி பணத்தை எல்லாம் விழுங்கிவிட்டு கடைசியாக 5½ கோடி ரூபாய் வரையில் நஷ்டத்தை வைத்துவிட்டு அதற்குப் பிறகு நீங்கள் நடத்துங்கள் என்று சொல்லிக்கொண்டு வந்தால், நம்மால் அந்தப் பணத்தை வாங்க வழியில்லை. ஒரு ஃபேக்டரியை நடத்துகிறார்கள், அதிலே இந்த ஆண்டு நஷ்டம், அடுத்த ஆண்டு நஷ்டம், அதற்கடுத்த ஆண்டு நஷ்டம். இப்படியே நஷ்டம் வந்து 4-வது ஆண்டிலே மூடிவிட்டுப் போகிறார்கள்.

By mismanagement or by falsification of accounts or by manipulation of accounts பணத்தை சேர்த்து வைத்துக்கொள்கிறார்கள். அந்தப் பணத்தைத் தடுப்பதற்கு சட்டம் இல்லை. ஆகவே இந்த நிலையில் நாம் 200 ரூபாய் கொடுத்தால் அது எத்தனை நாளைக்கு வரும். அவர்கள் கொள்ளை அடித்துக்கொண்டு வந்து போனபிறகு நாம் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்து வேலை கொடுப்பது என்பது சாத்தியக்கூறா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் ஒரு லெளட் திங்கிங். ஃபர்ஸ்ட் இயரிலே நஷ்டம் என்று சொன்னாலே அதை மானிட்டர் பண்ணி எதற்காக நஷ்டம் வருகிறது, ஏன் வருகிறது என்பதைப் பார்த்து அந்த முதலாளி மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு சட்டம் கொண்டுவர வேண்டும், இல்லை என்று சொன்னால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

க்ரோம் லெதர் பேக்டரி நிலை அதுதான். அவர்கள் கொள்ளை அடித்துவிட்டு போனபிறகு அரசாங்கத்தின் தலையில் கட்ட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். சில பேங்கிங் இன்ஸ்டிட்யூஷனில்

கரப்ட் ப்ராக்டீஸ் இருக்கின்றது. நான் ஒரு மினிஸ்டர் என்பதை உணர்ந்துதான் இதைச் சொல்கிறேன். அது வயபிள் யூனிட்டாக இருக்கின்றதா கியாராண்டி உண்டா என்பதை எல்லாம் பார்க்காமல் நஷ்டம் வரும் என்று தெரிந்தபிறகும் கூட மேலும் மேலும் பணத்தைக் கொடுத்துக் கொண்டு போகிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டது இன்று அதிகமாக வந்துவிட்டது.

க்ரோம் லெதர் கம்பெனியில் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு வேலை தருவதில்லை—என்ன peculiar snow; wonderful show. இந்த மாதிரி ஆட்களை உலகத்திலே வேறு எங்குமே பார்க்க முடியாது, —கதவைத் திறந்து வைத்துக்கொண்டு தினமும் அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களும் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேலை இல்லை. இவர் இருக்கிறார். பிறகு வந்து, என்னைப்போல ஏழை உலகத்திலேயே வேறு யாரும் இல்லை என்று என்னிடமே வந்து சொல்கிறார். வேறு யாரிடமாவது சொன்னாலும் பரவாயில்லை. நம்மை விட ஏழை வேறு யாரும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருப்பவன் நான். ஆகவே இப்படிப்பட்டவர்களை எல்லாம் நாம் விடுவதாக இல்லை. ஆகவே ஆரம்பத்திலேயே அதாவது ஃபர்ஸ்ட் இயரிலேயே மானிட்டர் பண்ணி, இவ்வாறு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத் தொழிற்சாலை நடத்திவிட்டு பிறகு மூடிக்கொண்டு போகின்ற நிலையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இப்படியெல்லாம் பேசினால், பிறகு தொழிற்சாலை வராது என்று சொல்லக்கூடும். எங்கே போவார்கள். பணம் வைத்திருப்பவர்கள் எங்கேயும் போக முடியாது. கோடி ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களால் வாழ முடியாது. அண்ணா அவர்கள் சொன்னார்கள். Money fetches money, என்று. அதாவது பணம் பணத்தை இழுக்கிறது. ''தம்பி அந்த மிராசுதாரரைப் பார்த்தாயா ? அந்த நிலத்திலே விளைந்த நெல்லை விற்று அதில் வந்த லாபத்தை வைத்துக் கொண்டு அதோ கட்டப்பட்டிருக்கின்றதே மாடி வீடு, அது அவருடையது, அந்த ஆலை அவருடையது. சினிமாக் கொட்டகை அவருடையது. அந்த வயலிலே இருந்து சம்பாதித்த பணத்தை வைத்துக்கொண்டு இந்த மிராசுதார் கட்டியது இந்தத் தொழிற்சாலை, சினிமாக்கொட்டகை, ஆனால் அந்த வயலிலே உழைக்கின்றானே தொழிலாளி அவனுக்குக் கிடைத்தது என்ன தெரியுமா? காசம், புன்மம் என்று அண்ணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் பணத்தைப் போட்டு பணத்தை இழுக்கச் செய்வார்கள். ஆனால் சொல்லக் கூடும், இப்படியெல்லாம் சொன்னால் எங்கேயாவது ஓடிப் போய் விடப்போகிறார்கள் என்று. எங்கே போக முடியும். அவ்வாறு போகாமல் இருப்பதற்குத்தான் வழி செய்யப் போகிறோமே, இங்கே மூடினால் அடுத்த ஸ்டேட்டுக்குப் போகக் கூடாது என்று. ஆகவே தொழில் அமைதி வேண்டுமென்றால்





தொழில் அதிபர்கள் இன்னும் சற்று தாராளமாக நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துவிட்டாலே ஏதோ தங்களுக்கு எதிரிகள் என்று நினைத்துக் கொள்வதே தவறு. தொழிலதிபர்கள் தங்களுடைய இன்டரஸ்டைப் பாதுகாத்துக்கொள்ள அசோசியேஷன் வைத்துக்கொள்ளவில்லையா? அதேபோன்று தொழிலாளிகள் சங்கம் வைத்தால் வரவேற்க வேண்டும். தொழிற்சங்கத் தலைவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதை கொடுக்கப்படவேண்டும். அவர் வந்த உடனேயே எழுந்து,

Please come, take your seat.

வாங்க, ரொட்டி சாப்பிடுங்க, இந்தாருங்கள் காபி, என்ன? என்ன சமாசாரம்?

Are you addicted to smoking?

இந்தாருங்கள் சிகரெட், சாப்பிடுங்கள் என்று சொல்லலாம். அதில் எல்லாம் தப்பு இல்லை. அனைவரும் ஈக்குவல். அந்த அளவுக்கு ஈக்குவாலிட்டி ஏற்படுத்தி நடத்தினால்தான் முடியும்.

அடுத்து அரசு சொல்லக்கூடிய ஆலோசனையை ஏற்றுக் கொள்வது என்ற அளவுக்குத் தொழில் அதிபர்கள் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய இறுதியான வேண்டுகோளாகும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் தொழில் அமைதியைக் காப்பாற்ற முடியும். உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்லி அருமையான கருத்துக்களைச் சொன்னவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு வெட்டுப் பிரேரணைகளை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த இரண்டு மானியங்களையும் நிறைவேற்றித் தரும்படி பணிவோடு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 2—00]

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அமைச்சர் சொல்லியிருப்பதிலே பேங்கிங் இன்ஸிடிடியூஷன் என்று பொதுவாகச் சொல்லியிருப்பதினால், நேஷனலைட்ஸ் பாங்கும் வரும் அதனால் 'கரப்ட் பிராக்டீசஸ்' என்ற வார்த்தையை மட்டும் குறிப்பேட்டிலிருந்து எடுத்து விட........

திரு.என். சங்கரய்யா ; அமைச்சர் அவர்கள் சொன்னது அப்படியே இருந்தால் என்ன? அவர்கள் பேசியது குராம் லெதர் கம்பெனியிலே நடந்தது பற்றி. அங்கே நடந்தது என்ன? பல ஆண்டு காலமாக அந்த பாங்கிங் இன்டிடியூஷன் ஏராளமான பணத்தை அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்துவிட்டு, அதற்குப் பிறகு இப்போது ஒன்றும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால்; எந்த அடிப்படையில் அவர்கள் கொடுத்தார்கள். அந்த கம்பெனி நஷ்டத்தில் ஓடிக்

(திரு. என். சங்கரய்யா)

கொண்டிருக்கும் போது எந்த அடிப்படையிலே மீண்டும் மீண்டும் பணத்தை அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்தக் சம்பவத்தில் பின்னணியாகத்தான் அது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அது எவ்வாறு தவறாகும்? ஏன் நீக்கச் சொல்கிறீர்கள் என்று புரிய வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாங்கிங் இன்ஸ்டிட்டியூஷன்ஸ் என்று பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேஷனலைஸ்டு பாங்குகளும் அதில் வரும். அதனால் அந்த குறிப்பிட்ட வார்த்தையை 'கரப்ட் பிராக்டீஸஸ்' என்பதை மட்டும்......

(கூச்சல் குழப்பம்)

திரு.என்.சங்கரய்யா : தலைவர் அவர்களே, நீங்கள் இப்படி ரூலிங் கொடுத்தால் எந்த நிறுவனங்களைப் பற்றியும் எந்தவித மான குறையும் கூறமுடியாத என்று நிலை பின்னால் ஏற்படும் அளவிற்கு போய்விடும். அப்படிப் போகக்கூடாது. இங்கே தனிப் பட்ட யாரைப் பற்றியும் பேசவில்லை. பொதுவாக பேங்கிங் இன்ஸிடிடியூஷன் என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இந்த பாங்கி யிலே இந்த மானேஜர் இப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டு எந்தவிதக் குற்றச்சாட்டும் கூறப்படவில்லை. சமுதாயத்திலே இருக்கச் கூடிய அனைத்து பாங்கிங் இன்ஸிடிடியூஷன்களையும் சேர்த்துக் சொல்லப்பட்டதாகத்தான் அர்த்தம். இதிலே தவறு என்ன இருக்கிறது. அப்படிக் குறையைச் சொல்வது தவறு என்று சொன்னால் அது நம்முடைய உரிமையை பாதிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட முறையிலே குற்றச்சாட்டு கொண்டு வருவது என்பது வேறு. எழுதிக் கொடுத்தும் கொண்டு வரலாம், மற்ற முறைகளிலேயும் கொண்டு வரலாம். அது வேறு விஷயம். இதிலே அந்த குறிப் பிட்ட பகுதியை மட்டும் தானே நான் சொல்கிறேன். மற்ற தெல்லாம் அப்படியே இருக்கட்டும்.

திரு ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிப் பட்ட நபர் பேரிலே குறிப்பிட்டுச் சொன்னாலும் தனிப்பட்டவர் களைச் சொல்லக்கூடாது என்று சொல்லி நீக்கிவிடுகிறீர்கள், பொதுவாகச் சொல்லுங்கள் என்று சொல்கிறீர்கள். பொதுவாகச் குறிப்பிட்டு பேசினால் பொதுவாகச் சொல்லக்கூடாது என்று சொல்கிறீர்கள். தனிப்பட்டுச் சொன்னால், பொதுவாகச் சொல்லச் சொல்கிறீர்கள், பொதுவாகச் சொன்னால், தனிப் பட்டுச் சொல்லச் சொல்கிறீர்கள்.

It will shut out our right to criticise on the floor of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிரிட்டிசைஸ் செய்வதின் வால்யூ எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த விஷயத்தில் வருகிற போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிற வேகத்திலே



[பேரவைத் தலைவர்]

குறிப்பிட்டு விட்டார்கள். அதனால் 'கரப்ட் பிராக்டீஸ்' என்ற வார்த்தை மட்டும் தான் வேண்டாமோ என்று நினைக்கிறேன்..

THE HON. THIRU S. RAGVANANHADAM : I have said what I have felt from the bottom of my heart,

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள் பீல் பண்ணியதை (உணர்ந்ததை) சொல்லியிருக்கிறார்கள். இதனால் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி யாராவது பாதிக்கப் பட்டிருந்தால், எத்தனையோ வழிகளில் அவைகளை மறுக்கலாம் குறிப்பிட்ட நபர் மேல் இந்தக் குற்றச்சாட்டு என்று கூறவில்லை. பொதுவாகக் கூறப்பட்டது. இது அடுத்தாற்போல் தொடர்ந்து கொண்டே வருமாதலால்தான் சொல்கிறேன். நாம் விவகாரம் கிளப்பத்தான் இங்கே வந்திருக்கிறோம். சட்டமன்றம் இருப் பதே நாட்டிலுள்ள மக்களின் விவகாரங்களை எடுத்துச் சொல்லத்தான். இப்படிச் சொல்வதற்கு ஒரு மெம்பருக்கு உரிமை இருப்பது போல் அமைச்சருக்கும் இருக்கிறது. அமைச்சர் அவர் கள் உணர்ந்திருப்பதை ஒரு குறிப்பிட்ட சம்பவம் இப்படி நடந் திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை ஏன் எடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் தங்கள் உள்ளத்திலே இருப்பதை சொல்வதாகச் சொல்கிறார். மன்ற உறுப்பினர்கள் அது இருக்கட்டும் என்றால் எனக்கு இதிலே ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாட்டிலிருக்கிற எல்லா வங்கிகளையும் பாதிக்கிற அளவிற்கு வங்கிகளில் 'கரப்ட் ப்ராக்டீஸஸ்' என்று பொதுவாகச் சொல்வது தவறு. ஆனால் குறிப்பிட்ட ஒரு வங்கியில் இன்ன தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டிச் சொல்கிற அளவிற்கு வருகிற போது பதில் சொல்ல வேண்டியவர்கள் அல்லது அதற்கு விளக்கம் தர வேண்டி யவர்கள் அந்த வங்கியாக இருப்பார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் அதைச் சொல்கிறேன் என்று சொல்ல விரும்புவாரே யானால் சில வங்கிகள் என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர பொதுவாக வங்கிகள் என்று சொல்வது பொருத்தமாக யிருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; சில பாங்குகள் என்று வைத்துக் கொள்வோம்.

திரு. என். வி. என். சோமு; பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஸிம்ஸன், விவகாரம், சர்க்காரியா பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அதே சர்க்காரியா பாடநூல் விவகாரத்தில் இன்றைய நிதி அமைச்சர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹிர்பிஸனுக்குப் போனால் பழைய கால கதையெல்லாம் வரும்.

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ட்ரேட் யூனியன் பற்றிச் சொன்னேன் 'ரெலவண்ட்டு ட்ரேட் யூனியன்', அவ்வளவு தான்.

திரு. அ. ரகுமான்கான் : அதே சர்க்காரியா நாவலர் பற்றியும் குற்றம் சொல்லியிருக்கிறார்.

திரு. என். வி, என். சோமு : Justice Sarkaria has found fault with Thiru V. R. Nedunchezhiyan.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் நான் வைர நெக்லஸ் விவகாரம், பாடநூல் விவகாரம் அத்தனையையும் பற்றிச் சொல்லத் தயாராயிருக்கிறேன். சர்க்காரியா கமிஷனில் பாடநூல் விவகாரத்தில் என் பெயர் இல்லை, பிறகு விளக்கங்கள் வருகிறபோது வந்தது. அப்போது சர்க்காரியா கேட்டார், வானமாமலை தான் வழக்கறிஞராக இருந்தார், இதில் நெடுஞ்செழியன் மீது Monetary involvement என்று சொல்லி பண விவகாரம் ஏதாவது செய்திருக்கிறாரா என்று கேட்டதற்கு பண விவகார ஊழல் எதுவும் இல்லை என்றுசொல்லி, முறைகேடு இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார். 'irregularities முறைகேடு இருக்கிறது என்று சொன்னார். Irregularities என்றுதான் சர்க்காரியா தீர்ப்பே தவிர நான் லஞ்சம் வாங்கினேன் என்றோ அல்லது ஊழல் செய்தேன் என்றோ எந்தவிதமான findings கூட அல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசுகிற போது நான் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படியிருக்க நான் இப்போது பேசுகிற போது இப்படிக் குறுக்கிட்டுப் பேசுவது சரியல்ல. நான் பேசுகிற போது பொறுமையாகக் கேட்கிற உணர்வு திரு. சோமுவிற்கு இல்லை. (கூச்சல்-குழப்பம்) நான் கேட்பது, குற்றஞ்சாட்ட அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதே போல் பதில் சொல்ல எனக்கு உரிமை இல்லையா? (கூச்சல்-குழப்பம்) Irregularities என்று சொன்னால், வழக்குமன்றத்தில் வழக்கு வரும்போது Irregularities இல்லை என்று வாதிட்டு வெல்வதற்கு எனக்கு தைரியம் இருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண். 29

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, தோல்வியுற்றது.



திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் கு. ரமணி, எம். ஆறுமுகம், பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண். 29- தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,39,40,00க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று; நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 33-

திருவாளர்கள் த. வேணுகோபால், நா. சுந்தரராஜ், கு. ரமணி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : 'மானியக் கோரிக்கை எண், 33- வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,17,53,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் (16-7-1980) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-10 மணிக்கு ஒத்தி வைக்கப், பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ, சட்டப்படிச்சான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

*40 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள். 7, 8 35, 42 43, 55 மேலும் 56 (கடன் செலவுகள், பொதுக் கடன் திருப்பிச் செலுத்துதல்). ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.(தமிழ் ஆங்கிலம்).

1980 ஜூலை 15]

* 41. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38, மேலும் 51 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

* 42. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 40 மேலும் 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

* 43. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மேலும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

* 44. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 28 34 மேலும் 44 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக் ககள். (தமிழ் ஆங்கிலம்).

* 45. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30, 31 மேலும் 32 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

* 46. 1980-81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39-சாலைகளும், பாலங்களும், 52-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள். (ஆங்கிலம்)

@ 47. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு 1980-81 (தமிழ், ஆங்கிலம்),

@48. கோரிக்கை எண். 14—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@49. கோரிக்கை எண் 33—தமிழ்நாட்டில் வீட்டுவசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

** 50. கோரிக்கை எண். 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (1980-81). (தமிழ் ஆங்கிலம்).

கோரிக்கை எண்கள் 29, 33 ஆகியவற்றிற்கான வெட்டுத் தீர்மானங்களின் பட்டியல் 14-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன,

---

* 14-7-1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

@12-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 14-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன



1980 ஜூலை 15]

## இணைப்பு I.

[43....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.**

தமிழ்நாட்டில் 1979ஆம் ஆண்டில் எல்லாப் பகுதிகளிலும் தொழில் அமைதியும், நட்புறவும் பொதுவாக நிலவின. அரசு ஏற்கெனவே மேற்கொண்ட கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லாததே இதற்குக் காரணம்.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் துணி ஆலைகளில் அமைதியின்மை நிலவியது. தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறை வேற்றிக்கொள்ள வேலை நிறுத்தங்களில் ஈடுபட தொழிற் சங்கங்களுக்கு உள்ள உரிமையை அரசு அங்கீகரித்தது. துணி ஆலைகளில் நடந்து முடிந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக, அரசு தொழில் நடுவர் மன்றத்தின் முன் வைப்பதற்கு ஓர் இறுதி உடன்பாடு ஏற்பட்டது. நியாயமான ஊதியத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்குதல், தொழிலாளர்களின் உரிமை களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல், தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அங்கீகரித்தல், அவ்வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதினால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதகங்களைக் கருத்தில் கொண்டு தக்க சமயத்தில் அரசு தலையிடுதல், இணக்கம் செய்வித்தல், சுமுகமான உடன்படிக்கை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கா வண்ணம் பார்த்துக் கொள்வது என்ற அரசின் கொள்கை காரண மாக மாநிலம் முழுவதும் ஒரு சுமுக நிலை நிலவியது. தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முயற்சியில் நிருவாகத்தினரும், தொழிற்சங்கங்களும் நல்கிய ஒத்துழைப்புக்கு அரசு தம் பாராட்டு தலை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, சட்டபூர்வமான அறிவிப்பின் மூலம், சிறப்பு நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு தனிக் கவனம் செலுத்தியது. அவ்வாறு பலவகைப்பட்ட

148/157—

சட்டங்களின் வாயிலாக தொழிலாள வர்க்கத்திற்காக வழங்கப் பட்ட நன்னோக்கு நடவடிக்கைகளின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ள பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் அரசு குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயித்தது; குறைந்த அளவு ஊதியத்தை திருத்தியமைத்தது. இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியம் வழங்குதல் சட்டத்தின் அட்டவணையில் மேலும் பல வேலை களைச் சேர்த்தது ஆகியவைகளைச் சிறப்பு அம்சங்களாக இங்கு குறிப்பிடலாம். பத்துபேருக்கு அதிகமாகவும், 20 பேருக்கு குறைவாகவும் தொழிலாளர்கள் பணிபுரியும் எல்லா நிறுவனங் களிலும் ஊதியக் கொடை வழங்கும் பயனை இவ்வரசு நீட்டித் துள்ளது. தொழிலாளர்கள் தங்களின் தொழில் பணியாற்று வதற்கான சொந்த ஆவணச்சான்று இருக்கவேண்டியதின் அவசியத்தைக் கருதி, பணிப்பதிவேடு (அல்லது) கால அடையாள அட்டைகள் தொழிலாளர்களுக்கு இருக்கும்படி வகைசெய்து அரசு பல சட்டங்களில் விதித்துறைகளைச் சேர்த்துள்ளது. தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலனைக் காப்பதற்காக, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் உள்ள நல நடவடிக்கை கள் அமுல்படுத்தப்பட்டு வருவதைச் கண்காணிக்க அரசு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மாநிலத்தில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இவ்வறிக்கையில் கீழ்க்காணும் வகைப்பாடுகளின் கீழ் ஆய்வு செய்யப்படுகிறது :—

(1) தொழில் தகராறுகள் சட்டம்.
(2) கடைகள்-நிறுவனங்கள் பற்றிய சட்டம்.
(3) ஊதியங்கள் சட்டம்.
(4) சமூகப் பாதுகாப்புச் சட்டம்.
(5) தொழிலாளர் நல நடவடிக்கைகள்.
(6) எடை-அளவைகள் சட்டம்.

இவற்றோடு, வேலைவாய்ப்புப் பணி, கைத்தறிப் பணியாளர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல் தொடர்பான பணி குறித்த தனி அத்தியாயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.



## I. தொழில் தகராறுகள் சட்டம்.

### 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இவ்வாண்டில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கை யும் அவை தீர்த்து வைக்கப்பட்ட விவரங்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| | 1978 | 1979 |
|---|---|---|
| (a) வரப்பெற்ற புகார்கள் தகராறுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை .. | 8,204 | 7,808 |
| (b) புலனாய்வு செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் எண்ணிக்கை. | 8,741 | 8,643 |
| | | (ஏற்கெனவே முடிவு செய்யப்படாமல் உள்ளவை உட்பட.) |
| (c) இணக்க முறையில் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 2,184 | 1,826 |
| (d) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. | 722 | 719 |
| (e) சமரசத்திற்கு விடப்பட்ட தகராறு களின் எண்ணிக்கை .. | 31 | 10 |

மேற்சொன்ன (c), (d), (e) பிரிவுகளின் கீழ் வராதவை, தனிப்பட்ட விதத்தில் இணக்கமான முறையில் அல்லது சம்பந்தப் பட்ட தரப்பினருக்கு உரியவாறு, தகுந்த ஆலோசனை வழங்கி தீர்த்து வைக்கப்பட்டவையாகும் அல்லது மேற்கொண்டு நட வடிக்கை எடுக்க வேண்டியதோ அல்லது நடுவர் தீர்ப்புக்குவிட வேண்டியதோ அவசியமில்லை என்று கருதப்பட்டவையாகும்.

[1980 ஜூலை 15

வேலையை நிறுத்தி விடுதல்.

அறிக்கை ஆண்டிலும் முந்திய ஆண்டிலும் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்புமை விவரங்கள் பின்வருமாறு :—

| | 1978 | 1979 |
|---|---|---|
| (a) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 378 | 331 |
| (b) இழந்த உழைப்பு நாட்கள் .. | 21,55,675 | 82,73,236 |

தொழில்வாரியாக நடந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | இழந்த உழைப்பு நாட்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1978— | | | |
| 1. துணி ஆலைகள் .. | 153 | 74,719 | 9,38,367 |
| 2. பொறியியல் .. | 75 | 36,897 | 6,15,968 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 5 | 654 | 11,496 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 5 | 3,327 | 7,591 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 19 | 12,871 | 1,13,648 |
| 6. ஏனையவை .. | 121 | 41,197 | 4,68,605 |
| மொத்தம் .. | 378 | 1,69,665 | 21,55,675 |



1980 ஜூலை 15]

| | | | |
|---|---|---|---|
| 1979— | | | |
| 1. துணி ஆலைகள் .. | 135 | 1,86,289 | 63,77,315 |
| 2. பொறியியல் .. | 67 | 25,161 | 9,59,051 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 1 | 28 | 56 |
| 4. புகையிலை, பீடித் தொழில் .. | 3 | 3,714 | 32,493 |
| 5. மலைத் தோட்டத் தொழில்கள் .. | 21 | 17,661 | 2,02,481 |
| 6. ஏனையவை .. | 104 | 42,295 | 7,01,840 |
| மொத்தம் .. | 331 | 2,75,148 | 82,73,236 |

1979ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்துத் தீர்வு காணப்பட்ட வழி முறைகள் வருமாறு :—

| | |
|---|---|
| (a) நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம் .. | 92 |
| (b) தாமாகவே முன்வந்து வேலை தொடக்கப் பட்டவை .. .. .. .. | 30 |
| (c) தொழிலாளர் நலத்துறை/அரசு அதிகாரிகள் தீர்த்து வைத்தவை .. .. .. | 198 |
| (d) காலவரையறை அற்றவை .. .. .. | .. |
| (e) நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டவை .. | .. |
| (f) மூடப்பட்டவை .. .. .. .. | 2 |
| (g) ஆண்டின் இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. .. | 9 |
| மொத்தம் .. | 331 |

## நடப்பு ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட சில முக்கிய உடன்பாடுகள்.

### 1. தமிழ்நாட்டில் துணி ஆலைகளில் பொது வேலை நிறுத்தம்.

தமிழ்நாட்டில் துணி ஆலைகளைச் சார்ந்த சுமார் 1,50,000 தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் நாள் பல கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றை முன்வைத்து, 1979 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாள் முதல் பொது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சமரச முயற்சி தோல்வியுறவே, அரசு இத் தகராறை தனி தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டது. அதன் பிறகு, 1979 ஜூன் 22–ம் நாளிலிருந்து ஆரம்பித்து பல நாட்களில் நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும், 1947 ஆம் ஆண்டு தொழில் நகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். தென்னிந்திய ஆலைகள் சங்கம் அனேக தனியார் ஆலைகளின் சார்பிலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குனர், கூட்டுறவு ஆலைகளின் சார்பாகவும் 1979 ஆம் ஆண்டு ஜூலை 17–ம் நாள் அன்று உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். 1979 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் நாள் அன்று தேசிய துணி கூட்டுறவு ஆலை சார்பில் ஓர் உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். இந்த உடன்படிக்கையின் பயனாக தொழிலாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு, 1979 ஆம் ஆண்டு ஜூலை 19-ம் நாளிலிருந்து வேலைக்குத் திரும்பினர். அந்த உடன் படிக்கைகளின் அடிப்படையில், 1979 ஆம் ஆண்டு ஜூலை 28 அன்று சென்னை, தனித் தொழில் நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியது.

### 2. தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை தொழிற்சாலைகளில் மாநில அளவிலான உடன்படிக்கை.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ், 1975 ஆம் ஆண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட



உடன்பாடு, 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் அன்று முடிவுற்றது. எல்லா சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்றை அமைத்து பல கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்த அறிவிப்பினை கொடுத்தனர். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், 1979 ஆம் ஆண்டு மே 28 ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் விளைவாக, இம் மாநிலத்தில் சர்க்கரை ஆலையில் பயிற்சி பெறாத தொழிலாளி ஒருவர், குறைந்த பட்ச ஊதியமாக, ரூ. 383.40 பெறுவார். இது ஆந்திர பிரதேசம், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைவிட அதிகமானதாகும்.

### 3. பீடித் தொழிலில் உடன்பாடு—திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

திருச்சிராப்பள்ளியில் பீடித் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து பீடித் தொழில் அதிபர்களுடன் 13 கோரிக்கைகளை எழுப்பினர். திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல அதிகாரியின் முன்னிலையில் சமரச முயற்சி தோல்வியுற்றதன் விளைவாக, அச் சமரச முயற்சியில் விவாதிக்கப்பட்டு முடிவு ஏற்படாத 11 கோரிக்கைகள் உள்பட 17 கோரிக்கைகளை வலியுறுத்தி அத் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். அதன்பின், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் 7–10–1979 அன்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர்.

### 4. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இரப்பர் தோட்டங்கள்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டங்களில் ஈடுபட்டுள்ள சுமார் 4,030 தொழிலாளர்கள், ஊதிய உயர்வு அளித்தல், அகவிலைப்படி அளித்தல், வீட்டு வாடகைப்படி அளித்தல், தொழிற்சாலைச் சட்டம் இத் தொழிற்சாலைக்குப்

பொருந்தும் என்பது, ஆகியவைகள் அடங்கிய பல கோரிக்கை களை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் நாளி லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், தனியார் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி, தனியார் இரப்பர் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை உடனடியாகக் கைவிட்ட னர். அரசு இரப்பர் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் நாள் அன்று சென்னை, தொழி லாளர் நல துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், ஓர் உடன் பாடு ஏற்பட்டதன் பயனாக, தொழிலாளர்கள் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, வேலைக்குத் திரும்பினர். இவ்வுடன்பாட்டின் விளைவாக ஒரு தொழிலாளி, நாளொன் றுக்கு ரூ. 2 அதிகம் பெறுவார்.

சிறு இரப்பர் தோட்டத் தொழில்களில் ஏற்பட்ட தனிப்பட்ட உடன்படிக்கைகள் தவிர, 23 சிறிய இரப்பர் தோட்டத் தொழில்களைப் பொறுத்தமட்டில், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

5. எண்ணெய் ஆலைகள், ஈரோடு:

ஈரோடு, 'யான்சி' நிறுவனமும் பொதுத் தொழிலாளர் ஒன்றியங்களும் இவ்வாலை நிர்வாகத்தை எதிர்த்து ஊதிய உயர்வு, அக விலைப்படி ஆகியவை உட்பட பல கோரிக்கைகளை வலி யுறுத்தி 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாளன்று வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். பின்னர், சுமார் 21 எண்ணெய் ஆலைகளில் பணிபுரியும் சுமார் 224 தொழிலாளர்கள் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சமரசப் பேச்சுவார்த்தையின் விளைவாக,



1979 ஆம் ஆண்டு, அக்டோபர் 27 ஆம் நாளன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு அக்டோபா 29 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

6. (i) ஸ்ரீ பாலசுப்பிரமணியா ஆலை, கோயம்புத்தூர்:

இந் நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் சில தொழிலாளர்களை தயார் நிலையிலுள்ள தொழிலாளர்கள் என அறிவிக்கக் கோரி, 1979 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாளி லிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டதன் பயனாக, தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாள் அன்று வேலைக்குத் திரும்பினர்.

(ii) மேட்டூர் பியர்ட் செல் லிமிடெட், மேட்டூர் அணை:

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 500 தொழிலாளர்கள் ஊதியத்தைத் திருத்தியமைக்கும்படியும் நூல் நூற்புத் துறையில் பணி ஒதுக்கீடு செய்யும்படியும் கோரி 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 9 ஆம் நாள் நடு இரவிலிருந்து, உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 29 ஆம் நாள் அன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்பாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக, தொழி லாளர்கள், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 30 ஆம் நாள் வேலைக்குத் திரும்பினர்.

(iii) கிருஷ்ணவேணி நூற்பு ஆலை, கோயம்புத்தூர்:

இந் நிறுவனத்தைச் சார்ந்த பொது மேலாளரை 'கெரோ' செய்ததனால், சில தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து சுமார் 400 தொழி லாளர்கள் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சென்னை தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் விவாதம் நடைபெற்ற தன் பயனாக, 1979 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாள் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(iv) தென்னிந்தியத் துணி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்:

இந் நிறுவனம் இரு நபர்களை நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தியதை எதிர்த்தும் சில தொழிலாளர்களுக்குப் பதவி உயர்வு கோரியும் இந் நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 180 தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முயற்சி எடுத்துக் கொண்டதின் பேரில், 1979 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி, தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று வேலைக்குத் திரும்பினர்.

(v) ஸ்ரீசாரதா ஆலை, கோயம்புத்தூர் :

கோயம்புத்தூர் மாவட்டத் தேசிய துணி ஆலை தொழிற் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்கள், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 20 ஆம் நாள் வேலை நிறுத்த அறிவிப்பில் எழுப்பிய சில கோரிக்கை குறித்து, 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் செய்தனர். 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் நாளன்று. சென்னைத் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

(vi) கோயம்புத்தூர் 'பயோனீர்' ஆலை லிமிடெட், A மற்றும் B ஆலைகள், கோயம்புத்தூர்:

1978–79ஆம் ஆண்டுக்கு ஊதியக் கொடை கொடுப்பது குறித்து இந் நிறுவனங்களைச் சார்ந்த 'பயோனீர்' 'A' ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 600 பேர் 16—10—1979 ஆம் நாள் முதற்கொண்டும், 'B' ஆலைத் தொழிலாளர்கள் 15—10—1979 ஆம் நாள் முதற்கொண்டும் வேலை நிறுத்தம் செய்தனர். இரு தரப்பினருடன் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் பேச்சு வார்த்தை நடத்தியதன் பயனாக, 1979ஆம் ஆண்டு



நவம்பர் 22 ஆம் நாள் அன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது 1979ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

7. (i) ''கெமிக்கல்ஸ்'' மற்றும் ''பிளாஸ்டிக் இந்தியா லிமிடெட்'', மேட்டூர் அணை :

இந்நிறுவனத்தைச் சார்ந்த செம்பிளாஸ்ட் தொழிற்சங்கத்தில் பங்கேற்றுள்ள சுமார் 400 தொழிலாளர்கள், இந்நிறுவனத்தின் மேலாண்மை பாதுகாப்புப் பணியை பாதுகாப்பு துப்பறியும் துறையிடம் ஒப்படைப்பது குறித்து எதிர்ப்புத் தெரிவித்து, 1979ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதன் பயனாக, 1979ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் நாளன்று அமைதி ஏற்பட்டது. அதனடிப்படையில், வேலை நிறுத்தம் செய்த காலத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளை சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் பேசித் தீர்ப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி, பேச்சு வார்த்தை நடைபெற்று 1979ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் நாளன்று அவர் முன்னிலையில் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

(ii) ''தாரங்கதாரா கெமிக்கல்ஸ் ஒர்க்ஸ் லிமிடெட்'', சாகுபுரம் :

அடிப்படை ஊதியத்தைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், ஊர்திப்படி அதிகரித்தல், இரவு வேலைப்படி அளித்தல், பால் வழங்குப்படி, சலவைப்படி அளித்தல் ஆகியவை உட்பட பல கோரிக்கைகள் குறித்து, இந்நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் இடையே தொழில் தகராறு ஒன்று ஏற்பட்டது. 1979ஆம் ஆண்டு மே 31ஆம் நாள் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்பு

1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. சுமார் 900 தொழிலாளர்கள் இவ்வுடன்படிக்கையினால் பயனடைந்தனர்.

(iii) "மேட்டூர் கெமிக்கல்—இன்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்", மேட்டூர் அணை :

தொழிலாளர்கள் மெதுவாகப் பணி செய்ததன் காரணமாக, இந் நிறுவன நிர்வாகம் 1979ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 24ஆம் நாளன்று கதவடைப்பு செய்தது. ஏற்கனவே, தொழிலாளர்கள் சம்பளத்தைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி அளித்தல், ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றை 1979ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாளன்று கொடுத்திருந்தனர். தனது முன்னிலையில் இருதரப்பினரிடையேயும் கருத்தொற்றுமை ஏற்பட்டதின் விளைவாக 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் நாளன்று தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர், ஆலோசனை நல்கினர். அந்த ஆலோசனையின் பயனாய், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் நாள் அன்று கதவடைப்பு நீக்கப்பட்டது. ஊதியத்தை திருத்தியமைப்பது குறித்து 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 1979ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் பயனாய் 1,400 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

8. (i) டி.வி.எஸ். குரூப் கம்பெனிகள் :

இந்நிறுவனத்தைச் சார்ந்த (1) லூகாஸ் டி.வி.எஸ். லிமிடெட், பாடி, (2) வீல்ஸ் இந்தியா லிமிடெட், (3) சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், பாடி, (4) சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட், பாடி, (5) பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை ஆகிய பிரிவுகளில் உள்ள தொழிலாளர்கள் ஊதிய வீதத்தைத் திருத்தியமைக்கும் படியும் அகவிலைப்படி வழங்கும்படியும் ஏனைய கோரிக்கைகளையும் கோரினர். இது தொடர்பாக நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எழுந்த தகராறை, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் தீர்த்து வைத்தார். அதன்படி



1979ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டுக்கு 1—9—1978-லிருந்து செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. சுமார் 6,000 தொழிலாளர்கள் இதனால் பயனடைந்தனர்.

(ii) சிம்கோ மீட்டர் லிமிடெட், திருச்சிராப்பள்ளி :

இந்நிருவாகத்தினருக்கு எதிராக சிம்கோ மீட்டர் தொழிற் சங்கமும் சிம்கோ மீட்டர் பணியாளர் சங்கமும் பல கோரிக்கைகளை எழுப்பின. சுமார் 1,200 தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு நிருவாகத்தினர் 1978ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்வதாக அறிவித்தனர். சிம்கோ மீட்டர் தொழிற் சங்கத்தினரும் அநேக தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், 1978ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் நாளன்று நிர்வாகத்தினர் கதவடைப்பை நீக்கினர். ஆனால் சிம்கோ மீட்டர் பணியாளர் சங்கத்தை சார்ந்த தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தை தொடர்ந்து மேற்கொண்டதால், அந்நிறுவனத்தில் அமைதியின்மை நிலவியது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், தொழிலாளர் நல இணை ஆணையாளர் ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதோடு மட்டுமல்லாமல் 1979ஆம் ஆண்டு பிப்ரவரி 24, 25 ஆகிய நாட்களில் தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன. ஆனால், நிறுவனத்தில் பதட்ட நிலை நிலவியதன் காரணமாக 1979ஆம் ஆண்டு மார்ச்சு 6ஆம் நாளன்று நிர்வாகத்தினர் மீண்டும் கதவடைப்பு செய்தனர். 1979ஆம் ஆண்டு மார்ச்சு 8ஆம் நாளன்று முதலமைச்சர் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடனும் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். மேலும் முதலமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பயனாக, இத்தகராறில் தீர்வு ஏற்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்ப வழி ஏற்பட்டது. அதன்படி, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல அதிகாரி, 15—3—1979 அன்று பேச்சுவார்த்

...ங்களை நடத்தினர்; அதன் விளைவாக ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டின் பயனாய், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 16 ஆம் நாளன்று கதவடைப்பு நீக்கப்பட்டதோடு தொழிலாளர்கள் 16—3—1979 அன்று வேலைக்குத் திரும்பினர்.

### (iii) சிம்சன் குழுக் கம்பெனிகள் :

இந்நிறுவனத்தைச் சார்ந்த சிம்சன் மற்றும் குழுக் கம்பெனிகள் தொழிலாளர் சங்கமும் மேலும் சிம்சன் குழுக் கம்பெனிகள் பணியாளர் சங்கமும் கூட்டாகப் பல கோரிக்கைகள் குறித்து நிர்வாகத்தினருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். மேலும் அவர்கள் இந்த அறிவிப்பு கிடைத்த பதின்மூன்று நாட்களில் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், காலவரையறையற்ற வேலை நிறுத்தம் நடத்தப் போவதாக அறிவித்தனர். 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் நாளன்று முதலமைச்சரின் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக, இரு தரப்பினருக்கிடையிலும் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதனால் தொழிற் சங்கங்கள் 1979 ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் நாளிட்ட வேலை நிறுத்த அறிவிப்பை ரத்து செய்ய ஒப்புக் கொண்டனர். அதைத் தொடர்ந்து தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

1979 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் குறித்து மீண்டும் தொழிலாளர்கள் நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொழிற் தகராறு செய்தனர். தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதது குறித்து தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாளிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். தொழிலாளர் நல ஆணையாளர், தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாகவும், அவர்கள் கூறிய ஆலோசனைகளின் பேரிலும் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் நாளன்று



இருதரப்பினரிடையேயும் ஓர் இணக்கம் ஏற்பட்டது. அதன்படி 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாளன்று நிறுவனத்தின் எல்லா பிரிவுகளும் உற்பத்தியைத் தொடங்கின. இது 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடாக மாறியது.

### (iv) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை-32.

இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தில் சுமார் 1,900 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அவர்கள் கொடுத்த பல கோரிக்கைகளை நிறைவேற்றும்படி கோரி நிர்வாகத்திற்கு எதிராக 1979 ஆம் ஆண்டு மார்ச்சு 12 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். சென்னையிலுள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளருடனும் (1) தொழிலாளர் நல இணை ஆணையாளருடனும் பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அப்பேச்சு வார்த்தைகளால் பலன் கிடைத்ததன் காரணமாகப் பணியாளர்கள் 30—5—1979 அன்று வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். இறுதியில் சென்னையிலுள்ள தொழிலாளர் நலத் தனித்துணை ஆணையாளர் இத்தகராறு குறித்து விவாதித்தார். பின்னர் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

### (v) என்பீல்டு இந்தியா லிமிடெட், அணைக்கரைப்பட்டி, சிங்கம்புணரி.

இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை வழங்கல் மற்றும் பல கோரிக்கைகள் குறித்தும், 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதன் பயனாய், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதோடு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் நாள் அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

## (vi) இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட் (பவுண்டரி டிவிஷன்), சென்னை-89.

தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்தாதிருந்தது குறித்து இந் நிறுவனத்தினருக்கும் இந் நிறுவனத்தைச் சார்ந்த இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட் (பவுண்டரி டிவிஷன்) தொழிலாளர் சங்கத் தொழிலாளர்களுக்கும் இடையே தொழிற் தகராறு எழுந்தது. அடுத்து 1979 ஆம் ஆண்டு ஜூலை 23 ஆம் நாளிலிருந்து இந்நிறுவனம் கதவடைப்பு செய்தது. பேச்சு வார்த்தைகள் ஏற்பட்டதின் பயனாய், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று துணை தொழிலாளர் நல ஆணையாளர் II முன்பு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாய் நிருவாகம் கதவடைப்பை நீக்கியது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாளன்று தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பினர்.

## (vii) டன்லப் இந்தியா லிமிடெட்.

டன்லப் பேக்டரி தொழிற் சங்கத்தைச் சார்ந்த சுமார் 2,863 தொழிலாளர்கள், அந்நிறுவனம் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகளை அறிமுகப்படுத்துதல் குறித்து எழுந்த தகராறு ஒன்றின் விளைவாக 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாளில் இருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் நாளன்று கதவடைப்பு செய்ததாக அறிவித்தது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் II சென்னை முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் விளைவாக 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் நாளன்று 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பயனாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 18 ஆம் நாளன்று கதவடைப்பு நீக்கப்பட்டது.

## 9. போர்ட் டிரஸ்ட், சென்னை.

சென்னை துறைமுக தொழிலாளர்கள் சங்கம் இயந்திரக் கலப்பை இழுவை உரிமையாளர்கள் சங்கத்தினர் (சென்னை) கிளையிடம் ஊதிய உயர்வு கோரினர். தொழிலாளர் நல ஆணை



யாளர், தொடர்ச்சியாக அவர்களுடன் பேச்சு வார்த்தைகள்
நடத்தினார். இருதரப்பினருக்கிடையிலேயும் நடைபெற்ற
பேச்சு வார்த்தை தோல்வியுறவே, 1978 ஆம் ஆண்டு டிசம்பர்
28 ஆம் நாளிலிருந்து ஓட்டுநர்களும், துப்புரவாளர்களும்,
இயந்திரக் கலப்பை இழுவை உரிமையாளர்கள் சங்கத்தினால்
துறைமுகத்தின் பணியில் அமர்த்தப்பட்ட இதர பணியாளர்களும்
வேலை நிறுத்தம் செய்தனர். தொழிற்சாலைகளுக்கு ஏற்படும்
இடர்ப்பாட்டைக் கருதி தொழிலாளர் நல ஆணையாளர்
போராட்டத்தைக் கைவிடும்படி அச்சங்கத்தினருக்கு அறிவுரை
கூறியதோடு, போராட்ட காலத்திற்கு முன்பிருந்த நிலையில்
உள்ளவாறு தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும்படியும்
நிர்வாகத்தினரிடம் கேட்டுக் கொண்டார். மேலும் அவர்கள்
கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் தொடரும்
எனவும் அறிவித்தார். தொழிலாளர் நல ஆணையாளரின் வேண்டு
கோளுக்கிணங்க தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக்
கைவிட்டனர். 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் நாள் அன்று
நிலைமை சீரடைந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.
இந்த வேலை நிறுத்தத்தால் சுமார் 200 தொழிலாளர்கள்
பாதிக்கப்பட்டனர்.

## 10. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்.

இந்நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 3,500 தொழிலாளர்கள்
ஊதியக் கொடை,
ஊதிய உயர்வு, 1977-78 ஆம் ஆண்டிற்கான
மற்றும் ஊக்கத் தொகை அளித்தல் ஆகிய பல கோரிக்கைகளை
நிறைவேற்றக் கோரினர். இதன் விளைவாக, 1979 ஆம் ஆண்டு
மார்ச்சு 27 ஆம் நாளிலிருந்து அக்கழகத்தின் மூன்று பிரிவுகளில்
கதவடைப்பு செய்தது. தொழிலாளர் நல தனி துணை ஆணை
யாளர் இருதரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தைகள்
நடத்தியதன் பயனாக 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் நாளன்று,
1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3)
பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில்
1979 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து இதர சலுகை
களுடன் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் நாளொன்றுக்கு
60 பைசா கூடுதலாக பெறுவர்.

[1980 ஜூலை 1

## 11. இராயபுரம் சரக்குக் கொட்டகை, சென்னை

இச்சரக்குக் கொட்டகையில் சரக்குகளை காலி செய்யு பணியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், வியாபாரி ஒருவர் தொழிலாளர் ஒருவரை தாக்கியதைக் கண்டித்து, 1979 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தத்தி ஈடுபட்டனர். அதன்பிறகு, பலதரப்பட்ட பிரிவுகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை மாற்றியமைக்கு கோரிக்கை ஒன்றை தென்னிந்திய ரெயில்வே பாரந்தூக்கும் பார இறக்கும் மஸ்தூர் சங்கம் அனுப்பியது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 1 ஆம் நாளன்று ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் பயனாய் தொழிலாளர்கள் ஊதிய கோரிக்கையை தனியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டு வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். தங்கள் ஊதிய கோரிக்கைக்கு விரைவில் தீர்வு காணும்படி வலியுறுத்தி தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் நாளன்று மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டனர். தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்-I, சென்னை முன்னிலையில் ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் விளைவாக ஊதிய கோரிக்கைக்குத் தீர்வு காணப்பட்டது. தொழிலாளர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு 21 ஆம் நாளிலிருந்து வேலைக்குத் திரும்பினர்.

## 12. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீர் அகற்று வாரியம்.

இவ்வாரியத்தில் கழிவுநீர் அகற்றல் மற்றும் நீரேற்று நிலையப் பிரிவுகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்கள், தொழிலாளர்களை வேலையில் நிரந்தரமாக்குதல் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி 1979 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (தலைமையிடம்) மற்றும் தொழிலாளர் நல ஆணையாளர், முன்னிலையில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாளன்று ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாள் அன்று உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. அந்த உடன்பாடு 1975 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் அன்றுள்ளவாறு இவ்வாரியத்தின் பதிவேட்டிலுள்ள அத்தனை தொழிலாளர்களையும் வேலையில் நிரந்தரமாக்க வகை செய்கிறது. இதன்படி ஏறத்தாழ 190 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள்.



1980 ஜூலை 15]

## 13. டெக்கான் சர்க்கரை மற்றும் அப்காரி கம்பெனி லிமிடெட். புகலூர் (ஈ.ஐ.டி. பாரி குரூப்).

டெக்கான் சர்க்கரை மற்றும் அப்காரி கம்பெனி லிமிடெட், புகலூர் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்குமிடையே 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் 12 (3) பிரிவின் கீழ் 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 18, 19 ஆம் நாட்களில் ஏற்பட்ட உடன்படிக்கைகள் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாளில் முடிவடைந்தன. இச்சர்க்கரை ஆலையில் உள்ள சங்கங்கள், கூட்டு நடவடிக்கை குழு ஒன்றை அமைத்து, ஊதியத்தை திருத்தியமைத்தல் மற்றும் அகவிலைப்படி வழங்குதல் ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய பட்டியலுடன் வேலை நிறுத்த அறிவிப்பு ஒன்றைக் கொடுத்தனர். 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாள் அன்று, தொழிலாளர் நல இணை ஆணையாளர் (சென்னை) முன்னிலையில் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

## மூடப்பட்ட பிரிவுகளை திறத்தல், சவுத் இந்தியா கிளாஸ் மற்றும் இனாமல் ஒர்க்ஸ் லிமிடெட். சேலம்.

இந்நிறுவனம் 487 தொழிலாளர்களையும், 14 பணியாளர்களையும் வேலைக்கமர்த்தியுள்ள ஒரு பொது நிறுவனமாகும்.

இயந்திரங்களில் அதிக மூலதனம் முடங்கியதாலும் 1972 ஆம் ஆண்டு ஆலையிலுள்ள உலை எண்ணெய் விலை திடீரென உயர்ந்ததாலும் அந்நிறுவனம் போதிய மூலதனத்தைச் சேர்க்க முடியாமல் ஆனதினால் ஓரளவு தானியங்கும் இயந்திரங்களுக்குரிய தேவையான நல்ல ரக கச்சாப் பொருட்களை பெறமுடியாமல் போயிற்று. இதன் விளைவாக உற்பத்தியின் தரம் குறைந்து உற்பத்தித் திறனும் குறைந்தது. உற்பத்தியான பொருட்கள் விற்பனையாகாமல் இருந்தன. நிறுவனத்தின் பொருளாதார நிலை மோசமடைந்ததால், பணிநிலைமையும் சீர்கெட்டது. எனவே 1976 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

[1980 ஜூலை 15

தமிழ்நாடு அரசு, 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் தனிவிதித் துறைகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 21/1969) இத்தொழிற்சாலையை நிவாரண நிறுவனமாக அறிவித்தது.

1. தென் இந்தியா கண்ணாடி, இனாமல் வேலை பணியாளர் சங்கம்.

2. தென் இந்தியா கண்ணாடி, இனாமல் வேலை தேசிய பணியாளர்கள் சங்கம்.

3. சேலம் மாவட்ட கண்ணாடி தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் (சேலம்).

ஆகியவைகள் அரசுக்கு விடுத்த வேண்டுகோளின் பேரில்
முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, 330 நிரந்தர தொழி
லாளர்களுக்கு தலா ரூ. 100 வீதம் வழங்கிட அரசு ஆணை
பிறப்பித்தது. 1977 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாள் அத்
தொகை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

சென்னை, தமிழ்நாடு தொழில் கடன் வழங்கு கழகம் நிர்வாக
இயக்குநர் மற்றும் தலைவர், இந்தியன் வங்கி ஆகியோருடன்
அரசு கலந்தாலோசித்ததின் பேரில் நிர்வாக இயக்குநர், டாசில்
(TACEL) மற்றும் கண்ணாடி நுணுக்க வல்லுநர் ஆகியோரிட
மிருந்து தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையைப் பெற்ற
பிறகு அத்தொழிலகத்தை திறப்பதற்கு அரசு வழிவகைகளைக்
கண்டறிந்தது. அதன்பிறகு 1977 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம்
நாள் அன்று மேலாளர், இந்தியன் வங்கியுடன் பேச்சு வார்த்தைகள்
நடைபெற்றன. அதன் அடிப்படையில் 1947 ஆம் ஆண்டு
தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ், 1979 ஆம்
ஆண்டு ஜூலை 26 ஆம் நாள் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. 1979
ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் அன்று அத்தொழிற்
சாலை செயல்படத் தொடங்கியது.



1980 ஜூலை 15]

**முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவியளித்தல்:**

தொழில் தகராறுகளுக்கு தீர்வு காணப்பட்டதோடு மட்டு
மல்லாமல், தொழிற்சாலைகள் மூடப்பட்டதின் விளைவாக
தொழிலாளர் அடையும் துயரைப் போக்க அரசு கீழ்க்காணும்
நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிதியுதவி
அளித்திருக்கிறது:—

1. **குரோம் தோல் தொழிற்சாலை, குரோம்பேட்டை, சென்னை:**

இந்நிறுவனம் சுமார் 17 மாத காலமாக செயல்படவில்லை.
இந்த நிறுவனத்தின் பொறுப்பை அரசு ஏற்கக் கோரியும்
வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கோரியும்
ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்தன. தொழிற்சாலை
மூடப்பட்டதின் விளைவாக வேலையிழந்த தொழிலாளர்களுக்கு
நிவாரணம் அளிக்கப்படும் என முதலமைச்சர் சட்டமன்றத்தில்
உறுதியளித்தார். அதன் அடிப்படையில் 390 தொழிலாளர்
களுக்கு ரூ. 78,000 முதலமைச்சர் நிதியிலிருந்து அரசு வழங்கியது.
அத்தொகை, தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 200
வீதம் வழங்கப்பட்டது.

2. **பைலட் பேனா கம்பெனி, சென்னை:**

சுமார் 218 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள
இந்நிறுவனத்தில் 1978 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல்
வேலை நடைபெறவில்லை. மேலும், இந்நிறுவனத்தின்
பொறுப்பை அரசு ஏற்கக் கோரி ஏராளமான மனுக்கள் அரசுக்கு
வந்தன. இந்த நிறுவனத்தை மூடிவிடும்படி சென்னை உயர்
நீதி மன்றம் ஆணை பிறப்பித்ததால், தொழிலாளர்கள்
தொடர்ந்து வேலை இழந்தனர். தொழிலாளர்களின் வேண்டு
கோளின் பேரில், அரசு வேலையிழந்த ஒவ்வொரு தொழிலாள
ருக்கும் தலா ரூ. 200 முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து
வழங்க உத்தரவிட்டது. இவ்வகையில் மொத்தம் வழங்கப்பட்ட
நிவாரண நிதி ரூ. 43,600 ஆகும். இத்தொகை 218 தொழி
லாளர்களுக்கு, 1980 ஆம் ஆண்டு சனவரி 14 பொங்கல் திரு
நாள் அன்று வழங்கப்பட்டது.

## நடுவர் தீர்ப்பு.

1979 ஆம் ஆண்டில் 10 வழக்குகள் தனிப்பட்ட முறையில் நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டன.

## நீதிமன்றத் தீர்ப்பு.

1978–79 ஆம் ஆண்டுகளில் சென்னை தொழில் நடுவர் மன்றம் தொழிலாளர் நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப் பட்ட வழக்குகள், அவை அளித்த தீர்ப்புகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் பின்வருமாறு:—

| | தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | | தீர்ப்பளிக்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1978. | 1979, | 1978. | 1979. |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை. | 80 | 52 | 77 | 85 |
| தொழிலாளர் நீதி மன்றங்கள். | 642 | 667 | 945 | 494 |

மேற்சொன்ன வழக்குகள் தவிர, தொழிலாளர் நீதி மன்றங் கள் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி(2) பிரிவின்கீழ் தொழிலாளர்கள் தாக்கல் செய்த 1,096 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பு கூறியுள்ளன.

## வசூல்.

1979 ஆம் ஆண்டில் 56 தகராறுகளில், 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பாக்கி ரூ. 1,65,469.58 வசூல் செய்யுமாறு அரசு ஆணையிட்டது.



## தொழிற்சங்கங்கள்.

1979 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி 2,764 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 535 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 269 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. இரண்டு சங்கங்களின் பதிவு ரத்து நீக்கிவிடப்பட்டது. ஒரு சங்கம் கலைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,031.

## தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதிகள்.

தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சி யின் பயனாக 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி 3,034 தொழிற்சங்கங்கள், 326 நிர்வாகங்கள், 24 உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவை எழுத்து மூலமாக ஒழுங்குமுறை விதிகளை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளன.

## 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம்.

1978-79 கணக்காண்டுக்குரிய வருமானத்தில் 8.33 சதவீதம் என்ற குறைந்த அளவு ஊதியக் கொடை வழங்குவதற்கு வகை செய்து இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

## சிறு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும் வண்ணம் இச்சட்டத்தை நீட்டித்தல்.

1977 ஆம் ஆண்டில் எந்த ஒரு நாளிலு 20 தொழிலாளர் களுக்குக் குறைவாகவும் ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அமர்த்தி யிருந்த பின்வரும் வகுப்புக்களைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு, 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் ஏற்கனவே பொருந்தச் செய்யப்பட்டுள்ளன:—

(1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 63/1948) 2 ஆம் பிரிவு (m) பகுதியைச் சேர்ந்த (i) உட்பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் தொழிற் சாலைகள்.

(2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1947) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறுவனங்கள்.

(3) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 27/1961) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (g) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள்; மற்றும்

(4) மலைத் தோட்டங்கள், அதாவது, தேயிலை, காப்பி, ரப்பர், சின்கோனா அல்லது ஏலக்காய் ஆகியவற்றைப் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்பட்டுள்ள ஒரு நிலம்.

தொழிலாளர் நலன்—வேலை வாய்ப்புத் துறையின் 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 24 ஆம் நாளிட்ட 133 ஆம் எண்ணுள்ள அரசாணையின் மூலம் அரசு 1978 ஆம் கணக்கு ஆண்டில் எந்த ஒரு நாளிலும் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும், ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறையாமலும் வேலைக்கு அமர்த்தியுள்ள அல்லது அமர்த்தியிருந்த பின்வரும் வகுப்புகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு, 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின் விதித் துறைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன:—

(1) 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் (மத்திய சட்டம் 32/1966) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (h) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் நிறுவனங்கள்.

(2) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் பொருள் விளக்கத்திற்கு வரும் உணவகங்கள்.

(3) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் (பணி நிலைமைகள்) பல்வேறு விதித்துறைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 65/1955) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (k) பகுதியின் பொருள் விளக்கத்திற்குள் வரும் பத்திரிகை நிறுவனங்கள்.



1965 ஆம் ஆண்டு ஊதிய கொடை வழங்கல் சட்டத்தின்கீழ் விதிவிலக்கு வேண்டி, 1979 ஆம்ஆண்டில் நிருவாகங்களிடமிருந்து நான்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதில் மூன்று விண்ணப்பங்கள் அரசால் நிராகரிக்கப்பட்டன. ஒரு விண்ணப்பத்தில் நிருவாகம் பின்னர் ஊதியக் கொடை வழங்கியது.

1979ஆம் ஆண்டில் ஒரு நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, அந்த நிறுவனத்திடமிருந்து அபராதத் தொகையாக ரூ. 50 பெறப்பட்டது.

## முத்தரப்பு ஆலோசனைக் குழுக்கள் :

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் உள்ள சட்ட விதித்துறைகளைச் செயல்படுத்துவதுடன், தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசு பெருமளவு பெற்றுள்ளது. ஆகவே, அவர்கள், இதற்காக, பல்வேறு தொழிலாளர்கள் நலச் சட்டங்கள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கும், அவற்றைச் சிறந்த முறையில் செயல்படுத்தும் பொருட்டு அவ்வப்போது ஆலோசனைகளை நல்குவதற்கும் பல குழுக்களை அமைத்தனர். இக்குழுக்கள் இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

1. சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள் (Statutory Bodies).

2. மற்ற குழுக்கள் (Non-Statutory Bodies).

## சட்ட அடிப்படையில் அமைந்த குழுக்கள்.

### (1) குறைந்த அளவு ஊதிய (மாநில) ஆலோசனைக் குழு:

அரசு நியமித்த குழுக்களின் பணியை ஒருங்கிணைப்பதற்கும், குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுப்பதில் திருத்துவதில் ஆலோசனை அளிப்பதற்கும், 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு, தொழிலாளர் நல ஆணையாளரின் தலைமையின்கீழ், ஆறு தொழிலதிபர்களின்

பிரதிநிதிகளையும், ஆறு தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும், மூன்று அரசு அதிகாரிகளையும் உறுப்பினர்களாய்ப் பெற்றுச் செயலாற்றுகிறது. இக்குழு இவ்வாண்டு மும்முறை கூடியது ; மலைத்தோட்டங்கள், புகையிலை (பீடி தயாரிப்பு உட்பட) தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்துவது குறித்து இக்குழு பரிசீலனை செய்தது.

### (2) மலைத் தோட்டத்தொழிலாளர் (வீட்டு வசதி), ஆலோசனைக் குழு :

இக்குழு, 1955ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தைச் சேர்ந்த 53, 54 ஆம் விதிகளின்கீழ் அரசால் அமைக்கப்பட்டது. இக்குழுவில் மலைத் தோட்டத் தொழிலாளர், தொழிலதிபர்கள் பிரதிநிதிகள் நால்வரும், அரசு அதிகாரிகள் நால்வரும் உறுப்பினர்களாக உள்ளனர். சென்னை தொழிலாளர் நலன்-வேலைவாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் இக்குழுவின் தலைவராவர். வீட்டுவசதிக் குறித்து விவாதிப்பதும், வீட்டுவசதி தொடர்பான மலைத் தோட்டத் தொழிலாளர்கள் நலச் சட்டத்தின் விதித்துறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்கு வழிவகைகளைக் கூறுவதும் இக்குழுவின் முக்கிய பணியாகும். இக்குழு 1979ஆம் ஆண்டு சூன் திங்கள் 6ஆம் நாள் அன்று உதகமண்டத்திலும், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14ஆம் நாளன்று ஏற்காட்டிலும் கூடியது. இக்கூட்டங்களில் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல், பழங்குடி மலைசாதி வகுப்பைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஆண்டு தோறும் ஒரு தொகையை வழங்குதல், தொழிலாளர் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளித்தல், பயிற்சிபெற்ற தொழிலாளர்களுக்குச் சிறந்த குடியிருப்புகளை வழங்க வகை செய்தல், ஆதிவாசி குடியிருப்புகளைச் சீராக வைத்திருக்க ஒரு மொத்தத் தொகையை வழங்குதல், தொழிலாளர்கள் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல், தொழிலாளர்களின் குடியிருப்புகளில் கண்ணாடிச் சன்னல்கள் அமைத்தல் ஆகியவை குறித்து பரிசீலிக்கப்பட்டது.



### 3. மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழு :

1970ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்துதல் நீக்குதல்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் இச்சட்டத்தை நிருவகிப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை அளிப்பதற்காக, தொழிலாளர் நலன்—வேலைவாய்ப்புத் துறையின் அரசுச் செயலாளர் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் நான்கு தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், நான்கு தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், இரண்டு அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு துணி, சிமெண்ட், காகிதத் தொழில்கள் குறித்து அமைக்கப்பட்ட துணைக் குழுக்களின் அறிக்கைகளுடன் விவாதித்து முடிவு செய்வதற்காக அறிக்கையாண்டில் 1979ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் நாளன்று கூடியது.

### 4. 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்ட ஆலோசனைக் குழு:

1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தை சேர்ந்த 6(1) பிரிவின் விதித்துறைகளையொட்டி அரசு, இச்சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய நிறுவனங்களில் அல்லது பணிமனைகளில் எந்த அளவிற்குப் பெண்கள் வேலையில் அமர்த்தப்படலாம் என்பது குறித்து ஆலோசனை நல்கு வதற்காக, அரசு, மாநில அளவிலான ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தொழிற்சாலைகளின் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், ஆகியோரின் பிரதிநிதிகளும், பெண் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் உட்பட இக்குழுவில் 19 பேர் உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவ ராகவும், தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (ஆய்வுகள்) செயலாளராகவும் உள்ளனர். இக்குழு 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5ஆம் நாளன்று சென்னையில் கூடி பல நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகளைப் பற்றி விவாதித்தது.

## மற்ற குழுக்கள்.

### 1. மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு :

இக்குழு மாநில அளவிலான முதல்நிலை ஆலோசனைக் குழுவாகும். தொழிலாளர் சம்மந்தப்பட்ட கொள்கை குறித்த எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆலோசனை பெறுவதற்கு அக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இக்குழுவிற்கு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவர். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஏழுபேரும், தொழிலாளர் களின் பிரதிநிதிகள் ஆறுபேரும், அரசு அதிகாரிகள் ஐவரும், சட்டமன்ற உறுப்பினர்கள் நான்கு பேரும் உறுப்பினர்களாக உள்ளனர். தொழிலாளர் நல ஆணையாளர் இக்குழுவின் செயலாளராவர். இக்குழு 1979ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள், 1979ஆம் ஆண்டு சூலை திங்கள் 23ஆம் நாள், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ஆம் நாள், கடைசியாக 1980ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்தமான பல்வேறு பொருட்கள் குறித்து, விவாதித்தது.

### 2. மாநில மதிப்பீடு செயல்படுத்தும் குழு:

இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் உறுப்பினர்களாய் உள்ளனர். தொழிலாளர் நல இணை ஆணையாளர் இக்குழுவின் தலைவராகவும், தொழிலாளர் நல தனித்துணை ஆணையாளர் இதன் செயலாளராகவும் உள்ளனர். தொழிற் சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளைச் செயல்படுத்துவது குறித்தும், தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பது குறித்தும் தீர்மானிப்பதே இக்குழுவின் முக்கிய பணியாகும்.

இக்குழு 1979ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ஆம் நாள் ஆகிய நாட்களில் இருமுறை கூடி தொழிற்சாலைகளில் ஒழுங்குமுறை விதிகளை மீறிய ஐந்து வழக்குகளை விசாரணை செய்ததோடுமட்டு மல்லாமல், ஐந்து தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் அளிப்ப தற்கும் பரிந்துரை செய்தது.



### 3. மாநில நடுவர் மன்ற மேம்பாட்டுக் குழு:

பணியிலிருந்து ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின்கீழ் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய நிறுவனங்களில் தொடர்பு கொண்டுள்ள தொழிலதிபர்களின் பிரதிநிதிகள் ஐந்துபேரும், தொழிலாளர் களின் பிரதிநிதிகள் ஐந்துபேரும், தொழிலதிபர்களையோ தொழிலாளர்களையோ சாராத தனிப்பட்ட உறுப்பினர்கள் இருவரும் உள்ளனர். இக்குழுவிடம் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

(அ) தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், மன்றத் திற்கு தாங்களாகவே முன்வந்து நடுவர் இணக்கத்தீர்ப்பின் மூலம் தீர்த்துக் கொண்ட வழக்குகள் தொடர்பாக குறித்த காலத் திற்கு ஒருமுறை ஆய்வு செய்தல் ;

(ஆ) பல்வேறு பகுதிகளிலும், தொழிற்சாலைகளிலும் நடுவர்களாகப் பணியாற்றத் தகுந்த நபர்களின் நாளது வரை யிலான பெயர்ப் பட்டியல்களைத் தொகுத்து வைத்துவருதல், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கட்டணங்களைக் குறித்தல்;

(இ) நடுவர்கள், வழக்கு சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள், பின்பற்றுவதற்கான கொள்கைகள், விதிமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றை வகுத்தல்;

(ஈ) கருத்து வேறுபாடுகள் அல்லது தகராறுகளைத் தீர்த்து வைக்கும் நடுவர் மன்றத் தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு முக்கியமான வழக்குகளில் கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை நல்குதல், அதன் மூலம் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதை தவிர்த்தல் ;

(உ) நடுவர் மன்றத்தின் மூலம் தகராறுகளை விரைவில் முடிப்பதில் கட்சிக்காரர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தேவையான வழக்குகளில் நடுவர் மன்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்துதல் ;

அடங்கிய தேர்வுக்குழு ஒன்றை அரசு அமைத்தது. பெற்றுக்
கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் தொழிலாளர் நல தனித்துணை
ஆணையாளரைத் தலைவராகக் கொண்டு முக்கியகுழு உறுப்பினர்
களிலிருந்து தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இருவரையும்,
தொழிலதிபர்களில் பிரதிநிதிகள் இருவரையும் கொண்ட துணைக்
குழுவால் வகைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று 1979 ஆம்
ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளன்று நடைபெற்ற இக்
குழுவின் இரண்டாம் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஒரு
நிறுவனமோ அல்லது ஒரு சங்கமோ தொடர்ந்து மூன்று
ஆண்டுகள் பரிசு பெற்றால் அப்பரிசுப் பொருளை அவர்களுக்கே
நிலையாக அளிக்கப்பட வேண்டுமென அக்குழுவால் முடிவு
செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16 ஆம்
நாள் 18 ஆம் நாள், செப்டம்பர்த் திங்கள் 1 ஆம் நாள், 4 ஆம்
நாள் ஆகிய நாட்களில் நடைபெற்ற துணைக் குழுக் கூட்டங்
களில் பெற்றுக் கொண்ட மனுக்களைப் பரிசீலனை செய்து,
வெற்றிப் பெற்றவர்களைத் தெரிந்தெடுத்தது, 1979 அம் ஆண்டு
செப்டம்பர் 14 ஆம் நாளன்று சிறந்த தொழில் உறவுக்கான
பரிசுத் திட்டக்குழு கூடியது. 1978 பரிசு ஆண்டிற்கான பரிசு
பெற வெற்றி பெற்றவரை ஒரு மனதாகத் தெரிதெடுத்தது.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் நாள் ராஜாஜி மண்டபத்தில் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. அவ்விழாவில் 1978 ஆம் பரிசு ஆண்டிற்குரிய சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டத்தின்கீழ் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டன.

## II. நிறுவனங்கள் சட்டம்.

### 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.

தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் உடல் நலத்துக்கும் பாதுகாப்புக்கும் நலனுக்கும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள நல நடவடிக்கைகளைத் திறம்படவும் கண்டிப்பாகவும் செயல் படுத்துவதற்காகத் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் அடிக்கடித் தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்துகிறது



இதற்காக, இச்சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகளைக்
கண்டிப்பாகச் செயல்படுத்துமாறு நிர்வாகத்தினருக்கு அறிவுரை
வழங்கி ஆய்வுகள் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படுகின்றன.
நிர்வாகத்தினர் தொடர்ந்து, தவறும்போது அவர்கள் மீது
வழக்குத் தொடரப்படுகிறது. இந்நடவடிக்கை தண்டனை
வழங்கி திருத்துகின்ற நடவடிக்கையாக அமைகிறது.

1979 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 8,799 தொழிற்சாலைகள்
இருந்தன. ஆனால் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில்
9,139 தொழிற்சாலைகள் இருந்தன. கூடுதலாக 992 தொழிற்
சாலைகள் ஏற்பட்டுள்ளன. அதே நேரத்தில் 652 தொழிற்
சாலைகள் நீக்கப்பட்டுள்ளன.

பதிவேட்டில் காணப்பெறும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை.

| | 1978. | 1979. |
|---|---|---|
| பிரிவு 2 m (1) .. .. .. | 8,251 | 8,598 |
| பிரிவு 2 m (2) .. .. .. | 548 | 541 |
| பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 5,60,976 | 5,72,713 |

1979 டிசம்பர் 31 ஆம் நாள் வரையில் உரிமக் கட்டணமாக ரூபாய் 48,60,246.20 வசூலிக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுகள் :**

1979 ஆம் ஆண்டில், தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்
களாலும் ஆய்வாளர்களாலும் 8,954 தொழிற்சாலைகள் ஒரு
முறை ஆய்வு செய்யப்பட்டன. 6,881 தொழிற்சாலைகள் இரு
முறை ஆய்வு செய்யப்பட்டன. 222 தொழிற்சாலைகள்
மும்முறை ஆய்வு செய்யப்பட்டன. 1979 ஆம் ஆண்டில் 22,93

ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேற்சொன்னவற்றோடு, 1,048 ஞாயிறு ஆய்வுகளும், 2,349 சிறப்பு ஆய்வுகளும், 683 திடீர் ஆய்வுகளும், 861 இரவு ஆய்வுகளும், 4,347 சோதனை ஆய்வுகளும் நடத்தப்பட்டன.

வழக்குகள் தொடர்தல் :

இவ்வாண்டில் தொழிற்சாலைகள் சட்ட விதித் துறைகளை மீறியதற்காகத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 24,958 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த ஆண்டில் 2,491 வழக்குகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது. 2,05,985 ரூபாய் அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரி 82 ரூபாய் என்னும் வீதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது.

விபத்துக்கள் :

1978, 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு | உயிர் இழப்பு ஏற்படாத விபத்துக்கள். | உயிர் இழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். |
|---|---|---|
| 1978 .. .. .. .. | 30,507 | 39 |
| 1979 .. .. .. .. | 28,486 | 57 |

சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையில் நடைபெற்ற தீ விபத்து காரணமாகவும், சென்னை, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் இறந்ததன் காரணமாகவும் உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் தொழிற்சாலை ஆய்வகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியால் தொழிற்சாலைகளில் உயிர் இழப்பு இல்லாத விபத்துக்கள் குறைந்துள்ளன.



இம்மாநிலத்தில் உயிர் இழப்பில்லாத விபத்துக்களில் பெரும் பகுதியாக ஏற்படும் விபத்துக்கள் பெரும் துணி ஆலைகளிலுள்ள நூற்புத்துறையில் மரத் தறிகளைக் கொண்டு நெய்வதால் ஏற்படுகிறது. அத்துணி ஆலைகளின் மரத்தறிகளுக்குப் பதில் பிளாஸ்டிக் தறிகளை பயன்படுத்துமாறு நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது. தொழிற்சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை கண்காணிப்பு ஆய்வாளர்களும் திடீர் ஆய்வுகளை தொழிற்சாலைகளில் மேற்கொண்டு, தொழிலதிபர்களிடம் பிளாஸ்டிக் சிட்டங்கள் பயன்படுத்தக் கேட்டுக் கொண்டதினால் துணி ஆலைகளில் விபத்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது.

இவ்வாண்டில் அதிகமாக விபத்துக்கள் நடைபெற்ற தொழிற்சாலைகளில் அவ்வதிக விபத்துக்கள் நடைபெற்றதன் காரணங்களை அதிக கவனமான முறையில் ஆராய்வதற்கு தொழிற்சாலை ஆய்வாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்களும் அத்தொழிற்சாலைகளை பார்வையிட்டனர். அவ்விபத்துக்கள் நிகழாவண்ணம் எடுக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கூறப்பட்டு பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொழிற்சாலை ஆய்வகத்தால் இதுகுறித்து எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் பயனாக தொழிற்சாலைகளில் விபத்துக்களின் எண்ணிக்கை குறைந்தன.

21 நாட்களும் அதற்கு அதிகமாகவும் வேலை செய்ய இயலாமல் போன தொழிலாளர்கள் தொடர்பான பெரும் விபத்துக்களை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து அத்தகைய விபத்துக்கள் மீண்டும் நடைபெறாவண்ணம் தடுப்பதற்கு வேண்டிய பரிகார நடவடிக்கை குறித்து நிர்வாகத்தினருக்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித் துறைகளுக்கு முரண்பாடாக செயல் பட்டதனால் தொழிற்சாலைகளில் உயிர் இழப்புகள் அல்லது பெரும் உடல் ஊறுகள் ஏற்பட்டதின் காரணமாக அத்தகைய தொழிற்சாலை அதிபர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

எல்லாப் பெரும் தொழிற்சாலைகளிலும், 50 தொழிலாளர்களுக்கு அதிகமாக வேலைக்கு அமர்த்தியுள்ள தொழிற்சாலைகளிலும், ஆண்டொன்றில் பத்து விபத்துக்களுக்கும் அதற்குமிக மாகவும் விபத்துக்கள் நடைபெறும் தொழிற்சாலைகளிலும், ''பாதுகாப்புக் குழுக்களை'' அமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். 279 தொழிற்சாலைகளில் இத்தகைய பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

## சிரமவீர் பரிசுகளும் (SHRAM-VIR AWARDS) மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளும்.

விபத்துக்களைத் தடுக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் தொழிற்சாலைகளையும் அதன் தொழிலாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்தில் விபத்துக்கள் இல்லாத தொழிற்சாலைகளுக்குத் தனி பரிசுகள் கொடுக்க அரசு தீர்மானித்தது.

1977 ஆம் சாதனை ஆண்டிற்கான பரிசுகளை சென்னை ராஜாஜி மண்டபத்தில் 1979 ஆம் ஆண்டு சனவரி 19 ஆம் நாளன்று நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன.

1977 ஆம் சாதனை ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் பெறுவதற்குரிய 692 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகள் பெறுவதற்குரிய 69 விண்ணப்பங்களும் பெறப்பட்டன.

1978 ஆம் சாதனை ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளைப் பெற 785 விண்ணப்பங்களும், சிரமவீர் பரிசுகளைப் பெற 70 விண்ணப்பங்களும் பெறப்பட்டன.

1978 ஆம் ஆண்டிற்குரிய மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளையும் சிரமவீர் பரிசுகளையும் பெறத் தகுதியுள்ளவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1979 ஆம் ஆண்டிற்குரிய மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரமவீர் பரிசுகள் ஆகியவை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பரிசுத் திட்டத்தில் போட்டியிடுவதற்காகத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.





## பாதுகாப்புப் பாடமுறைகள்:

1979-ல் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து 19 பாட வகுப்புகள் தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் நடத்தப்பட்டுள்ளன. இப்பாட வகுப்பில் 590 பேர் பயனடைந்துள்ளனர்.

## திரைப்படங்கள்:

திரைப்படங்களின் வாயிலாகவும், பொருட்காட்சியின் வாயிலாகவும், தொழிலாளர்களின் ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் தகுந்த பிரச்சாரங்களை நடத்த இத்துறையும், ஏனைய முகவரமைப்புகளும் எடுத்துக் கொண்ட முயற்சியைக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்பும், ஆரோக்கியமும் குறித்த திரைப்படச் சுருள்கள் இத்துறையால் வாங்கப்படுகிறது. இது தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தற்போது 29 திரைப்படச் சுருள்கள் இருக்கின்றன. அவை குறித்து பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டபோது திரையிடப்பட்டன. தொழிலாளர்களின் நலனைக் கருதி தொழிற்சாலைகளுக்கு அவற்றைத் திரையிடுவதற்கு அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது.

## உற்பத்தித் திறன்:

தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஆறு உற்பத்தித் திறன் குழுக்கள் உள்ளன. இக்குழுக்களுக்கு, முந்திய ஆண்டில் இக்குழுக்கள் சந்தா தொகையாக வசூலித்த தொகையில் 50 சதவீதத்திற்கு நிகரான தொகையை ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய் என்ற உயரளவிற்கு உட்பட்டு பொதுமானியத்தின் மூலம் இக்குழுக்களுக்கு ஆண்டுதோறும் நிதி உதவி வழங்கப்படுகிறது.

1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளுக்கு இந்த ஆறு உற்பத்தி திறன் குழுக்களுக்கு ரூபாய் 30,840 பொது மானியமாக வழங்கப்பட்டன.

மேற்சொன்ன நிதி உதவியோடு உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்னும் கொள்கையை வளர்ப்பதற்காக, ''தரம், நம்பத்தகுந்த தன்மை'' என்னும் பொருள் குறித்து, 1970 ஆம் ஆண்டு ஆசிய உற்பத்தித் திறன் பற்றி இத்துறையில் செய்தித் திரைப்படம் ஒன்றும் எடுக்கப்பட்டது.

[1980 ஜூலை 15

உற்பத்தித்திறன் குறித்த திரைப்படங்களைக் கொண்டுள்ள திரைப்பட நூலகம் ஒன்றும் உள்ளது. தொழிலாளர்களின் பயனுக்காகத் திரையிட்டு காட்டுவதற்குத் தேவைப்படுகின்ற, தொழிற்சாலைகள், உற்பத்தித் திறன் குழுக்கள் கலவி நிலையங்கள் ஆகியவற்றிற்கு இச்செய்தித் திரைப்படங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரம்:

மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலைச் சுகாதாரம் ஆரோக்கிய ஆய்வுக்கூடம் இணைந்த பிரிவை அரசு நிறுவி உள்ளது.

இந்த ஆய்வுக்கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மருத்துவத் தலைமை அதிகாரி (தொழிற்சாலைகள்) மேற்பார்வையில் விடப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் மருத்துவ தலைமை அதிகாரி (தொழிற்சாலைகள்), தொழிற்சாலைகளை சோதனைச் செய்யும் மருத்துவ அதிகாரியாக அறிவிக்கப்பட்டார். இம்மருத்துவ அதிகாரி, தொழிலாளர்கள் தொழில்சார்ந்த நோய்களுக்கு ஆட்படக்கூடிய குறிப்பாக ரசாயனம், கல்நார், உரம், அச்சுத்தொழில், ரப்பர், முந்திரி தொழிற்சாலைகள் ஆகியவற்றை ஆய்வு செய்கிறார். அவர், அபாயகரமான பணியிலும், அபாயத்தன்மை வாய்ந்த இரசாயனத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைப் பரிசோதித்தும் அத்தொழிலாளர்கள் தொழில்சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப் பட்டுள்ளார்களா என்றும் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை நடத்தி வருகிறார். அப்பரிசோதனையின் அடிப்படையில், அந்நோய்களில் இருந்து விடுபடுவதற்காக மருத்துவ வழிமுறைகளையும் தனிநபர் பாதுகாப்பு நடவடிக்கைப் பயன்களையும் இம்மருத்துவ அதிகாரி கூறி வருகிறார். இந்த அதிகாரி தொழிற்சாலைத் துப்புரவு தொழில் சார்ந்த நோய்கள் ஆகியவற்றை விளக்குவதற்காகப் பல்வேறு தொழிற்சாலைகளில் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் விளக்கவுரைகள் நிகழ்த்தி வருகிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முந்திரி எண்ணெயினால் ஏற்படும் தோல் அழற்சி நோயை ஆழ்ந்து பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை அரசு 1979 ஆம் ஆண்டு அமைத்தது. இந்நிபுணர் குழுவில், தொழிற்[illegible] ஆய்வகத்தின் மருத்துவ தலைமை அதிகாரி (தொழிற்



1980 ஜூலை 15]

சாலைகள், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் உள்ள சிறப்பறிஞர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, ஆழ்ந்த பகுப்பாய்வுக்குப் பிறகு தனது அறிக்கையை துறையின் தேவையான பரிந்துரைகளுடன் அரசுக்கு அனுப்பியது. அரசு இவ்வறிக்கையைப் பரிசீலித்து, எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் எந்நேரங்களில் முடியுமோ அந்நேரங்களிலெல்லாம் பின்வரும் வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்கும்படித் தொழிலதிபர்களைக் கேட்டுக்கொள்ளுமாறு தொழிலாளர் நல ஆணையாளருக்கு அறிவுரை வழங்கி உள்ளது.

1. தோலை மென்மைப்படுத்த தேங்காய் எண்ணெய் உபயோகித்தல் ;

2. ரப்பர் பாதுகாப்பு கை உரைகள், தடுப்புத் தன்மை வாய்ந்த மென்மைப் பசைகள் ;

3. சோப்பு வழங்குதலும் சுத்தம் செய்யும் வசதிகளும்.

4. உடற்பகுதிகளில் முந்திரி, முந்திரி எண்ணெய் தெறிப்பதிலிருந்து தடுப்பதற்கு முழுக்கை கொண்ட பருத்தி மேலங்கி துணியில் செய்த முகமூடியும் வழங்குதல்.

தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்.

1979-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் வரும் கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | 2,11.720 |
| வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை ,, | 2,08,079 |

தமிழ்நாடு 1947ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை செயல்படுத்துவதில், எல்லா நிறுவனங்களுக்கும் சென்று பார்வையிடுவது, தொடக்க அறிவிப்பினைக் கொடுத்து, அதன் வாயிலாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றியும், நிர்வாகத்தின் கடமைகளைப் பற்றி

கடைச் சொந்தக்காரர்களுக்கு எடுத்துரைத்து அறிவுறுத்துவது என்னும் போக்கினை இத்துறை மேற்கொண்டுள்ளது. தொழிலதிபர்கள் தங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தக் குறைபாடுகளைத் திருத்துவதற்குக் கவனம் செலுத்துவார்களேயானால் அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுப்பது கைவிடப்படுகிறது. விதிகளை மீறுகின்ற தொழிலதிபர்களுடைய நிறுவனங்களின் மீது அடிக்கடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிலதிபர்கள் தங்கள் குறைகளைத் திருத்திக்கொள்ளும் வரையில் அவர்கள் மீது அடிக்கடி வழக்குகள் தொடரப்படும்.

இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், 3,53,402 முறையான ஆய்வுகளையும், 11,968 திடீர் ஆய்வுகளையும், 29,791 விடுமுறை ஆய்வுகளையும், 3,077 சிறப்பு ஆய்வுகளையும், 8,199 இரவு ஆய்வுகளையும் நடத்தினர்.

1979ஆம் ஆண்டு தொடக்கத்தில் 3,618 வழக்குகள் முடிவுறாத நிலையில் இருந்தன. 10,572 வழக்குகள் இவ்வாண்டு அனுமதிபெற்றன. 14,190 வழக்குகளில், 11,067 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 22 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. 2 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. 27 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. 1979ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 3,15,026 வசூலிக்கப்பட்டன. அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரியாக ரூ. 30 அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 3,072 வழக்குகள் முடிவுறாத நிலையில் உள்ளன.

இச் சட்டத்தின் 41ஆம் பிரிவின் கீழ் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள் பற்றியும், மேல் முறையீடுகள் ஒரு வகை செய்யப்பட்டது பற்றியும் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.—

| | |
|---|---|
| ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறா நிலையில் இருந்த மேல் முறையீடுகளின் எண்ணிக்கை. | 223 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கை. | 168 |
| மேல்முறையீடுகளின் மொத்த எண்ணிக்கை .. | 391 |



223
இவ்வாண்டில் முடிவு பெற்ற மேல் முறையீடு
களின் எண்ணிக்கை. 168
இவ்வாண்டு முடிவில் முடிவுறா நிலையில் உள்ள
மேல் முறையீடுகளின் எண்ணிக்கை.

1979-ஆம் ஆண்டில், நிலையான விதிவிலக்கு ஒன்றும்
தற்காலிக விதிவிலக்குகள் 4-ம் அரசு வழங்கியது. (பொருட்
காட்சிகள், திருவிழாக்கள் நீங்கலாக) 20 தற்காலிக விலக்கு
களையும், மூன்று இனத்தைப் பொறுத்த மட்டில் பொருட்
காட்சிகள் திருவிழாக்களுக்குரிய தற்காலிக விலக்கினையும்
தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் வழங்கியுள்ளார்.

தொழிலாளர் நல துணை ஆணையாளர் 106 இனங்களில்
தற்காலிக விலக்குகளை அளித்துள்ளார். 21 இனங்களில்
இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக தள்ளிவைக்க
அனுமதித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில், இச்சட்டத்தின் 51-ஆம் பிரிவின்
கீழ் இரண்டு விண்ணப்பங்கள் தொழிலாளர் நல ஆணையாள
ருக்கு வரப்பெற்று முடிவுறாத நிலையில் இருந்தன.

திருத்தம் :—

தமிழ்நாடு 1948-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் விதி
களில் 16எ என்ற விதிக்குப்பின்னர் 16எஎ (பணிப்பதிவேடு
வழங்கலும், பராமரித்தலும்) என்ற ஒரு புது விதியை
தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறையின் 1979-ஆம்
ஆண்டு சூன் 28-ஆம் நாளிட்ட 1,074-ஆம் எண்ணுள்ள
அரசாணையின் மூலமாகக் கொண்டுவந்தது.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.—

1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளன்றுள்ளபடி
67,106 தொழிலாளர்களைக் கொண்ட 19,958 உணவகங்கள்
இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவைகளில்
10,165 நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொண்டிருந்தன;
793 நிறுவனங்கள் தொழிலாளர்கள் இல்லாமல் இருந்தன

1979-ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக (தற்காலிக
மானது) ரூ. 2,79,646-30 பெறப்பட்டது.

இந்த ஆண்டில், ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் கீழ்
39,027 முறையான ஆய்வுகளையும், 845 திடீர் ஆய்வு
களையும், 818 விடுமுறைநாள் ஆய்வுகளையும், 272 தனி
ஆய்வுகளையும் செய்தனர்.

1979-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இச் சட்டத்தின் விதித்
துறைகளையும், விதிகளையும் மீறியது குறித்த 1,211 குற்ற
வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன. 2,166
வழக்குகள் இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டன. அவற்றில்,
2,575 வழக்குகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டன; 3 வழக்கு
கள் விடுதலையில் முடிந்தன; 8 வழக்குகள் திரும்பப் பெறப்
பட்டன; 2 வழக்குகள், தள்ளுபடி செய்யப்பட்டன: 1979-ஆம்
ஆண்டில் 99,065 ரூபாய் அபராதத் தொகையாகப் பெறப்
பட்டது. அதாவது, வழக்கு ஒன்றுக்கு சராசரி 39 ரூபாய்
என்னும் வீதத்தில் அபராதம் வசூலிக்கப்பட்டது. ஆண்டு
இறுதியில் 789 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.

ஆண்டுத் தொடக்கத்தில், உணவகங்களில் உள்ள தொழி
லாளர்களை வேலையிலிருந்து நீக்கியது அல்லது அகற்றப்
பட்டதை எதிர்த்து, இச்சட்டத்தின் 19-ஆம் பிரிவின் கீழ்
செய்யப்பட்ட 43 மேல்முறையீடுகள், மேல்முறையீட்டு
அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல
அதிகாரிகளிடம் முடிவு செய்யப்படாமலிருந்தன. இந்த
ஆண்டில், 88 மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன.
இந்த ஆண்டில், 99 மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டன.
ஆண்டின் இறுதியில் 32 மேல் முறையீடுகள் முடிவு செய்யப்
படாமல் இருந்தன.

## 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்.—

1979 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 93,413 தொழிலாளர்
களை வேலைககமர்த்திக் கொண்ட 423 மலைத் தோட்டங்
கள் இருந்தன. 1979 ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் நாள் முதல்
1979-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் வரையில் உள்ள கால



அளவில் 1,432 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த
14 மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன, 4,554
தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியிருந்த 18 மலைத்
தோட்டங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. ஆண்டின்
இறுதியில் 419 மலைத் தோட்டங்கள் பட்டியலில் இடம்
பெற்றிருந்தன. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாளன்
றுள்ளவாறு தோராயமாக 90,291 தொழிலாளர்கள் பணியாற்றி
னர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில், 17 வழக்குகள் நீதிமன்றத்
தில் முடிவு செய்யப்படாமல் இருந்தன. இந்த ஆண்டில் 93
வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. 50 வழக்குகளுக்குத்
தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 7,085 அபராதம் விதிக்கப்
பட்டது. அதாவது சராசரியாக வழக்கு ஒன்றுக்கு ரூ. 141
அபராதம் விதிக்கப்பட்டது. எந்த வழக்கும் விடுதலையில்
முடியவில்லை, 1979 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் நீதி
மன்றங்களில் 60 குற்ற வழக்குகள் முடிவு செய்யப்படாமல்
இருந்தன.

மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரிடம் ஏற்பளிப்பைப்
பெற்ற பின்னர், மலைத் தோட்ட அதிபர்கள், மலைத் தோட்டத்
தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டும் கம்பளி ஆடைகளையும்
கனப்பு அடுப்பிற்கு முன் போடப்படும் தரை விரிப்புகளையும்
வழங்கினர்.

1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்
தின் 10 ஆம் பிரிவின்கீழ் மலைத் தோட்டத் தொழிலாளர்
களுக்கும், அவர்களது குடும்பத்ினருக்கும் இலவசமாக
மருத்துவ வசதிகளுக்கு வகை செய்ய வேண்டியது மலைத்
தோட்ட அதிபர்களின் கடமைகளில் ஒன்றாகும் என்று வரை
யறுக்கப்பட்டுள்ளது.

மலைத் தோட்டங்களிலுள்ள தோட்ட மருத்துவமனை
களிலும் மருந்தகங்களிலும், இச்சட்டத்தின் கீழ் சுகாதாரம்
குறித்த விதித் துறைகளைச் செயல்படுத்துவதற்கு, மலை
தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின்கீழ்
இரண்டு மருத்துவ அதிகாரிகள் உதகமண்டலம், நாகர்

கோவிலைத் தலைமையிடங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித்துறைகளின் கீழ் அறிக்கை ஆண்டில் இவர்கள் 489 முறையான ஆய்வுகளையும் 6 திடீர் ஆய்வுகளையும் நடத்தினர்.

உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்ட ஏழு ஆய்வாளர்களும், மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டின் கீழ் பணி புரிகின்றனர். அவர்கள் இச் சட்டத்தையும் அதன்கீழ் இயற்றப் பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் 1,091 முறையான ஆய்வுகளையும், 76 தனி ஆய்வுகளையும், 70 திடீர் ஆய்வுகளையும் 138 ஞாயிற்றுக்கிழமை ஆய்வுகளையும் நடத்தினர்.

## 1966 ஆம் ஆண்டு பீடிசுருட்டுத் தொழிலாளர் பணி நிலை நிலைமைகள் சட்டம்.

செயல்படுத்தும் பணியாளர் அமைப்பு—

1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின்படி; தொழிலாளர் நல ஆணையாளரின் கீழ், தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் (ஆய்வுகள்) தொடர்ந்து முதன்மை ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார். மாநிலத்தில் 12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள் 28 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், 206 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் இச்சட்டத்தை அமுல்படுத்தி வருகிறார்கள். வட்டாரத் தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர்களும் தங்களது அதிகார வரம்பின் கீழ் வரும் இடத்தில் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இச் சட்டத்தின்படி தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுகளை நடத்தி வருகின்றார்கள்.

பதிவு செய்தல்:

தமிழ்நாட்டில் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வளாகங்கள் 1,514 ஆகும். அவற்றில் 705 வளாகங்கள் வணிகக்குறியிட்ட உரிமையாளர்களுடையதாகும்.



அறிக்கையாண்டில் இந்தத் தொழில் வளாகங்களில் 14,260 பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். சுருட்டு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களில் இரண்டு இலட்சம் பேர் அப்பணியை வீடுகளில் இருந்தவாறே பணிபுரிந்து வருகிறார்கள்.

1,514 தொழில்வளாகங்களில் 1,311 தொழில் வளாகங்கள் தங்களது உரிமங்களைப் புதுப்பித்துக்கொள்ள விண்ணப் பித்துள்ளன; 203 தொழில் வளாகங்கள் உரிமம் கோரி இன்னும் விண்ணப்பிக்கவில்லை. தவறு புரிந்தோரின்மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு உரிமக்கட்டண வகையில் ரூபாய் 24,708 வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகள்:

1979 ஆம் ஆண்டு 2,746 முறையான ஆய்வுகளும், ஏழு விடுமுறை ஆய்வுகளும், 70 திடீர் ஆய்வுகளும், 6 தனி ஆய்வுகளும் ஆய்வாளர்களால் நடத்தப்பட்டன.

வழக்குத் தொடர்தல்:

வழக்குத் தொடர்தல் தொடர்பான புள்ளி விவரங்களுடன் மனநிறைவு அடைந்து விடாமல், சட்டத்தின் விதிகளின் அனுகூலங்கள் தொழிலாளர்களைச் சென்றடையக் கூடிய முறையில் இச்சட்டத்தை செயல்படுத்த இயலும் வகையில் ஆய்வாளரகம் சீரமைக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் அனுகூலங்கள், தொழிலாளர்களுக்குக் கிடைக்கு மாறு நீட்டிக்கப்பட்டிருக்காத இடங்களில், காணப்படுகின்ற தவறுகளை ஆய்வு ஆணை மூலமாகவும், அல்லது காரணம் காட்டுமாறு கேட்டும் அறிவிப்புகள் மூலமாகவும் தொழில் அதிபர்களுக்குச் சுட்டிக்காட்டி, ஆணையில் கண்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு அத் தொழில் அதிபர்களுக்கு இரண்டு வார கால அவகாசம் தருமாறு ஆய்வாளர்களுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது. அப்படியும் கூட, தொழில் அதிபர்கள் சட்டத்திற்கும், விதிகளுக்கும் இணங்கி நடக்க தவறுவார்களேயானால் அப்போதுதான் அவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1979-ம்

ஆண்டு தொடக்கத்தில், 76 வழக்குகள் நீதிமன்றத்தில்
முடிவுறாத நிலையில் இருந்தன. 1966 ஆம் ஆண்டு பீடி-
சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்,
விதிகளை மீறியதற்காக தொழில் அதிபர்கள் மீது 119
வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்த 195 வழக்குகளில்,
117 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றவாளிகள்
எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்
டுள்ளது. ஐந்து வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள்
விடுதலை செய்யப்பட்டார்கள். ஒரு வழக்கு தள்ளுபடி
செய்யப்பட்டது. இரண்டு வழக்குகள் நீதி மன்றத்தில்
இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன. 1979 ஆம் ஆண்டின்
இறுதியில் 70 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையில் இருந்தன.
முடிவுற்ற 117 வழக்குகளில் விதிக்கப்பட்ட மொத்த அபராதத்
தொகை ரூபாய் 8,880 ஆகும். அதாவது ஒவ்வொரு
வழக்கிலும் சராசரியாக சுமார் 76 ரூபாய் அபராதம் விதிக்
கப்பட்டுள்ளது.

சட்டத்தையும் விதிகளையும் செயற்படுத்துவதற்குரிய பொறுப்பு:

இச்சட்டத்தையும் விதிகளையும் செயல்படுத்துவதற்கு
வணிகக் குறியிட்ட உரிமையாளர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள
வேண்டுமென்று அரசு விரும்பியது. இந்த நோக்கத்துடன்
ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது துணை ஒப்பந்தக்காரர்
களாகவோ தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தாலும் உரிமம்
எடுக்க வேண்டியது வணிகக் குறியிட்ட உரிமையாளர்களின்
கடமையாகும் என்ற வகையில் சட்டத்தைத் திருத்தக்கோரி
இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.
கோயம்புத்தூரில் உள்ள வணிகக் குறியிட்ட உரிமையாளர்
கள், தொழிலாளர்கள் நல துணை ஆணையாளர் (ஆய்வுகள்)
முன்னிலையில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தாங்களே
உரிமம் எடுக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பீடித் தொழிலாளர் நலன்:

பீடி-சுருட்டு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும்
தொழிலாளர்களின் நலன் கருதி, மத்திய அரசு, மேல்வரி (செஸ்)
வசூலிப்பதுடன், அவர்களுக்கு நல நடவடிக்கை கிட்டுவதற்காக



ஒரு நிறுவனத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அந்த நிறுவனத்தின்
மூலமும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் உதவி
ஒத்துழைப்பின் பேரிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழிலாளர்
நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

(1) 197 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மாவட்டம்
பெருந்துறையில் உள்ள ராமலிங்கம் காச நோய் மருத்துவ
மனையில் பீடி தொழிலாளர்களுக்காகவும் அவர்களைச் சார்ந்
திருப்போர்களுக்காகவும், 10 படுக்கைகளை ஒதுக்குவதற்கும்
ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்படுகின்ற செலவுத் தொகைகளை
அவர்கள் ரசீது (பில்ஸ்) கொடுத்தவுடன் ஏற்பதற்கும் வசதி
செய்யப்பட்டது.

(2) மேலும் ஒரு மருந்தகத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்
துள்ளது. அது வேலூரில் அமைக்கப்படவிருக்கிறது.

(3) திருநெல்வேலியில் பீடித் தொழிலாளர்களுக்கென கட்டப்
படவிருக்கும் மருத்துவமனைக்கு இடம் தெரிந்தெடுக்கப்படுவதற்கு
மத்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளது.

(4) 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர் நல நிதிச்
சட்டத்தின்படி பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்
களின் குழந்தைகளுக்கு 1979-80 ஆம் ஆண்டில் உதவிப்பணம்
வழங்க மத்திய அரசு வகை செய்துள்ளது. உதவிப்பணம்
வழங்கக்கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் பெங்களூரில் உள்ள
பீடித் தொழிலாளர் நல ஆணையாளரால் பரிசீலிக்கப்பட்டு
வருகின்றன:

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள்
சட்டம்—செயல்படுத்துப் பணியாளர்கள்:

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்
(ஆய்வுகள்) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத்
தொழிலாளர்கள் சட்டத்தின்படி தொடர்ந்து தலைமை ஆய்வா
ளராக இருந்து வருகிறார். இம்மாநிலத்தில் இச்சட்டம் 12

[1980 ஜூலை 15

தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், 28 தொழிலாளர் நலத்
துணை ஆய்வாளர்களாகவும் நிறைவேற்றப்பட்டு வருகிறது
தொடக்க ஆய்வுகளை தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்
களும் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் செய்து வருகின்றனர்.
மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் 5 சதவீத சோதனை
ஆய்வுப் பணிகளைத் தொழிலாளர் நலத்துணை ஆய்வாளர்கள்
செய்ய வேண்டியுள்ளது.

பத்திரப்பதிவு.

ஐந்து தொழிலாளர்களுக்கும் மேற்பட்டு வேலை பார்க்கின்ற
மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ்
பதிவு செய்யப்படுகின்றன. 1979 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில்
1,539 பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து
நிறுவனங்கள் இருந்தன. 151 மோட்டார் போக்குவரத்து
நிறுவனங்கள் புதிதாக செய்யப்பட்டன. இதனால் பதிவு
செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 1,690 ஆக
உயர்ந்தது. இந்த 1,690 நிறுவனங்களில், 147 மோட்டார்
போக்குவரத்து நிறுவனங்கள் இந்த ஆண்டு பதிவேட்டிலிருந்து
நீக்கப்பட்டன. பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து
நிறுவனத்தின் எண்ணிக்கை இந்த ஆண்டின் இறுதியில் 1,543
ஆக இருந்தது இவ்வாண்டின் இறுதில் பணியில் அமர்த்தப்
பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 49,550 ஆக
இருந்தது.

1979 ஆம் ஆண்டில் உரிமைக் கட்டணமாக ரூபாய் 82,335.14
வசூலிக்கப்பட்டது.

வழக்கு தொடர்தல்.

சட்டவிதி முறைகளின் நலன்களைத் தொழிலதிபர்கள் முழு
மனதுடன் தொழிலாளர்களுக்கு வழங்கி வருகின்றார்களா
என்பதை அரசு அக்கறையுடன் கவனித்து வருகின்றது. 1979 ஆம்
ஆண்டில் தொடக்கத்தில் 100 வழக்குகள் தீர்வு காணப்
படாமல் நிலுவையாக இருந்தன. சட்டத்தையும், அதன் விதி
களையும் தொழிலதிபர்கள் செவ்வையாகச் செயல்படுத்தப்
படாமைக்காக 280 வழக்குகள் 1979 ஆம் ஆண்டு தொடரப்
பட்டன. 1979 ஆம் ஆண்டு 243 வழக்குகளில் குற்றம் சாட்டப்



1980 ஜூலை 15]

பட்டவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை
வழங்கப்பட்டது. அபராதத் தொகையாக ரூ. 27,155 வசூலிக்கப்
பட்டது; அதாவது வழக்கு ஒன்றுக்கு சராசரியாக 111 ரூபாய்
அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மூன்று வழக்குகளில் குற்றஞ்
சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஒரு வழக்கில்
குற்றஞ் சாட்டப்பட்டவர் கண்டித்து விடப்பட்டனர். நான்கு
வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. 1979 ஆம் ஆண்டு
இறுதியில், 129 வழக்குகள் முடிவுறாமல் நிலுவையில்
இருந்தன.

ஆய்வுகள்.

1979 ஆம் ஆண்டு 3,828 முறையான ஆய்வுகளும், 22 விடு
முறை ஆய்வுகளும், 348 திடீர் ஆய்வுகளும், 103 தனி ஆய்வு
களும், ஆய்வாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

1955-ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர் (பணி நிலைமை
களும் பல்வேறு விதித்துறைகளும்) சட்டம்:

இச்சட்டத்தின்கீழ் 'ஆய்வாளர்கள்' என அறிவிக்கப்பட்ட
12 தொழிலாளர் நல ஆய்வாளர்கள், 28 தொழிலாளர் நலத்
துறை ஆய்வாளர்கள் இச்சட்டத்தின் விதித் துறைகளைச் செயல்
படுத்தி வருகின்றனர், 1979 ஆம் ஆண்டில் இறுதியில் 3,155
தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தி 46 நிறுவனங்கள்
இருந்தன.

**1976 ஆம் ஆண்டு விற்பனை மேம்பாட்டுப் பணியாளர்கள்
(பணிநிலைமைகள்) சட்டம்.**

மருந்துத் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்
களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ள இச்சட்டம், 1976-ம்
ஆண்டு மார்ச்சு 6-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. தொழி
லாளர் நல ஆணையர், தொழிலாளர் நலத் துணை ஆணையர்,
(ஆய்வுகள்) தொழிலாளர் நல வட்டாரத்துணை ஆணையர்,
தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத்துணை
ஆய்வாளர்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் நலத்துணை
ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள்

ஆகியோர் இந்தச் சட்டத்தின் 8-வது பிரிவின்கீழ் 'ஆய்வாளராக,
அறிவிக்கப்பட்டுள்ளனர். மற்ற சில தொழில்களுக்கு இச்
சட்டத்தை நீட்டிப்பது குறித்த செயற்குறிப்பு மத்திய அரசின்
பரிசீலனையில் உள்ளது.

## 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத் தலும் நீக்கலும்) சட்டம்.

தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகத்தில் பணி
புரியும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர்கள் தொழிற்
சாலைகள் நீங்கலாக மற்றத் தொழில் நிறுவனங்களைப்
பொருத்தமட்டில் பதிவு செய்யும் அதிகாரிகளாகவும், தொழிற்
சாலைகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலைகள் மேற்
பார்வை ஆய்வாளர்கள் பதிவு செய்யும் அதிகாரிகளாகவும்,
தொழிற்சாலைகள் நீங்கலாக மற்ற தொழிற் நிறுவனங்களைப்
பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் உரிமம்
வழங்கும் அதிகாரிகளாகவும், 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத்
தொழிலாளர்கள் (முறைப்படுத்துதலும் நீக்கலும்) சட்டத்தின்
கீழ் அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில்
தொழிற்சாலை ஆய்வாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக
வும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரிகள் யாவரும், அதாவது தொழிற்சாலை ஆய்வாளர்
கள் தொழிலாளர் நல ஆய்வாளர்கள், மலைத் தோட்ட ஆய்
வாளர்கள், தொழிலாளர் நலத்துணை ஆணையாளர்கள், தொழி
சாலைகள் உதவி ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி
ஆய்வாளர்கள் அனைவரும் இச்சட்டத்தின்படி, ஆய்வாளர்களென
அறிவிக்கப்பட்டுள்ளனர். தவிரவும், வட்டாரங்களில் உள்ள,
தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்களும், தொழிலாளர்
நல உதவி ஆணையாளர்களும், தொழிற்சாலை மேற்பார்வை
ஆய்வாளர்களும், தலைமையிடங்களிலுள்ள தொழிலாளர் நல
ஆணையாளரும், தொழிற்சாலைத் தலைமை ஆய்வாளர்களும்
தொழிற்சாலைகள் துணைத்தலைமை ஆய்வாளர்களும்,



நலத்துணை ஆணையாளரும், (ஆய்வுகள்) இச்சட்டத்தின் கீழ்
ஆய்வாளர்களென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் நல ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள
தொழிலாளர் நல உதவி ஆணையாளர் (ஒப்பந்தத் தொழிலாளர்
கள்) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்
படுத்துதலும் நீக்கலும்) சட்டம் தொடர்புடைய பணியைக்
கவனித்து வருகிறார்.

தொழிற்சாலை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல ஆய்வாளர்
கள் முறையே தொழிற்சாலைகளையும், தொழிற்சாலை அல்லாத
மற்ற நிறுவனங்களையும் பொறுத்தமட்டில் இச்சட்டத்தை
அமுல்படுத்தும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள்.

இச்சட்டத்தின் கீழ் 599 பேர் பிரதான தொழில் அதிபர்
களாகவும், 1,542 பேர் ஒப்பந்தக்காரர்களாகவும் 1979 ஆம்
ஆண்டு பதிவு செய்யப்பட்டனர். 1,194 ஆய்வுகள் சார்நிலைப்
பணியாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

வழக்குகள்

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியதற்காக அறிக்கை
ஆண்டில் நிர்வாகங்களின் மீது 7 வழக்குகள் தொடரப்பட்டன.
பத்து வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டன. இவ்வாண்டு
இதன் வாயிலாக ரூபாய் 1,400 அபராதத் தொகை வசூலிக்கப்
பட்டது. இவ்வாண்டின் இறுதியில் 2 வழக்குகள் முடிவுறாமல்
நீதி மன்றத்தில் நிலுவையாக இருந்தன.

## 1946 ஆம் ஆண்டு தொழில் வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம்.

1979 ஆம் ஆண்டில், 37 தொழில் நிறுவனங்களின் நிலை
ஆணைகள், சான்றளிக்கும் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டன.
15 இனங்களைப் பொறுத்தமட்டில் இந்த நிலை ஆணைகளில்
திருத்தங்களும் இந்த ஆண்டில் சான்றளிக்கப்பட்டன. மேல்
முறையீட்டு அதிகார மன்றங்களாக உள்ள தொழிலாளர் நல நீதி
மன்றங்கள் இவ்வாண்டில் இச்சட்டத்தின்கீழ் ஒரு மேல்முறை
யீட்டை முடிவு செய்துள்ளது.

<u>தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய விழா விடுமுறைகள்) சட்டம்.</u>

சட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (m) பகுதியில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள "தொழிற்சாலைகள்" அனைத்திற்கும் பொருந்துகின்றது அல்லது சட்டத்தின் 85 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் ஒரு தொழிற்சாலையாகக் கருதப்படுகின்ற எந்த இடத்திற்கும் பொருந்துகிறது. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள மலைத் தோட்டங்களுக்குப் பொருந்துகிறது. தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (6) பகுதியில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு கடைகள்—நிறுவனங்கள் அனைத்திற்கும் பொருந்துகிறது. மேலும் 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தின் 2(h) ஆம் பிரிவின்கீழ் விளக்கம் அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அனைத்திற்கும் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் அட்டவணையிடப்பட்ட வேலைகளுக்கும் இச்சட்டத்தின் விதித் துறைகள் பொருந்தும்.

இச்சட்டத்தின் விதித்துறைகளை மீறியமைக்காக ஆய்வாண்டில் தொழிற்சாலை நிர்வாகங்களுக்கெதிராக 3,325 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 3,805 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. மூன்று வழக்குகள் விடுதலையில் முடிந்தன. ஆறு வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இவ்வாண்டில் அபராதமாக 87,585 ரூபாய் வசூலிக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 1,198 வழக்குகள் முடிவுறாமல் நீதிமன்றங்களில் இருந்தன.

இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், இவ்வாண்டில் 1,47,228 ஆய்வுகளை நடத்தினர்.

### III ஊதியங்கள் குறித்து சட்டமியற்றுதல்.

<u>1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்:</u>

1979 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு திருத்தியமைத்துள்ளது.

(1) பொது மோட்டார் போக்குவரத்தில் வேலை.

(2) வேளாண்மை, வேளாண்மையைச் சார்ந்துள்ள வேலை.



கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்க, குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

(1) செயற்கை வைரம் தீட்டும் தொழில் வேலை.

(3) பாட் இலை (Bought Leaf) தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து, குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க திருத்தியமைக்க குறைந்த அளவு ஊதியங்கள் ஆலோசனைக் குழுக்கள் அமைப்பதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(1) திரைப்பட தொழில் (தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் உட்பட) வேலை,

(2) வெட்டுமரத்தொழிலில் வேலை.

(3) கைத்தறித்துணி நெசவுத் தொழிலில் வேலை.

(4) கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலில் வேலை.

(5) தையல் தொழிலில் வேலை.

(6) (அரசு மருத்துவ மனைகள், தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள், மருந்தகங்கள் அல்லாத) ஏனைய மருத்துவ மனைகள் தனியார் மருத்துவ மனைகளில் வேலை.

(7) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள் செய்தல் தொழிலில் வேலை.

(8) வெளுத்தல், சாயம் தோய்த்தல் தொழிலில் வேலை.

(9) காப்பிக்கொட்டை பதப்படுத்தல் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிக்கும் நோக்கத்துடன், அரசு அவற்றை 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்க்க உத்தேசித்துள்ளது.

(1) வளத்தொழிலில் வேலை.

(2) சோப்பு செய்யும் தொழில் வேலை.

[1980 ஜூலை 15

இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஆய்வு அதிகாரிகள் இவ்வாண்டு 43,921 ஆய்வுகள் செய்துள்ளார்கள். இச்சட்டத்தை யும் விதிகளையும் மீறியமைக்காகத் தொடரப்பட்ட வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) | ஆண்டின் தொடக்கத்தில் நீதி மன்றங்களில் விசாரணை முடியாமல் இருந்த வழக்குகள் .. | 421 |
| (2) | இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் .. .. | 316 |
| (3) | தண்டனை வழங்கப்பட்டு முடிந்த வழக்குகள் .. .. | 839 |
| (4) | விடுதலையில் முடிந்த வழக்குகள் .. | 3 |
| (5) | திரும்பப் பெறப்பட்ட வழக்குகள். | 2 |
| (6) | ஆண்டின் இறுதியில் விசாரணை முடியாமல் இருந்த வழக்குகள் .. | 393 |
| (7) | அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் .. .. | 35,000 |

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் ''அதிகாரிகள் என்று அறிவிக்கப்பட்ட தொழிலாளர் நீதிமன்றங்களில் தலைமை தாங்கும் அதிகாரிகள்'' இவ்வாண்டில் குறைந்த அளவு ஊதியம் கொடுக்கப்படாதது பற்றித் தாக்கல் செய்த 58 கோரிக்கை மனுக்களை தீர்த்து வைத்தார்.

## 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்:

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும் ஏனைய தொழிற் நிறுவனங்களைப் பொறுத்தவரை தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் இச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன.

இச்சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காகத் தொடரப் பட்ட 977 வழக்குகளில், தொழில் அதிபர்கள் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கப்பட்டது. 1,278 வழக்குகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ஆண்டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்த வழக்குகளும் இதில் அடங்கும்) இரண்டு வழக்குகள் விடுதலையில் முடிந்தன. ஒரு வழக்கு திரும்பப்பெறப்பட்டது. 410 வழக்குகள் விசாரணை முடிவாகா மல் உள்ளன. ரூ. 27,470 அபராதமாக வசூலிக்கப்பட்டது.



1980 ஜூலை 15]

ஊதியங்கள் கொடுப்பது குறித்த 320 கோரிக்கைகள் ஆண் டுத் தொடக்கத்தில் விசாரணை முடிவாகாமல் இருந்தன. 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ், தொழிலாளர் களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக உதவி ஆணையாளரிடம் 404 உரிமைக் கோரிக்கைகள் இவ்வாண்டு தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், இந்த ஆண்டில் 520 உரிமைக் கோரிக்கைகள் குறித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இறுதியில், 204 உரி மைக் கோரிக்கைகள் விசாரணை முடிவாகாமல் இருந்தன.

இச்சட்டத்தின் கீழ் வரும் தொழில் நிறுவனங்களில் ஆய் வாளர்கள் 50,311 ஆய்வுகளை மேற்கொண்டனர்.

## 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் :

இச்சட்டம், ஆண், பெண் தொழிலாளர்களுக்கு ஒரே வீதத் தில் ஊதியம் வழங்குவதற்கும், வேலை வாய்ப்பில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கவும் வகை செய்கிறது.

இச்சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் ஆய்வாளர்களையும், 7-வது பிரிவின் கீழ் அதிகாரிகளையும் அரசு நியமித்துள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் 7 (ஏ) பிரிவின் கீழ் தொழி லாளர் நல அதிகாரிகளுக்கு 24 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இதைத் தவிர, ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த 24 விண்ணப்பங்கள் மீது தொழிலாளர் நல அதிகாரிகளால் முடி வெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இச்சட்டத்தின் 7 (பி) பிரிவின் கீழ் ஒரு மேல்முறையீட்டைத் தொழிலாளர் நலத்துணை ஆணையாளர் தீர்த்து வைத்தார்.

## IV. சமூகப் பாதுகாப்பு

### 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல வகை விதித்துறைகள் சட்டம் :

தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி வடிவில ஓய்வு கால நன்மைகளும், அவர்கள் கடமையாற்றும்போது இறந்து விட்டால் அவர்களைச் சார்ந்துள்ள நெருங்கிய உறவினர்களுக்கு

உடனடியாக நிதி உதவியும், திங்கள் தோறும் குடும்ப ஓய்வூதியத் தொகையும் கிடைக்க, 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங் கால வைப்பு நிதிகள் பல்வகை விதித்துறைகள் சட்டமும் அதன் மூன்று திட்டங்களும் வகை செய்கின்றன. தொழிலாளர் வருங் கால வைப்பு நிதித் திட்டம், தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய நிதித் திட்டம், தொழிலாளர் வைப்புத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம் ஆகிய மூன்று திட்டங்கள் இந்நாட்டிலுள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெரிதும் தேவைப்படும் சமூகப் பாதுகாப்பை அளிக்கின்றன.

இவற்றுடன், 1976 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தொழி லாளர் வைப்புத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம், வருங் கால வைப்பு நிதிச் சந்தாதாரர்கள், சந்தா எதுவும் செலுத்தாம லேயே அவர்களுக்குக் காப்புறுதி அளிக்கிறது. இத்திட்டத்தின் படி சில நிபந்தனைகளுக்குட்பட்டு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் பணியில் இருக்கும்போது மரண மடைய நேரிட்டால் அவர்களது கணக்கில் கடைசி 36 மாதங் களில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமானதொரு தொகை, அதாவது 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கப்படுகிறது.

<u>இச்சட்டத்தை நீட்டித்தல்.</u>

1979 ஆம் ஆண்டில் இச்சட்டம் பின்வரும் நான்கு புதிய தொழில்களுக்கும் நீட்டிக்கப்பட்டது:—

(1) ஃபெர்ரோ குரோம் தொழில்கள் (Ferro Chrome Industry).

(2) உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து நிறுவனங்கள் ;

(3) வெங்கச்சங்கல் சுரங்கம் (Quartze mines) மற்றும்

(4) வைரம் வெட்டி எடுக்கும் தொழில்.

1979 ஆம் ஆண்டில், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங் கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகள் பணிமனைகளின் மொத்த எண்ணிக்கை 160 ஆகும்.





<u>இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் :</u>

இச்சட்டத்தின் தொழில் நிறுவனங்களைச் சேர்ப்பதில் இந்த ஆய்வாண்டு உயர்வு கண்டுள்ளது. கடந்த 9 திங்கள் கால அளவில் (1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை) 360 புதிய தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தின் செயல் வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டன. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் 13·32 இலட்சம் பேரைக் கொண்ட 14,552 நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் வந்தன.

இச்சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின் கீழ் கொடுக்கப் பட்ட தொகைகளின் கேட்பு/வசூல்/நிலுவைகள் குறித்த விவரம் வருமாறு :—

| நிலுவைத் தொகைத் தன்மை. (1) | 31-12-1979 ஆம் நாள் நிலவரப்படி நிலுவைகள். (2) | 1-4-1979 முதல் 31-12-1979 வரை வசூல். (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| | 1,3181 | 2,155.20 |
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு செலுத்திய சந்தாத் தொகை. | 4·11 | 357·49 |
| குடும்ப நல ஓய்வூதிய நிதிக்கு செலுத்திய சந்தாத் தொகை. | 27·9 | 111·40 |
| தொழிலாளர்களின் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டத்திற்குச் செலுத்திய சந்தாத் தொகை. | | |

<u>வருங்கால வைப்பு நிதிக்கணக்குகளை இறுதியாக முடித்தல்.</u>

1979-80 ஆம் ஆண்டில் (1—5—1979—31—12— 1979 25,386 கோரிக்கைகள் தொடர்பாக வருங்கால வைப்பு நிதி கணக்குகள் இறுதியாக்கப்பட்டு அவற்றிற்காக ரூபாய் 5·74 கோடி வழங்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி பெறப்பட்ட/இறுதியாக முடிக்கப்பட்ட/திருப்பப் பட்ட எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்த விவரங்கள் காட்டும் விரை அட்டவணை வருமாறு :—



**1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்.**

| | |
|---|---|
| இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள் | 41,308 |
| இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. .. | 25,386 |
| தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளை திருத்தும்படி திருப்பப்பட்ட கோரிக்கைகள். | 9,175 |
| முடிவு பெறாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள் | 6,747 |

இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருங்கால வைப்பு நிதியில் பணம் செலுத்தியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகைகளின் விபரம் வருமாறு :—

| இறுதியாகத் தீர்த்துவைக்கப் பட்ட கோரிக்கைகளின் வகைப்பாடு. (1) | இறுதியாகத் தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. (2) | கொடுக்கப் பட்ட தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. இறப்பு .. .. .. | 1,742 | 67·04 |
| 2. வயது முதிர்வு பெற்றமை | 3,750 | 341·22 |
| 3. நிரந்தரமாக இயலாமையுற்றமை. | 322 | 22·80 |
| 4. பதவி விலகல் .. .. | 15,429 | 238·94 |
| 5. ஆட்குறைப்பு .. .. | 3,874 | 101·19 |
| 6. இடம் பெயர்தல் .. .. | 16 | 0·66 |
| 7. பல்வகை .. .. .. | 253 | 7·75 |



**1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்.**

| | |
|---|---|
| 1. 1—4—1979 முதல் 31—12—1979 வரை இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகள். | 28,205 |
| 2. இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. | 12,206 |
| 3. தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளைத் திருத்தும்படி திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள். | 11,699 |
| 4. இறுதியாக்கப்படாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள். | 4,300 |

*தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 21·80 இலட்சம் ஆகும்.

**1976 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த காப்புறுதித் திட்டம்.**

| | |
|---|---|
| இறுதியாக முடிக்கப்பெறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை (1—4—1979 முதல் 31—12—1979 நிலவரப்படி) .. .. | 1,652 |
| இறுதியாக்கப்பட்ட கோரிக்கைகள் .. .. | 577 |
| தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் தவறுகளைத் திருத்தும்படி திருப்பி அனுப்பப்பட்ட கோரிக்கைகள் .. .. — | 737 |
| இறுதியாக்கப்படாமல் நிலுவையாக இருந்த கோரிக்கைகள் .. .. ... — | 338 |

*தீர்த்து வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்காக கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 25·20 இலட்சம்.

இச்சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட முன் பணம்.

1—4—1979 முதல் 31—12—1979 வரை 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் சந்தாதாரர்களுக்கு அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் இருந்து அவர்கள் திரும்பச் செலுத்தாத வகையில் கீழ்க்கண்ட இனங்களுக்கு முன் பணம் கொடுக்கப்பட்டது :—

| | முன்பணம் கொடுக்கப் பட்ட இனங்களின் எண்ணிக்கை. | கொடுக்கப் பட்ட தொகை. |
|---|---|---|
| | (1) | (2) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| குறைந்த வருவாய் தொகுதியினருக்கான வீடு கட்டும் திட்டம். | 12,071 | 57·33 |
| 15 நாட்களுக்கு மேல்பட்டு கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள். | 2,816 | 12·68 |
| சந்தாதாரர்கள்/அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவச் செலவு. | 251 | 2·60 |
| மகள் திருமண/சந்தாதாரர் குழந்தைகளின் மெட்ரிகுலேஷன் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. | 3,493 | 64·60 |
| எதிர்பாராத நிலநடுக்கம் வெள்ளம் போன்ற நிலைமைகள். | 16,646 | 71·48 |

வட்டார வைப்பு நிதி ஆணையர்களால் இச்சட்டத்தின்படி பாக்கித் தொகை செலுத்தத் தவறியவர்களிடமிருந்து அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை மாநில வருவாய்த்



துறை அதிகாரிகளின் மூலம் வரி வசூல் சட்டத்தின்கீழ் நிலவரி வசூலிப்பதைப்போல வசூலிக்கத் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் அன்று இறுதி நிலவரப்படி பல்வேறு மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் 531 இனங்கள் நிலுவையாக உள்ளன.

784 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் முடிவடையாமல் உள்ளன. வட்டாரக் குழு (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி) இரண்டு முறை கூடியது. அக்குழு, மத்திய அறங்காவலர் குழுவிற்கும் மத்திய அரசுக்கும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள சந்தாதாரர்களின் தேவைகளை ஈடுசெய்ய மேலும் ஒரு துணை வட்டார அலுவலகத்தை மதுரையில் ஏற்படுத்தவும் பரிந்துரை வழங்கியுள்ளது. இத்திட்டம் மத்திய அறங்காவலர் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மதுரையில் துணை வட்டார அலுவலகம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம்.

1948 ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்படி தமிழ்நாட்டில் 1955 ஆம் ஆண்டு சனவரி தொடக்கத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்றெல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம், மின்விசையைப் பயன்படுத்தி இயங்குவனவற்றில் 10 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும், மின்விசையைப் பயன்படுத்தாதவற்றில் 20 பேர்களும் அதற்கு மேலும் பணிபுரிகின்றவர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் ஊதியம் பெறுகின்ற தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:—

(1) மருத்துவ உதவி (மருத்துவப் பொருள் வடிவில்).

(2) நோய்க்கால உதவி (பணமாக).

(3) பேறுகால உதவி (பணமாக).

(4) இயலாமையுற்றோருக்கு உதவி (பணமாக).

(5) சார்ந்துள்ளவர்கள் நல உதவி (பணமாக).

(6) இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை (பணமாக).

மேற்கூறப்பட்ட உதவித் திட்டங்களில் முதலாவது இனம் தவிர பிறவற்றிற்குப் பணமாகக் கொடுக்கப்படும் இவ் வைந்து திட்டங்களும் நீங்கலாகத் தொழிலாளர் நல மாநிலக் காப்புறுதிக் கழகத்தால், நாடு முழுவதும் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன. மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தைத் தீர்வளிக்கும் பொறுப்பு மாநில அரசைச் சார்ந்ததாகும். மருத்துவ உதவியளிக்கும் திட்டத்தில் மருத்துவச் செலவு 1:7 என்ற விகிதத்தில் முறையே மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதி நிறுவனமும் பகிர்ந்து கொள்ளுகின்றன. ஆயினும் தொழிலாளர் நல மாநில காப்புறுதிக் கழகம் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கு ஓர் குறிப்பிட்ட தொகையை வரையறுத்துள்ளது.

1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. விரிவாக்கப்பட்ட மருத்துவக் கவனிப்பு. | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 85. |
| 2. முழு மருத்துவக் கவனிப்பு | ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 115. |

1979 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து இம் மாநிலத்தில் இத்திட்டம் அமுலாக்கப்பட்ட 44 மையங்களில் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் முழு மருத்துவக் கவனிப்பு வசதிகள் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஒரு



தொழிலாளியின் குடும்பத்திற்கு 1—5—1979 முதல் ஒரு ஆண்டிற்கு ரூ. 115 இத்திட்டத்தின் கீழ் செலவழிக்கலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டத்தைத் தவிர மருந்துகள் மற்றும் இதர மருத்துவ வசதிக்கான செலவுகள் வகையில் ஒரு தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 25-க்கும் அதிகமாகவும் ரூ. 50-க்கும் மிகாமல் ஏற்படும் செலவு உச்ச வரம்புக்கு மேல் அனுமதிக்கப்படும். இச்செலவையும் மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

இந்த மருத்துவச் செலவு அனைத்தும் முதலில் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. பின்னர் இந்தச் செலவு தமிழ்நாடு மாநில கணக்காயர்அலுவலர் II கொடுக்கும் சான்றிதழின் பேரில் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தினரிடம் இருந்து மீண்டும் பெறப்படுகிறது.

தற்போது சென்னையிலுள்ள அயனாவரம், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் நிலையான 107 மருந்தகங்களும், ஒன்பது நடமாடும் மருந்தகங்களும், மூன்று பயன்பாட்டு மருந்தகங்களும், இரண்டு பகுதி நேர மருந்தகங்களும், மூன்று மத்திய மருந்துப் பண்டக சாலைகள் மற்றும் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு சித்த மருத்துவ மனையும் செயல்பட்டு வருகின்றன.

நான்கு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகளில் உள்ள படுக்கையின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, சென்னை. | 625 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, மதுரை. | 202 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை, கோயம்புத்தூர். | 500 |
| தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை. | 206 |

கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள தொழிலாளர் நலக் [1980 ஜூலை 15
காப்புறுதி மருத்துவமனையின் உள்ள படுக்கைகளின் எண்
ணிக்கையை நாளடைவில் 500 ஆக உயர்த்தப்பட்டது.

சென்னை மாவட்டத்தில் காப்புறுதி செய்து கொண்டவர்
களின் குழந்தைகள் ஒரு திட்டம் போர்களுக்கு ஆண்டொன்
றுக்கு 1,38,500 ரூபாய் செலவில் மருத்துவ குத்தும்
திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அய்க்கிய நாடுகள் சங்கத்தின் நிதி உதவியுடன் முதல்
வகுப்பு குடும்ப நல அறுவைச் சிகிச்சை நிலையங்கள் 1976-ஆம்
ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளன.
மூன்று தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளி
லும் சைதாப்பேட்டையிலுள்ள இரண்டாவது தொழிலாளர்
நலக்காப்புறுதி மருந்தகத்திலும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை
முகாம்கள் நடத்தப்பட்டன.

இத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் தம்பாநிலத்
தில் செயற்படுத்தப்படுகின்ற ஹோட்டல்களிலும், கடைகளி
லும் சினிமா கொட்டகைகளிலும் வேலை செய்யும் தொழி
லாளர்களும் பயன் பெறும் பொருட்டு பல புதியநிறுவனங்களுக்கும்
நீட்டிக்கப்பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி முதலும் மே
திங்கள் பதினொன்காம் தேதி முதலும் இத்திட்டம் பல புதிய
நிறுவனங்களுக்கு இரண்டு கட்டங்களில் மேற்கூறிய நாட்
களில் புதிய பல நிறுவனங்களுக்கு நீட்டிக்கப்பட அரசு வகை
செய்துள்ளது. மேலும், 1978-ஆம் ஆண்டு அக்டோபர் இரண்
டாம் நாள் முதல், ஆறு படுக்கைகள் கொண்ட சித்த வைத்தியப்
பிரிவு கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள
தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகளில் தொடங்கப்
பட்டுள்ளது.

1979-ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் நாள் முதல் இத்
திட்டம் அரக்கோணம், சங்கரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களி
லும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிலாளர்



1980 ஜூலை 15]
நலக் காப்புறுதித் திட்டத்தை குமாரபாளையம், திருவரம்
பூர், மானாமதுரை, சிவகாசியின் சுற்றுப்புற பகுதி ஆகிய
இடங்களுக்கும் நீட்டிக்க அரசு பரிசீலனை செய்து வருகிறது.

சென்னையிலுள்ள நடமாடும் தொழிலாளர் நலக் காப்
புறுதி மருந்தகத்தை இரண்டாகப் பிரிக்கவும், ஆர்.வி. நகர்
தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதி அளிக்
கும் பொருட்டு கொடுங்கையூரில் நிலையான ஓர் மருத்துவ
மனையைத் திறக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. ஏற்
கனவே இத்திட்டம் அமுலாக்கப்பட்ட இடங்களில் நடமாடும்
மருந்தகங்கள் வழக்கம் போல் இயங்கி வரும்.

கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நலக் காப்புறுதி
மருத்துவமனையில் தீவிர இதய மருத்துவக் கவனிப்பு
(Intensive Cordiac Care) பிரிவு ஒன்று திறப்பதற்கான
செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது.
1980-ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்தொன்பதாம் நாள் முதல்
தாம்பரத்திலுள்ள தொழிலாளர் நல காப்புறுதி மருத்துவ
மனை புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நலக் காப்புறுதி
மருத்துவமனையொன்று வேலூரில் புதிதாகக் கட்ட அரசு அனு
மதி அளித்துள்ளது. இக்கட்டிடத்தின் கட்டுமானப் பணி
முடிவடைந்துவிட்டது. இக்கட்டிடம் விரைவில் திறக்கப்படும்.

இன்றேல் அதற்கு மேற்பட்ட மருத்துவர்களுடன்,
வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் 46 தொழிலாளர்
நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குச் சொந்தமாக கட்டிடம்
கட்டுவதற்கு தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் ஒப்புக்
கொண்டுள்ளது. தனியார் வாடகைக் கட்டிடங்களில் அமைந்
துள்ள இந்த 46 மருந்தகங்களுக்குக் கட்டிடம் கட்ட நிலம்
கையகப்படுத்தல் பல்வேறு நிலைகளில் தீவிரமாக உள்ளது.

சந்தா வசூல்.—

1979-80 ஆம் ஆண்டில் 14,04,21,056 ரூபாய் சந்தாவாக
வசூலிக்கப்பட்டது.

பண உதவிகள்.—

1979-80 ஆம் ஆண்டில் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு ரூ. 6,40,58,394 பணம் உதவியாக கொடுக்கப்பட்டது.

வழக்குகள் :—

1979-80 ஆம் ஆண்டில் மேற்கண்ட சந்தாத் தொகையை வசூலிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| தொடரப்பட்ட வழக்குகள் .. .. .. | 29 |
| தண்டிக்கப்பட்டவை .. .. .. | 12 |

அபராதம் மூலம் தண்டிக்கப்பட்டவைகளில் ரூபாய் 780.

## 1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீடுச் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் கீழ்க்கண்ட சமயங்களில் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் வேலை காரணமாகவும் வேலை செய்யும் போதும் ஏற்படுகின்ற விபத்துக்கள் ;

(ஆ) மரணத்தை உண்டாக்குகின்ற அல்லது பணியாற்ற இயலா வண்ணம் செய்து விடுகின்ற தொழில் சார்ந்த சில நோய்கள் இது தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து கட்டுமான பணிகள், இரயில்வே, அபாயம் விளைவிக்கின்ற சில குறிப்பிட்ட தொழில்கள் ஆகியவற்றில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கு (தொழில் நிறுவனம் வாணிபம் அல்லது தொழிலுக்கு அன்றி வேறு விதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நாட்கூலி பெறும் தொழிலாளர்கள் நீங்கலாக) ஏனைய தொழிலாளர்களுக்கு இது பொருந்தும்.

1979 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்றுள்ளபடி 589 வழக்குகள் முடிவுறாத நிலையிலிருக்கின்றன. 855 வழக்குகள் வரப்பெற்றன. இந்த ஆண்டில் 995 வழக்குகள் மீது முடிவெடுக்கப்பட்டன. மொத்தம் 1,444 வழக்குகளில்

இவ்வாண்டு இறுதியில் 449 வழக்குகள் முடிவுறா நிலையில் இருக்கின்றன.



## தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி.

ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன்
அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல்,
வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது பிற
தொழில்களில் பணிபுரியும் போது காயமேற்பட்டு அதனால்
என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு
அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு
இந்நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923 ஆம் ஆண்டு
தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்தின் கீழ்
இழப்பீடு வழங்குவதற்கு நிதி வசதி இல்லாத தொழிலதிபர்
களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு
அல்லது வேறு காரணங்களுக்காக இழப்பீடு பெற இயலாத
தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு
இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்
படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதிவசதி இல்லாத
சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள்
விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்
களும் இந்நிதியிலிருந்து தொகை பெறுவர். 1979-ல் இந்
நிதியிலிருந்து இரண்டு பேருக்கு 3,000 ரூபாய் துயர் துடைப்பு
நிதி அனுமதிக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்:

இச்சட்டத்தின் கீழ், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி,
கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர்கள்
நல உதவி ஆணையாளர்கள் அவரவர் பகுதிகளில் கட்டுப்பாட்டு
அதிகாரிகளாக இருப்பர் என்றும், தொழிலாளர் நல துணை
ஆணையாளர்கள் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதி
களில் மேல் முறையீட்டதிகாரிகளாக இருப்பர் என்றும் அறிவிக்
கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதி
காரிகள் 1,413 வழக்குகளை முடிவு செய்துள்ளனர். மேல்
முறையீட்டதிகாரிகள் அறிக்கையாண்டில் 408 மேல் முறை
யீடுகளை முடிவு செய்துள்ளனர்.

## V. தொழிலாளர் நல நடவடிக்கைகள் :

தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் (அரசு உதவி பெறுவது) தனியார் தொழிலாளர் திட்டம் :

மாநில சமூக நலக் கொள்கையைக் கருத்தில் கொண்டு பொதுவாகவும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான வசதியான வீடுகள் கட்டிக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஏனெனில், பெரும்பாலோருக்குச் சொந்தமான வீடுகள் வைத்துக் கொள்ள வசதியிருப்பது அல்லது அவர்கள் பணியிடத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கின்றனர். சில தொழிலதிபர்கள் தங்களுடைய பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் குடியிருப்பு வசதி அளித்துள்ளனர். ஆனால் இது பிரச்சினையைச் சிறிது கூட தீர்ப்பதாக இல்லை. எனவே, பணியிடங்களுக்கு அருகில் வசதியுள்ள இடங்களில் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உதவித் தொகை பெறும் வீட்டு வசதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிலாளர்களின் நன்மைக்காக வீடுகள் கட்ட பொதுத் துறை கூட்டுறவுத் துறை, தனியார் துறை ஆகியவற்றிற்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (இரண்டடுக்கு மாடி கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 5,350 ரூபாயும், இரு சிறிய அறைகள் கொண்ட வீடு (பல அடுக்கு மாடிக் கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 6,050 ரூபாயும் வழக்கமான இரு அறைகள் கொண்ட வீடு (இரண்டு மாடிக் கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 7,600 ரூபாயும், வழக்கமான இரண்டு அறைகள் கொண்ட வீடு (பல மாடிக் கட்டடம்) கட்டுவதற்கு உச்சவரம்பாக 8,500 ரூபாயும் நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆம் ஆண்டில் புதிய வீட்டு வசதித் திட்டம் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் 1978-79 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு, கடனாக 1,60,500 ரூபாயும் உதவித் தொகையாக 1,60,500 ரூபாயும் வழங்கப்பட்டன.



## மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்:

இத் திட்டம் மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் தங்களது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதை நோக்கமாகக் கொண்டதாகும். 1979 ஆம் ஆண்டில் ஓர் அறை கொண்ட குடியிருப்பு ஒவ்வொன்றும் 4,600 ரூபாய் உச்சவரம்புச் செலவில் கட்டப்படுகின்றன. அத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37·5 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படும். வெட்டர்ஸ்பால் அஞ்சலில் உள்ள சக்தி எஸ்டேட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட 24 குடியிருப்புக்களுக்காக கடன் தொகையாக 48,000 ரூபாயும், உதவித் தொகையாக 36,000 ரூபாயும் அரசு வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | வீடுகள் தேவைப்படுகின்ற தனித் தொழிலாளர்கள் உட்பட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை. | 36,628 |
| 2. | வழங்கப்பட்ட தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 34,608 |
| 3. | வழங்கப்படவிருக்கும் தரமான வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 1,420 |
| 4. | தற்போதுள்ள தரமற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை. | 928 |

## தமிழ்நாடு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகள் 51(2) விதியின்கீழ் உள்ள வழக்குகள் :

இந்த ஆண்டில் இந்த விதித் துறையின்கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றம், தொழிலதிபர்கள் தாக்கல் செய்த 18 விண்ணப்பங்களைத் தீர்த்து வைத்தது.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டது. இதில் தொழிலாளர் நல அமைச்சர் தலைவராகவும், அரசு, தொழிலதிபர், தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள்

உறுப்பினர்களாகவும் உள்ளனர். தமிழ்நாட்டு அமைப்புள்ள தொழி
லாளர் நலனுக்காக இந்த வாரியம் அநேக நலத் திட்டங்களை
மேற்கொண்டது. தற்போது உள்ள நல நடவடிக்கைகள் சில
கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. தொழிலாளர் நல நிலையங்கள்:

இவ்வாரியம் தற்பொழுது (1) அம்பத்தூர் (சென்னை), (2)
செம்பியம் (சென்னை), (3) குடியாத்தம், (4) வாணியம்பாடி,
(5) கோயம்புத்தூர், (6) ஒத்தக்கல் மண்டபம், (7) திருப்பூர்,
(8) மதுரை, (9) திண்டுக்கல், (10) சிவகாசி, (11) கோவில்பட்டி
ஆகிய இடங்களில் 11 தொழிலாளர் நல நிலையங்
களை நடத்தி வருகிறது. இவற்றில் தொழிலாளர்களின்
குழந்தைகளுக்கு 2½ முதல் 5 வயது வரையிலான பாலர்
வகுப்புகளும் பெண் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர்களின்
மனைவியருக்கும் தையல் வகுப்புகளும் நடத்தப்பட்டு வரு
கின்றன. தையல் வகுப்பில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும்
திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்
படுகிறது. கேர் நிறுவனத்தின் உதவியுடன் குழந்தை
களுக்குப் பாலஹாரும், பாலும் இவ்வாரியத்தால்
வழங்கப்படுகிறது.

## 2. தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம்:

இவ்வாரியம், மாமல்லபுரம், குற்றாலம், உதகமண்டலம்
ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு
இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏற்காட்டில்
விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகிறது. இங்கு
ஒரே சமயத்தில் 20 நபர்கள் தங்கலாம். கணவர் மனைவி
ஆகிய இருவர் அடங்கிய குடும்பம் ஒன்றுக்கு ரூ. 2·50
வீதமும் பனிரெண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தை
ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் நபர் ஒருவருக்கு ரூ. 1·50 வீதமும்
சாதாரணமாக வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. குற்றா
லத்தில் விடுமுறை ஓய்வு இல்லம் கட்டப்படுவதற்கு
ரூ. 11,25,000 கான திட்டத்திற்கும் மதிப்பீட்டிற்கும் அனுமதி
வழங்கப்பட்டுள்ளது. மாமல்லபுத்தில் விடுமுறை ஓய்வு





இல்லம் ரூ. 8,13,000 செலவில் கட்டுவதற்காக திருத்திய
திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளன. 0·25 ஏக்கர்
நிலத்தில் உதகமண்டலத்தில் ஓய்வு இல்லம் கட்டுவதற்காகத்
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடம் ஒப்படைக்கப்
பட்டுள்ளது.

தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்
களுக்கும் காச நோய் வார்டுகள்:—

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில்
தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட
காச நோய் வார்டைக் கட்டியுள்ளது.

## 4. படிப்பகங்கள்:

இவ்வாரியம் பெரம்பூர் (சென்னை), தண்டையார்
பேட்டை (சென்னை), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்
களில் நான்கு படிப்பகங்கள் நடத்தி வருகிறது. வாசகர்
களின் பயனுக்காக செய்தித்தாள்கள், வார மாதாந்திர
இதழ்கள் வழங்கப்படுகின்றன. படிப்பகங்களில் அறிவியல்
கணிதப் பாடங்களில் பார்வைப் புத்தகங்கள், தொழில்
தகராறு சட்டப் புத்தகங்கள் ஆகியவற்றைக் கொண்ட
சிறு நூலகம் ஒன்று அமைக்கப்படலாம் என்றும் முடிவு
செய்யப்பட்டுள்ளது.

## 5. பல மாடிக் கட்டிடங்கள்:

இவ்வாரியம், தேனாம்பேட்டையில் ரூ. 40 இலட்சம்
செலவில் பல மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டியுள்ளது.
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலத்
துறையின் அலுவலகங்கள் இந்தக் கட்டிடத்தில் செயல்
படுகின்றன. வாடகையாக வசூலிக்கப்படும் தொகை இவ்வாரி
யத்தின் நிதி வசதிகளைப் பெருக்க உதவும்.

6. குழந்தைகள் காப்பு நிலையம்:

சென்னையில் திரு. வி. க. நகரிலும், சென்னை, பாரக்ஸ் லைன் வில்லேஜ் காலனியிலும் உள்ள மகளிர் மன்றங்களும் கோயம்புத்தூர் எல்.ஐ.சி.எம். தொழிலாளர் மகளிர் மன்றமும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து மன்றம் ஒன்றுக்கு பெறும் ரூ. 8,000 ஆண்டு மானியத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த மன்றத்தில் குழந்தைகள் காப்பு நிலையம் நடத்தப்படுகிறது. இங்கு 5 வயதிற்கு உட்பட்ட 50 குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர். இங்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதோடு பால் ரொட்டி போன்றவையும் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

7. தொழிற்சங்க தலைவர்களும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் சென்னையில் தங்குவதற்கான இடவசதிகள்:

தொழிலாளர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகச் சென்னைக்கு வரும் தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் குறைந்த செலவில் தங்குவதற்குப் போதுமான வசதி மிக்க அறைகளைக் கட்டுவதற்கு 7·33 லட்ச ரூபாய் செலவு செய்ய வாரியம் முடிவெடுத்துள்ளது. இதற்கான ரூ. 2 இலட்சத்தை மானியமாகவும் 5 மனைகள் மற்றும் 1,539 சதுர அடி கொண்ட நிலத்தைக் கொடையாகவும் தமிழ்நாடு அரசு அளித்துள்ளது. ஓய்வு இல்லம் கட்டும் வேலை நடந்து வருகிறது.

8. புத்தக வங்கிகள்:

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகள், பள்ளிகளில் படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவும் வகையில் புத்தக வங்கிகள் இயக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. புத்தகங்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமிருந்து வேண்டப்பட்டுள்ளன.



9. தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத்தேற படிப்புக் கட்டணம் தேர்வுக் கட்டணம் செலுத்துதல்:

வாரியம் முடிவு செய்துள்ளபடி தொழிலாளர்களின் பிள்ளைகள் தட்டெழுத்து சுருக்கெழுத்து கற்றுத் தேர்வு எழுத மேற்படி வகுப்புக்களை நடத்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்குப் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கான விண்ணப்பங்கள் அனுப்புமாறு தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது.

10. விளையாட்டு:

தொழிலாளர்களிலும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களிலும் வீரப்போட்டி மற்றும் விளையாட்டு ஆகியவைகளில் முன்னணியில் நிற்பவர்களை ஊக்குவிக்க வாரியம் முடிவு செய்துள்ளது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலும் வட்டார அளவிலும் மற்றும் இணை வட்டார அளவிலும் ஆண்டு விளையாட்டுப்போட்டிகள் நடத்த முடிவு செய்துள்ளது. வட்டார அளவில் உள்ள போட்டி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்களிலும் இணை மண்டல (அல்லது) மாநில அளவில் உள்ள போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி திங்களிலும் சென்னையில் நடக்கும். மேலும், ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் பெண்டிரையும் தொழிலாளர்களின் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வாரியம் முடிவு செய்துள்ளது.

11. பார்வைக் கோளாறினால் அவதிப்படும் தொழிலாளர்களுக்கு இலவசமாகக் கண்ணாடி வழங்குதல்.

திங்கள் ஒன்றுக்கு ரூ. 750ம் அதற்கும் குறைவாக ஊதியம் பெற்று பார்வைக் கோளாறினால் அவதியுறும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 50-க்கு மேற்படாத அளவில் இலவசமாகக் கண்ணாடிகள் வழங்குவதற்கு வாரியம முடிவு எடுத்துள்ளது.

**12. திரைப்படம் காட்டும் கருவி:**

தொழிலாளர்களைச் சுற்றியுள்ள இடங்களிலும், தொழி
லாளர் நல நிலையங்கள் உள்ள இடங்களிலும், தொழிலாளர்
களுக்கான கல்வி வகையில் அமைந்த திரைப்படங்களை
காட்டுவதற்காக திரைப்படம் காட்டும் கருவி (16 மி.மீ)
ஒன்றை வாரியம் வாங்கியது.

**13. தையற்பயிற்சி நிலையம், கூடலூர்:**

அரசால் இயக்கப்பட்டு வந்த தையற்பயிற்சி நிலையம்
ன்றை வாரியம் நடத்துவதற்காக ஏற்றுக் கொண்டுள்ளது.

**14. படிப்புதவித் தொகையும் நிதி உதவியும்:**

(அ) தொழிலாளர் நல நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தும்
தொழிலாளர்களின் ஆண், பெண் குழந்தைகள் 10+2
வகுப்புகளில் முறையே முதல் மற்றும் இரண்டாவது
மாணவர்களாக வருபவர்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு
மாவட்டத்திற்கும் இரண்டு படிப்புதவித் தொகைகள் அளிக்க
வாரியம் முடிவு எடுத்துள்ளது.

(ஆ) மாநில முழுவதும் உள்ள தொழிலாளர்களின்
குடும்பத்தைச் சேர்ந்த 15 பொறியியல் படிப்பு, 10 மருத்துவப்
படிப்பு, மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்க வாரியம்
முடிவு செய்துள்ளது.

(இ) இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு சட்டக் கல்லூரி
யிலும் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 3 சட்ட
இயல் படிப்பு மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கவும்
வாரியம் முடிவு செய்துள்ளது.

**5. ஏற்று நடத்த இருக்கும் மற்ற திட்டங்கள்:**

(1) கிண்டி, ராஜபாளையம், விக்ரமசிங்கபுரம், தூத்துக்குடி
மற்றும் மணப்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர் நல
நிலையங்களை ஏற்படுத்துதல்.



(2) கூடுதலாக எட்டு குழந்தைகள் காப்பு நிலையங்
களை தமிழ்நாடு முழுவதும் திறக்க இருக்கின்றன.

(3) இயன்றவை தொகை வசூல் செய்து திருமணம்,
காதணி விழா மற்றும் இதர சமுதாயச் சடங்கு விழாக்
களை நடத்துவதற்காக சென்னை நகரில் சமுதாயக் கூடம்
ஒன்று கட்டுதல்.

(4) தேனாம்பேட்டையில் உள்ள அலுவலகக் கட்டிடத்தில்
ஒரு நூலகத்தைத் தொடங்குதல்.

(5) ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத்
திட்டத்தைச் செயல் படுத்தும் பணி தொடர்பான செலவிற்கு
மானியம் வழங்குதல்.

(6) குன்னூரிலும் திருநெல்வேலியிலும் உள்ள தேயிலைத்
தோட்டப் பகுதிகளிலும் தையற் பயிற்சி நிலையங்களை
நடத்துதல்.

(7) தொழிலாளர்கள் குடியிருப்புகள், தொழிலாளர்கள்
நிறைந்துள்ள பகுதிகள் ஆகிய இடங்களில் தொழிலாளர்
களிடையேயுள்ள குடிப்பழக்கங்களினால் விளையும் கேட்டினை
நீக்குவதற்காக மனமகிழ் மன்றம், கலை நிகழ்ச்சிகளை
ஏற்பாடு செய்தல்

8 வால்பாறையில் ஓர் ஓய்வு இல்லத்தைத்
தொடங்குதல்.

சட்ட உதவி:

தொழிற்சங்கங்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு
அல்லது ரிட் முறையீடு தாக்கல் செய்வது தொடர்பாக
ஏற்படும் சட்டம் சம்பந்தமான செலவுகளுக்காக ஒரு சில நிபந்
தனைகளுக்குட்பட்டு ரிட் மனு அல்லது ரிட் மேல் முறையீடு
ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி வழங்கும் ஒரு
திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சட்ட நிதி
உதவிக்கு அனுமதி வழங்க தொழிலாளர் நல ஆணையா
ளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில்,
நிவாரணம் வேண்டி ஒரு கோரிக்கை வந்தது இத்திட்டத்தின் கீழ்
ரூ. 150 வழங்கப்பட்டது.

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையைக் கோரும் தகுதி வாய்ந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000ஐ அரசு ஒதுக்கியுள்ளது. காயமுற்ற தொழிலாளர்கள் கோரிய இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக நிர்வாகத்தினர் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது, அத் தொழிலாளர்களும் உயர்நீதி மன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைக்க சட்ட உதவி பெறுவதற்கு தகுதி வாய்ந்தவராவர். ஆனால், தொழிலாளர் இழப்பீடு குறித்து கூடுதல் ஆணையாளரின்முன் உள்ள நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இந்த சட்ட உதவி அளிக்கப்பட்டிருக்கவேண்டும். நடப்பாண்டில் சட்ட உதவி அளிப்பதற்காக ரூ. 50 வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சட்ட ஆலோசனைப் பிரிவுகள்:

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று பிரிவுகள் செயல்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித் துறை அதிகாரியாலும், ஓய்வு பெற்ற ஓர் தொழிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச் சட்ட உதவியை வழங்குவதற்குரிய திட்டமொன்றினை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒருநபர் குழு செய்த பரிந்துரைகளின் பேரில் அரசு இப்பிரிவுகளை அமைத்துள்ளது.

இப்பிரிவுகள் தொழிலாளர்களின் முறையீடுகளை கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து, அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகள் ஆகியவை குறித்து கருத்துத் தெரிவிக்கின்றன. 1979ஆம் ஆண்டில் இம் மூன்று பிரிவுகளும் 274 முறையீடுகளை விசாரணை செய்தன.



1980 ஜூலை 15]

தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் :

இம்மாநிலத்தில் தொழிலாளர்களின் பயனுக்காக ‘கேர்’ நிறுவனத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொழிலாளர் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களின் குடும்பங்களிலுள்ள பள்ளிக்குச் செல்லும் வயது அடையாத குழந்தைகளும் கருவுற்ற மகளிரும் பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தினால் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 95 தொழிற் பிரிவுகளைப் பொறுத்தமட்டில் (தமிழ்நாடு தொழிலாளர் நல குழுவின் நல நிலையங்கள் உட்பட), தற்போது 31,027 பேர் பயன் அடைகின்றனர். தற்போதுள்ள தொழிலாளர் சத்துணவுத் திட்டத்தோடு ஒருங்கிணைந்த சுகாதாரப் பணி முனைப்புத் திட்டத்தையும் செயற்படுத்த வேண்டியது அவசியம் என உணரப்பட்டுள்ளது. இதனால் வழங்கப்படும் சத்துணவிற்கேற்ப மருத்துவ உதவியையும் இத் தொழிலாளர்கள் பெறுவர்.

சென்னை—10, தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம்;

நல்ல, சிறந்த தொழிற்சங்க அமைப்புகளின் வளர்ச்சி, நிருவாகத் திறமையை பெருக்குவதற்கு திறமையான தொழிலாளர் நிர்வாகப் பணியை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு தென்னிந்தியாவிலேயே தமிழ்நாடு தொழிலாளர் ஆய்வு நிறுவனத்தை 1973, மார்ச்சு திங்களில் அமைத்தது. தென் இந்தியாவிலேயே இத்தகைய நிறுவனங்கள் முதன் முதலாக இங்குதான் நிறுவப்பட்டுள்ளது. மேற்கூறிய நோக்கங்களை எய்த இந்நிறுவனம் பின்வரும் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது :—

(1) பொதுத்துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கு (உடலுழைப்பாளர்கள், எழுத்தர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள்) தொழிலாளர் நலச் சட்டத்தின் அனைத்து அம்சங்கள் குறித்து அறிவுறுத்துதல். அவர்களை தொழிற்சங்கங்களுக்குத் தலைமை வகிப்பது பற்றி சிறப்பாக வலியுறுத்துதல்.

(2) தொழிலாளர் நலம் குறித்த மேலாண்மையில் மாற்றங்களைக் கொண்டு வருதல், தொழிற் சாலையில் சுமுகமான உறவை ஏற்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தொழிற் சாலைகளில் நிர்வாகத் தரத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(3) தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்புள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(4) கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் தொழிலாளர்கள் பணியாளர்கள் ஆகியோரின் நலனைக் கவனிக்கிற அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல். இந்த நிறுவனம் இதுவரையில் 68 வகுப்புகளையும், 6 கருத்தரங்குகளையும் நடத்தியது. இதனால் 2,256 பேர் பயனடைந்தனர்.

## அண்டை மாநிலத்திலுள்ள அதிகாரிகளுக்கு தொழிலாளர் சட்டங்கள் பற்றிய பயிற்சி வகுப்புகள் :

வெளி மாநிலத்திலிருந்து அதாவது மத்திய அரசின் நேரடியாட்சிப் பகுதியான பாண்டிச்சேரியிலிருந்து, அரசு முகமையில் அனுப்பிய அதிகாரிகளுக்கு முதன் முறையாக இந்த நிறுவனம் 1979இல் பயிற்சி வகுப்பை நடத்தியது. இவ் வகுப்பு வெகுவாகப் பாராட்டப்பட்டது.

## தொழிலாளர் நல சட்டப் பத்திரிகை:

இந் நிறுவனம், 'உழைப்பவர் உலகம்' என்ற தலைப்பில் ஒரு புதிய தொழிலாளர் சட்டப் பத்திரிக்கையையும் தமிழில் வெளியிட்டு வருகிறது. இதனுடைய முதற் பதிப்பு அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளா 1978 செப்டம்பர் 15-ஆம் நாளன்று முதல் அமைச்சர் அவர்களா வெளியிடப்பட்டது. இப் பத்திரிக்கை, துறையில், புகழ்மிக்க வல்லுநர்கள் எளிய தமிழில் எழுதிய கட்டுரைகளையும் தொழிலாளர் நீதிமன்றம், உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை தொழில் தகராறு குறித்து எடுத்த முடிவுகளின் விவரங்களையும் வெளியிடுகின்றது. தொழிலாள



ருக்கான தொழில் மனக் கோட்பாடு, வாழ்க்கை குறியீட்டு எண்கள் கொண்ட பயனுள்ள புள்ளி விவரங்கள், வேலை நிறுத்தம், கதவடைப்புகள், சமரச ஒப்பந்தங்கள் ஆகியவை அடங்கிய விவரங்கள், குறைந்த அளவு ஊதியங்கள் குறித்த அறிவிப்புகள் தற்காப்பு நடவடிக்கைகள் ஆகியவை இதில் வெளியிடப் படுகின்றன. சுருங்கக் கூறின், தொழிலாளர்களுக்கு மட்டு மல்லாமல் சமுதாயத்தின் பெரும்பாலோருக்கும் பயனுள்ள முக்கிய தகவல்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு எல்லா வகையிலும் பயனளிக்கும் வினா விடைப் பகுதி ஒன்றும் இதில் அடங்கியுள்ளது.

## தொழிலாளர் நிர்வாகத்தில் பகுதி நேர டிப்ளமோ வகுப்புகள் :

இந்த நிறுவனம் தொழிலாளர் நிர்வாகம் பற்றிய பட்ட மேற் படிப்பு பட்டய வகுப்புகளை நடத்துவதற்கு அரசு அனுமதி யளித்துள்ளது. தொழிலாளர் நிர்வாகத்தில் டிப்ளமோ வகுப்பை தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் அன்று தொடங்கி வைத்தார். இந் நிறுவனத்தின் முன்னேற்றத்தில் இது மற்றொரு சிறப்பாகும்.

## பிற நடவடிக்கைகள் :

தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகம் போன்ற பிற அமைப்புகளின் ஒத்துழைப்புடன் விவசாய மற்றும் முறைப்படுத் தப்படாத தொழில் வகையைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படும் வகையில் கிராமிய முகாம்கள் நடத்தப்பட்டன.

தொழிலாளர்களின் பயனுக்காக தொழிலாளர் நல சட்டங் களை, பயனுள்ள வழக்குகள் சட்டக் குறிப்புகளுடன் பதிப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VI. எடைகள்—அளவைகள் சட்டம்—தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம் :

1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு எடை அளவை, (செயற் படுத்தல்) சட்டமும், எடைகள்-அளவைகள் சட்டமும் அவைகளின் விதிமுறைகளும் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும் தொழி

லாளர் நல துணை ஆய்வாளர்களாலும் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்களாலும் மற்றும் சென்னை மாநகர், செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றிலுள்ள முத்திரை ஆய்வாளர்களாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (ஆய்வுகள்) எடைகள்—அளவைகள் செயல்படுத்தல் சட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சென்னை மாநகருக்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டிருக்கும் இரு துணைத் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இவரது கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றனர்.

1979 ஆம் ஆண்டு ஜூலை திங்களில், பணி உதவியாளர்களோடு 15 தொழிலாளர் நல ஆய்வாளர்களை சென்னை மாநகருக்கும், 5 தொழிலாளர் நல ஆய்வாளர்களை செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் முற்றிலும் முத்திரையிடும் பணிக்காக தற்காலிகமாக ஓராண்டிற்கு செயலாற்ற அரசு ஆணை பிறப்பித்தது. மேலும் சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 2 தொழிலாளர் நல துணை ஆய்வாளர் பதவிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை மாநகரிலும் செங்கற்பட்டு மாவட்டத்திலும் முத்திரையிடும் பணிக்காகவே ஆய்வாளர்களை நியமித்ததனால் வணிகர்கள் தங்களின் எடைகள்—அளவைகளை உரிய காலத்தில் முத்திரையிடுவதில் இடர்ப்பாடு எதுவும் அவர்களுக்கு இருக்காது.

எடைகள் அளவைகள் உபயோகப்படுத்துவதில் உள்ள முறைகேடுகளை ஒழிப்பதற்காக கிராமப்புற ஆய்வுகள் உட்பட குறித்த காலச் சோதனைகள், திடீர் சோதனைகள், கூட்டுச் சோதனைகள் ஆகியவற்றின் மூலம் இத்துறை செம்மையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

1979 ஆம் ஆண்டில் எடை—அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறி நடந்துக்கொண்டதற்காக 16,789 வழக்குகள் தொடரப்பட்டன. முன்பு நிலுவையிலுள்ள வழக்குகள் உள்பட இதுவரை 17,229 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. ரூபாய்



7,33,803 அபராதமாக விதிக்கப்பட்டது. (1979 ஆம் ஆண்டில் மீண்டும் சரிபார்த்து முத்திரையிடும் கட்டணம் உள்ளிட்ட முத்திரைக் கட்டணமாக ரூ. 34,51,973.25 வசூலிக்கப்பட்டது.)

1979 ஆம் ஆண்டில், 613 விற்பனையாளர்கள் 403 பழுது பார்ப்போர்கள் மற்றும் 125 உற்பத்தியாளர்களுக்கு எடைகள் அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியால் உரிமங்கள் வழங்கப்பட்டன.

1978, 1979 ஆம் ஆண்டுகளுக்கான விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்போர். | விற்பனையாளர். | உற்பத்தியாளர். |
|---|---|---|---|
| 1978 .. .. | 353 | 646 | 71 |
| 1979 .. .. | 403 | 613 | 125 |

1979 ஆம் ஆண்டில், உரிமக்கட்டணங்களாக ரூ. 1,46,202·05 வசூலாகியது.

எடைகள்—அளவைகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும் பணியை மறு ஆய்வு செய்து எடைகள்—அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி, மாவட்டத்தில் உள்ள சார்நிலை அதிகாரிகளுடன் குறித்த கால முறைக் கூட்டங்களை நடத்தி வருகிறார். இவர் பார்வையிடும் போது திடீர் சோதனைகளையும் மேற்கொண்டார்.

1979 ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதிலும் 1,613 சோதனைகள் நடத்தப்பட்டன. 58,484 வணிகர்கள் சோதனை செய்யப்பட்டனர். இதனால் 5,552 வணிகர்கள் மீது வழக்கு

தொடரப்பட்ட [illegible] எடைகள்–அளவைகள் சட்டம், [illegible] செயல்படுத்த [illegible] கிளிப்படுத்த, அதிகாரி [illegible] சோதனைகள், சார்பு [illegible] 1979-ஆம் ஆண்டில் 52,082 [illegible] 1?,151 [illegible] சோதனைகள் சார்நிலை அதிகாரிகளால் நடத்தப்பட்டன.

கட்டாய சோதனைகள் மற்றும் ஆய்வுகளின் விளைவாக வெவ்வேறு அளவுகள் கொண்ட சுமார் 21,541 எடைகளும் வெவ்வேறு அளவுகளில் உள்ள அளவைகள் சுமார் 18,601 அளவைகளும் அளவுக் கருவிகள் சுமார் 1,445 கருவிகளும் அளவைக் கருவிகள் சுமார் 863 கருவிகளும் போலியான, தரமில்லாத, முத்திரையிடப்படாத காரணங்களுக்காக கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களை பொறுத்த மட்டில், நீதிமன்றத்தில் நடவடிக்கைக்கு உட்பட்டவை என்பதால் நீதி மன்றங்களின் தீர்ப்புகளின்படி மேல் நடவடிக்கை எடுக்கப் படுகின்றன. கைப்பற்றப்பட்ட இதர பொருள்களின் மீது, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறைகள் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றிற்கிணங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது.

**தேசிய வேலை வாய்ப்புப்பணி:**

1. வேலை வாய்ப்புகள்: தமிழ் நாட்டில் 34 வேலை வாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஆம்பத்தூர் ஆலங்காயம், திண்டுக்கல், காஞ்சீபுரம், கரூர், மண்டபம், ஓசூர், நாகப்பட்டினம், பரமக்குடி, சங்கராபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் 11 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும் தொழில் மற்றும் நிருவாக அனுபவம் பெற்றவர்களுக்காகவும் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்காகவும் தனியாக சென்னையில் இயங்கும் இரண்டு தனி வேலை வாய்ப்பகங்களும் மற்றும் சென்னை, மதுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் இயங்கும் மூன்று பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்களும் அடங்கும்.



இவ்வாண்டில் தமிழ் நாட்டில் வேலைக்காகப் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், வேலை அளிக்கப்பட்டவர்கள் மற்றும் வேலைக்காக வேலை வாய்ப்பகங்களின் பதிவேட்டில் காத்திருப் போர், அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலை அளிப் போர்களின் அரசுத் துறை, தனியார் துறைகள் எண்ணிக்கை விவரங்களும் மற்றும் இதே காலத்தில் சென்ற ஆண்டிற்கான விபரங்களும் வருமாறு:—

| தொடர் எண்ணும் விவரங்களும். | (1–4–1979 முதல் 31–3–1980 முடிய) அறிக்கையாண்டில். | (1–4–1978 முதல் 31–3–1979 முடிய) முந்தைய ஆண்டின் நிகரான காலத்தில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 பதிவு செய்த விண்ணப்ப தாரர்கள் .. | 4,19,951 | 4,19,761 |
| 2 வேலையில் அமர்த்தப்பட் டவர்கள் .. | 56,786 | 40,235 |
| 3 அறிவிக்கப்பட்ட வேலை காலியிடங்கள் .. | 79,602 | 57,506 |
| 4 வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலை யளிப்போர் .. | 21,599 | 17,408 |
| 5 ஒவ்வோராண்டும் மார்ச் 31-ம் நாள் நிலவரப் படி வேலைக்காகப் பதிவு செய்து உயிர் பதிவேட்டில் காத்திருந் தவர்கள் .. | 10,05,880 | 9,68,314 |

2. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம், சென்னை.— சென்னையில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பகம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் பார்வையிழந்தோர், காது கேளாதோர்களையும் சென்னையில் வசிக்கும் உடல் உறுப்பு ஊனமுற்றோர்களையும் பதிவுசெய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங் களுடன் தொடர்பு கொண்டு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்களுக்காக வேலை அளிக்க தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு நிலையங்களில் ஊனமுற்றோர்களுக்காக தனிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகத்தில் ஒரு இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் அந்தந்த மாவட்டங்களில் உள்ள எல்லா ஊனமுற்றோர்களையும் பதிவு செய்து அவர்களை வேலையில் அமர்த்துவதற்கான பணியினை மேற்கொண்டு வருகிறார். இவர் மாவட்ட வேலை வாய்ப்பக உதவி இயக்குநரின் கீழ் பணியாற்றுகிறார். இதர வேலை வாய்ப் பகங்கள் உடல் உறுப்பு ஊனமுற்றோர்களை மட்டும் (Orthopaedi- cally handicapped) பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடி அளிக்கின்றன.

இந்த உடல் ஊனமுற்றோர்களுக்கான சிறப்பு வேலை வாய்ப்பகங்களில் பணி குறித்த புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன :—

| அலுவலகம். | பதிவு செய்யப் பட்டவர் களின் எண்ணிக்கை. | வேலையில் அமர்த்தப் பட்டவர் களின் எண்ணிக்கை. | 31-3-1980 நாள் நிலவரப் படி உயிர் பதிவேட் டில் உள்ள எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உடல் ஊனமுற்றோர்கள் சிறப்பு வேலை வாய்ப் பகம்— | | | |
| 1 சென்னை .. .. | 1,576 | 459 | 4,636 |
| 2 மதுரை .. .. | 153 | 25 | 943 |
| 3 கோயம்புத்தூர் .. | 272 | 63 | 965 |
| 4 சேலம் .. .. | 160 | 25 | 613 |
| 5 திருச்சி .. .. | 149 | 14 | 346 |



3. தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம்.—இந்த அலுவலகம் உயர்ந்த தொழில் அனுபவம், அறிவியல், பொறி யியல், நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பணிக் கல்வித் தகுதி யுடையவர்களைப் பதிவு செய்து, பொதுத் துறை மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு அளிப்போர்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களைத் தகுந்த வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ் வறிக்கை ஆண்டில் இந்த அலுவலகம் 8,861 தொழில் மற்றும் நிர்வாகத் தகுதியுடைய மனுதாரர்களைப் பதிவு செய்தது, 3,530 மனுதாரர்களை வேலையில் அமர்த்தியது. 1980-ம் ஆண்டு மார்ச்சு இறுதியில் இவ்வலுவலகத்தின் பதி வேட்டில் மொத்தம் 14,592 மனுதாரர்கள் வேலை வாய்ப்பிற் காகக் காத்திருந்தார்கள்.

4. பல்வகைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழி காட்டும் நிலையங்கள்.—(சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகம்).—சென்னை, மதுரை, மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் பல்கலைக்கழகங்களில் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், வேலை வாய்ப்பு விவரங்கள் வழிகாட்டுதல் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. இது தவிர தொழில் மற்றும் உயர் பட்டதாரிகளையும் வேலை வாய்ப்பிற் காகப் பதிவு செய்கின்றன.

இந் நிலையங்களின் அறிக்கையாண்டில் பணி குறித்த புள்ளி விவரங்கள் வருமாறு :—

| பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையத்தின் பெயர். | பதிவு செய்யப் பட்டவர் எண்ணிக்கை. | வேலையில் அமர்த்தப் பட்டவர் எண்ணிக்கை. | 31-3-80 நிலவரப் படி உயிர் பதிவேட்டில் இருந்தவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை .. .. | 218 | 28 | 306 |
| 2 மதுரை .. .. | 1,581 | 395 | 2,603 |
| 3 அண்ணாமலை நகர். | 356 | 125 | 554 |

5. வேலை நிலவரத் தகவல் திட்டம்.—இத்திட்டத்தின்கீழ் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள (வேளாண்மை உட்பட) எல்லாத் தனியார்த்துறை நிறுவனங்களிலிருந்தும், அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும், வேலை நிலவரத் தகவல் காலாண்டுக்கொருமுறை சேகரிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை ஆண்டில் வேலை நிலவரத் தகவல் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள 16 களப் பிரிவுகளின் மூலம் நான்கு காலாண்டுகளாகிய மார்ச்சு 1979, ஜுன் 1979, செப்டம்பர் 1979, மற்றும் டிசம்பர் 1979 ஆகிய காலாண்டுகளில் நான்கு ஆய்வுகள் நடத்தப்பட்டன.



கீழ்க்கண்ட அட்டவணை நான்கு காலாண்டுகளில் தகவல் கேட்ட நிறுவனங்கள், தகவலை அளித்த நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் அதன் சதவீத விவரங்கள் வருமாறு :—

| முடிவடைந்த காலாண்டு. | தகவல் கேட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | தகவல் அளித்த நிறுவனங்களின் எண்ணிக்கை. | விழுக்காடு. (சதவீதம்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 31–3–79 .. .. | 18,889 | 16,529 | 87·4 |
| 30–6–79 .. .. | 19,065 | 16,957 | 88·2 |
| 30–9–79 .. .. | 18,897 | 16,102 | 85·9 |
| 31–12–79 .. .. | 19,511 | 16,963 | 86·9 |

1979 மார்ச்சு, 1979 ஜுன், 1979 செப்டம்பர், 1979 டிசம்பர் திங்களுடன் முடியும் காலாண்டுகளில் இம்மாநிலத்தில் வேலையிலிருப்பவர்களின் துறை வாரியான விவரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

| அன்றைய நாள் நிலவரப்படி. | வேலையில் இருப்போர்களின் மொத்த எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார்த் துறை. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 31–3–79 .. .. | 11,75,868 | 6,43,140 | 18,19,008 |
| 30–6–79 .. .. | 11,84,023 | 6,53,921 | 18,37,944 |
| 30–9–79 .. .. | 11,01,266 | 6,60,505 | 17,61,771 |
| 31–12–79 .. .. | 11,30,699 | 6,57,865 | 17,88,564 |

சம்பள விகிதங்களுக்கிணங்க மத்திய/மாநில/மத்திய அரசு/ஓரளவு மாநில அரசு போன்றவற்றின் உள்ளாட்சி நிறுவனங்களில் வேலையிலிருப்பவர்களின் ஆண்டுப் புள்ளி விவரச் சேகரிப்பு.

31-3-1979 ஆம் நாள் நிலவரப்படி மத்திய அரசு/மாநில அரசு/மத்திய அரசு/ஓரளவு மாநில அரசு போன்ற உள்ளாட்சித் துறை அரசு நிறுவனங்களில், வேலையிலிருப்பவர்களின் சம்பள விகித அடிப்படைகளின் புள்ளி விவரங்கள் கொண்ட விவர அறிக்கைகளைச் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பணியாளர்களின் வேலை-கல்வித்தகுதி குறித்த இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு. 30-9-1978 ஆம் நாளுடன் முடிவடையும் கால அளவில் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் வேலை-கல்வித் தகுதி குறித்து இரண்டாண்டுகளுக்கொருமுறை நடத்தப்படும் ஆய்வு முடிவுற்றது. தனியார் நிறுவனங்களில் 30-9-1979 ஆம் நாளுடன் முடிவடையும் கால அளவிற்கான ஆய்வு நடைபெற்று வருகிறது.

ஆழ்ந்தாய்வுப்பிரிவு.—அறிக்கை ஆண்டின்போது பின்வரும் ஆய்வுகள் முடிக்கப்பட்டன. தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களில் நிலுவையாக உள்ள காலியிடங்கள் குறித்து ஆய்வு.

1978 டிசம்பர் முதல் 1979 நவம்பர் வரையில் அறிவிக்கப்பட்ட, நிரப்பப்பட்ட, ரத்து செய்யப்பட்ட மற்றும் நிலுவையாக உள்ள காலியிடங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் வேலை வாய்ப்பகங்களிலிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. வேலை நிரப்பப்படாமல் காலியாக இருந்த கால அளவு ஒரு மாதம் முதல் 12 மாதம் வரையிலாகும். வேலை காலியிடங்கள் அறிவிக்கப்பட்ட காலியிடங்களில் 30·25 சதவீதம் ஆகும். அவைகள் முறையே :—

1. காலியிடங்கள் அறிவித்தது .. .. .. 76,960
2. காலியிடங்கள் நிரப்பியது .. .. 42,060
3. காலியிடங்கள் ரத்து செய்தது .. .. 9,115



4. தகுதியுடையவர்கள் இல்லை எனச் சான்றிதழ் அளிக்கப்பட்ட காலியிடங்கள். 2,502
5. நிலுவையாக உள்ள காலியிடங்கள் .. .. 23,283

ஆழ்ந்த ஆய்வுக்குப்பின் வேலை காலியிடங்களின் நிலுவைக்கு அறிவிக்கப்பட்ட காரணங்கள் வருமாறு :—

1. வேலை வாய்ப்பகங்களில் போதிய தொடர் நடவடிக்கை எடுக்காமை.

2. வேலை அளிப்பவர்கள், தேர்வுபற்றிய முடிவுகளை அனுப்பிய போதிலும் வேலை வாய்ப்பகங்கள் அவற்றை உடனுக்குடன் கணக்கில் கொள்ளாமை.

3. வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் விவரங்களை குறித்த நேரத்தில் வேலை அளிப்போர்கள் அனுப்பாமை.

(ஆ) மெட்ரிக்குலேசன் தேறியவர்களும் அதற்கும் குறைவான கல்வித்தகுதி உடையவர்களும் காத்திருக்கும் கால அளவை அறிய மேற்கொள்ளப்பட ஆய்வு.

வேலை வாய்ப்பு அலுவலகங்களின் செல்லுபடி பதிவேட்டில் காத்திருக்கும் மனுதாரர்களில் அதிகமாக உள்ளவர்கள் மெட்ரிக்குலேசன் மற்றும் அதற்கும் குறைந்த கல்வித் தகுதி உள்ளவர்கள். அவர்கள் செல்லுபடி பதிவேட்டில் 2/3 பாகமாக உள்ளார்கள். அவர்கள் பள்ளி தேர்ச்சியுற்று அனுபவமற்றவர்கள் ஆவார்கள். 1/3 (32·69%) பகுதியினர் மெட்ரிக்குலேசன் தேறியவர்கள் ஆவார்கள். 1/4 (23·44%) பகுதியினர் நடுத்தரப்பள்ளி வரை படித்து வேலைக்காகப் பதிவு செய்த மனுதாரர்கள் ஆவர். 1/12 (8·8/1/8%) பகுதியினர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் (1·34%) பகுதியினர் படிக்காதவர்களாகவும் உள்ளனர். மெட்ரிக்குலேசன் தேறியவர்களில் பாதிக்கு மேல் (55·5%) மூன்றாண்டுகளுக்கும் குறைவாக வேலைக்காகக் காத்திருப்பவர்களாகவும், மற்றும் 1/4 பகுதியினர் ஐந்தாண்டு

களுக்குக் குறைவாகக் காத்திருப்பவர்களாகவும் உள்ளனர்.
மெட்ரிக்குலேசன் முடித்த எட்டு நபர்களில் ஒரு நபர் (13·72%)
ஐந்து முதல் ஏழு ஆண்டு வேலை வாய்ப்புக்காகக் காத்
திருப்பவர்கள் ஆவர்.

நடுத்தர பள்ளிப்படிப்பு படித்தவர்களில் 58·33 சதவிகிதத்
தினர் மூன்றாண்டுக்குக் குறைவாக காத்திருப்பவர்கள் ஆவார்.
1/4 பகுதியினர் (23·91%) மூன்றிலிருந்து ஐந்தாண்டு
களாக காத்திருப்பவர்கள். அவர்களில் எட்டில் ஒரு நபர்
(12·77%) ஐந்தாண்டுக்கு மேல், ஆனால் 7 ஆண்டிற்கு
குறைவாகக் காத்திருக்கிறார்கள். எழுதப்படிக்கத் தெரிந்தவர்
களில் 2/3 பாகத்தினர் மூன்று ஆண்டு காத்திருக்கிறார்கள்.
அவர்களில் 1/5 பாகத்திற்கு சற்று கூடுதலானவர்கள் மூன்று
ஆண்டு முதல் ஐந்து ஆண்டு வரை காத்திருக்கிறார்கள். 10-க்கு
ஒரு நபர் ஐந்து ஆண்டுக்கு மேல் ஏழு ஆண்டுக்குள் காத்திருக்
கிறார்கள்.

படிக்காதவர்களில் 3/4 பாகத்திற்கு மேல் (79·81%)
மூன்றாண்டுக்கு குறைவாகக் காத்திருக்கிறார்கள். 1/10
பாகத்தினர் (10·99%) மூன்று ஆண்டுக்கு மேலும் ஐந்து
ஆண்டுக்குக் குறைவாகவும் காத்திருக்கிறார்கள். அண்மைக்
காலத்தில் பின்வரும் ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்
பட்டுள்ளது:—

1. வேலை வாய்ப்பகங்களின் செல்லுபடி பதிவேட்டி
லுள்ள தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ்/தேசிய தொழில்
பழகுவோர் சான்றிதழ் பெற்றவர்களைப்பற்றி ஆய்வு.

2. வேலை வாய்ப்பகங்களின் செல்லுபடி பதிவேட்டி
லுள்ள ஏற்கனவே வேலையிலுள்ள மனுதாரர்களின் விகிதா
சாரத்தை அறியும் மாதிரி ஆய்வு.

(ஆ) புள்ளி விவரத் தொகுப்பு நிலையம்.—1979–80 ஆம்
ஆண்டில் கீழ்கண்ட வேலைகள் புள்ளி விவரத் தொகுப்புப்
பிரிவில் மேற்கொள்ளப்பட்டன.



31—3—1979, 30—6—1979, 30—9—1979 மற்றும்
31—12—1979 ஆகிய காலாண்டுகளில் மத்திய அரசு/
மாநில அரசு/ஓரளவு மத்திய அரசு நிறுவனங்கள்/ஓரளவு
மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும்
பொதுத்துறை நிறுவனங்கள் (அனைத்திலும்) தனியார்துறை
(பெரிய நிறுவனங்கள்), தனியார் துறை (சிறிய நிறுவனங்கள்),
தனியார்துறை (அனைத்திலும்), வேலை வாய்ப்பு நிலைகளில்
உள்ள மாற்றங்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது.

தேசிய வேலை வகைப்பாட்டின்படி, வேலை வாய்ப்பக
நடப்புப்பதிவேட்டில் உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை,
தேசிய வேலை வகைப்பாட்டின்படி அறிவிக்கப்பட்ட, நிரப்பப்
பட்ட, நிலுவையாக உள்ள காலியிடங்கள், முன்னாள் தொழில்
பயிற்சியாளர்கள் செய்த பணி, உரிய தகுதிபடைத்தவர்கள்
இல்லை என்பதற்கான சான்றிதழ்கள் முதலியவை போன்ற
வேலை, வாய்ப்பகப் புள்ளி விவரங்களும் அட்டவணையிட்டுத்
தயாரிக்கப்படுகின்றன.

பட்டுத்திரை அச்சுப் பிரிவு Silk Screen Printing.—இந்த
அறிக்கை ஆண்டுக் காலத்தில் சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு
—பயிற்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள பட்டுத் திரை
அச்சுப் பிரிவு பின்வரும் பணிகளை மேற்கொண்டது:—

| | |
|---|---|
| 1. பட்டுத்திரை முறை அச்சிடுவதற்காகத் தேவைப்படும் ஸ்டென்சில் தாள்கள். | 21 |
| 2. தயாரிக்கப்பட்ட மாதிரி வரைபடங்கள் .. | 4 |
| 3. தயாரிக்கப்பட்ட விளக்கப்படங்கள்/வரைப் படங்கள்/துண்டுவெளியீடுகள். | 190 |
| 4. அச்சடிக்கப்பட்ட உரைத்தாள்கள்/சுவரொட்டிகள். | 1,425 |
| 5. அச்சிட்ட பட்டுத்திரைகள் .. .. | 5 |
| 6. பெயர்ப்பலகை போன்ற ஏனைய சிறப்புப் பணிகள். | 21 |

வேலை வாய்ப்பகங்களின் பணியை கணக்கிடுதல் பொறி மூலம் செய்வது.—வேலைவாய்ப்பகப் பணிகளைத் துரிதப் படுத்தவும், புகார்கள் வராமல் தவிர்க்கும் பொருட்டும், வேலைவாய்ப்பகப் பணிகளை கணக்கிடு பொறி மூலம் செய்யும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. ஆய்வாண்டில், முதன்முறையாக தொழில் நிர்வாகப்பணி வேலைவாய்ப்பகத்தில் கணக்கிடு பொறி வசதி செய்து கொடுக்கும் பணியை அரசுப் புள்ளிவிவரத் தொகுப்பு நிலையம் மேற்கொண்டது. வேலைக் காலியிடங்களுக்கு மனுதாரர்களைத் தேர்வு செய்ய தேவையான தகவல் படிவம் அரசுப் புள்ளிவிவரப் பிரிவின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டது. வேலைவாய்ப்பகச் செல்லுபடிப் பதிவேட்டில் உள்ள தொழில் நிர்வாக வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள 4,000 பேர்களின் தகவல்கள் குறித்த புள்ளிவிவரங்கள் நுழையிடப்பட்டு அரசுப் புள்ளி விவரத் தொகுப்பு நிலையத்தில் மூலக்கோப்பு தயாரிக்கப்பட்டது. தேர்வுத்திட்ட முறையைச் சோதனை செய்து பார்ப்பதற்காக ஒரு மாதிரித் தேர்வு நடைபெற்றது. தொழில் நிர்வாகப் பணி வேலைவாய்ப்பகத்தின் செல்லுபடிப் பதிவேட்டில் எஞ்சியுள்ள நபர்கள் பற்றிய தகவல்களை வகைமுறைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

6. வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதலும், வேலைவாய்ப்பு ஆலோசனை அளித்தலும்.—வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகள் தமிழ்நாட்டில் நீலகிரி, தருமபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள்தொடர்ந்து தொழில் வேலைவாய்ப்பு பயிற்சி பெறுவதற்கான வசதிகள் ஆகியவை பற்றிய தொழில் பழகு வசதிகள் விவரங்களை வேலை தேடுவோரிடையும்/மாணவர்களிடையேயும் விண்ணப்பதாரர்களிடையேயும் பரப்பி வருகின்றன. மாணவர்கள் பதிவு செய்தவர்கள் இவர்களுக்கான வழிகாட்டுதல் சம்பந்தமான கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. வேலை வாய்ப்பகங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு காலாண்டுதோறும் மாணவர்கள், வேலை தேடுவோரின் பயனுக்காக செய்தி அறிக்கைகள் தயாரித்து பள்ளிகள் மற்றும் நூலகங்களுக்கு அனுப்புகின்றது.



1979 ஏப்ரல் முதல் 1980 மார்ச் வரையில் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுப் பிரிவுகளால் பயனடைந்த விண்ணப்பதாரர்கள் வேலை தேடுவோர், மாணவர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | மேற்கொள்ளப்பட்ட (வழிகாட்டுதல்) கூட்டுக் கூட்டங்களின் எண்ணிக்கை. | 3,113 |
| 2. | பதிவு செய்து வழிகாட்டும் தகவல் மூலம் பயன் பெற்றவர் எண்ணிக்கை. | 9,967 |
| 3. | கலந்துறையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை. | 57,379 |
| 4. | வேலை, பயிற்சி, தொழில் பழகுதலில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 1,426 |
| 5. | பள்ளிகள்/கல்லூரிகளில் நிகழ்த்திய வாழ்க்கை தொழில் பற்றிய சொற்பொழிவுகளின் எண்ணிக்கை. | 317 |
| 6. | தொழில் பழகுவோருக்கான உதவித்தொகை/மேற்படிப்பிற்காக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | 11,001 |

சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு—பயிற்சித்துறை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த மாநில வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, மாவட்டங்களில் உள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டிப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க, மேற்பார்வை செய்து, சீரமைத்து பரிசீலனை செய்து வருகிறது. 31 தொழில் பயிற்சி நிலையங்களிலும், கிண்டியில் உள்ள மாதிரிப் பயிற்சிப் பள்ளிகளிலும் ஏறத்தாழ 33,000 விண்ணப்பதாரர்களுக்கு திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது. ஆவடியில் உள்ள கனரகத் தொழிற்சாலையில், தொழில் திறன் உள்ளோரைத் தேர்ந்தெடுக்க திறனாய்வுத் தேர்வு நடத்தப்பட்டது.

10—7—1979 முதல் 31—7—1979 முடிய பல்கலைக் கழக பழைய மாணவர்களுக்காக தகவல் கூடம் நடத்த

சென்னை-5-ல் உள்ள பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் நிலையத்தின் துணைத் தலைவர் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

1979 நவம்பரில் வேலூரில் ஊரிஸ் கல்லூரி கூட்டு முயற்சியுடன் வாழ்க்கை தொழில் தகவல் கண்காட்சி நடத்த சென்னை பல்கலைக்கழகம் வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையத் துணைத் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பொருளாதாரம், இரசாயனம் மற்றும் வணிக இயல் படித்த பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு விவர கையேடு ஒன்று தயாரிப்பில் உள்ளது.

நாகர்கோயில், மதுரை மாவட்டங்களிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் முறையே 1980 ஜனவரி, மார்ச்சு மாதங்களில் வாழ்க்கைத் தொழில் பொருட்காட்சி நிறுவப்பட்டது.

7. <u>மாநில தொழில் தகவல் பிரிவு.</u>—தொழில் தகவல் பிரிவு, வாழ்க்கைத் தொழில் குறித்து சிறு நூல்கள், வாழ்க்கை தொழில் பற்றிய சிற்றேடு, கட்டுரைகள் ஆகியவற்றைத் தயாரித்தல், திருத்தியமைத்தல் ஆகிய பணிகளையும், புது டில்லியிலுள்ள வேலைவாய்ப்பு-பயிற்சித் துறைத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற சிறுவெளியீடுகள்/கையேடுகள் ஆகியவற்றை சார்நிலை அலுவலர்கள் தங்களது பகுதிகளிலுள்ள நூலகங்கள்/பள்ளிகள்/கல்லூரிகளுக்கு வழங்கும் பணிகளையும் மேற்கொண்டது.

பேருந்து போக்குவரத்துத் துறையில், தொழில்-வேலை வாய்ப்புத் தகவல் சேகரிக்கும் சிறப்பு ஆய்வுத் திட்டம் முடிவுற்று அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

மேற்கண்ட வேலைகளுடன் எதிர்காலத்தில் (1980-81) இம் மாநிலம் முழுவதும், தொழில் தகவல்-கல்வி பயிற்சி வசதிகள் பற்றிய இந்நாளது வரையிலான விபரங்களைச் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட கருதப்பட்டுள்ளது.

8. <u>துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் பணியாளர் பயிற்சிப் பிரிவு.</u>—வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்கத்தின் வேலைவாய்ப்பு பிரிவில், இயங்கி வரும் பணியாளர் பயிற்சிப்



பிரிவு வேலைவாய்ப்புக் கொள்கைகள் நடைமுறைகள் ஆகியவற்றில் பணியாளர்களுக்கு, பயிற்சி அளிக்கப் பொறுப்பு வகிக்கிறது.

தேசிய வேலைவாய்ப்புப் பணியைச் சேர்ந்த நிர்வாகப் பணியாளர்களுக்கு 5 பணியாளர் பயிற்சி வகுப்புகள், 1—4—1979 முதல் 31—3—1980 முடிய நடத்தப்பட்டன. பயிற்சிப் பிரிவில் 55 நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

9. <u>இத்துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் உள்ள ஆய்வுப் பிரிவு.</u>—வேலைவாய்ப்புப்-பயிற்சித் துறை இயக்கத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புப் பிரிவில் உள்ள ஆய்வுப் பிரிவு 20—6—1969-ம் நாளன்று அமைக்கப்பட்டது. இப்பிரிவு சென்னை வேலைவாய்ப்புப்-பயிற்சித் துறை இயக்குநரின் ஒப்புதலோடு இம் மாநிலத்திலுள்ள சார்நிலை அலுவலகங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இவ்வியக்கத்தைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகளால் 33 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இக்கால அளவில் ஆய்வு செய்யப்பட்டன. சம்பந்தப்பட்ட ஆய்வு அதிகாரிகளால் சார்பு அலுவலகங்களை முடிவாக ஆய்வு செய்ய வசதி அளிக்க இவ்வறிக்கைக் கால அளவில் மேற்சொன்ன அலுவலகங்கள் தொடர்பாக தொடக்க ஆய்வுக் குறிப்புகளை ஆய்வுப் பிரிவின் பணியாளர்கள் தயாரித்ததோடு கிளை அலுவலகங்கள் அனைத்திடமிருந்தும் வரப்பெற்ற சரிசெய்தல் அறிக்கைகளையும் ஆய்வு செய்தனர்.

சார்நிலை அலுவலகங்களை ஆய்வு செய்தல், அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகள் மீது கள அதிகாரிகள் அனுப்பி வைத்த இணக்க அறிக்கையின் மொழியாக்கத்தைக் கண்காணித்தல் ஆகிய பணிகளை 1980–81ஆம் ஆண்டிலும் இப்பிரிவு தொடர்ந்து நிறைவேற்றிவரும்.

10. <u>துறையின் வேலைவாய்ப்புப் பிரிவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகத்தின பணிகள்.</u>—இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பி

யோரின் புது வாழ்வுக்காகச் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோரின் புது வாழ்வுக்காக மண்டபத்தில் இணை வேலைவாய்ப்பகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

1—4—1979 முதல் 31—3—1980 முடிய உள்ள கால அளவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலகப் பிரிவு சம்பந்தமான புள்ளி விவரங்கள் பின்வருமாறு:—

| | தொடர் எண்ணும் விவரங்களும். | பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர். | இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்யப்பட்டவர்கள். | 850 | 4,360 |
| 2. | வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள். | 273 | 408 |
| 3. | வேலைவாய்ப்பிற்காக தற்போதைய பதிவேட்டில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை (31—3—1980-ம் நாள் நிலவரப்படி). | 2,315 | 10 045 |

இந்த அறிக்கை கால அளவில் வேலைவாய்ப்புத் தொடர்பு அலுவலக பிரிவால் கீழ்க்கண்ட முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தாயகம் திரும்பியோரில் 154 பேர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்க தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டனர். மேலும் இப்பிரிவின் முயற்சி



யால் தாயகம் திரும்பியோரில் 44 பேர் புகுமுகத் தொழில் நுட்ப பயிற்சி படிப்பிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பயிற்சிகள் முடிந்ததும் அவர்கள் நிரந்தர தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டார்கள். 1979–ம் ஆண்டு தாயகம் திரும்பியோரில் 6 பெண்கள் வடஆற்காடு, வேலூர் ஆடைகள்—தூக்குப்படுக்கைகள் தயாரிக்கும் அரசு நிலையத்தில் இளநிலைத் தர சான்றிதழ் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டனர். நாகப்பட்டினம், குளச்சல் மீனவர் பயிற்சி நிலையங்களில் தாயகம் திரும்பியோரில் முறையே 6,2 பேர் நவீன மீன் பிடிக்கும் பயிற்சிக்காக சேர்க்கப்பட்டனர். மேலும் இவ்வாண்டு மீனவர் பயிற்சிக்காக கடலூர், தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையங்களுக்கு தாயகம் திரும்பியோரை பரிந்துரை செய்யுமாறு தெரிந்து எடுக்கப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

மத்தியப்பிரதேச ரெய்ப்பூரிலுள்ள மானா க்ருப் ட்ரான்சிட் நிலைய முதன்மை கமாண்ட் அவர்களிடம் தாயகம் திரும்பியோரை தொழிற் பயிற்சிக்காக பரிந்துரை செய்து அனுப்புமாறு அனைத்து வேலைவாய்ப்பு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மேலும் தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகங்களில் தொழிற்பயிற்சி பெற்று பதிவு செய்துள்ள தாயகம் திரும்பியோரின் முழு விவரத்தை மாநிலத்திலுள்ள தனியார் துறை நிறுவனங்களுக்கு அனுப்பி அவர்களை முடிந்தவரை வேலையில் அமர்த்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தில் பெரிய தொழிலதிபர்கள் அனைவரும் தத்தம் தொழில் பணிமனைகளில் தொழிற்பயிற்சி வேலைவாய்ப்பு நிறுவனங்கள் அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனர் பயிற்சி பெற்றவர்கள் ஆகியோரது விவரங்களை அளித்து அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு கடிதங்கள் எழுதப்பட்டன.

1980 ஜுலை 15]

இராமநாதபுரம் மத்திய வேலைவாய்ப்புப் பிரிவு இதுவரையில் புரிந்து வந்த பணிகளில் சில இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக வேலைக் காலியிடங்கள் தொழில் பழகுவோர் பதவிக் காலியிடங்கள் ஆகியவை குறித்து இப்பிரிவுக்குத் தெரிவிக்கப்படும்போது அவ்விடங்களில் தாயகம் திரும்பியோரை நேரடியாக நியமிக்க வசதி அளிக்கும் வண்ணம் வேலை வாய்ப்பு தொடர்பு அலுவலகப் பிரிவில் சிறிய அளவில் அமைந்த பதிவேடு ஒன்று வைத்து வரப்படுகிறது. இராமநாதபுரம் மத்திய வேலை வாய்ப்புப் பிரிவு மூடப்பட்டதன் விளைவாக தென்னிந்தியாவில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து வேலைக் காலியிடங்கள் பற்றி இப்பிரிவுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இயன்றவரையில் தாயகம் திரும்பியோர்களில் எத்தனை பேரை நியமிக்க முடியுமோ அத்தனை பேரை நியமிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வறிக்கைக் கால அளவில் தாயகம் திரும்பியோரில் ஏழு பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்வதற்காகப் பின் வரும் தொழிலதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன:—

1. செயலாளர், விசாகப்பட்டினம் துறைமுகப் பொறுப்புக் கழகம், விசாகப்பட்டினம்.

2. இந்திய கப்பல் கழக (லிமிடெட்), பம்பாய்-21.

3. மேலாளர் (பி.டி.ஆர்.) ஆல்டியா டாக் காம்பௌக்ஸ் போர்ட் ஹவுஸ், கல்கத்தா (Haldia Dock Complex Port House, Calcutta)

4. பொது மேலாளர், பாரத கனரக மின் நிறுவனம் (லிமிடெட்), பெங்களூர்.

5. பொது மேலாளர், பாரத கனரக மின் நிறுவனம், சென்னை-35.

6. திட்ட மேலாளர், குத்ரேமுக் இரும்புத் தாதுத் திட்டம், கர்நாடகா.



[1980 ஜுலை 15

இவ்வறிக்கைக் கால அளவில் தாயகம் திரும்பியோரில் 40 கைவினைஞர்கள் தொழில் பழகுவோர் பயிற்சி பெறு வதற்காக திருச்சி பாரத்ஹெவி எலக்ட்ரிகல் பணியாளர் நியமன அதிகாரிக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளனர். தாயகம் திரும்பியோரில் 18 பேர்கள் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக இயக்குநர் அவர்களுக்கு தொழிலாளர் வேலைக்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டனர். மேலும் தாயகம் திரும்பியோரில் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சி பெற்ற 40 பேர் பெங்களூர் இந்துஸ்தான் மெசின் டூல்ஸ் லிமிடெட்டின் பணியாளர்களாக நியமன மேலாளர் அவர்களுக்கு பணி இயல் பயிற்சி தொழில் நுட்ப வேலை பழகுநர் பயிற்சிக்காக பரிந்துரை செய்து அனுப்பப் பட்டனர். திருவனந்தபுரத்திலுள்ள ரிசர்வ் வங்கி நிர்வாக அலுவலருக்கு 'போரான்ஸ் தண்ணீர் கொடுப்பவர்' வேலை காலியிடங்களுக்கு தாயகம் திரும்பியோரில் 114 பேர் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. புனலூர் கொல்லத்திலுள்ள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு புதுவாழ்வு மலைத் தோட்ட "விவசாய மேஸ்திரி" "உதவி விவசாய மேஸ்திரி" பதவிக்காலி இடங்களுக்கு தாயகம் திரும்பியோரின் பிறிதொரு விவரப்பட்டியல் அனுப்பப் பட்டது.

இந்த அறிக்கைக் கால அளவில் கொச்சியிலுள்ள "ஃபாக்ட்" நிறுவனத்தில் 4 பேர் தொழில் பழகுநர்களாகவும் பெங்களூரில் உள்ள இந்துஸ்தான் மெசின் டூல்ஸ் நிறுவனத்தின் 8 பேர் தொழில் பழகுநர்களாகவும் அனுப்பி வைக்கப்பட்டனர். 2 பேர் திருச்சியிலுள்ள பாரத கனமின் நிலையத்தின் பாதுகாவலர்களாக வேலையில் அமர்த்தப்பட்டனர்.

11. தொழில் பழகு பயிற்சித்திட்டத்தை செயல்படுத்துவதற்குரிய தனிப்பிரிவும் அதன் பணிகளும்: தொழில் பழகும் பயிற்சித் திட்டத்தில் தொழில் பழகுவோரை நியமிக்கும் நடவடிக்கைகளை இப்பிரிவு ஒருங்கிணைக்கிறது.

இத்துறையின் பயிற்சிப் பிரிவு தொழில் பழகு பயிற்சிக்கான எல்லா இடங்களையும் அறிவிக்கிறது. அவ்வித தகவல் கிடைத்தவுடன் தொழிலதிபர்களுக்கு வேலை நாடுவோர்களை அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்த அறிக்கைக் கால அளவில் வேலை வாய்ப்பகங்கள் மூலம 9,405 விண்ணப்பதாரர்கள் தொழில் பழகு பயிற்சியில் அமர்த்தப்பட்டனர்.

அமர்த்தப்பட்ட தொழில் பழகுவோர் குறித்த விரிவான புள்ளி விவரங்கள் பின் வருமாறு:

| | பயிற்சியிடங்களின் எண்ணிக்கை, | | |
|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். |
| 1—4—1979 .. | 3,335 | 7,264 | 10,599 |
| 31—3—1980 .. | 3,289 | 7,477 | 10,766 |

| | பயன்படுத்தப்பட்ட பயிற்சி யிடங்களின் எண்ணிக்கை. | | | எய்திய சதவீதம். |
|---|---|---|---|---|
| | பொதுத் துறை. | தனியார் துறை. | மொத்தம். | |
| 1—4—1979 | 2,615 | 7,146 | 9,761 | 92.09 |
| 31—3—1980 | 2,591 | 7,330 | 9,921 | 92.14 |

12. <u>மாநில இயக்கத்திலுள்ள பொது மக்கள் தொடர்பு தகவல் பிரிவு.</u>—இத்துறையின் பொது மக்கள் தொடர்பு தகவல் விளமபர பிரிவு பணிகளின் முக்கிய அம்சங்கள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன:—

(1) "சுய வேலைவாய்ப்புக்கான நூறு வழிகள்" என்ற நூலின் பிரதிகளை மாவட்ட தொழில் நிலையங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

(2) பணியாளர்களின் தேர்வுக் கழகத்தில் இருந்து வரும் வேலை வாய்ப்பு விளம்பர நகல்களை தமிழ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலர்கள் மூலமாக தகுந்த விளம்பரம் கொடுக்கப்படுகிறது.





(3) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுவிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு உரிய முறையில் விளம்பரப்படுத்தப்பட்டன.

(4) பல்வேறு வேலை அளிப்போர்களிடம் இருந்து வந்த வேலைக் காலியிடங்கள் குறித்து எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக தகுந்த விளம்பரம் கொடுக்கப்பட்டது.

(5) வேலைவாய்ப்பு பயிற்சித் துறை தலைமை இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற விளம்பரங்களை தமிழ்நாட்டில் உள்ள எல்லா வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் உரிய முறையில் விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

(6) வேலைவாய்ப்பகங்களின் செயல்கள் குறித்து சிறு விளம்பர அறிவிப்புத்தாள் வடிவமைக்கப்பட்டது.

(7) வேலைவாய்ப்பகங்களின் நிர்ணயிக்கப்பட்ட செயல் முறைகளும் அவைகள் ஆற்றும் பணிகளும் மற்றும் குறைகளை யாரிடம் தெரிவிப்பது என்பன குறித்து தகவல் சுவரொட்டிகள் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

(8) சார்நிலை அலுவலர்களின் வானொலிப் பேச்சுகளின் வரைவுகள் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டன.

(9) 1979 ஜூன், ஜூலையில், சென்னைப் பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் வழி காட்டும் நிலையத்தால், நடத்தப்பட்ட 1979-ம் ஆண்டு தகவல் கண்காட்சிக்கு (INFORMEX—1979) உதவிகள் அளிக்கப்பட்டன.

(10) மாவட்டங்களில் வாழ்க்கைத் தொழில் பொருட்காட்சிகள்' கருத்தரங்குகள் நடத்த உதவிகள் அளிக்கப்பட்டன.

1980 ஜூலை 15]

(13). 1959-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகச் சட்டத்தை (வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல்), (செயல்படுத்தல்): 1959-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டமும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 1960-ஆம் ஆண்டு [illegible] செயலுக்கு வந்தன. எல்லா பொதுத்துறை நிறுவனங்களுக்கும் (எத்தகைய அளவு இருப்பினும்) 25-ம் அதற்கு மேலும் ஆட்களைக் கொண்ட எல்லா தனியார் துறை நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

1979-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் முடிவுற்ற காலாண்டில் இச்சட்டத்தில் அடங்கிய நிறுவனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (அ) பொதுத்துறை | .. .. .. | 35,378 |
| (ஆ) தனியார் துறை | .. .. .. | 14,253 |
| மொத்தம் | .. | 49,631 |

இந்த அறிக்கை கால அளவில் வேலைவாய்ப்பகங்களுக்கு தெரிவிக்கப்பட்ட வேலை காலியிடங்களின் மொத்த எண்ணிக்கை 60,235. அதில் 5,329 தனியார் துறை நிறுவனங்களாலும் 54,906 பொதுத்துறை நிறுவனங்களாலும் அறிவிக்கப்பட்டன. இக்கால அளவில் நிரப்பப்பட்ட 42,683 வேலை காலியிடங்களில் 40,535 பொதுத்துறை நிறுவனங்களிலும் 2,148 தனியார் துறை நிறுவனங்களிலும் இருந்தன.

**1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலக (வேலை காலியிடங்கள் குறித்து கட்டாயமாகத் தெரிவித்தல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் காரணம் காட்டுமாறு அறிவிப்பு ஏதும் எந்தவொரு நிறுவனத்திற்கும் வழங்கப்படவில்லை.**



1980 ஜூலை 15]

14. இயக்ககத்தில் உள்ள அரிசனப் பழங்குடியினர் ஆகியோருக்குரிய தனிப்பிரிவு.— அரிசனங்கள்/பழங்குடியின ருக்காக ஒதுக்கப்பட்ட வேலைக் காலியிடங்களில் அவ்வகுப் புகளைச் சேர்ந்தோரை நியமிக்கவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கவும் துறை இயக்குநர் பதவியோடு இயக்குநர் அலுவலகத்தில் மேற்சொன்ன வகுப்பினருக்காக தனிப்பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்பில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமமாக வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கோடு சோதனை அடிப்படையில் 2—10—1979 ஆம் நாளிலிருந்து சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் வேலை ஒதுக்கீடு பற்றிய ஒருங்கிணைந்த பதிவேடுகளை பராமரிக்கும் பணி தொடர்பான முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

15. இக்கால அளவில் அறுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்.—1978–79, 1979–80 ஆகிய ஆண்டு காலங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் தொடர்ந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றன;—

1. கிராமப்புற மனுதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியிலும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒசூரிலும் முறையே துறை வேலை வாய்ப்பு அலுவலகம் ஒன்றை நிறுவுதல்.

2. திருச்சி, சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. அப்பிரிவுகளை அந்தந்த மாவட்டத்திலுள்ள ஊனமுற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களுக்கான புது வாழ்வு உதவிகளை செய்வதற்கும் நிறுவுதல்.

3. வேலைவாய்ப்பகங்கள் செம்மையாக இயங்குவதற்காக 10 இளநிலை உதவியாளர்கள், மற்றும் 10 பதிவேட்டு

எழுத்தர்கள் ஆகிய கூடுதல் பணியாளர்களைக் கொண்டு வேலை வாய்ப்பகங்களை வலுப்படுத்துதல்.

4. மாநில இயக்குநரகத்தில் அலுவலகம், பழங்குடியின ருக்கான தனிப் பிரிவு அமைத்தல்.

அனுமதி வழங்கப்பட்டு செயல் படுத்தப்பட்ட இதர திட்டங்கள்.—கோயம்புத்தூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக் கப்பட்டு பெரியார் மாவட்டம் உருவாக்கப்பட்டதால் ஈரோட் டிலுள்ள துணை வேலை வாய்ப்பகம் மாவட்ட வேலை வாய்ப்பகமாக 3—10—1979 ஆம் நாளிலிருந்து நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

பழங்குடியினருக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட காலி இடங்களை நிரப்புவதற்கும் வாழ்க்கைத் தொழில் வழிமுறை மூலம் அவர்களின் திறமை அதிகரிக்கவும், போட்டித் தேர்வு எழுத அவர்களுக்கு பயிற்சியளிக்கவும் நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினருக்கான தனி வாழ்க்கைத் தொழில் வழிமுறை நிலையம் ஒன்று பழங்குடியினரின் மேம்பாட்டுக்குரிய நட வடிக்கை என்னும் திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்ட வேலைவாய்ப்பகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு 1980 மார்ச்சிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது.

சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பகங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்வ தற்கு முழு நேரத் தனிப் பிரிவு ஒன்று 17—5—1980 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

16. துறையின் வருங்காலத் திட்டங்கள்.— திருச்சி மாவட்டத் தில் பெருகி வரும் கனரக தொழிற்சாலைகளைக் கருத்தில் கொண்டும், அம்மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தொழில் நுட்ப மனுதாரர் மற்றும் இதர வேலை நாடுவோர் குறித்த பணிச்சுமை பெருகியுள்ளதைக் கருத்தில் கொண்டும் இம்மாவட்டத்திலுள்ள தொழில் நுட்ப மனுதாரர்களை சிறப்பாகக் கவனிக்கும் பொருட்டும் 1980—81 நிதியாண்டில் தனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்) ஒன்றைத் திருச்சிராப்பள்ளியில் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.



மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான காலியிடங்கள் குறித்த அறிவிப்புகளின் எண்ணிக்கை பெருகி வருவதையும் மேலும் பணிச் சுமையையும் கருத்தில் கொண்டு 1980—81 நிதி யாண்டில் சென்னையில் உள்ள தொழில்-நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு கூடுதல் பணியாளர்களை நியமித்து இவ்வலுவலகத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பகங்களின் செல்நிறன் பதிவேட்டிலுள்ள விண் ணப்பதாரர்களின் பதிவு அட்டைகளைப் பாதுகாப்பான முறையில் பராமரிக்கும் பொருட்டு 1980—81 நிதியாண்டில் 19 பெரும் வேலைவாய்ப்பகங்களுக்கு விண்ணப்பதாரர்களின் பதிவு அட்டைகள் வைப்பதற்கான 12 அறைகள் கொண்ட இரும்பு அலமாரிகள் வழங்கப்படவிருக்கிறது.

மேலும், வேலை நிலவரத் தகவல் திட்டத்தைச் சார்ந்த பணிகளில் பெருகிவரும் தட்டச்சு வேலைகளை கவனிக்கும் பொருட்டு வேலை வாய்ப்பகங்களிலுள்ள வேலை நிலவரத் தகவல்களைப் பிரிவுகளுக்கு கூடுதலாக ஒரு தட்டச்சர் பதவி வீதம் ஆறு தட்டச்சர்களை 1980—81 நிதியாண்டில் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்படவிருக்கிறது. இதேபோல் இயக்குநர் அலுவலகத்தில் பெருகி வரும் தட்டச்சு வேலைகளைக் கவனிக்கக் கூடுதலாக இரண்டு தட்டச்சர்கள் நியமனம் செய்ய 1980—81 நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட விருக்கிறது.

கைவினைஞர் பயிற்சித் திட்டம்.

தொழில் வளம் பெருக தொழில் நுட்ப பயிற்சிப் பெற்ற கைத்திறப் பணியாளர் அதிக அளவில் தேவைப்படுகின்றனர். இந்தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவின் பல பகுதி களிலும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. பயிற்சியை செம்மையாக அளிப்பதற்கு இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணி

மனைகள் ஒதுக்கப்பட்டன. மைய அரசின் கைவினைஞர் பணியாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ்த் தொழிற் பயிற்சி நிலையங்கள் [illegible]. [illegible] தொழிற் பயிற்சி நிலையமும் முதல்வரின் பொறுப்பில் இயங்கி வருகிறது. மாநில அளவில் எல்லாத் தொழிற் பயிற்சி நிலையங்களும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகின்றன. மைய அரசின் பணியாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ் [illegible] பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

(1) தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் கல்விப் பயிற்சி.

(2) 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுநர் சட்டத்தின் கீழ் தொழிற் பழகு பயிற்சி.

(3) தொழிற் [illegible] தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்.

(4) தொழிற் பள்ளிகளுக்கான [illegible] கோவையின் கீழ் மானிய உதவி பெறும் தனியார் தொழிற் பள்ளிகளில் கைத் திறப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(5) வேலை இழந்த பொறிக்கொல்லர்கள், பாதி வரை வமைப்புத் தயாரிப்பாளர், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோருக்கு தொழில் பயிற்சி நிலையங்களில் நேர்த்தெடுக்கப் தொழில்களில் (பாதி நேரத்) தனிப் பயிற்சித் திட்டம்.

(6) தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தல்.

(7) அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணியாளர் பயிற்சித் திட்டம்.

(8) கிராம இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம்.

<u>1. தொழிற் பயிற்சி நிலையங்கள்.</u>—1967–68 ஆம் ஆண்டுத் திட்டத்தின் இறுதியில் 13,112 இருக்கைகள் கொண்ட 31 தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. ஆனால் 1968–



1969 முதல் 1976–77 வரை தொழிற் பயிற்சி நிலையங்கள் எதுவும் புதிதாகத் திறக்கப்படவுமில்லை. இருந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக்கப்படவுமில்லை.

கல்பாக்கம் (பொது மின் அணுவியல்) துறையில் பெருகிவரும் தேவையைப் பூர்த்தி செய்ய, அப்டையாறு மின் அணுக்கூடத்தில் தொழிற் பயிற்சி நிறுவன பகுதி ஒன்று 1977–78-ல் தொடங்கப் பட்டது. 16 மாணவர்கள் வீதம் இரண்டு குழுக்களாக 32 மாணவர்கள் 1977 மற்றும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இத்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், 29 பொறியியல் பிரிவுகளிலும் 6 பொறியியல் அல்லாத பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப் படுகின்றன. 16 தொழிற் பிரிவுகளின் பயிற்சிக் காலம் ஓராண்டாகவும், ஏனைய 19 தொழில் பிரிவுகளின் பயிற்சிக் காலம் இரண்டாண்டாகவும் உள்ளது. மகளிர்க்கென தனியான தொழிற் பயிற்சி பள்ளி ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பயிற்சியாளர்கள் சேர்க்கையில் இட ஒதுக்கீடு விதிகள் கண்டிப்பாக கடைபிடிக்கப் பட்டு வருகின்றன.

1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஒதுக்கப்பட்ட இடங்களின் சதவீதம் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் சதவீதம் குறித்து புள்ளி விவரங்கள் வருமாறு:—

| | இட ஒதுக்கீட்டின் சதவீதம். | சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களின் சதவீதம் |
|---|---|---|
| (1) ஆதிதிராவிடர்கள்-பழங்குடியினர் .. | 18 | 19 |
| (2) பின்தங்கிய வகுப்பினர் .. .. | 31 | 56 |
| (3) அகதிகள் .. .. .. .. | 5 | 2·8 |

[1980 ஜூலை 15

உடல் ஊனமுற்றோர்க்கென தனியான ஒதுக்கீடு இல்லை
யெனினும் பயிற்சி பெறத் தகுதி உடைய 127 உடல் ஊனமுற்ற
வர்கள் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பயிற்சிக்கு அனு
மதிக்கப்பட்டனர்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சித்திறனை செம்மை
யாக்கவும் திறமையான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின்
கீழ் கொண்டுவரவும் திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில்
துணை இயக்குநர்கள் தலைமையில் மூன்று வட்டார அலுவல
கங்கள் நிறுவப்பட்டன. 1980–81-ல் நான்காவது வட்டாரத்
துணை இயக்குநர் அலுவலகம் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு வரை 18 பொறியியல் தொழிற் பிரிவு
களில் பயிற்சியில் சேர்வதற்கு குறைந்த அளவு கல்வித் தகுதி
9-வது வகுப்புவரை படித்திருக்கவேண்டும் என்று கருதப்பட்டது.
பயிற்சியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இக்குறைந்த
அளவுக் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்க
வேண்டும் என்று மாற்றப்பட்டது.

இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்
படும் பயிற்சியின் தரத்தினை கீழ்க்கண்டவைகளிலிருந்து அறிய
லாம். ஏற்கெனவே நடைபெற்ற 15 அனைத்திந்திய
திறமைப் போட்டிகளில் இம்மாநிலம் 8 முறைகள் முதன்மை
இடத்தைப் பெற்றுள்ளது. 1978 ஆம் ஆண்டு அக்டோபர்
திங்களில் நடந்த திறமைப் போட்டியிலும் நமது மாநிலம்
முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கென குடியரசுத்
தலைவரின் சுழற்கேடயத்தை 8-வது முறையாகப் பெறும்
வாய்ப்பு கிட்டியுள்ளது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்து
அனைத்திந்திய தொழில் பயிற்சியாளர்கள் தேர்வு எழுதும் சம்
பந்தப்பட்ட விடைத்தாள்களை திருச்சி, மதுரை, கோவை,
சென்னை ஆகிய வட்டார மைய இடங்களில் திருத்த ஏற்பாடு
செய்யப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜூலை திங்களில் 16
தொழிற் பிரிவுகளில் இம்முறைத் திட்டம் கொண்டு வரப்பட்டது.
பயிற்சியாளர்கள் இன்னாரெனத் தெரியாவண்ணம் அவர்கள்



1980 ஜூலை 15]

தேர்வு எண்களுக்கு மாற்று எண்கள் அளிக்கப்
பட்டன. இத்திட்டம் அநேக ஆண்டுகளாக தொழில் நுட்ப
கல்வி இயக்குநர் அலுவலகத்தில் நடைமுறையில் உள்ளது. இவ்
வாறு மதிப்பீடு செய்தும், 90 விழுக்காடுகளுக்கு மேலாக பயிற்சி
யாளர்கள் அனைத்திந்திய இறுதியாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்
றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. 1980 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்களில் ஒன்று, இரண்டு ஆண்டுப் பயிற்சியுடைய
35 தொழில்களுக்கும் இத்திட்டம் கொண்டு வர உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

2. 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுவோர் பயிற்சித் திட்டம். —
1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுவோர் பயிற்சித் திட்டம்
1963 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்
சட்டத்தின் விதித்துறைகளின்படி, குறிப்பிட்ட எண்ணிக்கை
பயிற்சியாளர்களுக்குக் குறிப்பிட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சி
அளிப்பது தொழிலதிபர்களின் கடமையாகும். இப்பயிற்சித் திட்
டம் தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு அளிக்கும் நிறுவனப் பயிற்சி
யின் தொடர்ச்சியாகும். தொழிற் சாலைகளின் தேவையைப்
பூர்த்தி செய்ய போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்களைக்
கைவினைஞர்களை தேசிய அளவில் உருவாக்கி அவர்
களின் திறமையை வளர்ப்பதும், இந்தியா முழுவதும் ஒரே சீரான
பயிற்சி வசதியை முறைப்படுத்திச் செயல்படுத்துவதும், இத்திட்
டத்தின் நோக்கமும் குறிக்கோளும் ஆகும். தொழிற் பயிற்சி
நிலையங்களில் தொழில் பழகுவோருக்கு பயிற்சியின்போது
அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதைப்போலவே
இத்தகைய வசதிகள் இல்லா சிறு நிறுவனங்களில் பயிற்சி பெற
நேரிடையாகச் சேர்ந்துக் கொள்ளப்படுபவர்களுக்கு அடிப்படைப்
பயிற்சியையும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அளித்து
வருகிறது. பயிற்சியின் கால அளவு அந்தந்த தொழிலைப்
பொறுத்து 6 மாதம் முதல் 4 ஆண்டுகளாகும். தொழிற் பழகு
வோர், பயிற்சியின் இறுதியில் அனைந்திந்திய ஆண்டு திறமைப்
போட்டிகளில் பங்கேற்கின்றனர். தேர்வில் வெற்றி பெற்றவர்
களுக்கு தொழிற் பழகுவோர் பயிற்சி தேசியச் சான்றிதழ் அளிக்கப்
படுகிறது.

ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 10 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 160 ஆகும்.

6. தொழில் பயிற்சி முறைத்திட்டம் (தொழில் நுணுக்கம் மிகுந்தது).—ஏற்கெனவே தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ப, மேலும் நுணுக்கமும் புதுமையும் வாய்ந்த தொழில் பள்ளி கல்வி வகுப்புகளை அறிமுகப் படுத்துவதற்கு முதற்படியாக அம்பத்தூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர்கள் ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்படுகிறது. கீழ்க்கண்ட தொழில் பிரிவுகள் அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது:—

(1) இந்திய தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரை படங்கள் படித்தல்.

(2) உலோகப் பற்ற வைத்தலில் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சு வார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) மின்சாரம் (பராமரிப்பு)

இதுவரை 43 பல்வேறு பட்ட தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட 274 தொழிலாளர்கள் மேற்கூறிய தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

7. அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்றுநருக்கான பயிற்சித் திட்டம்.—பயிற்சி முறையிலும் ஒலி, ஒளிக் கருவிகளை உபயோகிப்பதிலும் மற்றும் நிர்வாகம் முதலிய வற்றிலும் பயிற்றுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சித் திட்டம் அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொடங்கப்படும் இப்பயிற்சித் திட்டத்தை 1979-80 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 32 தொழிற்



பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் கைத்திறப்பயிற்சி ஆசிரியர்கள் 1,000 பேர், மேற்பார்வை ஆசிரியர்கள் 150 பேர் இப்பயிற்சி திட்டத்தினால் பயன் அடைவார்கள்.

பயிற்சி முறை நுட்பங்கள் என்பதன் கீழ் கற்பிக்கும் முறையில் பயிற்சி பாடத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள், கற்பிக்கும் முறை குறித்த கோட்பாடுகள் ஆகிய வற்றில் பயிற்சி அளிப்பதுடன் இந்த ஆசிரியர்கள் கற்பித்தல் தேர்வு நடத்தி மதிப்பீடு செய்தல், கற்பிப்பதற்கான சாதனங் களை உரிய இடத்தில் காட்டி விளக்கும் முறை ஆகியவற்றை யும் தெரிந்து கொள்ளுகின்றனர். நவீன-ஒலி-ஒளிக்கருவிகளைப் பயன்படுத்துவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

8. கிராம இளைஞர்களுக்கு பயிற்சித் திட்டம்.—கிராமப் புறக் கைவினைஞர்கள் திறமையுடன் தம் தொழிலை செவ்வனே செய்ய உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரையில் கைத்திறனில் போதிய தேர்ச்சி அடையாதவர் களுக்குத் தேர்ச்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்த தொழில் களில் கைத்திறன் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமோ அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதையும் அதன் மூலம் திறமை மிக்க கைவினைஞர்கள் நகர்புறச் சேரி களுக்கு குடி பெயர்வதைத் தடுத்து அவர்களது கிராமப்புறங் களிலேயே அவர்கள் தொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட கிராமப்புறங்களில் தேவைப்படும் தொழில் திறன்களைக் கண்டறிய அந்தந்தப் பகுதிகளிலேயே விவரமான கணக்கெடுப்பு செய்யப்பட்டது. இந்த கணக்கெடுப்பு ஒவ்வொரு வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலும் 5 கிராமங்கள் வீதம் மொத்தம் 66 வளர்ச்சித் திட்டப் பகுதிகளைச் சார்ந்த 330 கிராமப் புறங்களில் நடத்தப்பட்டது. கைவிசை மூலம் இயக்கப்படும் சிறு இயந்திரம் தொடங்கி நவீன முறையில் இயக்கப்படும் பெரிய இயந்திரங்கள் வரை, கணக்கெடுப்பு நடத்தப்

பட்டது. இதைப்போலவே, பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் நிறுவனங்கள் குறித்து விவரங்களும் தயாரிக்கப்பட்டன. நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் பொறிகளின் எண்ணிக்கையையும் அவற்றைப் பழுது பார்க்கும் வசதியையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தற்போதுள்ள பழுது பார்க்கும் நிறுவனங்களை மேலும் விரிவாக்கவேண்டியது அவசியம் என்றுத் தெரிகிறது. பண்ணை அடிப்படையாய்க் கொண்ட பணிகள் தவிர, சைக்கிள் பழுது பார்த்தல், இரு சக்கர வண்டி பழுது பார்த்தல், மின்சாரக் கம்பி வேலை, மின் சாதனங்கள் பழுது பார்த்தல், தச்சு வேலை, கருமார வேலை போன்ற கிராமப் புறங்களுக்கு இன்றியமையாத கைத்தொழில்கள் பல இருப்பதும் தெரிய வந்தது. எனவே, தெளிப்பான் சீர் செய்தல், மற்றும் பழுது பார்த்தல், இயந்திரங்கள் டீசல் மற்றும் மின்சார பம்புகள் பழுது பார்த்தல் நீங்கலாக இரு சக்கர வண்டிகள் பழுது பார்த்தல், வானொலி பழுது பார்த்தல், எளிய மின்கம்பி இடுதல், மின்சார சாதனங்களைப் பழுது பார்த்தல், தச்சு வேலை, கருமார வேலைபோன்ற தொழில்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலூர், திருவண்ணாமலை, கடலூர், உளுந்தூர்பேட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, கூடலூர், மேட்டூர் அணை, கோயம்புத்தூர், ஈரோடு, தாராபுரம், ஓசூர், தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய ஊர்களில் உள்ள தொழில்பயிற்சி நிறுவனங்களில் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள் முதல் இத்திட்டப் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பயிற்சிக்காலம் மூன்று மாதமாகும். இப்பயிற்சி ஓய்வு நேரமாகிய மாலை வேளைகளில் ஆறு முதல் ஒன்பது மணி வரை அளிக்கப்படும். இதன்காரணமாக ஏற்கனவே வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள், அவர்களுடைய ஊதியத்தை இழக்காவண்ணம் வகை செய்யப்பட்டுள்ளது.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 75 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில், ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் ரூ. 100 மதிப்புள்ள ஒரு



கருவிப்பெட்டி, அதன் அடிப்படை விலையில் பாதி விலைக்கு வழங்கப்படுகிறது. 1979–80 ஆண்டில் இப்பயிற்சித் திட்டத்தினால் 2,200 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழிற் பயிற்சிக்கான தேசியக்குழு வகுத்துள்ள ஆசிரியர் முறையை அறிமுகப்படுத்துதல்.—பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், பயிற்சியாளர்கள் தொழிற்சாலைகளில் மேலும் பல்திறப்பட்ட வேலை வாய்ப்புக்களை பெறும் வகையிலும் இவ்வரசு தமிழ் நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களில், தொழிற் பயிற்சிக்கான தேசியக்குழு வகுத்துள்ள ஆசிரியர் முறை யினை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.

9. வேலூர் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் தோல் தொழில்கள் இரண்டைத் தொடங்குதல்.—இத்துறையில் இப்போதுள்ள பயிற்சி நிறுவனங்கள், இத்தொழிலில் போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தேவையை முழுவதும் நிறைவு செய்ய வில்லை. இதற்கு வழிகாண இத்தொழிற் பயிற்சி நிறுவனங் களும் குறிப்பிடத்தக்க பணியாற்றலாம். ஆசிரியர் பற்றாக் குறையை தீர்த்து வைப்பதுடன் மட்டுமின்றி காலணி தயாரிப்பு மையப் பயிற்சி நிலையம், தோல் மைய ஆராய்ச்சி நிறுவனங்கள், தோல் தொழில் நுட்பவியல் நிறுவனம் ஆகிய பயிற்சி நிலையங் கள் இவ்வகையில் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு உறு துணையாகவும் தொழில்பயிற்சி நிலையங்கள் பணியாற்ற லாம். இதனைக் கருத்தில் கொண்டு 1980–81-ல் வேலூர் தொழில்பயிற்சி நிறுவனத்தில் ''காலணிகள், தோல் பெட்டிகள், ஏனைய தோல் தயாரிப்புப் பொருட்கள் தொடர்பான தோல் தயாரிப்புத் தொழில்கள்'' இரண்டு தொடங்கப்படவிருக் கின்றன.

குடிசைப்பகுதி மக்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம்.— இத்திட்டம் சென்னை மாநகரில் தொழிற்பயிற்சி நிறுவனங் கள் மூன்றின் வழியாக குடிசைப்பகுதி மக்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கு ரூபாய் 2·5 லட்சம் செலவில் உலக வங்கியின் உதவியுடன் சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத் தால் தொடங்கப்பட்டது. பல்வேறு வகையான சுய வேலை

வாய்ப்புத் தொழில்களில் குடிசைப்பகுதிவாசிகள் 540 பேருக்கு பயிற்சியளிக்கப்படும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் பயிற்சிக் காலத்தில் திங்கள் தோறும் பயிற்சி உதவித் தொகையாக 50 ரூபாய் அளிக்கப்படும். இப்பயிற்சி வட சென்னை, கிண்டி, அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 1-12-1979-ல் இருந்து அளிக்கப்படுகிறது.

கோரிக்கை 57, பல்வகை மூலதனச் செலவு 495 ஏனைய சமூக சமுதாய நலப் பணிகள் குறித்த மூலதனச் செலவு-ஏ. ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் குறித்த மூலதனச் செலவுகள்—ஏபி. வேலை வாய்ப்பு.

கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டம் குறித்த மூலதனச் செலவுக்கான மானியக் கோரிக்கை, "கோரிக்கை 57, பல்வகை மூலதனச் செலவு" என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

கைத்திறப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக கீழ்க்காணும் துணைத் திட்ட பணிகள் குறித்த மூலதனச் செலவுக்காக 1980—81 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2·96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1. சிறப்புத் திட்டத்திற்காக (பகுதி-நேரம்) கருவிகள் சாதனங்கள் வாங்குதல்.—வேலை இழந்த பொற்கொல்லர்களுக்கும் மாதிரி வடிவமைப்புத் தயாரிப்பவர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவுவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சேலம், திருச்சி, பேட்டை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் சாதனங்களைப் புதுப்பிப்பதற்கும், வாங்குவதற்குமாக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச் செலவினம், திட்டத்தில் சேராத பணிகள் என்ற தலைப்பின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது.



2. தொழிற் பயிற்சி நிறுவனப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள்.—இம் மாநிலத்திலுள்ள 25 தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் விடுதி கட்டிடங்களைக் கட்டுதல்.—இம்மாநிலத்திலுள்ள 24 தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதி கட்டிடங்கள் உள்ளன. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4. தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.—பிளேட்டுகள் தயாரித்தல், லிதோ ஆப்செட் இயந்திர இயக்குதல் ஆகிய புதிய தொழில்களில் கிண்டி தொழில் பயிற்சி நிறுவனத்தின் அடிப்படை பயிற்சி வசதிகள் செய்து கொடுக்க, ஏற்கெனவே ஒதுக்கிய 2,000 ரூபாயுடன் 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,00,000 தொகை இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

5. மேலும் பல்வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்.—தொழில் பயிற்சி நிலையத்தில் இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட சில தொழில்களுக்கு மக்கள் ஆதரவு அவ்வளவாகக் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட பகுதியில் அத்தொழில்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காததே இதற்குக் காரணமாகும். அதன் விளைவால், அத்தொழில்களில் சேருவதற்கு மாணவர்கள் முன்வரவில்லை. தொழில் பயிற்சி வசதிகள் வீணாவதைத் தடுக்கும் பொருட்டும், ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் அனுமதிக்கப்பட்ட இடங்கள் முழுவதையும் பயன்படுத்தவும், மக்களிடையே குறைந்த ஆதரவு பெற்ற தொழில்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக அதிக வேலை வாய்ப்பளிக்கும் தொழில்களை புதிதாகக் கொண்டுவருவதன்

மூலம், பல்வகைத் தொழிற் பயிற்சிகளை அறிமுகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1970-71 முதல் 1975-76 வரையில் தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் உள்ள 768 இருக்கைகள் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டன. கோயம்புத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தற்போது பொருத்துநர் (ஃபிட்டர்) தொழிலில் உள்ள 32 இருக்கைகள் குறைக்கப்பட்டு மக்கள் ஆதரவு பெற்ற கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளி வசதி) தொழிலுக்காக அவை ஒதுக்கப்பட்டு, 16 பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு பிரிவு என்ற வீதத்தில் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 1978 ஆகஸ்ட் மாதம் முதல் அப்பிரிவுகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெற அரசு அனுமதி வழங்கியது. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், கருவிகள் சாதனங்கள் வாங்குவதற்காக, ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கமும் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1,000 அடையாள நிதியொதுக்கமும் செய்யப்பட்டுள்ளது. சில புதிய தொழிற்சாலைகளை அறிமுகப்படுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

6. சாதனங்கள் வாங்குதல்.—பல்வேறு தொழில்களுக்காக, மத்திய அரசு வரையறுத்த கருவிகள் சாதனங்கள் குறித்த தரப்பட்டியலைத் திருத்தியமைத்ததனால், கம்மியர் (மோட்டார் வாகனங்கள்), கம்மியர் (குளிர்பதனம்-சீர்வளி வசதி), கம்மியர் (கருவிகள்) போன்ற தொழில்களுக்கு கூடுதலாக கருவிகளும், சாதனங்களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 42,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்தல்.—31 தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிலையங்கள் அனைத்திலும் உயர் அழுத்த மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல், பணிப்பட்டறைக் கட்டிடங்கள், வகுப்பு அறைகள் முதலியவற்றைக் கட்டுதல், பராமரித்தல் ஆகியவற்றிற்காக 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 32,000 தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு மேற்பார்வையாளர்களின் பயனுக்காக, இயந்திரத்தை வாங்க, 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



8. கம்மியர் தொழில் (பொது மின்னணுவியல்) பயிற்சி.—
கம்மியர் (பொது மின்னணுவியல்) தொழில் பயிற்சி அளிப்ப
தற்காக, அடையாறு மின்னணுக் கருவிகள் தொழில்வளாகத்
தில் தொழில் பயிற்சி நிலையப் பிரிவு ஒன்று தொடங்கப்
பட்டுள்ளது. பயிற்சி பெறுபவர்களுக்கு சுற்றுப்புற வசதிகள்
இருக்குமாதலால், அடையாறு மின்னணுக் கருவிகள் வளாகத்
தில் இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தொடங்கப்
பட்ட தொழிலுக்குத் தேவைப்படும் இயந்திரமும்,
சாதனமும் வாங்குவதற்காக, 1980–81 ஆம் ஆண்டு வரவு
செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது

9. தொழிற் பயிற்சி நிலையங்களைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தல்.—நவீனக் கருவிகளை அதிகமாகப் பயன்
படுத்துவது, தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
ஆகியவற்றைக் கருதி ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம்
அனைத்து நாடுகள் தொழிலாளர் அமைப்பின் உதவியுடன்
அம்பத்தூர் தொழில் பயிற்சி நிலையத்தில் வாழ்க்கைத்
தொழில் மேம்பாட்டுப் பயிற்சிப் பிரிவு ஒன்று தொடங்கப்
பட்டுள்ளது. 'AVTS' இத்திட்டத்தின் கீழ், கீழ்க்காணும்
தொழில்கள் அம்பத்தூரில் தொடங்கப்பட்டுள்ளன.

(1) இந்தியத் தர நிர்ணயம் மற்றும் பொறியியல் வரைப் படங்கள் படித்தல்.

(2) பற்றவைப்போர் சிறப்புப் பயிற்சி.

(3) கருவி மற்றும் அச்சுவார்ப்பவர்.

(4) கம்மியர் (பராமரிப்பு).

(5) கம்மியர் (மின்சாரப் பராமரிப்பு).

இதுவரை 43 தொழில் நிறுவனங்களிலிருந்து அனுப்பப்
பட்ட 274 தொழிலாளர்கள், மேற்கூறிய தொழில்களில்
பயிற்சி பெற்றுள்ளனர். இதற்காக, ஏற்கனவே ஒதுக்கப்
பட்டுள்ள நிதியொதுக்கத்தைத் தவிர, நவீனப்படுத்தும்
திட்டத்தைச் செயலாக்குவதற்காகவும், வேலூர் தொழில்
பயிற்சி நிலையத்தில் (1) காலணிகள் தயாரிப்பதற்கான பிரி
வையும், (2) தோல் பெட்டிகள், ஏனைய தோல்சரக்குகள்

தயாரிக்கும் பிரிவையும் தொடங்குவதற்கு 1980-81 வரவு-செலவுத் திட்டத்தில், கூடுதலாக ரூ. 1,67,000 சேர்க்கப்பட்டுள்ளது.

10. ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம்.—கிராம இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் குறுகிய கால பயிற்சித் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பயிற்சித் திட்டம் 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் தேதியிலிருந்து, 19 தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புற கைவினைஞர்களிடையே கைத்திறனை வளர்த்து அவர்களது தொழிலை இன்னும் செவ்வனே செய்ய உதவி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரையில் பயிற்சி அற்றவர்களுக்குக் கைத்தொழில் பயிற்சி அளிப்பதையும், இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் தேவைப்படும் தொழில்களில் கைத்திறனை மேம்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. கருவிகள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கென, நடப்பு நிதி யாண்டில் ரூ. 1,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கென சிறுகருவிகள்-உபகரணங்களைக் கொள்முதல் செய்யும் பொருட்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அண்மையில் 80,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு II

(43..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

### தமிழ்நாட்டில் வீட்டு வசதி 1980-81

### கொள்கைக் குறிப்பு

உணவு, உடைக்குப் பிறகு, வீட்டுவசதி மக்களின் முக்கிய அடிப்படைத் தேவையாக உள்ளது. அவ்வாறிருப்பினும், நீண்ட நெடுங்காலமாக வீட்டுவசதித் துறையில் முதலீடு செய்வதென்பது உற்பத்தித்திறனில்லாதது என்ற தவறான எண்ணப்போக்கை பொருளாதார திட்ட வல்லுநர்கள் கொண்டிருந்தனர். எல்லா குடிமக்களுக்கும் அடிப்படை வசதியான வீட்டு வசதியை அளிக்காதவரை, மக்கள் சக்தியையும், மக்கள் வளத்தையும் வலுப்படுத்த இயலாது. வீட்டு வசதிப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டாலொழிய, கட்டிடத்தொழிலினைச் சார்ந்த ஆக்கப் பொருள்கள் தயாரித்தல், மற்றும் இதர பணிகள் வளர்ச்சி அடையாமல் பொருளாதார வளர்ச்சியிலும் ஒரு தேக்க நிலை ஏற்படும். மூன்றாவதாக, நகர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரும் தங்களது மிகக் குறைவான வருவாய் மூலம் வீடுகளைக் கட்ட இயலாது. எனவே, மாநிலத்திட்டம் இதனைக் கருத்தில் கொண்டு சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மிக முக்கியமான இச் சமூக நல முதலீட்டில் ஏற்படும் பற்றாக்குறையை நிரப்ப வேண்டும்.

### தமிழ்நாட்டில் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டம்

1. ஆளுகை அமைப்பு :

2. 1966 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் கூட்டுறவுச்சங்கப் பதிவாளரின்கீழ் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. அதன் பின்னர், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களைப் பொருத்தவரை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவரே கூட்டுறவு சங்கப் பதிவாளரின் பணியினைச் செய்து கொண்டிருந்தார். 1977-78 ஆம் ஆண்டுக்குப் பிறகு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் நடவடிக்கைகள் மிகவும் பெருகியதால், வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்கும் பொருட்டு, 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், தனிக்கூட்டுறவுச் சங்கப்பதிவாளரின் (வீட்டு வசதி) கீழ் இத் துறை இயங்கி வருகிறது. வீட்டு வசதி கூட்டுறவுச்சங்க பதிவாளரின்கீழ், தற்பொழுது, மேற்பார்வை பணியாளர்கள் அடங்கிய எட்டு மண்டல உதவி கூட்டுறவு சங்க பதிவாளர்கள் தனியே பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கம் மாநிலத்திலுள்ள முதல் நிலை வீட்டுவசதி சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது. தலைமைக்

கூட்டுறவுச் சங்கத்தின் குழுமத்தை அரசு கலைத்து விட்டதால், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் என்ற தனி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அவரே தற்பொழுது இச் சங்கத்தின் அலுவல்களை கவனித்து வருகிறார்.

2. கோட்ட/வட்ட அளவில் கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் தொடங்குதல் :

3. 1976-77 ஆம் ஆண்டு முதல், கிராம வீட்டுவசதி திட்டம், தமிழ்நாட்டிலுள்ள பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினைச் சார்ந்த மக்கள் பயன் அடையும் வண்ணம், கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு 20 ஆண்டு காலத்துக்குள் திருப்பச் செலுத்தும் கடன்களைக் கொடுப்பதற்காகவே அச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, 1976–77-ஆம் ஆண்டு, 10 வட்ட ஊரக கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டு வசதி) துவக்கப்பட்டன. 1977–78-ஆம் ஆண்டு மேலும், 30 கோட்ட அளவிலான ஊரக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துவக்கப்பட்டன. மாநிலத்திலுள்ள கிராம வீட்டுவசதி சங்கங்களின் வேலைப்பளு கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளமையால், 40 புதிய சங்கங்களை தொடங்க அரசு சென்ற ஆண்டு ஒப்புதல் வழங்கியுள்ளது. கிராம வீட்டு வசதிச் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு விரைவில் கடனை வழங்க வட்டத்திற்கு ஒரு கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் தேவை என்பது அரசின் கருத்தாகும். இச் சங்கங்கள் உறுப்பினர்களின் இருப்பிடத்திற்கு அண்மையில் இருக்க வேண்டும்.

3. திட்டத்திற்கான நிதியாதாரங்கள்:

4. சென்னையில் அமைந்திருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் இந்திய ஆயுள் காப்புறுதிக்கழகம், இந்திய பொது காப்புறுதிக் கழகம் மற்றும் அரசு இவற்றிடமிருந்து பெறும் கடன்கள், பங்குத் தொகைகள் மூலமாகவும், மற்றும் உறுப்பினர் சங்கங்களிலிருந்து ஒருசேரப் பெறும் வைப்பு காப்புத் தொகை மூலமாகவும், தனது நிதியாதாரங்களை திரட்டுகிறது. மேலும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்துப் கடன் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கிராம வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஒரு முகவரமைப்பாக நியமிக்கப்பட்டுள்ளது.



5. ஊரக மற்றும் நகர வீட்டுவசதி திட்டங்களுக்குத் தேவையான நிதியை 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கீழ்வருமாறு திரட்டியுள்ளது:-

| | 1978-79 ஆம் ஆண்டு | |
|---|---|---|
| | நகர்புறம். | கிராமப்புறம். |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (அ) ஆயுள் காப்புறுதிக் கழகம் | 7,00,00 | .. |
| (ஆ) பொது காப்புறுதிக் கழகம் | .. | 1,00,00 |
| (இ) தமிழ்நாடு அரசு | .. | 2,00,00 |
| மொத்தம் .. | 7,00,00 | 3,00,00 |

| | 1979–80 ஆம் ஆண்டு | |
|---|---|---|
| | நகர்ப்புறம், | கிராமப்புறம், |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (அ) ஆயுள் காப்புறுதிக் கழகம் | 8,00·00 | 7,00·00 |
| (ஆ) பொது காப்புறுதிக் கழகம் | .. | 1,70·00 |
| (இ) தமிழ்நாடு அரசு | 2,00·00 | 9,00·00 |
| மொத்தம் | 10,00·00 | 17,70·00 |

1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் கிராம வீட்டு வசதித் திட்டத்திற்கென ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

4. கிராமங்களில் ஒரு லட்சம் வீடுகள் கட்டும் திட்டம்;—

6. மக்கள் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இக் கிராமப்புற மக்களுக்கு வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும்வண்ணம், 1978-79 ஆம் ஆண்டில் தொடங்கிய ஆறாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் கிராமப் பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலா ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படவேண்டும் என அரசு முடி

வெடுத்துள்ளது. ஆண்டுதோறும் கட்டப்படவிருக்குப் வீடுகளின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | | கட்டப்படவிருக்குப் வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1978-79 | . | 10,000 |
| 1979-80 | .. | 20,000 (30,000 என உயர்த்தப்பட்டுள்ளது). |
| 1980-81 | .. | 20,000 (உயர்த்தப்படும்). |
| 1981-82 | .. | 25,000 |
| 1982-83 | .. | 25,000 |

இத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு வெவ்வேறான மூன்று வகை வடிவமைப்புகள் முதலில் உருவாக்கப்பட்டன. 'ஏ' வகை வடிவமைப்பு ஒரு வீடு 3,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டு வதற்கு விழையும் உறுப்பினர்களுக்கு உகந்ததாகும். 'பி' வகை வடிவமைப்புக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு 4000 ரூபாய் ஆகும். 'சி' வகை வடிவமைப்புக்காகும் மதிப்பீட்டுச் செலவு 5,000 ரூபாய் ஆகும். கிராம வீட்டு வசதி திட்டத்தின்கீழ், கிடைக்கின்ற நிதியாதாரங்களைக்கொண்டு அதிக அளவில் மக்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்ற நோக்கத் தாலும் ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டுச் செலவை ரூபாய் 3,000 என வரையறுக்க அரசு முடிவெடுத்துள்ளது. ஆகையால் ஏற்கனவே ஒப்புதலளித்த மூன்று விதமான வடிவமைப்புக்களுக்குப் பதிலாக 200 சதுர அடிப்பரப்பளவில் அமைந்த 3,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படும் ஒரே மாதிரியான வடி வமைப்பை பயன்படுத்த வேண்டும் என அரசு ஆணை பிறப்பித் துள்ளது. கட்டிடப் பொருள்களின் விலையேற்றத்தையும் தொழி லாளர்களின் கூலி உயர்வையும் கருத்தில் கொண்டு இம் மாதிரி வீட்டின் மதிப்பீட்டுத் தொகையை ரூ. 3,000-த்திலிருந்து ரூ. 3,750-க்கு அரசு உயர்த்தியுள்ளது.

5. திட்டத்தின் சிறப்பு இயல்புகள் :

7. நம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் கிராம வீட்டு வசதி திட்டத்தின் சிறப்பு இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) ஒவ்வொரு உறுப்பினரும் வில்லங்கம் இல்லாத 1½ சென்ட் நிலம்' உடையவராய் இருத்தல் வேண்டும்.

(2) அங்கத்தினர் கிராம வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங் களிடமிருந்து பெறும் கடனைத் திருப்பித் தரும் தகுதியுடைய வராய் இருத்தல் வேண்டும்.

(3) உறுப்பினர் அரிசன இனத்தவரை சார்ந்தவராய் இருந் தால், வட்டி இல்லாமல் அவருக்கு கடன் வழங்கப்படும். அதாவது அவர் கொடுக்கின்ற வட்டியை அரசு ஏற்றுக் கொண்டு கூட்டுறவுச் சங்கத்துக்கு ஈடு செய்யும்.



(4) அரிசன வகுப்பைச் சார்ந்த உறுப்பினருக்கு தலா 600 ரூபாய் மானியம் தரப்படும். இம்மானியம் ரூ. 1,000 ஆக 1—7—80 முதல் உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது. இதைப்பெற அவரது ஆண்டு வருமானம் 4,200 ரூபாய்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(5) அரிசனங்கள் பெருமளவில் வாழும் இடங்களில் வீடு கட்ட முன் வரும் பல்வேறு வகுப்பினருக்கும் அரிசன உறுப்பினர் களுக்கு வழங்குவது போல் மானியம் தரப்படும், ஆனால் அவரது ஆண்டு வருமானம் ரூ. 4,200-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இதர உறுப்பினர்கள் மானியம் பெறத் தகுதியுடையவரல்லர்.

(6) கிராம வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், கடன் வாங்க விழையும் எல்லா உறுப்பினர்களும், உழைப்பாகவோ அல்லது வீடு கட்ட பயன்படும் பொருளாகவோ அல்லது பணமாகவோ வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 20 சதவிகிதத்தினை தங்கள் பங்காக செலுத்த வேண்டும்.

(7) வீட்டின் செலவைக் குறைக்கும் பொருட்டு, உள்ளூரில் கிடைக்கும் குறைந்த விலை நாட்டு மரச் சட்டங்கள், இன்ன பிற பொருட்களை வீடுகள் கட்ட பயன்படுத்துவதற்கு அனுமதியளிக் கப்பட்டுள்ளது. கட்டுமானம் செங்கல் இடையில் களிமண்ணை வைத்துக் கட்டுதல் வேண்டும். உள்பூச்சுக்கு சுண்ணாம்பு அல்லது சிமின்டை உபயோகிக்கலாம். சுவர்களில் சிமின்டால் பூசவும் அனுமதி தரப்பட்டுள்ளது. கட்டுமானம் அங்கத்தினர்களின் சொந்தப் பொறுப்பிலே நடைபெறும். சங்கத்தால் எவ்விதமான தொழில் நுட்ப மேற்பார்வையும் தரப்பட மாட்டாது.

(8) உறுப்பினர்கள் உள்ளூரில் கிடைக்கும் களிமண் மற்றும் விறகினைக் கொண்டு செங்கல் சூளைகள் அமைக்க கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அச்சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் செங்கல், வெளிச் சந்தையில் கிடைக்கும் நாட்டுச் செங்கல் விலையைவிடக் குறைவாக உள்ளது.

(9) கடன்கள் மூன்று தவணைகளாக, 30:40.30 என்ற விகிதத்தில், வழங்கப்படுவதால், கடனின் ஒவ்வொரு தவணையும் வழங்கப்பட்ட கடன் தொகைக்கு ஏற்ப கட்டிட வேலை நடை பெற்றுள்ளதா என நேரில் சென்று பரிசீலித்த பின்னரே வழங்கப் படுகின்றது.

(10) கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களை சிமெண்ட் விற்பனையாளராக நியமித்து, உறுப்பினர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் சிமெண்ட் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

6. செயல்திறன் :

8. 1978–79 ஆம் ஆண்டில் 10,000 வீடுகள் கட்டப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு மாறாக 13,763 கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளித்து, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ரூ. 6.38 கோடி கடன் வழங்க அனுமதியளித்தது. இத்திட்டம், அந்த ஆண்டின் நடுவில் துவக்கப்பட்டதால், 1978-79 ஆம் கூட்டுறவு ஆண்டு முடிய (30–6–79 வரை) 7,430 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் 20,000 வீடுகள் கட்டி முடிக்க வேண்டும் என்ற இலக்கு ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கு பின்னர் 30,000 வீடுகளாக உயர்த்தப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 19.05 கோடி மதிப்புள்ள 55,469 கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 29,041 ஆகும். (அரிசனங்கள் 21,481; மற்றவர்கள் 7,560). 16,767 வீடுகளைக் கட்டும் வேலை பல்வேறு நிலைகளில் உள்ளது.

7. நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதித் திட்டம் :

9. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து பெறும் கடனை நகர்ப்புற வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் நிதியுதவியாக அளித்து வருகிறது. இதுவரையில் நகர்ப்புற வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு ரூபாய் 68.80 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் இதுவரை 59,830 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1979–80-ல் 8,075 கடன் விண்ணப்பங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 12.87 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 30–6–1980 முடிய, சுமார் 7,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலமாக நகர்ப்புற வீட்டு வசதி :

10. மாநிலம் முழுவதும் வீட்டு வசதித் திட்டங்களை செயலாற்றுவதில் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளும் வகையில் சென்னையில் ஒரு பிரிவும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டுவசதிப் பிரிவாக மூன்று வீட்டுவசதிப் பிரிவுகளுடன், வாரியம் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட்டது. பின்னர் வேலூர்,





சேலம், ஈரோடு ஆகிய இடங்களிலும் வீட்டு வசதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. வாரியம் சட்டப்படி அமைந்த பல்வேறு அரசுத்துறைகளும், பிரதிநிதித்துவம் பெற்றியங்கும் நிறுவனமாகும். இது மாநிலத்தின் நகர்ப்புறங்களில் வீட்டுவசதி தேவைகள் குறித்து திட்டமிட்டு, அவற்றை ஒருங்கிணைத்து, செயல்படுத்தப்படுவதற்கு உறுதி செய்கிறது.

11. பல்வேறுபட்ட சமூக வீட்டுவசதி திட்டங்களை, வீட்டு வசதி வாரியம் உயர் வருவாய்த் தொகுதியினர் முதல் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் வரை உள்ள பலதரப்பட்ட மக்களுக்காக நிறைவேற்றி, இம்மாநிலத்தில் வீட்டுவசதி இருப்பினை பெருக்குகிறது. மேலே குறிப்பிட்ட சமூக வீட்டு வசதி திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழ்க்கண்ட பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான திட்டம் :

12. தனியார் துறையினரால் இப்பிரிவு சரிவரக் கவனிக்கபடுவதில்லை. இப்பிரிவினருக்கு எவ்வளவு வீட்டுவசதி செய்ய இயலுமோ அவ்வளவு செய்வது அரசின் குறிக்கோளாக உள்ளது.

13. வீட்டுவசதி குடியிருப்பு பகுதிகளில் பல்வேறுபட்டவர்களுக்கான வீட்டுவசதி கீழ்க்கண்ட சதவீதத்தில் இருக்கவேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது:—

| | | |
|---|---|---|
| | | சதவீதம். |
| பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் | .. | 45 |
| குறைந்த வருவாய் தொகுதியினர் | .. | 35 |
| நடுத்தர வருவாய் தொகுதியினர் | .. | 15 |
| உயர் வருவாய் தொகுதியினர் | .. | 5 |

14. வீட்டுவசதி வாரியம், மாத வருமானம் ரூபாய் 350–க்கு மேற்படாத பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான திட்டத்தின்கீழ், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் உதவியுடனும், தனது சொந்த நிதியாதாரங்களிலிருந்தும் வீடுகளைக் கட்டித் தருகிறது. இவ்வீடுகளுக்குச்செலவு, வீடு ஒன்றுக்கு ரூபாய் 8,000. இவ்வீடுகள் ஒதுக்கபெற்றவர்கள் வீட்டின் செலவுத் தொகையில் 10 சதவீத அளவிற்கு முன்பணமாக அளிக்கவேண்டும். மீதமுள்ள தொகை 240 மாதத் தவணை

விட்டுவசதி வாரியத்தின் தொழிலாளர்களுக்கான மலிவு வாடகை விட்டுவசதி திட்டம்

19. [illegible] 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் [illegible] ஒதுக்கீடு செய்யப்பட்டது [illegible]

| வரிசை எண். | இடத்தின் பெயர். | கட்டப்பட வேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் இலட்சங்களில்). |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பசுமலை, மதுரை மாவட்டம் .. | 240 | 31.00 |
| 2. | கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் .. .. | 120 | 16.07 |
| 3. | இராசபாளையம், இராமநாதபுரம் மாவட்டம் .. .. | 312 | 38.80 |

இத்திட்டத்திற்கான 1979-80 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 20 இலட்சம். வாரியம் 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 20.33 இலட்சத்தைச் செலவிட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கும் இதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில் 200 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டம்

20. ஒருங்கிணைக்கப்பட்ட நகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை நகர்ப்புற பகுதிகளில் நிறைவேற்றப்படும் இத்திட்டம் "முழு வசதிகளடங்கிய ஆனைகள்" திட்டமாகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் பணி வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1971 ஆம் மண்டு புள்ளிவிவரக் கணக்கின்படி சென்னை நகரில் உள்ள மக்களில் எழுபது சதவீதம் பேர் மாதம் 350 ரூபாய்க்கும் குறைவாக வருவாய் பெறுகின்றவர்களாக உள்ளனர். சமுதாயத்தில் நலிந்த பிரிவினராயுள்ள இவர்கள் பயன் பெறும் வண்ணமும், அதே



சமயம் அவர்களது தன் முயற்சியினை ஊக்குவிக்கும் வண்ணமும் அடிப்படை வசதிகளுடன் கூடிய மனைகள் சலுகை விலையில் தரப்படுகின்றன. சலுகை விலைக்கும், நியாய விலைக்கும் உள்ள வேறுபாட்டினை உயர் வருவாய் தொகுதியிலிருந்து ஈடு செய்யப் படுகிறது.

21. இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் 13,467 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன. அதற்காக 9,32.88 இலட்சம் செலவில் மொத்தம் 168 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டுமனைகளை தவிர வாணிபத்திற்காகவும், சிறுகைத்தொழிலுக்காகவும் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தில், சுகாதார வசதிகளுடன் கூடிய ஒவ்வொன்றும், 40 சதுர மீட்டர் பரப்பளவிலான பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான 6,228 மனைகளும், 47 சதுர மீட்டர் பரப்பளவிலான சுகாதார வசதி மற்றும் கூரையுடன் கூடிய பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான 2,742 மனைகளும், 47 சதுரமீட்டர் அளவிலான சுகாதார வசதி மற்றும் குடியிருப்புடன் கூடிய பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான 792 மனைகளும் வழங்கப்படும். மேலும், ஒவ்வொன்றும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும் ஒவ்வொன்றும் 223 சதுர மீட்டர் பரப்பளவிலான 421 மனைகளும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு வழங்கப்படும்.

22. இத்திட்டத்தின் கீழ், ஆரம்பப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், பொதுமக்களுக்கான வசதிகள், வாணிபக்காரியங்கள், சமுதாயகூடங்கள், சிறுகைத்தொழில்கள் ஆகியவைகளின் தேவைகளுக்கும் போதுமான வழி வகை செய்யப்பட்டுள்ளது.

23. அரும்பாக்கத்தில் அமுல்படுத்தப்படும் திட்டப்பணிகள் இவ்வாண்டு கடைசிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீதியுள்ள இரண்டு திட்டங்களும், இன்னும் இரண்டாண்டு காலத்திற்குள் முடிவடையும்.

24. ரூ. 932.28 இலட்சம் மதிப்பீடுள்ள இத்திட்டத்திற்கு அரசின் நிதிநிலை அறிக்கைகளில் 1977—78 ஆம் ஆண்டில் ரூ.175 இலட்சமும், 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 250 இலட்சமும், 1979-80-ல் ரூ. 270 இலட்சமும் ஒதுக்கீடு செய்து 1,350 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் வாரியம் ரூ. 283.10 இலட்சம் செலவு செய்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு. ரூ 250 இலட்சம்.

வீட்டுவசதி வாரியம், இந்தக் குடியிருப்புகள் கட்டும் பணியை முடித்து விட்டது. மதுரையில் மேலே குறிப்பிட்ட ரூ. 105.13 இலட்சம் மதிப்புள்ள குடிசைப்பகுதி மாற்று திட்டத்தைத் தவிர வெளியூர்களில் குடிசைப்பகுதி மாற்று பணியை நிறைவேற்ற 1979—80 ஆம் ஆண்டில் ரூ. 60 இலட்சம் வீட்டுவசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டது. 1980—81 ஆம் ஆண்டில் ரூ. 60 இலட்சம் செலவில் 400 குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

32. 1974–75 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியம் செலவிட்ட தொகையான ரூ. 10.19 கோடிக்கு மாறாக, 1978—80 ஆண்டில் வீடுகள் கட்டவும், நிலத்தினை மேம்படுத்தவும் செலவிட்ட தொகை ரூ. 18.42 கோடி ஆகும். 1974–75 ஆம் ஆண்டில் கட்டி முடித்த 2,489 வீடுகளுக்கு எதிராக 1979–80 ஆம் ஆண்டில் 5759 வீடுகளை வாரியம் கட்டியுள்ளது.

சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்றும் பணி:

33. 1970 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினை அரசு அமைத்து அதனிடம் சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அமைக்கும் பணியை ஒப்படைத்தது. இப்பணி இதுவரையிலும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வந்தது. 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு/நீக்கம்) சட்டம் என்ற சட்டத்தினை இயற்றி, குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு சட்டப்பூர்வமான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

34. குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டதும், உடனடியாக குடிசை வாழ் மக்களின் பிரச்சினைகளின் அளவினைக் கணக்கிடும் பொருட்டு, சமூகப்பொருளாதார ஆய்வுப்பணி ஒன்று நடத்தப்பட்டது. சென்னை மாநகரில் 7,37,531 மக்கட்தொகை அடங்கிய 1,63,804 குடும்பங்கள் வாழும் 1,202 குடிசைப்பகுதிகள் உள்ளதாக ஆய்வுப்பணி புலப்படுத்தியது. ஆக நடைமுறையில் சென்னை மாநகரத்தின் மக்கட்தொகையில், ஏறக்குறைய மூன்றில் ஒருபங்கு குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர். உடனடியாக, மிகவும் மோசமான குடிசைப்பகுதிகளை மாற்றியமைக்கும் குறுகிய காலத்திட்டம் ஒன்றினை வாரியம் வகுத்து குடிசைப்பகுதிகளில் வேலையை தொடங்கியது.

35. குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கும் முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 7,191 குடியிருப்புகளை கட்டி முடித்திருந்தது. இக்குடியிருப்புகள் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. மாற்று மாற்று வாரியம் துவக்கப்பட்ட 1970 ஆம் குடிசைப்பகுதி 1980 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், முதல் தேதி ஆண்டிலிருந்து வாரியம் ரூ. 3,322 இலட்சம் செலவில் 29,146 குடியிருப்புக்களை வரை, இவ் கட்டியுள்ளது.



36. 1979—80 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மாற்று திட்டங்களுக்காக அரசு ரூ. 215 இலட்சத்தை ஒதுக்கீடு செய்தது. இதனுடன் குடிசைப்பகுதி மாற்று வாரியம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 160 இலட்சத்தை கடனாகப் பெற்றது. வாரியம் 1978—79 ஆம் ஆண்டில் கட்டிய 3,368 குடியிருப்புகளை விட அதிகமாக 1979–80 ஆம் ஆண்டில் 4,088 குடியிருப்புகளை கட்டி முடித்தது. 1979–80 ஆம் ஆண்டின் இறுதியில் 4,571 குடியிருப்புகள் கட்டும் பணி பல்வேறு நிலையில் இருந்தன.

37. 1980–81 ஆம் ஆண்டில் 3,940 புதிய குடியிருப்புகள் கட்டும் பணியினை வாரியம் எடுத்துக் கொள்ளும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 110 இலட்சம் கடனாகப் பெறப்படும். 1980—81 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

சென்னை மாநகரில் விரைவு படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம்.

38. 1976–77 ஆம் ஆண்டு முதல், குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினால் குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அடிப்படை வசதிகள் அறவே இல்லாத அல்லது போதிய அளவிற்கு இல்லாத சென்னை மாநகர குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கல், தெருவிளக்குகள், பொதுக் கழிப்பிடங்கள் முதலியன செய்து கொடுப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். 1977—78 ஆம் ஆண்டு அரசு சார்ந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள 125 குடிசைப்பகுதிகளில் (இப் பகுதிகளில் முந்தைய குடிசைப்பகுதி சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சில வசதிகள் செய்து தரப்பட்டன) உள்ள 32,993 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் இத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தின் அளவுக்கு வசதிகள் செய்து தரப்பட்டன.

39. 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சத்தை இதற்கென அரசு ஒதுக்கீடு செய்தது, இத்தலைப்பின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் வாரியம் ரூ 80.61 இலட்சம் செலவு செய்துள்ளது. இந்த விரைவுப் படுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாடு திட்டத்திற்கென 1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலகவங்கி திட்டத்தின் கீழ் உதவி பெறும் சென்னை மாநகர் குடிசைப்பகுதி மேம்பாடு திட்டம்:

40. உலக வங்கியின் உதவிபெற்ற சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் ஒரு முக்கியமானப் பகுதி குடிசைப் பகுதி மேம்பாடாகும். இத் திட்டத்தின் கீழ், கீழ்க் குறிக்கப் பட்டுள்ள வசதிகள் செய்து தரப்படுகின்றன

(அ) புதிய மேம்பாடு செய்யப்பட்ட சாலைகள், நடை பாதைகள், சாக்கடை வசதி (வெள்ள நீர் மற்றும் கழிவு நீர் வடிகால்கள்);

(ஆ) பத்து குடும்பங்களுக்கு ஒரு பொது நீர்க்குழாய் வீதம் குடிநீர் வழங்கல்;

(இ) பத்து குடும்பங்களுக்கு ஒரு பொதுக்கழிவிட அறை, ஒரு பொதுக்குளியல் அறை என்ற விகிதத்தில வசதிகள்;

(ஈ) சமுதாயக் கல்வி வசதிகள்; மற்றும்

(உ) குடிசைத் தொழில் மையங்கள்.

41. மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 1.300 செலவாகும். குடிசைப்பகுதி மேம்பாட்டிற்கு ஆகும் செலவு, அந்தப் பகுதிகளிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக் கையைப் பொறுத்தது மட்டுமின்றி, அக்குடிசைப் பகுதியின் குடி தண்ணீர் மற்றும் பாதாளச் சாக்கடை குழாய்களின் அமைப்பையும் பொறுத்திருக்கும். இத்திட்டத்திற்கான நிதி மாநிலத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

42. இத்திட்டத்தின், முதலாவது ஆண்டான 1977-78 ஆம் ஆண்டில் 20 குடிசைப் பகுதிகளில 4,137 குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ரூ. 27.80 இலட்சம் செலவில் செய்து தரப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் 7 குடிசைப்பகுதிகள் ரூ. 152.65 இலட்சம் செலவில் மேம்படுத் தப்பட்டு 14,201 குடும்பங்கள் பயனடைந்தன. 9,044 குடும்பங் களுக்கு பயன்தரும் 12 திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. 860 குடும்பங்கள் பயனடையும் வண்ணம் மூன்று புதியத் திட்டங்கள் இவ்வாண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது; வாரியம் 1980-18 ஆம் ஆண்டில் ரூ. 149.88 இலட்சம் செலவிட உத்தேசித்துள்ளது. உலக வங்கித்



சென்னை மாநகர குடிசைப் திட்டத்தின்கீழ் உதவிப் பெறும் இரண்டாவது கட்டமாக பகுதி மேம்பாடுத் திட்டத்தின்கீழ் வரும் மூன்றாண்டுகளில் 1980-81 ஆம் ஆண்டு தொடங்கி வண்ணம் ரூ. 23.79 கோடி 50,000 குடும்பங்கள் பயனடையும் உருவாக்கியுள்ளது. செலவிலான திட்டத்தை

43. குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1974-75 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூ. 500 இலட்சத்துக்கு மாறாக, 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 608,00 இலட்சத்தை குடி யிருப்புகள் கட்டவும், குடிசைப் பகுதிவாழ்மக்களுக்கு அடிப் படை வசதிகள் செய்து தரவும், செலவிட்டுள்ளது.

தனியார்த் துறையிலுள்ள தொழிலாளருக்கான மலிவு விட்டு வசதி திட்டம்:—

44. தொழிலாளருக்கான மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்த வாடகையில் பொது மற்றும் தனியார் துறை நிர் வாகிகளால் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்பு கள் ஒரு தொழிலாளர் மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்பட வில்லையென்றால் மலிவான வாடகையிலும், மாத வருவாய் ரூ. 350-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 500-க்கு உட்பட்டு இருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. அரசு, தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கு இக்குடியிருப்புகள் கட்டுவதற்காகும் உச்சவரம்புச் செலவில் 50 சதவீதம் கடனா கவும் 25 சதவீதம் ஆதரவுத் தொகையாகவும் நிதி உதவி வழங்குகிறது. இந்தச் செலவு உச்சவரம்பில் எஞ்சிய 25 சதவீதமும் அதற்கு மேற்பட்டு வரும் செலவும் அந்தந்த தனிப் பட்ட நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறான நிதி உதவிப் பெறுவதற்கு பின்வரும் செலவு உச்சவரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. இரட்டை பல மாடிக் கட்டிடங்களில் இரண்டு அறைகள் கொண்ட சிறிய குடியிருப்புக்கு உச்சவரம்பு செலவு ரூ. 5,350 /6,050 இரட்டை மாடிக் கட்டிடங்களில் உள்ள முறையான அளவில் அமைந்த இரண்டு அறைகள் கொண்ட வீட்டிற்கு உச்சவரம்பு செலவு ரூ. 7,600 பலமாடிக் கட்டிடத்தில் முறையான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்றுக்கு உச்சவரம்பு செலவு ரூ. 8,500.

45. இத்திட்டம் செயல்படுத்தத் துவங்கிய காலம் முதல் 1978-79 ஆம் ஆண்டு வரையிலும் 17 தனியார்த் துறை நிர்வாகிகள் ரூ. 28.41 இலட்சம் கடனும், 13.18 இலட்சம் ஆதரவுத் தொகையும் பெற்று 1,050 வீடுகளைக்கட்டி முடித் துள்ளனர்.

46. 1979–80 ஆம் ஆண்டில் நாங்குநேரி, நம்பி நகரில் உள்ள சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் 12 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. இதற்காக 1979–80 ஆம் ஆண்டில் கடனாக வழங்கிய தொகை ரூ. 32,100. 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு ரூ. 5.26 இலட்சம். கட்டப்பட வேண்டிய வீடுகளுக்கு குறியிடப்பட்ட இலக்கு 160 வீடுகள்.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கல்:—

47. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டவும், வீட்டு மனைகள் வாங்கி அதில் வீடுகட்டவும் முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும், தங்களுக்குச் சொந்தமான வீடுகளில் இடவசதியை விரிவாக்கவும் முன்பணம் வழங்கப்படுகிறது. கணவன், மனைவி இருவரும் அரசு ஊழியர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களிருவருக்கும் கூட்டுக் கடனாக வழங்கினால் வீடுகள் கட்டுவதிலுள்ள விலையேற்றத்தினை சமாளிக்க உதவியாயிருக்கும் என அரசு கருதியது. கணவன், மனைவி இருவரது கடனைத் திருப்பித்தரும் தகுதியின் அடிப்படையிலும், வழங்குவதிலுள்ள அதிகபட்ச தொகையின் அடிப்படையிலும், கடன் ஒரே வீட்டினைக் கட்ட கூட்டுக் கடனாக வழங்கலாம் என அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. 6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின்கீழ் பணியாற்றிய அலுவலர்கள் இக் கடன் உதவிபெற தகுதியுடையவர்கள் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய அடிப்படைச் சம்பளத்தைப் போன்று 60 மடங்கு தொகை அல்லது கீழ்க்கண்ட அதிக பட்சத் தொகை, இதில் எது குறைவாக உள்ளதோ, அத் தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது.

| | அதிக பட்சத் தொகை. ரூபாய். |
|---|---|
| மனைகள் வாங்கி வீடு கட்ட | 80,000 |
| முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்க .. | 80,000 |
| ஊழியர்கள் தங்களுக்கு முன்பே சொந்தமான மனைகளில் வீடுகள் கட்ட .. | 70,000 |
| வீட்டினை விரிவுபடுத்த | 25,000 |



கடன்தொகை அலுவலர்கள் தங்கள் அலுவல் காலத்திற்குள் அவர்களது சம்பளத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு வீதம் மாதம்தோறும் திருப்பிச் செலுத்துவதற்கு உள்ளத் திறன் மற்றும் அவர்களின் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக் கொடை அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது. சமீபத்தில் வீடுகள் கட்ட வழங்கப்பட்ட அதிகபட்சத் தொகை ரூ. 70,000 த்திலிருந்து 80,000-க்கு உயர்த்தப்பட்டது.

48. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்காக முன்பணம் வழங்கும் திட்டம் 1—7—79 முதல் பரவலாக்கப் பட்டது. அரசு அலுவலர் வீடு கட்ட கடன் வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையே செயலக ஊழியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அதிகாரிகளுக்கான கடன்களை தொடர்ந்து வழங்குகிறது. அரசு அலுவலர்கள் வீடு கட்ட செய்யப்படும் ஒதுக்கீடு, பல்வேறு ஒப்புதல் அளிக்கும் அதிகாரிகள் கடன் வழங்க, மாவட்ட ரீதியாக, பங்கிடப்பட்டு அளிக்கப்படுகிறது. நகர ஈட்டுப்படி இல்லாத ஊர்களில் அரசு ஊழியர் வீடு வாங்கவோ, கட்டவோ அளிக்கப்படும் கடன் மீதான வட்டியில் ஒரு சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. அரசு ஊழியர்கள் முன்பே கட்டின வீடுகளை வாங்க கடன் வழங்குவது பற்றி அத்தகைய வீடுகளின் வயது வரம்பு (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டி ஒதுக்கீடு செய்யும் வீடுகள் நீங்கலாக) முதல்தர வீடுகள் 15 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகளாகவும், இரண்டாந்தர வீடுகள் 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

49. 1979–80 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 1.75 இலட்சத்திலிருந்து ரூ. 2·25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டபடும் நிலைகளின் அடிப்படையில் படிப்படியாக கடன் தொகை தரப்படுகின்ற காரணத்தினால் ஒரு வருடத்தில் ஒப்புதல் அளிக்கப்படும் மொத்த கடன்தொகை வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டைவிட 50 சதவீதம் அதிகமா[illegible] வீடுகள் கட்ட முன்பணம் வழங்கும் திட்ட[illegible] தேவைகள் ஏற்பட்டதால், 1979–80 [illegible] முழுமையாக இருந்த விண்ணப்பங்களுக்கு [illegible] வழங்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி [illegible].

50. அரசு 1980-81 ஆம் ஆண்டில் இத் திட்டச் செலவினை மாநில அரசு அலுவலர்களு[illegible] ரூ. 3.25 இலட்சத்துக்கு உயர்த்தியுள்ளது.

123070

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-1.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tinnevelly), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private), Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponnaiamman Koil Street, Egmore Madras-8.

## IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 5/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book-sellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem -1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bogchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17

---

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.